



நினைவு மெல்ல மெல்ல நனவாகிறது......









# கேரளத் தமிழ்

மூன்றாவது ஆண்டு மலர்

ஜுலை, 1981






**Following the footprints of Anna, the Government of Tamil Nadu has launched a massive Rural Welfare Programme of Self Sufficiency**

Gandhiji and Anna visualised that real freedom means freedom to the poor and the weak. And Tamil Nadu marches on to reach the goal of these two great men.



Minor Irrigation Projects



Drinking water to all villages




Houses for Harijans




Rural Dispensaries



Power supply to houses of Harijans.



Maternity Homes




Link Roads and Culverts



New School Buildings

**Director of Information and Public Relations**
**Government of Tamil Nadu, Madras-600 009.**






GOVERNOR

OF KERALA

RAJBHAVAN
TRIVANDRUM
18—7—1981

உ

# வாழ்த்துச் செய்தி

2289

KNM0871



திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம் வெளியிட்டுவரும் கேரளத் தமிழின் இம்மாத இதழ் மூன்ருவது ஆண்டு மலராக வெளிவரவுள்ளது எனும் சேதியறிந்து மகிழ்கின்றேன். சங்கம் மேற்கொண்டுள்ள அநேக புது முயற்சிகளில் அது வெற்றி பெற்று பன்னெடுங்காலம் தொண்டாற்றிட இறைவனே இறைஞ்சுகிறேன்.

மலர் எழில் வண்ண இதழ்கள் பல தாங்கி எழிலுடன் திகழ்ந்திட என் நல்வாழ்த்துக்கள்.

( ஒப்பம் )

**ஜோதிவெங்கடாசலம்**

E. K. NAYANAR
Chief Minister, KERALA.

Trivandrum
16th June 1981



# MESSAGE

I am glad to learn that "Kerala Tamil" the monthly publication of the Trivandrum Tamil Sangom is bringing out its III Annual Special Number in July 1981. I send my good wishes to the venture.

Sd./-
*E. K. Nayanar*

*To*

*The Secretary,*
*Trivandrum Tamil Sangom,*
*Chenthittai, Trivandrum.*

டாக்டர் இரா. நெடுஞ்செழியன்,
எம். ஏ., டி. லிட்.,
நிதி அமைச்சர்.

தலைமைச் செயலகம்
சென்னை-600 009
நாள் 2-6-1981

திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்தினால் வெளியிடப்படும் ''கேரளத் தமிழ்'' என்னும் திங்கள் இதழின் மூன்றாம் ஆண்டு மலர் வெளியிடப்படுவது அறிந்து மிக்க மகிழ்ச்சியுற்றேன்.

''கேரளத்தமிழ்'' இதழின் தமிழ்த் தொண்டு தொடர்ந்து சிறந்த முறையில் நடைபெறவும் மூன்றாம் ஆண்டு மலர் முயற்சிகள் வெற்றி பெறவும் என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(ஒப்பம்)
இரா. நெடுஞ்செழியன்,
நிதி அமைச்சர்.

பெறுநர்:

செயலாளர்,
திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்,
பதிவு எண். 83/70
செந்திட்டை, திருவனந்தபுரம்-695 023.

---

மா. பொ. சிவஞானம்
தலைவர்
தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை-600 009
30-5-1981.

திரு. கோ. முருகேசன்,
செயலாளர்,
திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்,
செந்திட்டை, திருவனந்தபுரம்-695 023

அன்புடையீர்,

வணக்கம். திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் ''கேரளத்தமிழ்'' மாத வெளியீடு வருவது அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். தமிழ் இனத்தின்கலே, கலாச்சாரம், பண்பாடு நாகரிகம் ஆகியவற்றைப் பிற மாநிலத்திலுள்ள தமிழர்களும் அறிந்து கொள்ளும் வகையிலும், தமிழ் மக்களின் நலனைக் காக்கவும் இத்தகைய வெளியீடுகள் தேவைப்படுகின்றன. கேரள மாநிலத் தமிழ் மக்களுக்கு பல வகை களிலும் உதவி வரும் ''கேரளத்தமிழ்'' மாதவெளியீடு தனது மூன்ருவது ஆண்டையொட்டி சிறப்பு மலராக வெளிவருவது அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். மலர் தமிழ் மணம் கமழும் வகையில் சிறப்புடன் அமைய இறையருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

அன்புள்ள,
(ஒப்பம்)
மா. பொ. சிவஞானம்

அனுப்புநர் :

பேராசிரியர் டாக்டர் **மா. நன்னன்** எம். ஏ., பிஎச். டி.,
தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
''குறளகம்'', சென்னை-600 001.

பெறுநர்:

**திரு. கோ. முருகேசன்** அவர்கள்,
செயலாளர்,
திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்
செந்திட்டை, திருவனந்தபுரம் 695 023.

அன்புடையீர்!

வணக்கம். தாங்கள் 23-5-'81—இல் எனக்கு விடுத்த முடங்கல் கிடைத்து மகிழ்கிறேன், நன்றியும் உணர்கிறேன். அதற்கு முன்னதாகத் தங்களின் ''கேரளத் தமிழ்'' இதழைப் படிக்கும் வாய்ப்பையும் பெற்றேன். அண்டை மாநிலத்தில் வாழும் நீங்கள் செய்யும் தாய்மொழித் தொண்டு இவ் விதழின் வாயிலாக நன்கு வெளிப்படுகிறது. அது என் உள்ளத்தைத் தொட்டது. ''கேரளத்தமிழ்'' மூன்றாம் ஆண்டு மலர் வெளிவருகிறது. அதில் என் வாழ்த்தும் இடம்பெற வேண்டும் என்னும் தங்கள் விருப்பம் என்னுள்ளத்து ஏற்படுத்திய உவகையோடு ''கேரளத்தமிழு''க்குப் பல்லாண்டு கூறி வாழ்த்துகிறேன். அது தமிழின் ஒரு துறைக் கோவையாக மட்டுமில்லாமல் பல துறைகளிலும் பரவிவளர வேண்டுமென்றும் விரும்புகிறேன். வாழ்க ''கேரளத்தமிழ்''. வளர்க அதன் பணி.

சென்னை-1
28-5-'81

அன்புள்ள,
(ஒப்பம்)
மா. நன்னன்

---

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

அடையாறு, சென்னை-600 020.

ச. குணசீலன்
இயக்குநர் நேர்முக உதவியாளர்.

26—5—'81

பெறுநர்:

செயலாளர்,
திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்,
பதிவு எண்: 83/70
செந்திட்டை, திருவனந்தபுரம்-695 023

அன்புடையீர்,

வணக்கம்.

தங்கள் 23-5-81 எழுத்துக் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. நன்றி. எங்கள் இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் வெளிநாட்டுப் பயணம் (செக்கோஸ்லேவேகியா) மேற்கொண்டுள் ளார்கள். அவர்கள் ஆகஸ்ட் மாத மத்தியில் இங்கு வருவார்கள்.

தங்கள் ஜூலை 1981 இதழ் மூன்றாவது ஆண்டு மலர் சிறப்புற வெளிவர இயக்குநர் சார்பாக என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தங்கள் அன்புக்கு நன்றி. அவர் வந்ததும் தங்கள் கடிதத்தை நினைவுபடுத்துகிறேன்.

அன்புள்ள,
(ஒப்பம்)
ச. குணசீலன்

அனுப்புநர் : திருவனந்தபுரம்

ஜி· வரதன் M. L. A. 5-8-81

(தேவிகுளம்), மூணாறு·

பெறுநர்:

திரு. கோ· முருகேசன்,
செயலாளர்,
திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்,
திருவனந்தபுரம்-695 023

அன்புள்ள ஐயா !

நமது மாநிலத்தின் தலைநகரான திருவனந்தபுரத்திலிருந்து ''திருவனந்தபுரம் தமிழ்ச் சங்க'' சார்பில் வெளிவரும் ''கேரளத் தமிழ்'' மூன்றுவது ஆண்டு மலருக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்·

இவண்,
(ஒப்பம்)
ஜி· வரதன்

---

## பாரதி தமிழ்ச் சங்கம்

93-A, RASH BEHARI AVENUE, CALCUTTA-700 026· 25-6-81

அன்புடையீர்,

வணக்கம்· தங்கள் 16-6-81 கடிதம் கிடைத்தது· ''கேரளத்தமிழ்'', இதழின் மூன்றுவது ஆண்டு மலர் வருவதுபற்றி மகிழ்ச்சி· தாங்கள் தமிழுக்காக செய்து வரும் தொண்டினை பாராட்டுகிறோம்·

நன்றி·

அன்பன்
(ஒப்பம்)
டி· கிருஷ்ணான்
செயலாளருக்காக

செயலாளர்,
திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்
பதிவு எண்: 83/70
செந்திட்டை, திருவனந்தபுரம்-23

---

## உலகத் தமிழ்ச் சங்கம்

எட்டயபுரம், கோவில்பட்டி வட்டம், நெல்லை மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.

பெறுநர்: திரு. கோ. முருகேசன் அவர்கள்,
செயலாளர்,
திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்,
செந்திட்டை, திருவனந்தபுரம்-695 023.

உலகத்தமிழ்ச் சங்கத்தின் பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய எங்கள் முருகேசன் அவர்களுக்கு உங்கள் தேவன் பணிவான வணக்கம்·

பாரதி நூற்றுண்டு விழா மிக வேகமாக நம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிற இந்த இனிமை மிக்க காலகட்டத்தில், நமது திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம் 1981 ஜுலை மாதம் மூன்றுவது ஆண்டு மலராக ''கேரளத்தமிழ்'' வெளிவருவது கண்டு, கேரளத்தமிழோசை உலகமெல்லாம் பரவ, எட்டயபுரம் உலகத்தமிழ்ச் சங்கம் வாழ்த்தி வரவேற்பதில் பூரிப்படைகிறது, பெருமைப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,
(ஒப்பம்)
என்· தேவன்

## பெங்களூர்த் தமிழ்ச் சங்கம்

29/1, அண்ணாஸ்வாமி முதலியார் ரோடு, பெங்களூர் - 560 042

செயலாளர்,
திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்,
திருவனந்தபுரம்-23

நாள் 30-5-81

திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம் நிலையூன்றி நின்று தனது அருமையானபணியின் மூலம் சீரோடும் சிறப்போடும் வளர்ச்சி பெற்று வருவது தமிழர்களுக்கெல்லாம் பெருமை அளிக்கச் செய்யும் செய்தியாகும்.

தமிழர்களுக்காகவும், அவர்களின் கலை, பண்பாடு ஆகியவற்றிற்காகவும் பாடுபடும் இத்தமிழ்ச் சங்கம் மேலும் பல்லாண்டுகள் கேரள மாநில மக்களின் நிறைவான ஒத்துழைப்போடு சிறந்து வளரவும் கேரளத் தமிழ் மூன்றாவது ஆண்டுமலர் தமிழ் மணம்கமழ வெளிவரவும் பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் உளமார வாழ்த்துகிறது.

அன்பகலா
(ஒப்பம்)
இராசு. மாறன்,
செயலாளர்

---

ஆந்திர மாநிலத்

## தமிழர் பேரவை

59/3, செயின்ட்மேரீஸ் ரோடு, செகந்திராபாத் (A.P.) நாள் 22-6-81

பேரன்புள்ள திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கச் செயலாளர் அவர்களுக்கு,

வணக்கம். ''கேரளத் தமிழ்'' 3-வது ஆண்டுமலர் வெளிவருவது அறிந்து மிக்க மகிழ்ச்சி. கேரளம் வாழ் தமிழ் மக்களுக்கு 'கேரளத்தமிழ்' ஒரு சிறந்த ஊழியனாக - தோழனாகப் பணியாற்றி வருகிறது.

''கேரளத்தமிழ்'' மேலும் சிறக்க ஆந்திரத்தில் வாழும் தமிழ் மக்களின் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

அன்புடன்
(ஒப்பம்)
பொதுச் செயலாளர்

---

## திருவள்ளுவர் தமிழ் மன்றம்

சங்கனாச்சேரி - கேரளா. நாள் 2-6-81

செயலாளர் அவர்கள்
திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம், திருவனந்தபுரம்

பேரன்புடையீர்,

வணங்கி மகிழ்கின்றோம்.

தங்களுடைய வெளியீடான 'கேரளத்தமிழ்' இதழின் மூன்றாவது ஆண்டு மலர் வெளியிடும் முயற்சி அறிந்தோம். தமிழனும், இந்தியனும் ஏன், பொதுவில் மனித இனமே முன்னேறும் வகையில், சமுதாய மாற்றத்திற்கு உதவும் வகையில் தங்களின் இலக்கியப்பணி செழித்து வளரவும், தங்கள் மன்றத்தின் சார்பில் செய்யப்படுகின்ற எல்லா முயற்சிகளும் வெற்றி பெறவும் எங்கள் மன்றத்தின் சார்பில் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வணங்கி அமைகின்றோம்.

அன்பார்ந்த
(ஒப்பம்)
ஏ. என். தீன்
செயலாளர்

## பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

பிளாட் நெ. 215, சயான் ரோடு, பம்பாய்-400 022.

22-6-81

**திரு. கோ. முருகேசன் அவர்கள்**
செயலாளர், திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்

அன்புடையீர், வணக்கம்

தமிழின் மேம்பாட்டிற்கும், கேரளத் தமிழர்களின் சிறப்பிற்கும் தொண்டு புரிந்து வரும் திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்தின் சேவையைப் பாராட்டி, பம்பாய்த் தமிழ்ச் சங்கம் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இங்ஙனம்
(ஒப்பம்)
ஓ. கே. சுப்பராயலு
(ஒப்பம்)
எஸ். இராமதாஸ்
கௌரவச் செயலாளர்கள்

---

## இடுக்கி மாவட்டத் தமிழ்ச் சங்கம்

பதிவு எண். K. 298/78, ஏலப்பாறை 685501.

பெறுநர்
**திரு. கோ. முருகேசன் அவர்கள்,**
செயலாளர்,
திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்

அன்புடையீர்!

வணக்கம்.

கேரளத்தமிழிதழ் மூன்றும்ஆண்டுமலர் வெளியிடுபமை கேட்டு உள்ளப் பூரிப்படைந்தேன். கேரளாவில் வாழ் தமிழ்ப் பெருங்குடி மக்கள் தமிழன் என்று சொல்லவும், தலை நிமிர்ந்து நிற்கவும் எடுத்துக்காட்டாக செயல்படும் திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம் ஆல் போல் வளர எனது இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.

இவ்வண்,
என்றும் தங்களன்புள்ள
(ஒப்பம்)
வ. பொன்னுமணி
செயலர்

---

## தமிழ்ச் சங்கம்

(பதிவு எண். S 16/1958)

கல்லாய் ரோடு, கள்ளிக்கோட்டை-2

செயலாளர், தமிழ்ச் சங்கம், திருவனந்தபுரம். 26-6-81

பேரன்புடையீர், வணக்கம்.

தங்களது 16-6-81 ம் தேதி கடிதமும் கிடைக்கப்பெற்றேன். மிக்க நன்றி. மாநிலத் தலைநகரில் நமது சங்கத்தின் பெருமையை நிலைநாட்ட எழுப்பப்படும் கட்டிடத்தின் வேலைகள் விரைந்து நடந்து வருவது கேட்டு மகிழ்கின்றேன்.

வருகிற ஜூலைத்திங்களில் ''கேரளத்தமிழ்'' மூன்றுவது ஆண்டுமலர் வெளியிட இருப்பதறிந்து பெருமிதமடைகின்றேன். தமிழ்க் கலை, தமிழ்ப் பண்பாடு, தமிழ்மொழி வளர்ச்சிககுத் தொண்டாற்றும் திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்தின் நற்பணிகள் மேலும் சிறந்து வளர்ந்திட உளமார வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
(ஒப்பம்)
கே. ஏ. குப்புசாமி
தலைவர்

**வளர் கலை மன்றம்**

33, பெரியார் சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. பதிவு எண்: 199/80

ஆங்கு திருமிகு. கோ முருகேசன் அவர்கள் 23-6-81

செயலாளர்

திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்,

செந்திட்டை, திருவனந்தபுரம் 695 023.

அன்புடையீர்,

வணக்கம். திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம் வெளியிடும் 'கேரளத்தமிழ்' மூன்றாவது நிறைவு மலராக வெளிவருவது அறிந்து மகிழ்கிறேன்.

ஒரு இலக்கிய அமைப்பைக் கட்டிக் காப்பது எவ்வளவு சிரமமானது என்பதை நானறிவேன். அதுவும் வேற்று மாநிலத்தில் உங்கள் பணி தொடர்நடை போடுவது கண்டு வணங்குகிறேன், வாழ்த்துகிறேன்.

மலர் பலதுறைப்படைப்புகளைத்தாங்கி தமிழன்னைக்கு அணிசெய்யவும், உங்கள் தூயபணி மேலும் வளம் பல பெறவும், நான் சார்ந்துள்ள இயக்கத்தின் சார்பான நல்வாழ்த்துக்கள்.

அன்புள்ள,
(ஒப்பம்)
த. சுந்தரராஜன்,
செயலர்



# தமிழ்த் தெய்வ வணக்கம்

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க விருந்தபெருந் தமிழணங்கே

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே



# தமிழ் மொழி வாழ்த்து

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்





வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழிய வே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வன்மொழி வாழிய வே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழி யே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

கேரளத் தமிழ்
மூன்ருவது ஆண்டுமலர்
ஜூலை 1981

# புகுமுன்

## கதைகள்



## கவிதைகள்




## கட்டுரைகள்



## நாடகம்



அட்டை ஓவியம்
திரு. எம். அடைக்கலம் தைக்காடு, திருவனந்தபுரம்.




# கேரளத் தமிழ்

பொறுப்பாசிரியர் : ஆ. மாதவன்
ஆசிரியர்கள் : கோ. முருகேசன்
பி. மதனன்
நெல்லை சு.முத்து
எஸ். சங்கரன்

## மலர் மணம்

கேரளத்தமிழ் இந்த மூன்ருவது ஆண்டு மலரை அன்பர்கள் கைகளிலே சேர்த்திடும்போது, நிறைந்த மகசூல்காணும் விவசாயியின் மனமகிழ்ச்சியுடன் இருக்கின்ருேம். சென்றஇரண்டு ஆண்டுகளைவிட இவ்வாண்டில் மலரின் அளவமைப்பினைக் கூட பெரியதாக்கியுள்ளோம். இது ஒரு அழகுப் பரிசோதனை மட்டுமே. இந்த அமைப்பே அன்பர்க்கு நிறைவு தருமாயின் வரும் ஆண்டுகளிலும் தொடர முயல்வோம்.

கேரளத்தமிழ் மாத இதழ்களில், நமது சங்கத்தின் அன்ருட நிகழ்ச்சிகள் பற்றியும், நடைமுறைக்காரியங்கள் பற்றியும் குறிப்பாக, வளர்ந்து வரும் சங்கக் கட்டிடத்தின் பணிகள், நிதித் தேவைகள் பற்றியெல்லாம்தான் கட்டுரைகள்-குறிப்புகள் தந்து வந்தோம். ஆனல் இவ்வாண்டு மலரில்-சங்கக்காரியங்களுக்குப் புறம்பாகத்தமிழ் வாசகர்களுக்குப் பயன்படும் வண்ணம் தேர்ந்த எழுத்தாளர்களின் சிறு கதைகள், நாடகம், கட்டுரைகள், கவிதைகள் யாவும் வெளியிட்டு மணம் பெறச் செய்துள்ளோம்

இன்னும் இம்மலரில் கடந்த ஓராண்டு காலத்தின் சங்கப்பணிகளின் கருத்துக்கள் அடங்கிய கட்டுரையுடன் மும்முரமாக நடந்துவரும் நமது சங்கக் கட்டிடத்திற்கான ஆக்கப் பணிகள் பற்றிய விவரங்கள், பெருநோக்குடன் கட்டிட நிதியுதவியளித்து, சங்கப் புரவலர்கள் பட்டியலில் இடம் பிடித்துக் கொண்ட பேராளர்கள் தம் உருவப் படங்களும் அவர்கள் பற்றிய சிறப்புக் குறிப்புகள் யாவும் இடம் பெற்றுள்ளன. இப்பகுதி மலரின் சிறப்பம்சங்களில் ஒன்றென்றே நாம் கருதுகின்ருேம்.

நாம் தற்போது செயல்பட்டுவரும் ஏன், கடந்தபத் தொன்பது ஆண்டுகாலமாக இயங்கி வரும் அலுவலகக் கட்டிடத்தின் நிழற்படமும், உருவாகிக் கொண்டிருக்கும் நமது தமிழ்க் கோயிலின் நிழற்படமும் இம்மலரின் முகப் போவியமாக திகழச் செய்திருக்கின்றோம். கனவுகள், மெல்லமெல்ல, நனவாகி வருவதாக அந்த ஓவியக் குறிப்புகள் பறைசாற்றுகின்றன. வரும் ஆண்டிலேயே நமது கனவுகளின் முழு உருவத்தினையும் சித்திரமாக்கிட முடியுமென்று நம்புகிறோம்.

மலரின் உள்ளே கட்டிடப் பணிகளுக்கும் மற்றுமாக நாம் கண்ட முயற்சிப் பணிகளின் போது எடுத்துக் கொண்ட புகைப்படங்கள் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது நமது சங்கப் பேராளர்கள் கலந்து கொண்ட-சந்தித்தப் பிர முகர்களுடனான புகைப் படங்கள் வெளியிட்டிருக்கின் றோம். நிதியுதவி கேட்டு தமிழக முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களிடம் விண்ணப்பமொன்றினை நமது செயலாளர் கோ. முருகேசன் அளித்திட்டார். மதுரைத்தமிழ் மாநாட்டின்போது நமக்கு கிடைத்த நல் வாய்ப்பு அது.

சங்கக் கட்டிட நிதிக்காக ஏறக் குறைய அறுபதினா யிரம் ரூபாயளவில் திரட்டி, பணிகள் நடந்து வருகின் றன. தமிழக, கேரள அரசு சார்பிலிருந்து நல்லதோர் நிதியுதவி எதிர்பார்த்து இரு அரசுகளுக்கும் தகுந்த முறையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளோம். கனிந்த நிதியுதவி கிடைக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

இந்த ஆண்டு மலரின் எழில் முகப்புப் புகைப்படங் களை எடுத்து உதவியவர், சங்க வளர்ச்சியில் பெரிதும் ஆர்வம் கொண்ட ஜி. குமரேசன் அவர்கள். தங்கம், பொன் அணிகலன்களில் கைவிருது காட்டும் குமரேசன் அவர்களுக்குப் புகைப்படக் கலையிலும் உள்ளஆர்வத்தின் பிரதிபலிப்பே - இப்புகைப்படங்கள். கவிதை உள்ளங் கொண்ட அந்த நண்பருக்கு நன்றி சொல்லிக் கொள்வது கூட குறைந்த வெகுமதிதான்!

மலருக்கு கதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாடகம் எழுதியளித்த எழுத்தாளப் பெருந்தகை யினருக்கும் விளம்பரங்கள் தந்து உதவிய அரசு, தனியார், வணிகத்துறை, நிறுவனங்களுக்கும் ஆசிரியர் குழுவின் சார்பில் ஆழ்ந்தநன்றியினைத் தெரிவித் துக் கொள்கிறேன். இந்த அழகுப் பெட்டகமாம் மலரினை இத்துணைச் சிறப்பாக அச்சிட்டு-மலர்க் கோவை யாக்கிய, டயமண்ட் அச்சகத் தொழிலாள அன்பர்கள், குறிப்பாக அதன் உரிமையாளர் கலை ஆர்வமிக்க நண்பர், எனது தம்பி, கு. சுந்தரராஜன் ஆகியோருக்கு நன்றி.


இன்னும் இம்மலர் வேலையினை கடந்த இரண்டு மாத காலமாக தமது சொந்த அலுவல்களைக் கூட மறந்து, சிறப்புறக் கண்காணித்து, அச்சுத்திருத்தியும், குறிப்புகள் எழுதியும், ஓவியங்கள் வரைந்தும் திறம் படச் செய்து அன்பர்கள் கைகளுக்கு அளித்திட்ட ஆசிரியர் குழுவின் கவிஞர் நெல்லை. சு. முத்து பி. எஸ்ஸி., அவர்களது உதவி பெருமை மிக்கதாக இருந்தது.

வாரீர் மலர் மணம் நுகர்வீர்!

நுகர்ந்து கருத்துக்களை எழுதிடுவீர்!!

மிக்க அன்புடன்

ஆ. மாதவன்





அட்டைப் படம்

# கனவு மெல்ல மெல்ல நனவாகிறது

இந்த 20-ம் நூற்றுண்டில் நான்கு அல்லது ஐந்து சங்கங்கள் தமிழின் பெயரால் திருவனந்தபுரத்தில் உருவாகிமுளையிலேயேகருகிவிட்டதாகக் கணக்கிடப்படுகிறது இவற்றிற்கெல்லாம் பின்னர் நமது திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம் 1962 பிப்ரவரித் திங்கள் 5-ம் நாளில் அட்டையில் காணும் சிறிய பழைய உருப்பெற்று இப் போதுபத்தொன்பது ஆண்டுகளைத் தாண்டியும்வாடகைக் கட்டிடத்திலேயே வாழ்கிறது. 1963, 1964, 1966, 1972 இந்த ஆண்டுகளிலாக நான்கு ஆண்டு மலர்களை வெளியிட்டு மெல்ல மெல்ல தவழ்ந்து நடந்து வந்த தமிழ்ச் சங்கம் 1978-தைத் திங்கள் வரை அழியுமா, வளருமா என்ற ஐயப்பாட்டிலேயே செயல்பட்டது. ஆனல் இந்த நாளில், நமது சங்க ஆயுள் உறுப்பினர் உயர்திரு பி. இரத்தினசாமி பிள்ளை அவர்கள் ஆறு சென்டு நிலம் ஒன்றினை வாங்கிச் சங்கத்திற்கு அன்பளிப்பாகத் தந்து சங்கத்தின் வளர்ச்சியினை உறுதிப்படுத்தினர்கள். இந் நிலையில் சங்கத்திற்குச் சொந்தமாகக் கட்டிடம் ஒன்று நிறுவிட வேண்டுமென ஆசைகொண்டு உயர்திரு. எஸ். சந்திரன், திரு. பி. சிதம்பரம், திரு. எஸ். வி. பண்டிட், திரு. எஸ். போற்றிவேலு, திரு. ஏ. சிதம்பரதாணு ஆகியோருடன் சங்கத்தின் தலைவர் திரு. ஆ. மாதவன், செயலாளர் திரு. கோ. முருகேசன், பொருளாளர் திரு. பி. மதனன் ஆகியோர் பொறுப்பாளராகக் கொண்டு கட்டடக் குழு ஒன்று அமைத்துச் செயல் படத் தொடங்கினேம். இதன் முன்னேற்றம் நம் சக்திக்கு ஏற்றுற்போல் விரைவாக நடைபெறவில்லை யாயினும் மெல்ல மெல்ல கனவு நனவாகும் வண்ணம் இது வரையிலும் ரூ. 62000/- நன்கொடை திரட்டியுள்ளோம். மூன்று மாடித் தமிழ்க் கோயில் ஒன்று உருவாக்கிடும் பொருட்டு அதன் அடித்தள வேலைகளை முடித்துள்ளோம். இதுவரையிலும் ரூ. 50000/-க்கும் மேற்பட்டத் தொகை செலவிடப்பட்டுள்ளது. இது நம் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் காரியமே ஆகும். திட்டமிட்டுள்ள மூன்றடுக்குக் கலைக் கோயிலின் முதலாவது அடிக்கட்டடத்தை முடித்திட இன்னும் ஏறத்தாழ ரூபாய் 50000/- தேவைப்படுகிறது. உருவாகி வரவேண்டிய ஒவ்வொரு மாடிக் கட்டத்திற்கும் இப்போதைய நிலையில் ரூ.75000- வீதம் தேவைப்படும் என்றும் கணக்கிடப்படுகிறது. நாம் கனவு காணுகின்ற மூன்று மாடிக் கட்டடத் திட்டத்தை அட்டையில் மேலே காணலாம்.

நமது தமிழ்ச் சங்கமானது தமிழ்க் கலைகளின், கலாச்சாரத்தின், வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது. கலாச்சாரங்களையும் கலைகளையும் பற்றி அறிவு பெற்ற சமூகம்தான் உலகில் மேம்பட்டு வாழத் தகுதியுள்ளது என்பதில் இரு கருத்துக்கிடமில்லை. இவற்றை வளர்க்கவும் பரப்பவும் இது போன்ற சங்கங்களால்தான் முடியும். இதற்காகத் தொண்டு செய்ய ஆழ்ந்த அறிவும் ஆற்றலுங் கொண்ட தொண்டர் குழு வேண்டும். தமிழ்ச் சங்கம் என்றிடும் போது இங்கே போதை தரும் வகையாக எந்தக் காரியமும் இல்லை. போதையென்றல் கட்சி அரசியல், சாதி, மதம் போன்றவைகளைத்தான் குறிப்பிடுகின்றேம். இதை ஒரு நாடகக் குழு போன்றே நாட்டிய-இசைச் சங்கம் போன்றே எளிதில் நடத்திச் செல்ல முடியாது. அதற்கெல்லாம் தொண்டரும் பொருளுதவியும் எளிதில் கிடைத்துவிடலாம். கலைகள்; கலாச்சாரம் வாழவும் வளரவும் பாடுபடுகின்ற சங்கங்கள் செம்மையாக நடைபெறுவது என்றல் சற்றுச் சிரமமாகவே இருக்கும். இதற்காகச் செயல்பட தொண்டர்கள் அமைவதும், பொருளுதவி பெற்றிடல் என்பதும் சிறப்பானது. இந்த நிலையில் கல்வியில் முன்னணியில் நிற்கும் கேரள மாநிலத்தின் தலைநகரில் ஒரு தமிழ்க் கலைக் கோயிலை எழுப்புவது மற்ற மாநிலங்களைவிட எளிதில் நடைபெற்றிருக்க வேண்டும். ஆயின், ஏனே தாமதம் ஏற்பட்டுவிட்டது. நம் கனவு விரைவின்றியாயினும் மெல்ல மெல்ல உருவாகி வருகிறது...... என்பதில் நாம் மகிழ்ச்சி கொள்ளத்தான் வேண்டும். இதன் வளர்ச்சியை விரைவு படுத்தும்வகையில் அன்பர்கள் அனைவரும் மனஒற்றுமையோடு சுணங்காமல், காலம் தாழ்த்தாமல், மிடுக்கோடு, உயர்ந்த உள்ளத்தோடு, செயல்பட்டால் நம் கனவு நனவாகி நாம் எதிர்பார்க்கிற தமிழ்க் கோயில் தலை தூக்கி நின்று பகுத்தறிவு வளரக் கைகொடுக்கும் காட்சி கண்டு பூரிப்பு மிக அடைந்திடுவோம்.

அட்டையில் வெளியிட்டுள்ள சங்கத்தின் தற்போதைய வாடகைக் கட்டடத்தினுடையவும், நாம் திட்டமிட்டு மெல்ல மெல்ல உருவாக்கும் சங்கத்தின் சொந்தக் கட்டிடத்தின் அடித்தள வேலை முடிந்து காணும் காட்சியையும் நிழற்படமாக்கியவர் நமது சங்க ஆயுள் உறுப்பினரும் புரவலருமாகிய திரு. ஜி. குமரேசன். இந்நிழற் படங்களின் துணையோடு அட்டையை அலங்காரம் செய்வித்தவர் நமது சங்க ஓவியக் கலைஞர் எம். அடைக்கலம் அவர்கள். இருவருக்கும் நன்றி உரித்தாகுக.

திரு. கோ. முருகேசன்
செயலாளர்

# காடுகள் ஏன் வேண்டும்?

**மரம், விறகு, பச்சிலை உரங்கள்,**
**மாட்டுத் தீவனம் முதலியவை கிடைப்பதற்கு,**

● காட்டுப் பொருள்கள் பல தொழில்களுக்கு அடிப்படையானதாகும்

●● இயற்கை சமநிலையை கட்டுப்படுத்துவதில் காடு மிக முக்கியமான பங்கு வகிக்கிறது.

●●● காட்டை அழிப்பதால் ஏற்படும் மண் அரிப்பு, வெள்ளப் பெருக்கு வறட்சி போன்றவற்றைத் தடுக்கவும், நமது தேசிய சொத்தான வன விலங்குகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், காட்டைப் பாதுகாத்தல் ஒவ்வொரு குடிமகனின் கண்ணிய கடமையாகிறது.



**Publicity wing - Forest Department KERALA.**

# திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்

## செயற்குழு (1980-81)

தலைவர் : திரு. ஆ. மாதவன்

செயலாளர் : திரு. கோ. முருகேசன்

பொருளாளர் : திரு. பி. மதனன்

துணைத்தலைவர் : திரு.வ.வினயகப்பெருமாள்

துணைச்செயலாளர் : திரு. எஸ். பி. நாதன்

செயற்குழு உறுப்பினர்கள் : திரு. ச. கணேசன்

,, நெல்லை சு. முத்து

,, எஸ். சங்கரன்

,, நீல ஜனர்த்தனன்

,, எம்.கோலப்பாபிள்ளை

,, ஏ. நீலகண்டன்

,, வி. தாணப்பன்

,, சாம் கிறுஸ்துதாஸ்

,, பி. கிருஷ்ணமூர்த்தி

,, எம். கே. நாதன்

,, ஏ. மொய்தீன் அபூபேக்கர்

,, என். சுந்தரம்

தணிக்கையாளர் : திரு. ஆர்.பத்மனபபிள்ளை

## கட்டடப் பொறுப்பாளர் குழு

திரு. பி. இரத்தினசாமி
(ராஜகாட், தைக்காடு, திருவனந்தபுரம்)

,, எஸ். சந்திரன்
(நியூ தியேட்டர், திருவனந்தபுரம்)

,, எஸ். வி. பண்டிட்
(பாளையம், திருவனந்தபுரம்)

,, பி. சிதம்பரம்
(சி. பி. சன்ஸ், திருவனந்தபுரம்)

,, ஏ. சிதம்பரதாணு
(தாணு & கோ, ஆரியசாலை, திருவனந்தபுரம்)

,, எஸ். போற்றிவேலு
(மொத்த வியாபாரம், சபாபதி கோயில் தெரு, திருவனந்தபுரம்)

,, ஆ. மாதவன்
(தலைவர், திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம்)

,, கோ. முருகேசன்
(செயலாளர், திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்)

,, பி. மதனன்
(பொருளாளர், திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்)

## திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்

# புரவலர்கள்-(PATRONS)

### ஆளுநர் மேதகு. ஜோதி வெங்கடாசலம் அவர்கள்.

தமிழக அரசியல் வானில், தேர்ந்த ஒரு காந்திய தத்துவ ரீதியில் அரசியல் பணியில் தொண்டாற்றிப் பெருமை கொண்ட திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் தமது திருமண வாழ்விலேயே புரட்சி செய்தவர். மூதறிஞர் இராஜாஜி, காமராஜர் அமைச்சரவைகளில் அமைச்சராக இருந்தவர். ஜனதா ஆட்சிக் காலத்தின் போது, கேரள மாநில ஆளுநர் பொறுப்பேற்று இன்று மாறுபட்ட அரசியல் நிலைகளிலும், சிறப்புற ஆட்சித் தேர் நடத்தி வரும் ஆளுநர் அவர்கள் நமது தமிழ்ச் சங்கத்தின்பால் ஆழ்ந்த பற்றும் அன்பும் கொண்டவர்கள். அன்னவர், நம் சங்கக் கட்டிடப் பணிக்களித்த நன்கொடையால் சங்கத்தின் புரவலராகவும் திகழ்வது, நாம் பெற்றபேறென்றே சொல்லலாம்.

### திரு. பி.ரத்தினசாமி

1921-ல் நாகர்கோவிலில், திரு. எஸ். பெருமாள் பிள்ளை, திருமதி. ஆனந்தம் அம்மாள் தம்பதியருக்கு இரண்டாவது புதல்வராகப் பிறந்த ரத்தினசாமி அவர்கள் தந்தையாரின் கட்டிடக் காண்டிராக்டர் பணியையே மேற்கொண்டு திருவனந்தபுரத்தில் மாபெரும் சிறப்புடன் திகழ்பவர். Diploma in Civil Engineering பயின்றுதமது தொழில் நுட்பங்கள் அனைத்தும் கசடறக் கற்றிருந்த ரத்தினசாமி அவர்களுக்கு, இரண்டு புதல்வியரும் ஒரு புதல்வரும் உள்ளனர். மூத்த புதல்வி, டாக்டர். ஆனந்தம் அவர்கள் நரம்பியல் (Neuro) துறையில் சிறப்புப் பட்டம் பெற்று திருவனந்தபுரம் S. A. T. மருத்துவமனையில் பணியாற்றி வருகிறார். இரண்டாவது செல்வி, ராஜேஸ்வரி கல்யாண் ஆஸ்பத்திரி முதன்மை மருத்துவர், டாக்டர் திருவாரியான் அவர்களது இல்லத்தரசி. மூன்றாமவர், செல்வன், முருகன். பொறியியல் பட்டதாரியான முருகன் தம் தந்தையார் வழியையே பின்பற்றி அத்துறையில் சிறந்து விளங்குகிறார். 'சவுந்தர்யா' என்னும் நிறுவனத்தை பாரோர் போற்றும் வண்ணம் நடத்தி வருகிறார். மேலும், நமது தமிழ்ச் சங்கத்திற்கு கட்டிடத்திற்கான நிலம் ஒன்றினை வாங்கியளித்துக் கட்டிடப் பணி நடந்து வரும் இதுநாள் வரையில் பணியின் ஒவ்வொரு கட்டத்திலும் உறுதுணையாக உதவி வரும் ரத்தினசாமி அவர்கள் நகரில் பிரபலமான, Fine Arts Association - இன் தலைவர், 'சைவப்பிரகாச சபை'யின் செயற்குழு உறுப்பினர், 'செஷயர்ஹோம்' எனும் அமைப்பின் இயக்குநர், மாநிலத்தொழிலாளர்வாரியத்தின் உறுப்பினர், 'அரிமா சங்க'த்தின் சிறப்பு உறுப்பினர், முன்னாள் ஆளுநர். அரசு வங்கிக் கட்டிடங்களின் நுண்ணியல் ஆலோசகர். இன்னும், நகரில் பெரிய அளவிலான அழகியக் கட்டிடங்களாகிய, Reserve Bank Building, Sri Chitra Tirunal Medical Centre, Canara Bank, State Bank of Travancore, Cosmopolitan Hospital போன்றவற்றின் படைப்பாளர் போன்ற சிறப்பினைப் பெற்ற P. ரத்தினசாமி அவர்கள் நமது தமிழ்ச் சங்கத்தின் ஆயுள் உறுப்பினரும் புரவலர் அணியில் முதன்மையானவரும் ஆவார்கள்.

### திரு எஸ். சந்திரன்

திருவனந்தபுரத்தில் முதன் முதலாக ஒரு ஸ்டுடியோ நிறுவியவரும், தமிழ், மலையாளப் படஉலகிலும், திரையரங்கு, பட வெளியீடு முதலிய துறைகளிலும்முத்திரை பதிப்பித்தவருமான அமரர் திரு. பி. சுப்பிரமணியம் அவர்கள் குமாரர் திரு. சந்திரன் அவர்கள், சுப்பிரமணியம் குருப் கம்பெனிகளின் பல அலுவலகங்களை நிர்வகித்து வருகிறார்கள். நமது சங்கக் கட்டடப் பொறுப்பாளர்குழு உறுப்பினர், சங்கத்தின் ஆயுள் உறுப்பினர். அரிமாசங்க உறுப்பினர், 'வஞ்சி புவர் ஃபண்டு' பொருளாளர். 'சுப்பிரமணியம் றிலிஜியஸ் டிரஸ்டி' போன்ற பல்வேறு பொது நல அமைப்புகளில் இணைந்து தொண்டாற்றியவரும் புரவலர் சங்கத்தின் முந்தைய வளர்ச்சித் திட்டங்களில் ஆர்வமுடன் பங்கு கொண்டவரும் ஆவார். நமது சங்க நூலகத்திற்காக சுமார் ஆயிரம் நூற்களை வாங்கி நன்கொடையாகத் தந்த கொடையாளர்.

## திரு. எஸ். வி. பண்டிட்

1911 மார்ச் திங்கள் எட்டாம் நாள் திருவனந்தபுரத்தில் திரு. சுப்பையாதாஸ் திருமதி. குப்பம்மாள் தம்பதிக்கு மகனுகப் பிறந்த எஸ். வி. பண்டிட் அவர்கள் புனித ஜோஸப்ஸ் ஆங்கிலப் பள்ளியிலும், தொடர்ந்து மகாராஜாவின் அறிவியல் கல்லூரியிலும் கல்வி பயின்ருர். திருமதி இராமாயு அம்மாளை மணந்த புரவலருக்கு இரு புதல்வர்களும் –திருவாளர் வேலாயுதம், இராம் மோகன்- ஒரு மகளும்-திருமதி மோகனம்பிகா உள்ளனர். தொடர்ந்து இருபத்தியொன்று வருடமாக வர்த்தக சபைத் தலைவராக, 'கேரள லாண் டென்னிஸ் அஸோஸியேஷன்' தலைவராக, திருவனந்தபுரம் புற்று நோய் சங்கத்தின் முதன்மைத் துணைத் தலைவராக, 'வஞ்சி புவர் ஃபண்ட்'டின் செயற்குழு உறுப்பினராக, 'செஷயர் ஹோமி'ன் செயற்குழு உறுப்பினராக என்று எராளமான பொது நல அமைப்புகளிலும், திருவாங்கூர் சிமன்ட்ஸ் இயக்குநராக, இலங்கை பர்மா அகதிகள் மறு வாழ்வு உயர்மட்டக் குழு உறுப்பினராக கேரள மின் வாரிய Consultative Council உறுப்பினராக, சிவில் சப்ளைஸ் ஆலோசனைக்குழு உறுப்பினராக என்று இன்னும் பல்வேறு முன்னணி அமைப்புகளில் தலைமைப் பதவி வகித்து, பொதுத் தொண்டாற்றி தமிழர்களுக்குப் பெருமை சேர்த்த வண்ணமிருக்கிருர். ரோட்டரி சங்கத் தலைவராகவும், நமது நகர் மன்ற உறுப்பினராகவும், கேரளப் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக இரு முறையும் திறம்படச் செயலாற்றிய பெருமை இவருக்கு உண்டு.

நமது சங்கத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே சங்கத்தோடு தொடர்பு கொண்ட பெரியவர். சங்கத்தின் ஆயுள் உறுப்பினர்: கட்டிடப் பொறுப்பாளர் குழு உறுப்பினர்.

## திரு. பி. சிதம்பரம்

சி. பி. சன்ஸ் என்ற வியாபார நிறுவனத்தின் உரிமையாளர். திரு. சிதம்பரம் அவர்கள் சங்கத்தின் துவக்க கால முதலே அதன் ஒவ்வொரு முன்னேற்றத் திட்டங்களிலும் கலந்து கொண்டு சிறப்புச் செய்தவர் ஆவர். 1934 மே மாதம் 24-ம் நாள் திரு. பெருமாள் பிள்ளை, திருமதி. சிவகாமி அம்மாள் தம்பதியினருக்கு மகனுகத் திருவனந்தபுரத்தில் பிறந்தார். இவ்வாணிக மேதையின் புரவன்மையால் பல பொது நலத் திட்டங்கள் வெற்றியடைந்ததுண்டு. செந்திட்டை அம்மன் கோவிலின் தனிப் பொலிவும், தெய்வீகக் களையும் பெருகும் வண்ணம் அமைந்த முகப்பு அமைப்பு இவர்தம் அண்மைக் கால சாதனையாகக் குறிப்பிடவேண்டும். கொடை மனமும், தமிழ்ப்பற்றும் கொண்டவர்.. நற் பண்புகளின் உறைவிடம். சங்கத்தின் துவக்க நாளிலிருந்தே சங்கத்தின் புரவலராக நடந்து வரும் இப் பெரியவர் சங்கத்தின் ஆயுள் உறுப்பினர்: சங்கக் கட்டிடப் பொறுப்பாளர் குழுவில் முக்கியமானவர்.

## எஸ். போற்றிவேலு

1928-ல், திரு. சுடலையாண்டி, திருமதி பாக்கியம்மாள் தம்பதியரின் புதல்வராகப் பிறந்த எஸ். போற்றிவேலு அவர்கள் பள்ளியிறுதி வகுப்புவரை படித்துத் தமது அயராத உழைப்பால் இன்று நகர முன்னணி வர்த்தகரில் ஒருவராகச்சிறப்புடன் திகழ்பவர். சாலை, சபாபதி கோவில் தெருவில், மொத்த வாணிகம் செய்யும் இவர், 'ஸ்ரீ வெங்கிடேஸ்வரா டூரிஸ்டு ஹோம்' எனும் நிறுவனத்தின் உரிமையாளரும் கூட. ஆரம்ப நாளிலேயே தமிழ் இலக்கியத்தில் மிக்க ஆர்வம் கொண்ட இவர், சேனைத் தலைவர் சமுதாய சங்கப் பொருளாளர் மற்றும் நகர் 'அரிமா சங்க' உறுப்பினர், வர்த்தக சங்க உறுப்பினர், தமிழ்ச் சங்கத்தின் ஆயுள் உறுப்பினர், நமது கட்டடப் பொறுப்பாளர் குழு உறுப்பினர் போன்ற பதவிகளில் சிறப்பிடம் வகிப்பவர். இவருக்கு திரு. முருகன் B Com.(C. A.) திரு. அசோகன் B.Sc., (M.B.B.S.) திரு. சுப்ரமணியன் எனும்மூன்றுபுதல்வரும், திருமதி. பாக்கியலெட்சுமி (Dr. பாலச்சந்திரன் M.B.B.S., DCH. M.D.) திருமதி. பி. சரஸ்வதி B.Sc., செல்வி. பி. சீதாலட்சுமி எனும் புதல்வியரும் உள்ளனர்.

## திரு. ஏ. சிதம்பரதாணு

திருவனந்தபுரம் ஆரிய சாலேயில் அமைந்துள்ள, தாணுஅன்கோ; பாப்பணம்கோட்டில் அமைந்துள்ள டி. ஸி. ஃபார்மா - நிறுவனங்களின் உரிமையாளர். திரு. ஏ. சி. தாணு அவர்கள் திருமதி செல்லம்மா திரு. அருணுசலம் தம்பதியரின் புதல்வராக 1929-ஆவது ஆண்டில் பிறந்து, 11-வது வகுப்பும் ஃபார்மஸி கோர்ஸும் கற்று, ஆங்கில மருந்து (அலோப்பதி) வியாபாரத் துறை வழியாக அயராது உழைத்து முன்னுக்கு வந்தவர். இவருக்கு அருணுசலம் B. Sc., ராமச்சந்திரன் B. Sc., என இரு ஆண் மகவுகள் உள்ளனர் இவர்களும்தந்தையாரது வியாபாரத் துறையிலேயேசெவ்வனே பணியாற்றுகின்றனர். திருமதி பகவதிஅம்மாள் இவர்தம் இல்லத்தரசி. அரசியலில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். சமூகப் பிரச்சனேகளில் தெளிவான கருத்துக்கள் இவருக்கு உண்டு. பொது வாழ்க்கையில் அக்கறை கொண்டவர். 'திருவனந்தபுரம் கெமிஸ்டு அண்டு டிறக்கிஸ்டு அசோசியேஷன்' தலேவராகவும்; அனேத்துக் கேரள வணிக வைசிய சங்கத் துணேத் தலேவராகவும்; 'கரமனே ரிக்ரியேஷன்கிளப்' தலேவராகவும்; இன்னும் பல அமைப்புகளிலுமாகத் தொண்டாற்றி சிறப்புக்களேப் பெற்றுக் கொண்டிருப்பவர். திருவனந்தபுரம் வாழ் தமிழ் மக்களிடையே ஒற்றுமை வளர்க்கும் முகமாக அமைந்திருக்கும் திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கக் கட்டிடப் பொறுப்பாளர் குழுவில் ஒருவராக மிகுந்த அக்கறையுடன் செயல்படுபவர்; நமது புரவலர்.

## பேராசிரியர் திரு. வ. விநாயகப் பெருமாள்

கேரளப்பல்கலேக் கழகக் கல்லூரித்தமிழ்த்துறைத்தலேவரானபேராசிரியர்அவர்கள்ஆரல்வாய்மொழியைச்சேர்ந்தவர். திருவனந்தபுரத்தில் ஜவஹர் நகரில் வாழ்ந்துவரும் விநயகப்பெருமாள் அவர்கள் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர், கட்டிடக்குழு உறுப்பினர். சங்கத்தின் ஆரம்ப காலம் முதற்கொண்டே அனேத்துப் பணிகளிலும் அயராது பங்கு கொண்டு உழைத்து வருபவர். 1933 ல் ஜூன் 17 ம் நாள் பிறந்த பேராசிரியர் அண்ணுமலேப் பல்கலேக் கழகத்தில் எம். ஏ, பட்டம் பெற்ருர். தந்தையார் திரு. வள்ளிவேலுப்பிள்ளே தாயார் திருமதி. கல்யாணி அம்மாள், மனேவி திருமதி. சாந்தகுமாரி.

## திரு. ஏ. சந்திர சேகரன்

சங்கத்தின் ஆயுள் உறுப்பினராயிருந்து 1975-ல் காலமான, சங்கத்தின் ஒவ்வொரு வளர்ச்சிப்பணிகளிலும் புரவலராகவே செயல்பட்ட திரு. கே. அருணுசலம் பிள்ளேயவர்களின் மகன் திரு. ஏ. சந்திரசேகரன் அவர்கள் அப்பாவுக்குத் தப்பாமல் பிறந்தவர். B. Com. பட்டம் பெற்றுள்ள புரவலர் 1954 நவம்பர் 11-ல் திருவனந்தபுரத்தில் பிறந்தவர். தாயார், திருமதி. அருணுசலம் அம்மாள் அவர்கள். 'எஸ். டி. சி. திருவடி நாதபிள்ளே & சன்ஸ்' என்ற வணிக நிறுவனத்தை நிறுவகித்து வருகிருர். திரு. சந்திரசேகரன் கொடைஉள்ளம் கொண்டவர். சிறந்த வாசகர்; தமிழ்ப் பற்றுடையவர். நமது சங்கத்தின் ஆயுள் உறுப்பினர்; கட்டிடக் குழு உறுப்பினரும் கூட.

## திரு. செ. வள்ளிநாயகம் பிள்ளே

திருநெல்வேலி பேட்டை என்னுமிடத்தில் 1095-ம் சித்தார்த்த ஆண்டு கார்த்திகை மாதம் 14-ஆம் நாள் பிறந்த வள்ளிநாயகம் பிள்ளேயவர்களின் தந்தையார் திரு. செல்லம்பிள்ளே, தாயார் திருமதி. அழகம்மாள். திருமதி. சிவகாமி அம்மாளே இல்லத்தரசியாகக் கொண்ட புரவலருக்கு ஐந்து ஆண்மக்களும் இரண்டு பெண் மக்களும் உள்ளனர். திருவனந்தபுரத்தில் நாற்பத்திரண்டு ஆண்டுகளாக வாணிகத்துறையில் ஈடுபாடு கொண்ட பிள்ளேயவர்களுக்கு சாலேயில் 'M/s. வள்ளிநாயகம்பிள்ளே' என்ற முகவரியில் அரிசி மொத்த வியாபாரமும், கரமனேயில் 'ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்' என்ற நிறுவனமும் உள்ளன. மேலும் பல தொழில் நிறுவனங்களில் பங்குதாரரும் கூட. வர்த்தக சபை, தானிய வர்த்தக சங்கம் போன்றவற்றில் உறுப்பினரும், தமிழ்ச் சங்கத்தின் ஆயுள் உறுப்பினரும், கட்டிடக் குழு உறுப்பினரும் ஆவார்.

## திரு. வனஜா மோகன்

திரு. வனஜா மோகன் அவர்கள், கேரளத்தமிழ் இதழ்களில் கதை, கவிதைகள் எழுதி வரும் ஏ. நீலகண்டன் என்ற இயற் பெயர் கொண்டவர். தேர்ந்த இலக்கிய வாசகரான இவர் 1950 மே 21-நாள் பிறந்தார். இவரது தாயார் என். சீதாலட்சுமி அம்மாளும், தந்தையார் திரு. ஆறுமுகம் பிள்ளையவர்களும் ஆவர். திருவனந்தபுரத்தில் பிறந்த கவிஞர். B. Sc., பட்டதாரி. நமது சங்கத்தின் இப்போதைய செயற்குழு உறுப்பினர்.

## திரு. எஸ். எம். இராமசாமி

65 வயதுடைய எஸ். எம். இராமசாமி அவர்கள், சாலை, 'விஜயா அலுமினியம் ஸ்டோர்' உரிமையாளர். சொந்த ஊர் மதுரை அருகிலுள்ள ஒட்டன் சத்திரம் என்னும் சிற்றூர். தந்தையார் திரு. முத்தன் செட்டியார், தாயார் முத்தம்மாள். சுமார் 40 ஆண்டு காலத்திற்கு முன்னர் வியாபார நிமித்தமாக திருவனந்தை வந்த புரவலர் அவர்கள் தேர்ந்த காந்தீயவாதி. தேச விடுதலைப் புரட்சி நாட்களில் தமது கிராமத்தில் தேச விடுதலைக் கருத்துக்களைப் பாமரர்முன் எடுத்துச் சொல்லிப் புரட்சித் தீவளர்த்தார். அந்தப் பொது நல வேட்கை, வந்த இடத்திலும் வளர்வதின் அறிகுறியே நமது சங்கத்தின்பால் கொண்ட ஈடுபாடு. திரு. இராமசாமி அவர்களுக்கு தங்கராஜ், தனபாலன், கோவிந்தராஜ் எனும் மூன்று புதல்வர்களும், கல்யாணி, பாப்பா, கோவிந்தம்மாள் எனும் மூன்று புதல்வியரும் உள்ளனர். மனைவி மாரியம்மாள். (அண்மையில் காலகதியடைந்து விட்டார்கள்.)

## திரு. பி. வி. சின்னப்பழ நாடார்

தூத்துக்குடி அருகில் உள்ள தருனவிளம் என்னும் ஊரில் பிறந்த சின்னப்பழ நாடார் அவர்களின் தந்தையார் திரு. வெற்றிவேல் நாடார், தாயார் திருமதி குருவம்மாள். 1950-ல் வியாபார நிமித்தம் திருவனந்புரம் வந்த நாடார் அவர்கள் கடும் உழைப்பால் உயர்ந்து வியாபாரத்தின் கொடுமுடிகளை எட்டி விட்டவர். நிறைந்த தமிழ்ப் பற்றும் கொடை மனமும் கொண்ட புரவலருக்கு இரண்டு ஆண்மக்களும் நான்கு பெண் செல்வங்களும் உள்ளனர். திருவனந்தபுரம் கோட்டைக்குள் 'பத்மா ஸ்டோர்' உரிமையாளர். சங்கத்தின் துவக்க நாளிலிருந்தே உறுப்பினர். நமது கட்டடக் குழு உறுப்பினர்களில் ஒருவர்.

## திரு. ஏ. செல்லச்சாமி

1944 ஜூலை பத்தாம் நாள் திரு அருணாசலம், திருமதி காவியம்மாள் தம்பதியருக்குப் பிறந்த திரு ஏ. செல்லச்சாமி அவர்கள் திருநெல்வேலி இராஜாவின் கோவில் என்னும் ஊரைச் சேர்ந்தவர் E.S.L.C. வரைப் படித்துள்ள புரவலர் 'அருணா அன்டு கோ' எனும் நிறுவனத்தை நடத்தி உழைப்பால் முன்னுக்கு வந்தவர். ஊர்க் கோவில் புனரமைப்பு போன்ற சொந்த ஊர் நிதி உதவிகள் மட்டுமின்றி வந்த ஊரிலும் நிதிஉதவிகள் பலசெய்து தன் கொடைஉள்ளத்தை நிரூபித்துக் கொண்டிருப்பவர். இன்முகம் காட்டும் புரவலர். நல்லதோர் வாசகர்.

## திரு. ஜி. குமரேசன்

இந்த மூன்ருவது ஆண்டு மலரின் அட்டையை அலங்கரிக்கும் நிழற்படங்களை எடுத்துதவிய, நிழற்படக் கலையில் ஆர்வம் கொண்ட, தமிழ் ஆர்வம் கொண்ட திரு. ஜி. குமரேசன் தமிழில் முதுகலைப் பட்டதாரி. பொற்கொல்லர் தொழிலில் மிகச் சிறந்து விளங்குகிறவர். ஓவியம், கவிதை, கதை என்னும் பல்வேறு கலைகளில் ஈடுபாடுடையவர், இவர் 1950 ஏப்ரல் 18-ஆம் நாள் பிறந்தார். ஆரல்வாய்மொழியைச் சேர்ந்தவர். பழைய சாலையில் வாழ்ந்து தொழில் புரிகிருர். தந்தையார் அமரர் கணபதி ஆச்சாரி. தாயார் திருமதி பகவதி அம்மாள். நமது சங்கத்தின் ஆர்வமிக்க உறுப்பினராகியிருப்பவர். சங்கத்தின் ஆண்டு மலர் ஒன்றில் 'ஆரல் கணேசன்' என்னும் பெயரில் கதை ஒன்று எழுதியுள்ளார். திரு. குமரேசன் நமது சங்கத்தின் ஆயுள் உறுப்பினர்; புரவலர்.

## திரு. டி. மாதவன்பிள்ளை

சாலையில் சபாபதி கோவில் தெருவில் வியாபாரம் செய்து வரும் டி. மாதவன்பிள்ளை அவர்கள் மலையின்கீழ் என்னுமிடத்தில் 'மாதவ் இன்டஸ்ட்ரீஸ்' என்னும் தொழிலகத்தை நிறுவியுள்ளார். தந்தையார் திரு பி. தாணு பிள்ளை. தாயார் திருமதி. இசக்கியம்மாள், 1910 ஜனவரி முதல் நாள் பிறந்த புரவலர் நிரம்பத் தமிழ்ப்பற்று கொண்டவர். திருவனந்தபுரம் தமிழரிடையே ஒற்றுமை வளர்க்கும் வண்ணம் தமிழ்ச் சங்கத்திற்கு ஒரு கட்டிடம் தேவை என்ற கருத்துடைய புரவலருக்கு நான்கு ஆண் மகவுகளும் மூன்று பெண் மகவுகளும் உள்ளனர்.

## திரு. இ. கே. ஆறுமுகம் பிள்ளை

தமிழ் இலக்கியங்களிலும் பொதுத் தொண்டிலும் நிரம்ப ஆர்வம் காட்டும் பிள்ளையவர்கள் இரணியலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சாலையில் மளிகை வியாபாரம் செய்து வருகிறார். திரு. கோலப்பாபிள்ளை, திருமதி மீனாட்சி அம்மாள் தம்பதியருக்குப் பிறந்த புரவலர் மதுரை காந்தி கிராமத்தில் கல்வி பயின்றார். திருமதி என். சீதாலட்சுமி அம்மாளை மணந்த புரவலருக்கு ஏ.மாதவன்பிள்ளை, ஏ.கோலப்பபிள்ளை, ஏ.நீலகண்டன் என்ற மூன்று ஆண் மக்களும், எஸ். மீனாட்சி, எஸ். நீலா, எஸ். நாகம்மாள், எஸ். பாக்கியலட்சுமி, எஸ். இராஜேஸ்வரி என்ற ஐந்து பெண் மக்களும் உள்ளனர். புரவலர் நமது சங்கத்தின் ஆயுள் உறுப்பினர்.

## திரு. எஸ். எம். வெங்கடநாராயணன்

கொல்லம் பெரிய கடை வீதியில் 'ஸ்ரீனிவாச ஃபேப்ரிக்ஸ்' என்னும் நிறுவனத்தின் முழு உரிமையாளரான திரு எஸ். எம். வெங்கட நாராயணன் அவர்கள் நெல்லை மாவட்டத்தில் சமூகரெங்கபுரம் கிராமத்தில் திரு. முத்துசாமி ரெட்டியார், திருமதி. வெங்கடலட்சுமி அம்மாள் ஆகியோருக்குப் புதல்வனாகப் பிறந்தார். இவரது துணைவியார் திருமதி. வசந்தா. நம் புரவலர் தம் இளவல் திரு. எம். ஜெயநாராயணன் (36 வயது), பம்பாயில் Transworld Shipping Corporation இயக்குனராகத் திறம்படச் செயலாற்றியவர் - மாரடைப்பால் மாண்டுவிட்டதனால் ஆழ்ந்த் துயரத்தில் ஆழ்ந்துள்ளார். அன்னாரது குடும்பத்திற்கு நம் சங்கம் மிகுந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது. வாணிகத்துறையில் தனித்தன்மையுடன் திகழும் நம் புரவலர் 'திருவாங்கூர் ரெட்டியார் ஐக்கிய சங்கத்'தின் பொருளாளராகச் சிறப்பாக பணி புரிந்தவர். 'கண்ணெனத் தகும்' எண்ணும், எழுத்தும் பெற இயலாத சிறந்த மாணவர்களுக்கு தம்மால் இயன்ற உதவி வழங்கி ஊக்குவிக்கும் செந்தன்மையாளர். புரவலரைக் கொல்லத்தில் கண்டு நிதியுதவி வேண்டிய சங்கப் பொறுப்பாளர்களைக் கனிவுடன் வரவேற்று, சங்கம் பற்றிய செய்திகளைக் கேட்டு உளம் பூரித்து, நன் கொடை வழங்கிய நம் புரவலர் தொடர்ந்து பல உதவிகள் நல்கவும் இசைந்துள்ளார்.

## திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை

கன்னியாகுமரி மாவட்டத்து திருவிதாம்கோடு எனும் ஊரில் திரு. சுப்பிரமணியபிள்ளை திருமதிசெம்பகம்மாள் தம்பதியரின் புதல்வராகப் பிறந்த திரு. கிருஷ்ணபிள்ளை 45 வயதுடைய இளைஞர். திருவனந்தபுரத்தில் பாத்திர வியாபாரத்தில் வாழ்க்கையைத் துவங்கிய புரவலர் கொல்லம் சென்று சொந்தத்தில் சிறிய அளவில் பாத்திர வியாபாரம் துவங்கி கடும் உழைப்பால் முன்னுக்கு வந்திருப்பவர். குடும்பப் பற்று, தேசப் பற்று, தமிழ்ப் பற்று, இவைகளோடு சமுதாயப் பற்றும், நிரம்பக் காட்டும் இந்த இன் முகத்தர் கொடை மனம் கொண்டவர். சமூகத் தேவைகளை அறிந்தவர். கொல்லம் சின்னக் கடையிலுள்ள ''செம்பகா அலுமினியம் ஸ்டோர்'' அதிபர். இவருக்கு மனைவியும் நான்கு பெண் மக்களும் உள்ளனர்.

## திரு. கே. வரதராஜன்

தமிழ் வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட திரு. வரதராஜன், பொதுப் பணிகளிலும் மதிப்பு காட்டுபவர். நாற்பத்தி ஆறு வயதுடைய புரவலர் பாலராமபுரத்தில் பிறந்தார். தந்தை திரு. வி. குமாரசுவாமி, தாயார் திருமதி. பத்மினி அம்மாள். கல்லூரிப் படிப்பை முடித்து, வணிகத் துறையில் வாழ்க்கையைத்துவங்கிய புரவலரின் இல்லத்தரசி திருமதி. பி. இரத்தினம்மாள். பத்மினி, ராணி, பாலா என்று மூன்று குழந்தைச் செல்வங்கள் உண்டு. திருவனந்தபுரம் பெருந்தான்னி, சுபாஷ் நகரில் வசிக்கிறார். தமிழார்வமும், கொடைச் சிந்தனையும், பரந்த மனப்பான்மையும் கொண்ட நம் புரவலர், வி. குமாரசுவாமி அன் சன்ஸ், 'ஜேவிஎஸ் ஏஜன்ஸிஸ்', 'கேரளா சாரிசென்டர்' இந்நிறுவனங்களின் பங்குதாரர். மேலும் 'டின்னர்ஸ் கிளப்', இண்டர் நேசனல் 'ஃபைன் ஆர்ட்ஸ்அசோஷியேஷன்', 'லயன்ஸ் கிளப்' ஆகியவற்றில் உறுப்பினர்.

## திரு. எஸ். சுப்பிரமணிய பிள்ளை

திரு. ஏ. சிவந்த பெருமாள் அவர்கட்கும், திருமதி இராமலட்சுமி அம்மாள் அவர்கட்கும் மகனாகத் தோன்றிய திரு. சுப்பிரமணியபிள்ளையவர்கள், 'எஸ். சுப்பிரமணிபிள்ளை ஆண்டு பிரதர்ஸ்' என்ற நிறுவனத்தின் நிர்வாகப் பங்குதாரர் ஆவார். பட்டப்படிப்பு பெற்றவர். புரவலர் அவர்களுக்கு 54 வயது ஆகிறது. பொது நலம் பேணுபவர். கொடை மனம் கொண்டவர்.

## திரு. எம். எஸ். ஆர். சுகுமாரன்

நமது சங்க ஆயுள் உறுப்பினராகவும், திருவனந்தபுரம் நகர்மன்ற உறுப்பினராகவும் இருந்து காலம் சென்ற திரு. எம். எஸ். இராமகிருஷ்ண ரெட்டியார் புதல்வரான திரு. சுகுமாரனுக்கு வயது 31 ஆகிறது. தாய் குணபாலம்மாள், திருமதி மனோரஞ்சினி இவரது இல்லத்தரசி. செல்வந்தராகவே பிறந்த திரு. சுகுமாரன் சிறந்த உழைப்பாளி. தமது நிறுவனமான 'செந்தில் ஆண்டவன் சிட்பண்ட்'டின் ஜெனரல் மானேஜராகவும், 'கார்த்திக் சிட் பண்ட்', 'விக்ன சக்திவேல் ஃபைனான்சியேர்ஸ்' இவைகளின் 'மானேஜிங் பார்ட்னர்'ராகவும் செயல்படுகிறவர். திருவனந்தபுரம் ஃபைன் ஆர்ட்சின் செயலாளராகச் செயல்பட்டு 'செயலாளர் செம்மல்' பட்டம் பெற்றவர். இப்போது அவ்வமைப்பின் துணைத்தலைவர். அரிமா சங்கம், 'டின்னர்ஸ் கிளப் இண்டர் நேசனல்' 'போட் கிளப்', திருவனந்தபுரம் கிளப் ஆகியவற்றின் உறுப்பினர். திருவனந்தபுரம் ரெட்டியார் சங்கத்தின் உதவித் தலைவர். தமிழ் வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட புரவலர் நமது சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர். கட்டடக்குழு உறுப்பினர்.

## நிறுவனங்கள்

### ஆர். மாணிக்கம் பிள்ளை சன்ஸ்

இந்த நிறுவனமாவது காலஞ் சென்ற உயர் திரு. ஆர். மாணிக்கம் பிள்ளை அவர்கள் பெயரில் நடைபெறுகிறது. இதன் உரிமையாளர்கள் திரு. ஆர். மாணிக்கம் பிள்ளை அவர்களின் புதல்வர்கள். Manickom Commercial Corporation, Manic Retreaders ஆகியவை இந்நிறுவனத்தின் கிளைகளே. திரு. ஆர். மாணிக்கம் பிள்ளை அவர்கள் இச்சங்கத்தின் உறுப்பினராக இருந்தவர். தமிழ்ப் பற்று கொண்டிருந்த இப் பெரியவர் அரசியல் ஈடுபாடுடையவராகவும் திகழ்ந்தவர். திருவனந்தபுரம் நகராட்சி மன்றத்தில் செந்திட்டைத் தொகுதி பிரதிநிதித்துவம் தாங்கியிருந்ததுண்டு. இவரது புதல்வர்களில் திரு. எம். இராமசுவாமி, B.A., L.L.B., திரு. எம். சிவானந்தன் இவர்கள் இருவரும் நம் சங்கத்தில் உறுப்பினராகி இருப்பவர்கள்.

## M. R. T. அன் சன்ஸ்


M R T & சன்ஸ். பங்குதாரர்களில் மூத்தவர் T. ரத்னபாண்டியன் அவர்கள், வயது 41. தந்தையார் M. R. தங்கப்பழ நாடார் அவர்கள். தாயார் T. தங்கம்மாள். நெல்லை மாவட்டத்து அடைக்கலாபுரம் சிற்றூரிலிருந்து வியாபார நிமித்தமாக திருவனந்தபுரம் வந்து கடந்த இருபது ஆண்டுகால உழைப்பால் தேர்ந்த ஸ்தாபனமாக உருக் கொண்டது MRT & சன்ஸ் பாத்திர வியாபார நிறுவனம். தேர்ந்த கொடை உள்ளங் கொண்ட புரவலரது சகோதரர் T. நடராஜன். பங்குதாரர்களில் ஒருவர்.

## மகாலிங்கம் & கம்பெனி திருவனந்தபுரம்

இந்த நிறுவனம் தொழிலதிபர் திரு. பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அவர்களுடைய தொழில் நிறுவனங்களில் ஒன்று. இதனுடைய தலைமை அலுவலகம் பொள்ளாச்சியிலும் மற்ற கிளைகள், கோவை, உதகை, உடுமலைப்பேட்டை, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் உள்ளன. திரு. மகாலிங்கம் அவர்கள் தென்னிந்தியாவில் குறிப்பிடத்தக்கத் தொழிலதிபர்களில் முக்கியமானவர். தமிழகம், கேரளம் மற்றும் கர்னாடகம் மாநிலங்களில் தொழில் நிறுவனங்கள் ஏற்படுத்தி சிறப்பாக நடத்தி வருபவர். தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த பற்றுடையவர். சமீபத்தில் அவர் ரூ. 1 லட்சம் மதிப்புள்ள இலக்கியப் புத்தகங்கள் சைனாவில் தமிழ் வளர்ச்சி ஏற்பட வழங்கியுள்ளார். வடலூர் இராமலிங்க அடிகளார்கள் சன்மார்க்க சங்கத் தலைவராக உள்ளார். சிறந்தபேச்சாளரும் சிந்தனையாளரும் கூட. பொள்ளாச்சியில் அவருடைய தந்தையார் நாச்சி முத்துக் கவுண்டர் அவர்கள் பெயரில் ஒரு தொழிற் கல்லூரியும் ஒரு கலைக் கல்லூரியும் நிறுவி சிறப்புற நடத்தி வருகிறார். சுமார் 57 வயது ஆகிறது.

# திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்

## செயற்குழு - 1980 - 1981



முதல் வரிசை : திருவாளர்கள் ஆர். பத்மநாப பிள்ளை [தணிக்கையாளர்], கவிஞர் நெல்லை சு. முத்து கோ. முருகேசன் [செயலாளர்], ஆ. மாதவன் [தலைவர்], பி. மதனன் [பொருளாளர்] வ. விநாயகப் பெருமாள் [துணைத் தலைவர்], எம். கோலப்பா பிள்ளை.

பின் வரிசை : வி. தாணப்பன் [சங்கக் கட்டிட உதவியாளர்], ஏ. நீலகண்டன், வடிவேலு [சங்க உதவியாளர்], ச. கணேசன், எம். கே. நாதன், எஸ். சங்கரன், நீல. ஜனார்த்தனன்.

# திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்

## புரவலர்கள் (Patrons)



திருமதி ஜோதி வெங்கடாசலம்



திரு. பி. இரத்தினசாமி




திரு. எஸ். சந்திரன்




திரு. எஸ். வி. பண்டிட்



திரு. பி. சிதம்பரம்




திரு. எஸ். போற்றிவேலு



திரு. ஏ. சிதம்பரதாணு




திரு. வ. வினாயகப்பெருமாள்



திரு. சி. வள்ளிநாயகம் பிள்ளை



திரு. டி. மாதேவன் பிள்ளை



திரு. கே. வரதராஜன்



திரு. எம். எஸ். ஆர். சுகுமாரன்



திரு. எஸ். எம். இராமசுவாமி



திரு. ஜி. குமரேசன்



திரு. எ.செல்லச்சாமி




22-2-1981 அன்று கேரள ஆளுனர் மாளிகையில் விருந்தினராக வருகை தந்த தமிழக முதல்வர் மேதகு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களிடம் சங்க கட்டிட நிதி கேட்டு மனு சமர்ப்பிக்கச் சென்ற சங்கத்தலைவர் திரு. ஆ.மாதவனும் உறுப்பினர்களும்.



1981 ஜனவரித் திங்களில் மதுரையில் நடைபெற்ற தமிழ் மாநாட்டின் போது தொல்காப்பியர் அரங்கிற்கு வருகை தந்த கேரள முதல்வர் மேதகு. இ. கே. நாயனுர் அவர்களுக்கு நமது சங்கச் சார்பில் வரவேற்பு.

திரு. கோ. முருகேசன் வரவேற்றுசங்க ஆண்டுமலரொன்றினை சமர்ப்பித்தார்.




ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் போது, பேராளர்களைச் சிறப்பிக்க வந்த தமிழக முதல்வர்-புரட்சித் தலைவர் மாண்புமிகு எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களிடம், நமது சங்கச் செயலாளர் திரு. கோ. முருகேசன் அவர்கள் நமது கட்டிடத்திற்கான நிதி உதவி கோரி விண்ணப்பம் ஒன்றினை சமர்ப்பிக்கிறார். உடனிருப்பவர்கள் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர். பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள்; நீதிபதி மகாராஜன் அவர்கள்; மற்றும் திரு. சிதம்பரம் செட்டியார் அவர்கள்.



1981 ஜனவரித் திங்கள் 5-10 தேதிகளில் மதுரையில் நடைபெற்றஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டின்போது சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்களுடன் நமது சங்கச்செயலாளர் திரு. கோ. முருகேசன், பொருளாளர் திரு. மதனன், திரு. என். நயினார்.





1981 ஜனவரித் திங்களில் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துக் கொண்ட இலங்கைத் தமிழ் எழுத்தாளர் திரு. டொமினிக் ஜீவா, திரு. கணபதி. கைலாசபதி இவர்களுடன் நமது சங்கத் தலைவர் திரு ஆ மாதவன், செயலாளர் திரு. கோ. முருகேசன், பொருளாளர் திரு. பி.மதனன், திரு. என். நயினர்.



1981 ஜனவரித் திங்கள் 5-10 தேதிகளில் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டு, 'தொல்காப்பியர் அரங்கம்'' நுழைவாயில் முன் நமது பேராளர்களாகக்கலந்துக்கொண்ட சங்கத் துணைத்தலைவர் திரு.வ. விநாயகப்பெருமாள், செயலாளர் திரு. கோ. முருகேசன், பொருளாளர் திரு. பி. மதனன், திரு. என். நயினர்.

## சங்கம் நடத்திய விழாக்கள்

25-1-81-ல் நடந்தபொங்கல் விழாவின் போது




திருவாளர்:

T. V. சுவாமிநாதன் I. A. S.,
'தினமணிக்கதிர்' ஆசிரியர்
தீபம் நா. பார்த்தசாரதி,
டாக்டர். இரா. கோதண்டராமன் M.A., Ph. D.,
டாக்டர் க. நல்லதம்பி M. D.
சங்கத்தலைவர் ஆ. மாதவன்,
மாணவிகள்.


'குமாரன் ஆசான் நினைவுப் பரிசு' பெற்ற திரு. க. நா. சுப்பிரமணியத்திற்குப் பாராட்டு விழா (22-4-1981) வின் போது



பரிசுபெற்ற திரு. க. நா. சு.,
சங்கத்தலைவர் திரு. ஆ. மாதவன்
செயலாளர்திரு. கோ. முருகேசன்,
திரு. நீல. பத்மநாபன்,
திரு. சே. ஜேசுதாஸ்,
திரு. நகுலன்,
திரு. காசியபன்
கவிஞர் நெல்லை சு முத்து,
மற்றும் அன்பர்கள்.



1981-ஜனவரித் திங்களில் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொண்ட நமது சங்கச் செயலாளர் திரு. கோ. முருகேசன், பொருளாளர் திரு. பி. மதனன், திரு. என். நயினார், திரு. ஆஷர், முனைவர் சாலை இளந்திரையன், திருமதி. சாவினி இளந்திரையன் ஆகியோர்.



## குற்றால எழில் அருவி

**தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்!**
**செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்!**
**கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்**
**குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே!**

புகைப்படம்: திரு. ஜி. குமரேசன் எம். ஏ (திருக்குற்றாலக் குறவஞ்சி)

# திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்

திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்

1980 ஜூன் மாதம் "கேரளத்தமிழ்" இரண்டாவதுஆண்டு மலர் வெளிவந்தது. இவ்வாண்டு - (1981) ஜூலை இதழ் மூன்ருவது ஆண்டு மலராக உங்கள் கைகளில் திகழ்கிறது.

இந்த ஓராண்டு காலத்தில் 10 இதழ்களை 8 புத்தகங்களாக வெளியிட்டுள்ளோம், 11-12 இதழ்கள் இந்த மூன்ருவது அண்டு மலராகவும் வெளிவந்துள்ளது. இவை வெளிவருவதற்கான செலவுத் தொகை- வணிகத்துறையிலுள்ள நமது உறுப்பினர்களும், கேரள அரசு இலாகாக்களும் விளம்பரங்கள் தந்து உதவியதின் மூலம் கிடைத்தது. கடந்த மூன்று ஆண்டுகாலமாக இந்தப் பேருதவி தயங்காது தந்து வருகிருர்கள். இது ஒரு வரையறையற்ற கொடை மனப்பான்மை என்ருல் மிகையன்று. இந்த நன்கொடை பெற்றிட அயராது உழைத்தவர்களையும் மறந்துவிட முடியாது. இந்திய நாட்டில் இயங்கி வரும் தமிழ்ச் சங்கங்களுள் — நமது திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கமும், பங்களூர் தமிழ்ச் சங்கமும் ("ஊற்று" - மாத இதழ்) தற்போது தங்கள் உறுப்பினர்களிடையேயும் ஆதரவாளர்களிடையேயும் செய்தி- இலக்கியப் பத்திரிகைகளை, இலவசமாக விநியோகம் செய்து வருகின்றன என்று கூறுங்கால் இவை வாழ்வதற்கான பொருளுதவி கொடுப்போர் மிகுதியாகப் பெருமைப்பட இடமுண்டு. ஏனைய தமிழ்ச் சங்கங்கள் இதுபோன்ற மாத இதழ்கள் வெளியிட முயன்றிட வேண்டுமென்று ஆசைப்படுகிருேம்.

நமது சங்கத்தின் 1970-80 ஆண்டிற்கான பொதுக் குழு கூட்டமும் செயற்குழுத் தேர்தலும் கடந்த 23-11-80-ல்நடைபெற்றது. திருவாளர்கள் ஆ. மாதவன் கோ. முருகேசன், பி. மதனன் ஆகியோர் தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகளுக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் உட்பட 19 உறுப்பினர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

இவ்வாண்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற செயற்குழுவின் நினைவெல்லாம், கிடைத்த பொழுதெல்லாம் சங்கக் கட்டடம் கட்டுவதற்க நிதி திரட்டும் வேலையிலேயே ஆழ்ந்திருந்த போதிலும் ஆண்டாண்டு தோறும் நடத்தி வரும் பொங்கல் விழாவை, 25-1-1981 அன்று திருவனந்தபுரம் சாலை மலையாளம் U. P. S. அரங்கில் டாக்டர் இரா. கோதண்டராமன் எம். ஏ., பி. எச். டி. அவர்கள் தலைமையில் 'தினமணிக் கதிர்' ஆசிரியர் திரு. தீபம். நா. பார்த்தசாரதி, டாக்டர் க. நல்லதம்பி எம்.டி. ஆகியோர் சிறப்புரையாற்ற விமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவின்போது சங்கம் நடத்திய கவிதை சிறுகதைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களை வரவழைத்துப் பரிசுகள் வழங்கிப் பெருமைப்படுத்திருேம். அதுபோழ்து மிகச் சிறப்பான முறையில் "பெண்கவ்" எனும் தலைப்பில் கவியரங்க ஒன்றும் நடைபெறச் செய்தோம். ஆக, இவ்விழா திருவனந்தபுரம் தமிழர்களின் நினைவில் நிலைத்துநிற்கும் விழாவாகவும், தங்களுக்குப் பெருமை தேடித் தருவதாகவும் அமைந்தது!

இதுபோன்று சிறந்த விழாக்கள் ஆண்டில் மூன்று, நான்கு எண்ணமாயினும் நடத்திட வேண்டும். மாதத்திற்கு ஒரு முறை, சிறந்த பேச்சாளர்களை அழைத்து சிறந்த சொற்பொழிவுகள் நிகழ வைத்து மகிழலாம். இம்மாதிரியான செயல் முறைகளுக்கு இட வசதியை அமைத்துக் கொள்ளவே தற்போதைய செயற்குழுவும், கட்டடக்குழுப் பொறுப்பாளர்களும், உறுப்பினர்களும் அயராது பாடுபட்டு வருகின்றனர். நமது சங்கத்தின் கட்டடத்திற்கான அடித்தள வேலை அநேகமாக முடிவடைந்துள்ளது. இதுகாறும் கட்டட வேலைக்கென நாம் ஈட்டிய ஐம்பதாயிரம் ரூபாய் வரையில் செலவிட்டுள்ளோம். இனி,முதல்நிலைக்கட்டடஅமைப்புஏற்படுத்த வேண்டும், அதற்கான நிதி வசூல் தொடர்கிறோம். இப்பொறுப்பில் ஈடுபட்டுள்ளோர் முழுநேரத் தொண்டர்களல்ல. தங்களுடைய சொந்த அலுவல்கள் குடும்பப் பொறுப்புகள் இவைகளுக்கெல்லாம் பிறகு ஒய்வெடுக்கக் கிடைக்கிற பொழுதைத் தமிழ்த் தொண்டுக்காக அர்ப்பணித்துக் கொண்டவர்கள்; தங்கள் சொந்த அலுவல்களையும் சிறிது நேரம் ஒதுக்கி வைத்து, தமிழ்த் தொண்டுக்கு நேரம் கண்டவர்கள்; பலர் இன்னும் பார்வையாளர்களாகவும், இவர்களால் இந்தப் பொறுப்பை நிறைவேற்ற முடியுமா என்ற சந்தேகப் பார்வையோடும் இருக்கிறார்கள். இவர்களில் சிலருக்கேனும் தற்போது அந்த சந்தேகம் மாறிவிட்டிருக்கிறது என்று அறிய மகிழ்கிறோம். 'பார்வையாளர்களில்' சிலரெல்லாம் அந்த நிலையை விட்டுத் தள்ளி-பத்து செங்கற்களுக்காவது தாமும் உதவ வேண்டுமென்று மனம் மாறியுள்ளார்கள். தன் சக்திக்கு மீறியும் நிதி உதவியவர்கள்; தன் சக்தியை அளந்து கணக்கிட்டு உதவியளித்தவர்கள்; இல்லை என்று சொல்லாமல் ஏதோ தந்தவர்கள் இவ்வாறு பலரைச் சந்தித்தோம். சந்திக்கிறோம். ஒட்டு மொத்தமாகச் சொன்னால் திருவனந்தபுரத்துத் தமிழரிடையே நடைபெற முடியாத காரியம் என்ற நிலை மாறி, நடக்கும் என்கிற நிலைக்கு நாம் உயர்ந்து வருகிறோம் என்பது பெரு மகிழ்ச்சிக்குரியது. நிர்ப்பந்தங்களுக்கு மட்டுமல்லாமல் அன்பிற்கு இசைவு காட்டுகிறவர்களைக் காண முடிகிறது என்பதுவும் மகிழ்ச்சியைத் தருகி து. இதுவரையிலும் கட்டிட நிதிக்கு நன்கொடையளித்தவர்களின் பெயர் விபரங்களை பிறிதொரு இதழில் வெளியிட வைத்துள்ளோம்.

நம் சங்கக் கட்டிட நிதிக்காக நன்கொடையளிக்கும் தொகைகளுக்கு வருமான வரி விலக்கு அனுமதிகிடை த்துள்ளது. இதன் கால வரையறை 1-1-1981 முதல் 31-12-1981 வரையாகும். இவ்வாறு அனுமதி பெற்றிட சங்கத்திற்க்காக பெரிதும் உதவிய திரு. மீனாட்சி சுந்தரம் B. Com., ACA அவர்கள் சங்கத்தின் உறுப்பினர். 8-8-1943-ல் பிறந்த அன்பர் "கயல்" எனும் புனைப்பெயரில் பக்திப் பாடல்கள் பல புனைந்தவர். ஆனந்தம் அன் சுந்தரம் எனும் நிறுவனத்தின் தணிக்கையாளர்களில் ஒருவர். இவருக்கு சங்கத்தின் சார்பில் நன்றி நவில்வோம்.

நமது சங்கத்திற்கு 74 ஆயுள் உறுப்பினரும் 650 ஆண்டு உறுப்பினரும் உள்ளனர். ஆக, சங்கம் நாள் தோறும் வளர்பிறையாக வளர்கிறது என்று தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியுண்டு.

இவ்வாண்டில், நமது சங்கத்தின் உறுப்பினராகி இருந்த திரு. ப. அருணசலம் பிள்ளை (வயது 27) 27-4-81 அன்று அகாலத்திலும், ஆயுட்கால உறுப்பினராக இருந்த திரு. கே. நடராஜன் அவர்கள் (நடராஜ ஜூவலறி) 2- 6- 1981 அன்று மாரடைப்புநோயினாலும் காலமானார்கள். அவர்கள் நினைவிற்கு மௌன அஞ்சலி செலுத்துவோமாக!

நமது சங்க நூலகத்திற்கு நன்கொடையாக நூற்கள் கிடைத்த வண்ணம் இருக்கிறது. ஆனால் அவைகளை முறையாகப் பாதுகாத்திடப் போதுமான வசதியின்மை செயற்குழுவைத் திணறடிக்கிறது. புதுக் கட்டடத்தில் பரிகாரம் தேடுவோம் என்பதுதான் தற்போதைய ஆறுதல்!

நமது சங்கத்திற்கு ரூபாய் ஆயிரமோ அதற்கு மேற்பட்டதோ ஆன தொகை அல்லது பொருள் தருகிறவர்களைப் புரவலர்களாக(Patrons)ஏற்றுப் பெருமைப்படுத்த வேண்டுமென்று நமது பொதுக்குழு முடிவு கொண்டுள்ளது. அதன்படி தற்போது 18 புரவலர்கள் சங்கத்திற்கு உண்டு என்று கூறப் பெருமகிழ்ச்சி அடைகிறோம். அவர்கள் பற்றிய விபரம் பிறிதொரு பக்கத்தில் வெளியிட்டுள்ளோம்.

கேரளத்தில் வேரூன்ற முடியாமல் பலமுறை முளை அரும்பி அழிந்து போன தமிழ்க் கோவில் முயற்சி தற்போது வேரூன்றி மரமாகியுள்ளது. அந்த மரத்தை விழுதுகள்கொண்ட ஆலமரமாக வளர்த்திடல்வேண்டும். நாம் ஒவ்வொருவரும் நம்மால் இயன்ற அளவு உரமும், நீரும் தந்தே ஆகவேண்டும். கேரளத்தின் பல்வேறு திசைகளில் இதுபோன்று தமிழ்க் கோவில்கள் உருவாகிட உத்வேகம் கொடுக்கும் நிகழ்ச்சியாக நமது பணி வென்றிட வேண்டும்.

தாய்ப் பற்று கொண்ட நமக்குத் தாய்மொழியைப் புறக்கணிக்க முடியுமோ? நம் குழந்தைகளைத் தமிழ்க் கல்விக்கே அனுப்புவோம். மாற்று மொழிகளையும் புறக்கணித்திடாது கற்றிடுவோம்.

*தமிழ்மணம் பரப்பி—தமிழ்ச் சங்கம் வளர்ப்போம்!*
*தமிழன் என்று சொல்லி—தலை நிமிர்ந்து நிற்போம்!*

வாழ்க தமிழ்!
வளர்க தமிழ்ச் சங்கம்!!

ஓங்குக தமிழர் தம் தன்மானம்!!!

**கோ. முருகேசன்**
**செயலாளர்**
திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்

# மனம் செய்யும் வேலை

வல்லிக்கண்ணன்

வாழ்க்கை விசித்திரமானது.

அது மனிதரை எப்படி எப்படி எல்லாமோ பாதிக்கிறது. ஒவ்வொருவரை வெவ்வேறு விதமாக பாதித்து விடுகிறது. சிலர் அடியோடு மாறிப்போகிருர்கள்.

இதற்கெல்லாம் மனம் என்கிற மாயம்தான் அடிப்படைக் காரணம் என்று எண்ணவேண்டியிருக்கிறது.

காத்தமுத்து இதுக்கு ஒரு நல்ல சான்று.

முரடன் என்று பெயர் வாங்குவதில் அவனுக்கு ஒரு தனி மகிழ்ச்சி இருந்தது, சின்னவயசிலிருந்தே.

வீண்வம்புகளை நாள்தோறும் அவன் வளர்த்து வந்தான். இரவில் வெகுநேரம் வரை தெருக்களில் சுற்றித்திரிவான். அதனுல் 'இராக்காடு வெட்டி' என்று பலர் அவனைக் குறிப்பிடுவது வழக்கம்.

இருட்டில் எந்த இடத்திற்கும் தனியாகப் போய் வர அஞ்சாதவன் அவன். 'பூச்சி பொட்டு கிடக்கும் ஒரு வேளையைப் போல ஒரு வேளை இருக்காது' என்று பெரியவர்கள் எச்சரிக்கும் போது, 'ப்சா! சாப்பிட்டுது போ!' என்று அலட்சியமாக சொல்லுவான்.

காத்தமுத்து துணிந்த கட்டை. பேய், பிசாசு என்றெல்லாம் சொல்லி அவனை மிரட்டி விட முடியாது. 'பேயாவது கீயாவது! நம்மைக் கண்டாலே அதுகள் ளாம் பயந்து பம்மிவிடும்' என்று கூறி அட்டகாசமாய்ச் சிரிப்பான் அவன்.

ஒரு சமயம், ஒரு பந்தயத்துக்காக, இரவு நேரம் முழுவதையும் சுடுகாட்டிலேயே கழித்தான் அவன். இந்தச் சாதனையை அவன் பெருமையாகப் பேசுவது உண்டு.

அப்பேர்பட்ட காத்தமுத்து சில வருஷங்களுக்குப் பிறகு மிகவும் மாறிப்போனுன். ராத்திரி நேரத்தில் வீட்டிற்குள் தனியாகப் படுத்துறங்க அஞ்சினுன். தடால் என்று ஏதாவது ஓசை கேட்டால் அவன் திடுக்கிட்டு விழிப்பான்; ஒருவிதமான பதறலுடன், கலவரத்தோடு அங்குமிங்கும் பார்ப்பான். ஒரு மிரட்சி அவன் கண்களில் குடிபுகும்.

அறையினுள் தூங்குகிற போது, ஏதோ கெட்ட கனவு கண்டு பதறியவன் போல் திடீரென அலறுவான். உடலெங்கும் வேர்வை பொங்க, பயந்தடித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்து திருதிருவென்று விழிப்பான். வெகுநேரம் அவன் உடல் நடுங்கிக் கொண்டிருக்கும். உள்பயம் அவனை அப்படி ஆட்டிவைத்தது.

பாழடைந்த வீட்டிலும், காட்டுவழிச் சத்திரத்திலும், பேய் வசிப்பதாகச் சொல்லப்பட்ட இருண்ட வீடுகளிலும் படுத்து நிம்மதியாகத் தூங்கியவன்தான் அவன்.

திடுமென காத்தமுத்துவிடம் மாறுதல் விளைந்தது எதனுல்? இது பலரைக் குழப்பிய ஒரு விஷயம்.

காத்தமுத்துவுக்கு ஒரு நாள் ராத்திரி ஏற்பட்ட அதிர்ச்சிதான் இதற்குக் காரணம்.

அவன் வீட்டினுள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். வீட்டின் மேல் தளத்திலிருந்து ஒரு பெரிய கட்டி பெயர்ந்து கீழே விழுந்தது. தடால் என்று பெரும் ஓசை எழுந்தது.

காத்தமுத்துவின் தலைமாட்டிலேதான் அது விழுந்தது. ஒரு சாண் தள்ளி, அந்தச் செங்கலும் காரையும் கொண்ட கட்டி விழுந்திருக்குமானுல், அது நேரே அவன் தலைமேல் விழுந்திருக்கும். முகத்தில் பட்டு, மூக்கு நசுங்கி, முகமே சிதைந்து போயிருக்கும்.

அதிர்ச்சியோடு பதறி எழுந்த காத்தமுத்துவுக்கு இந்த உண்மை புலனுயிற்று.

சத்தம் கேட்டு விழிப்புற்று, என்னவோ, ஏதோ என்று விரைந்து வந்த பக்கத்து வீட்டுக்காரர்களும் இதையே திரும்பத்திரும்பச் சொன்னுர்கள்.

'நீ ஒரு ஆசை பிழைச்சே!' 'நீ செத்திருக்கவேண்டியவன். பிழைத்தது மறுபிறப்புதான்!' 'உன் அதிர்ஷ்டம், நீ இன்னும் உயிரோடு இருக்கிறே?' என்று பன்னிப்பன்னிப் பேசினுர்கள்.

'எவ்வளவு பெரிய கட்டி!' 'என்னமா சத்தம் கேட்டுது!' 'அது தலைமேலே விழுந்தால் மனுஷன் பிழைக்கவா?' என்ருர்கள்.

காத்தமுத்துவின் தேகம் ரொம்ப நேரம் நடுங்கிக் கொண்டிருந்தது. அவன் உள்ளப் பதைப்பு தணிய வெகுநேரமாயிற்று. ஆயினும், அந்தரங்கத்தில், அவனது உள்ளத்தின் ஆழத்தில், ஒரு பீதி வேரோடி விட்டது.

அதன் பிறகு அவனுக்கு இருட்டில், அறைக்குள் தனியாகத் தங்குவதற்கும் படுத்துறங்குவதற்கும் பயம். பகல் பொழுதுகளில் கூட வீட்டுக்குள் நெடுநேரம் இருந்தால், அவன் உள்ளத்தில் காரணமற்ற அர்த்தமற்ற, பயம் வந்து குவியும். அவன் உடல் நளுக்கிக் கொடுக்கும். திடீர் விபத்து ஏற்பட்டு தனக்கு ஆபத்து

நிகழும் என்று மனம் பதைபதைக்கும். உடனே அறையை விட்டு அவசரமாக வெளியேறுவான் அவன்.

காத்தமுத்துவும் சில உறவினரும் ஒரு கிராமத்தில் நிகழவிருந்த கல்யாண விசேஷத்துக்குப் போனார்கள்.

பஸ் வசதி இல்லாத ஊர். அதிகாலை முகூர்த்தம். அதனால், முந்திய தினம் மாலை நேரத்திலேயே அந்த ஊருக்குப்போய் விட்டார்கள்.

இரவில் அவர்கள் தங்கியிருப்பதற்கு ஒரு வீடு ஒதுக்கப்பட்டிருந்தது. பெரிய வீடு. பழங்காலத்துக் கட்டிடம் ஒரு சுவரில் பெரிதாகக் கீறல் விழுந்து காணப்பட்டது. மேல்தளத்தில் காரை உதிர்ந்து அங்கும் இங்கும் வட்டங்களும் சதுரங்களும் தென்பட்டன. சில இடங்களில் சுண்ணாம்புத்தூள் உதிர்ந்து கொண்டிருந்தது.

கட்டிடத்தின் பழமை பற்றி அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

'வயசாயிட்டுது. என்றாலும் உறுதியான கட்டிடம் இப்போதைக்கு விழாது'.

'எந்தக் கட்டிடமும் திடீர்னு விழுந்து, உள்ளே இருக்கிறவர்களை சாகடிச்சிடாது. முதல்ல பல நாட்களுக்கு தர்மக்கட்டி சிறுசு சிறுசா, பொடிப்பொடியாய் உதிர்ந்து உதிர்ந்து, எச்சரிக்கை தந்தபடி இருக்கும். அப்புறம் ஒருநாள் தொம்முனு விழுந்திரும்' என்று ஒருவர் சுவாரஸ்யமாக வர்ணித்தார்.

காத்தமுத்து சுவர்களையும், மேல்தளத்தையும் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். மற்றவர் பேச்சுக்களும் அவனுள் வேலை செய்தன.

என்றாலும், அவன் எல்லோர் கூடவும் சேர்ந்து தான் படுத்தான். தூங்கியும் போனான்.

இரவு கனத்தது. கிராமத்துச் சூழலின் அமைதி கனமாய் கவிந்து தொங்கிக்கிடந்தது.

வெளியே ஒரு மரத்தில் ஆந்தை ஒன்று பயங்கரமாய் அலறியது. அதைத்தொடர்ந்து இரண்டு பூனைகள் ஏற்ற இரக்கங்களோடு, நீளமாய் விகாரமாய் வீசித் திரத் தொனியில் கத்தின.

அந்தக் கூச்சல் ஒன்றிரண்டு பேரை விழிப்புறச் செய்தது.

அப்போதுதான் கோரமான அலறல் வீட்டினுள் எழுந்தது. உயிருக்கு மல்லாடுவதுபோல். அச்சத்தால் துடித்துக் கதறுவது மாதிரி.

எல்லோரும் திடுக்கிட்டு விழித்தார்கள். விளக்குகளை எரிய விட்டார்கள்.

காத்தமுத்துதான் அப்படிக் கத்தினான்.

அருகில் இருந்தவர் அவனை உலுக்கினார். அதற்குள் அவனே திடுக்கிட்டு, உடல்பதற, விழித்தெழுந்து உட்கார்ந்தான்.

அவன் உடல் அதிகமாக நடுங்கிக் கொண்டிருந்தது. மிரளமிரள விழித்தான்.

பலரும் என்ன, என்ன என்று தூண்டித் துருவ அவன் ஞுஞ்ஞுமிஞ்ஞுத்தனம் பண்ணினான். 'ஏதோ சொப்பனம்!' என்றான். வீடு இடிந்து விழுந்து, பெரிய கல்லு என் மேலே விழுந்து என்னை நசுக்கின மாதிரி நிசமா நடக்கிற மாதிரியே இருந்தது. அதுதான் என்றான்.

'எங்கேயோ பையன் பயந்திருக்கான்!' என்றார் ஒருவர்.

காத்தமுத்து மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

எல்லோரும் விளக்குகளை அணைத்துவிட்டுப் படுத்தார்கள். சிலர் தூங்கினார்கள். மற்றவர்களும் கண்களை மூடிக்கொண்டு கிறக்கத்தில் ஆழ்ந்தார்கள்.

காத்தமுத்துவுக்கு உறக்கம் வரவில்லை. அவன் மனமே அவனை அரித்தது. விடிந்தபின் மற்றவர்கள் கேட்கக்கூடிய கேள்விகள், பேசக்கூடிய கேலிகள் அவன் மனவெளியில் ஒலிக்க, அவனை வெட்க உணர்வு பிடித்தது.

அதிகாலை முகூர்த்தத்துக்காக அவன் அங்கே காத்திருக்கத் துணியவில்லை.

காலையில் கண்விழித்ததும், அவனிடம் பேச்சுக் கொடுக்க வேண்டும் என்ற துடிப்புடன் தேடியவர்கள் காத்தமுத்துவைக் காணாது திகைத்தார்கள். அவன் எந்நேரம் அவ்வூரைவிட்டு வெளியேறினான் என்பது அவர்களில் யாருக்குமே தெரியவில்லை.

## உடைந்தது ஒரு சொல்
## பிறந்தது பல பொருள்

| | |
|---|---|
| கவிதை | — கதை, தை, கவி, விதை. |
| பத்திரிகை | — பகை, கை, திரி, கைதி, பரி, பத்தி, பதி. |
| ஆசிரியர் | — ஆசி, ஆரியர், சிரியர், ஆசியர், சிரி, ஆயர், ஆர், ஆ |
| நாவலாசிரியர் | — நாசி, நாரி, நாயர், வரி, சிரியர், வசி, சிரி, நார், வயர், வயலார், வாயர், நாவலார், நா. |

# கறுப்பியல்

டாக்டர் க. நல்லதம்பி M.D.

மக்களினம் ஒன்றே. பாம்பினம் ஒன்றே. குரங்கினம் ஒன்றே. நாயினம் ஒன்றே. புலியினம் ஒன்றே. இனம் ஒன்றே. பாம்பில் கோப்ரா, வைப்பர், க்ரெயிட் என்று பல வகையுள்ளன. சிம்பன்சி குரங்கும், கொரில்லாக் குரங்கும் இரண்டு தனி வகைகள். நாயினத்திலும் பலவகையுள்ளன. புள்ளிப் புலியிலும், வரிப்புலியிலும் இரண்டு வகைகளே. எனவே இனம் ஒன்றானாலும் வகை பல உள.

மக்களினத்தில் மூன்று பெரும் வகைகள் உள. கறுப்பு நிற மக்கள் வகை[1], மஞ்சள் நிற மக்கள் வகை[2] நிறமில்லா வகை[3], என்பவையே இவை. மக்களியல் படியே இந்த வகைகள் இட்லரின் ஆரிய வெள்ளை வகை போல கறுப்பு வகையும் ஒரு உண்மை வகையே. மக்களெல்லோரும் ஒரே இனம். இனம் ஒன்றானாலும் வகை பல என்பது தெளிவு. வகைப்பெருமைப் பேசுவதில் தான் கலக்கம் பிறக்கிறது. ஒரு வகையினர் வேறு ஒரு வகையினரை ஆள நினைக்கும் போது காழ்ப்பும் போரும் சாவும் விளைகிறது. அடிமைகள் தோன்றுகின்றனர். ஆளும் வகையும் பிறக்கிறது.

கறுப்புவகை மக்களின் தோலில் மெலானின்[4] என்ற நிறப்பொருள் உண்டு. இந்த மெலானின் என்ற நிறப்பொருளே காயும் ஞாயிற்றொளி சுடாது தோலைக் காத்து வருகிறது. தோலில் மெலானின் என்ற நிறப்பொருள் இல்லாத வகையே வெள்ளை வகை. குறை உள்ள வகையே வெள்ளை வகை. இது நிறமற்ற வகை.

வெள்ளைப் பாச்சா[5]வையும் வெள்ளைப் பாம்பையும் அரிதாகக் காணலாம். ஆனால் அது ஒரு தனி வகையன்று. இந்தப்புதுவகை முட்டையிட்டுப் பெருகி ஒரு தனி நிறமற்ற வகையாக மாறுவதில்லை. கறுப்பு வகையினருக்கும் நிறமற்ற மக்கள் பிறக்கலாம். இது ஒரு வகை நோயே. இதனை ஆல்பினிசம்[6] என்பர். கறுப்புநிற மக்களின் தோல் வெள்ளையாக நிறமற்றதாக சில இடங்களில் மாற்றமடையும். பின்னர்இதுவளர்ந்து பெரிதாகி மெய்யெல்லாம் வெண்மையாக மாறுகிறது. இந்த நோயை விட்டிலிகோ[7] என்பர். இவைஇரண்டும் மெலானின் என்ற நிறப்பொருள் சரிவர அமையாததால் வரும் ஒரு வகை நோயே. பாம்பு, பாச்சா போன்ற கீழுயிர்களிலும் இந்நோயுண்டு. கருப்பு வகைமக்களின் தோலில் மெலானின் குறைந்து மஞ்சள் வகை மக்களும், மஞ்சள் வகை மக்களின்தோலில் மெலானின் இல்லாது நிறமற்ற வகையினரும் தோன்றினர். கறுப்பு வகையே மக்களின் முதல் வகை.

ஞாயிற்றொளிக்கும் நிறத்துக்கும்தொடர்பு உண்டு. நிலத்துக்கும் ஞாயிற்றொளிக்கும் தொடர்பு உண்டு. ஞாயிற்றொளியால் மக்களின் நிறமும், நிறத்தினர் வாழும் நிலப்பகுதியும் அமைகிறது. ஞாயிற்றொளி மிகுந்த நில நடுப் பகுதியே[8] கறுப்பு வகையினர் வாழும் இடம். நிலநடுக் கோட்டுக்கு இருபுறமும் உள்ள நெருங்கிய காட்டுப் பகுதிகளிலே கறுப்பின மக்கள் வாழ்கின்றனர். ஞாயிற்றொளிவடதென் முனைப் பகுதிகளில் மிகவும் சாய்வாக விழுகிறது. எனவே இப்பகுதியில் ஞாயிற்றொளிக்குச் சூடில்லை. காலை இளஞாயிறும் மாலை படி ஞாயிறும் போல் நாள் முழுவதும் ஞாயிற்றொளி மங்கியே விழுகிறது. எனவே வெப்பம் தோன்றுவதில்லை. வடமுனைப் பகுதிகளில் பனிக்கட்டியும் நடுக்கும் குளிரும் தோன்றுகிறது. மக்களின் தோலில் ஞாயிற்றொளி சுடாது காக்கும் நிறப்பொருள் காண்பதில்லை. எனவே இப்பகுதிகளில் நிறமற்றவர்கள் வாழ்கின்றனர். ஞாயிற்றொளியின் சூடும் வடமுனைப் பகுதியின் குளிரும் இன்றி வடமுனைப் பகுதிக்கும் நிலநடுக் கோட்டுப் பகுதிக்கும்இடையே உள்ளே நிலப்பகுதியே[9] மஞ்சள் இனத்தவரின் நிலப்பகுதி. பாரேடுகளில் ஞாலத்தை இவ்வாறு ஐந்து நிலப்பகுதிகளாக பிரிந்திருப்பதைக் காணலாம். வடமுனை[10] தென் முனை என்ற இரு நிலப்பகுதிகளில் வெள்ளையரும், நில நடுக்கோட்டுக்கு இரு புறமும் உள்ள தொடர்பான நிலப்பகுதியில் கறுப்பரும், கறுப்பர் வெள்ளையருக்கு இடைப்பட்ட வட தென் நிலப்பகுதிகளில் மஞ்சள் மக்களும் வாழத்தகுதியுடையவர். இந்த மூன்று பகுதியினரும் வாழும் பகுதிகளை நேர் கோடுகளால் பிரித்துக் காட்ட இயலாது. வகைப்படி மக்களின் பரப்பைக் காட்டும் பாரேட்டில் இந்த உண்மை தெளிந்து விளங்குகிறது.

பார் வரலாறு என்பது நிறமற்ற வகையினரின் வரலாறே. மஞ்சள், கறுப்பு வகை மக்களின் வரலாற்றை மறைத்து நிறமற்ற வகையினர் கட்டிச்சமைத்த வரலா இப்போதைய வரலாறு. நிறமற்ற இனம் எங்கு தோன்றியது, எவ்வாறு தோன்றியது என்பதை வரலாற்று ஆசிரியர்களும்[11] மக்களியரும்[12] தெளித்துக்கூறவில்லை.

---

1 கறுப்பு வகையினர் — Black Race
2 மஞ்சள் வகையினர் — Yellow Race
3 வெள்ளையர் — White Race
4 பாச்சா (கரப்பான் பூச்சி) — Cockroch
5 Melanin
6 Albinism
7 Vitiligo
8 நில நடுப்பகுதி — Equtorial Reigon
9 இடையேயுள்ள நிலப்பகுதி — Subtropic ]
10 வடமுனை .... Temperate zone; Polar என்ற நுனிப்பகுதியை குறிப்பிடுவதில்லை. வட நுனிப் பகுதியில் எச்சிமோ என்ற மஞ்சளர் வாழ்கின்றனர்.
11 வரலாற்று ஆசிரியர் — Historian
12 மக்களியர் .... Anthropologist

ஒருவன்: பத்து வருடம் மாடாக உழைத்தாயே பிரிந்து போகும்போது முதலாளி என்ன தந்தார் ?

மற்றவன்: பத்து கெட்டு வைக்கோல். . ?

அ. முனிசுப்பிரமணியன்

உருசிய நாட்டு வோல்கா[1] ஆற்றுக் கரையிலிருந்தும் ஆசியாவின் நடுப்பகுதியிலிருந்தும் நிறமற்ற இனம் பரவிற்று என்று நிறமற்ற வரலாற்று ஆசிரியர் கூறுகின்றனர். மொழியியலும் தெளிவான கால வரையறை இல்லாத சில சான்றுகளும் இந்தக் கூற்றுக்கு அடிப்படையாகிறது. நிறமற்ற வெள்ளை இனம் நிலம் வழியாகப் பரவியதின் கலங்கின சான்றே இவை.

குடியேற்ற ஆட்சி வழி இங்கலண்ட், போர்ட்டுகல் ப்ரான்ச், செர்மனி, ச்பெயின், பெல்சியம், டச் நாட்டினர் வட தென் அமெரிக்க நாடுகளிலும் ஆப்பிரிக்கா, ஆசியா, ஆச்திரேலியா நாடுகளிலும் கடல் வழிச் சென்று குடியேறினர். மஞ்சள், கறுப்பு வகை மக்களைக் கொன்று குவித்தனர். கொள்ளையடித்தனர். பெண்களைக் களித்தனர், சீனா முதல் அரபு நாடுகள் வரை பார் நாடுகள் அனைத்தையும் யூரோப்பிலுள்ள வெள்ளையர் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆண்டு வந்தனர். இவ்வாறு நிறமற்றவர் பாரெங்கும் ஆண்ட கதையே வெள்ளையரின்குடியேற்ற வரலாறு. வட தென் அமெரிக்காவிலும் ஆச்திரேலியாவிலும், நியூசிலாந்திலும், தென் ஆப்பிரிக்காவிலும் வெள்ளை நாடுகளை அமைத்தனர். இதுவே நிறமற்றவரின் கடல் வெற்றியின் வரலாறு. இக்கடல் வெற்றிக்குத்திட்டமான காலவரையும் வரலாறும் உண்டு.

நிறமற்ற வகையினர் ஆசிய யூரோப்பிய நாடுகளில் பரவுவதற்கு முன் சீன மக்கள்வடதென் அமெரிக்க நாடுகளில் சென்று சேர்ந்துள்ளனர். கொலம்பச் என்ற நிறமற்றவன் அமெரிக்காவை கண்டான் என்ற வரலாறு வெள்ளையரின் வரலாறு. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சீனர்கள் மஞ்சள் வகை மக்கள் இந்நாடுகளில் சென்று சேர்ந்துள்ளனர். சீனக் கடற்கரையை யொட்டி வடக்காக கடல் வழிச் சென்றால் வடஅமெரிக்காவின் மேற்குப் பகுதிகளில்சென்று சேரலாம். பாரேட்டை[2]ப் பார்த்தால் இந்த உண்மை நன்கு புலனாகும். எகிப்து நாட்டினரும் பெரும் புல்லால் ஆன படகுகள் சமைத்து அட்லாண்டிக் கடலைக் கடந்து அமெரிக்காவை கண்டுள்ளனர். இந்த வரலாற்று உண்மைகளை வெள்ளையன் ஆய்வு செய்து வெளிக்கொண்டு வருவதில்லை. மஞ்சள் வகையினர் கடல் வழிப் பரவின பழங்கால வரலாறே இது.

மங்கோலிய நிலப்பகுதியிலிருந்து மஞ்சள் வகைமக்கள் தைமூர் செங்கிச்கான் போன்ற தலைவர்களின் கீழ் யூரோப்பிய நாடுகளை வென்றனர். இந்தியாவின் வட மேற்குப் பகுதிவரை அலை அலையாக வந்து மோதினர். நில வெற்றியில் பெருமை கொண்டிருந்த ஆரியப்படைகள் தோற்றோடின. பேரூர்கள் அழிந்தன. ஆரியனின் கொலையும் கொள்ளையும் களியும் வெற்றி வரலாறாம். மஞ்சளரின் வெற்றி, வரலாற்றில் கொடுஞ் செயலாம். இழிந்த செயலாம். வெள்ளையன் எழுதிவைத்திருக்கும் வரலாற்றையே கறுப்பன் நம்பியிருக்கிறான். மஞ்சள் வகையினரின் இந்த நிலவெற்றிக்கும் காலவரையறையுண்டு.

கால அளவுப்படி இந்த வகையினரின் கடல் நில வெற்றிகளையும் போக்கையும் வகைப்படுத்திப் பார்ப்போம். மஞ்சளரின் கடல் வெற்றியும் போக்குமே முதல் இடம் பெறுகிறது. திட்டமான கால அளவு இதற்கு இல்லை. மஞ்சள் வகையினர் வட தென் அமெரிக்க நிலப்பகுதிகளிலும் பசிபிக் தீவுகளிலும் வாழ்வதே இதற்குச் சான்று. நிறமற்ற வகையினரின் நில வெற்றியும் குடியேற்றமும் இரண்டாவது நிலை. மொழி, இயல் இலக்கியத் தெளிவுகளே இந்த நில வெற்றிக்குச் சான்று. மஞ்சளரின் நிலவெற்றியே மூன்றாவது கட்டம். இதற்குத் தெளிவான கால வரம்பு உண்டு. வெள்ளையனின் கடல் வெற்றியும் குடியேற்றமும் நான்காவது கட்டம். இதற்குத் திட்டமான கால வரம்பு உண்டு. சுருங்கக் கூறினால் மஞ்சளர் ஆரியரைவிட அரிய செயற்களைச் செய்த பெருமக்கள்.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றி மூத்த குடியே கறுப்பு வகையினர். மக்களில் காலத்தால் முந்தி நிற்பவர் கறுப்பு வகையினரே. கறுப்பரிடம் இருந்தே மஞ்சளரும் வெள்ளையரும் தோன்றினர். இதுவரைக் கிட்டியுள்ள மக்க ளெல்லில்[4] மிகப் பழமையான எலும்பு[5] ஆப்பிரிக்காவில் நேட்டால் நாட்டில் நின்று கிட்டியுள்ளதே. இது கறுப்புவகையினனுடையதே. சாவா-சீனர் மக்களெலும்பைவிட பழமையானதே இந்த எலும்பு. கறுப்புக் குரங்கிலிருந்தே மக்கள் தோன்றினர். இது சான்றியல் உண்மை. குரங்குகள் வடமுனைப் பகுதிகளில் வாழ்வதில்லை. மக்களின் அமைப்பும், பெருப்பும்[6] அறிவுமுள்ள குரங்குகள் நிலநடுக்கோட்டையடுத்த பெருங்காடுகளிலே வாழ்கின்றன. பெருமழையும், சுடுஞாயிறும், காயும், கனியும், கிழங்கும் மிகுந்து குரங்கும் மக்களும் சேர்ந்து வாழும் நிலப்பகுதியே இது. இதுவே கறுப்பரின் நிலம். கறுப்பு வகையினன் எங்கு தோன்றினான் எப்படித் தோன்றினான் என்று நாமறிந்தாலும் எவ்வாறு பரவினான் எங்கிருந்து பரவினான் என்பதைப்பற்றி தெளி

1 Volga River
2 பாரேடு - Atlas
3 பெரும்புல் - Reed
4 எல்லு - Bone
5 எலும்பு - Skeleton
6 பெருப்பு - Big Size

வான சான்றுகள் இல்லை. மூன்று பெருநிலப் பகுதிகளில் சிதறிக் கிடக்கும் கறுப்பு வகை மக்களின் தோற்றமும் பரப்பும் பற்றிய உண்மைகளைக் கண்டு வெளிக் கொண்டு வருவது கறுப்பு வரலாற்று, மக்களியல், மொழியியல் சான்றோர்களின் கடமை. இந்த வரலாற்று உண்மையை நிறமற்ற வரலாற்றறிஞர்கள் மறைத்து வைத்துள்ளனர். கறுப்பரின் வரலாறு வெளி வந்தால் அந்த வரலாற்றுப் பெருமைக்கு முன் நிறமுள்ள வரலாற்றுக்கு முன் வெள்ளையரின் வரலாறு மங்கி வெளுத்துவிடும். காப்டன் குக் ஆச்திரேலியாவைக் கண்டு கொள்வதற்கு முன் தமிழர்கள் அங்கு சென்று சேர்ந்துள்ளனர். தமிழ் நாட்டு மணியொன்று ஆச்திரேலியா பொருநூலத்தில்[1] உள்ளது. வாச்கோட காமா என்ற வெள்ளையன் இத்தியாவிற்கு வருவதற்கு முன்னே இங்கு மக்கள் வாழ்ந்திருந்தனர். இந்தியாவிற்கு கடல் வழி கண்ட பெரியோன் என்று வெள்ளையன் பெருமை பீத்துவதில் தெளிவில்லை. தமிழர்கள் சீனம் கிரேக்க நாடுகளில் சென்றிருந்தனர் என்பதற்குத் தெளிவான சான்றுகள் உள.

பார் மக்கள் தொகையில் 24 நூறியம்[2] கறுப்புவகையினரே. 33 நூறியம் மற்றவர்கள். 43 நூறியம் மக்கள் மஞ்சளர். கறுப்பரை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வெள்ளையர் கொன்று அழித்து வருகின்றனர். இதனுல் கறுப்பரின் மக்கள் தொகை குறைந்து போயிற்று. ஆப்பிரிக்கா மலகாசி நிலப்பகுதிகளில் வாழும் கறுப்பரை இருளர்[3]என்று அழைக்கலாம். அந்தமான், நிக்கோபார், இந்தோனேசியா (போர்னியோ), இரியன். சாலமன், புது கெப்பிரைட், புது காலடோனியா, பூசி, போலினேசியா நிலத்துணுக்குகளில் வாழும் கறுப்பு வகையினரை மலயர்[4] என்று அழைக்கலாம். ஆச்திரேலியாவில் வாழும் கறுப்பு வகையினரை மறவர்[5] என்றும் சப்பானில் வாழும் கறுப்பர்களை எயினர்[6] என்றும் அழைக்கலாம். இந்தியக் கறுப்பர்களே தமிழர்கள். இந்தியாவில் இந்தக் குழுவினர் தமிழ், மலை, கன்னட, தெலுங்கு, வட[7], நடு[8], மகர்[9], அரிசி[10], பெரு[11] நாடுகளில் வாழ்கின்றனர். தொலியின் நிறம் வைத்துக் கூறுவதால் இவர்கள் தமிழ் பேசி வரும் இனம் என்று பொருள்படுவதில்லை. இவர்கள் மலேசியா, இலங்கை நாடுகளிலும் வாழ்கின்றனர். இவ்வாறு இருளரும், தமிழரும், மலயரும், மறவரும், எயினரும் சேர்ந்த வகையே கறுப்பு வகை.

இவர்களனைவருக்கும் நெருங்கிய ஒற்றுமையுண்டு. நிறமற்ற வகையினரின் கொடுமைக்கு ஆளானவர்களே இம்மக்களனைவரும். இந்த வகையினரின் வரலாறு, மக்களியல், மொழியியல், பண்பாட்டியல்[12], பாரியல்[13] அனைத்தும் திருத்தி எழுதவேண்டும். இந்த மக்களிடையே உள்ள பண்பாட்டு ஒற்றுமை அப்போதுதான் தெளிந்து அறியலாம். இந்தியரில் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட மக்கள் தமிழர் வழியினரே. அரிசி நாட்டில், வட நாட்டில், நடு நாட்டில், மகர் நாட்டில், பெரு நாட்டில் கறுப்பர்கள் வாழ்வதை தமிழர்கள் அறிவதில்லை. தமிழர்களை மட்டுமே தமிழ் வகை என்று ஆரிய ஆசிரியர்கள் தமிழ் நாட்டோடு ஒதுக்கி வைத்துள்ளனர். இந்தியா தமிழரின் நாடே, தமிழ் வகையினரின் நாடே என்பது மக்களியல்படி பார்க்கும் போது தெளிவாகத் தெரிகிறது. இந்தியத் தமிழ்வகையினர் பற்றி வேறு ஒரு கட்டுரையில் நாம் தெளிவாகக் விளக்கிக் கூறுவோம்,

பார் கல்விக்கலைப் பண்பாட்டுக் கழகம்[14], 1951 சூலைத் திங்கள் 8-ம் நாள் உயிரியல்[15], மக்களியல், சான்றியல்[16] அறிஞர்களின் கூட்டான ஒருஅறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையின் சுருக்கம் கீழ் வருமாறு:-

1) வகையைத் தள்ளிக் கூறல் சான்றியலுக்கு ஒத்ததல்ல. உயிரியலுக்கு ஒத்ததல்ல. அறிவிலும் உள்ளத் திறமையிலும் ஒரு வகை, வேறு ஒரு வகையிலிருந்து வேறுபடுகிறது, உயர்ந்தது என்று கூற இயலாது,

2) பார் மக்களின் தலைச் சோறின்[17] திறமை ஒரேபடித்தானதே.

3) கறுப்பு, மஞ்சள், வெள்ளை வகையினர் அங்கு மிங்கும் மணம் செய்வதால் குறைபாடுகள் ஏற்படுவதில்லை. இதனை ஒரு குற்றமாக எண்ணலாகாது.

4) உயிரியலின்படி வகைக்கு ஏற்றத்தாழ்வில்லை, கோடிக்கணக்கான மக்களை முன்னேற்றமடையாமல் தடை செய்து வைத்திருப்பது ஒரு தவறே.

5) சான்றியலின்படி ஒரு நாடோ, சமயமோ ஒரு வகையாவதில்லை. ஒரு மொழி பேசுபவர்களோ ஒரே நாட்டில் வாழ்பவர்களோ ஒரே வகையான பண்பாடு உள்ளவர்களோ ஒரு வகையினராவதில்லை.

6) அறிவுத் தேர்வு[18]களின்படி மக்கள்அனைவரும் ஒரே வகையான திறமையும் அறிவும் உள்ளவர்கள் என்று தெளிந்திருக்கிறது.

7) மக்கள் அனைவருக்கும் வாய்ப்புக்களும் கல்வியும் கிட்டுமானால் ஒரே படித்தாக உயர்ந்த நிலைக்கு முன்னேறி வருவார்கள்.

| | | |
|---|---|---|
| 1 பொருநூலம் – Museum | 2 நூறியம் - Percentage | 3 இருளர் - Negro |
| 4 மலயர் - Papuan (Malenesian) | 5 மறவர் – Australian Aborignals | 6 எயினர் - Ainu |
| 7 வடநாடு - உத்தர் ப்ரதேச் | 8 நடுநாடு – மத்திய ப்ரதேச் | 9 மகர் நாடு - மகராச்ட்ரா |
| 10 அரிசி நாடு - ஒரிசா | 11 பெருநாடு – பீகார் | 12 பண்பாட்டியல் – Sociology |
| 13 பாரியல் - Geogrophy | 14 பார்கல்விக்கலைப் பண்பாட்டுக்கழகம்-UNESCO | 15 உயிரியல் – Biology |
| 16 சான்றியல் – Science | 17 தலைச்சோறு – Brain | 18 அறிவுத்தேர்வு - Intelligence Test |

தென் ஆப்பிரிக்காவில் இருளர்களையும் அமெரிக்காவில் இருளர்களையும் குறைந்த சாதியினராக ஒதுக்கி வைத்திருப்பதையே நான்காவது அறிக்கை விளக்கமாகக் கூறுகிறது. இந்தியாவில் தமிழர்களையும் தென்கிழக்காசிய நாடுகளில் மலயர்களையும் ஆத்திரேலியாவில் மறவர்களையும் வெள்ளையரும் ஆரியரும் மஞ்சளரும் தள்ளி வைத்திருப்பதை பாகபக கழகம்[1] எடுத்துக் கூறவில்லை. ஐந்தாவது அறிக்கையின் சில பகுதிகளுக்கு விளக்கம் தருவது கலக்கத்தை தெளிய வைக்கும். சமயம் ஒரு வகையாவதில்லை. இந்து சமயத்தில் ஆரியரும் தழிழரும் நிற்கின்றனர். எனவே ஒரு சமயம் ஒரு வகையாவதில்லை. நாடு ஒரு வகையாவதில்லை இந்தியா ஒரு நாடாக விருப்பினும் இங்கு ஆரியரும் தமிழரும் மஞ்சளரும் வாழ்கின்றனர். இத்தனி சிறப்பு இந்தியாவிற்கு மட்டுமே யுண்டு. எனவே இந்திய நாடு ஒரு வகையினரின் நாடாவதில்லை. ஒரு மொழி ஒரு வகையாவதில்லை. தமிழ் மொழி பேசுபவர்களில் ஆரியரும் தமிழரும் உண்டு. எனவே ஒரு மொழி ஒரு வகையினருக்குப் பொதுவாக அமைவதில்லை. தமிழ் வகையினர் தமிழ், தெலுங்கு கன்னடம், மலைத்தமிழ்,ஒரிசா,இந்தி,மராத்தி,போன்ற பல மொழிகள் பேசுகின்றனர். எனவே தமிழர் வேறு தமிழ் வகையினர் வேறு. ஒரு மொழி ஒரு வகையாவதில்லை.

ஒரு பண்பாட்டினர் ஒரு வகையாவதில்லை. கிறித்தவப் பண்பாட்டை கறுப்பனும் மஞ்சளனும் ஆரியனும் பின்பற்றுகிறான். இவர்கள் ஒரே வகையினராவதில்லை. தமிழ் நாட்டில் கிறித்தவனும், இசுலாமியனும், ஒரு தனித்தமிழ்ப் பண்பாட்டையொட்டியே வாழ்கின்றனர். இவர்களுடைய பண்பாடு காச்மீர் நாட்டினரின் பண்பாட்டிலிருந்து வேறுபட்டதே.

பாரிலுள்ள கறுப்பினத்தவர்களுக்குப் பொதுவான சில தன்மைகள் உண்டு.

1 மக்களியல்படி இவர்கள் ஒரு வகையினரே.

2 பாரியல்படி கறுப்பு வகையினர் நிலநடுக்கோட்டை யொட்டிய நிலத்தே வாழ்கின்றனர்.

3 மொழியியல்படி கறுப்பு வகையினரின் மொழிக் குடும்பம் ஒரு கூட்டு மொழி[2]க் குடும்பமே.

4 கறுப்பர்களின் தோற்றம் பரவுதல் பற்றிய புதுமைக் கருத்துக்கள், இவர்கள் ஒரே வகையினர் என்பதைத் தெளிவாக விளக்குகிறது.

5 கறுப்பர்களின் கலை, பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஒன்றிய முடைத்தவை.

கறுப்பர்களுக்கிடையே மிகச்சிறந்த அடிப்படை ஒற்றுமை ஒன்று உண்டு. கறுப்பு வகையினரை பல்லாண்டுக் காலமாக வெள்ளையர் வருத்தியுள்ளனர், கொன்று ஒடுக்கியுள்ளனர்.

இந்த ஐந்து உண்மைகளையும் ஆய்வு செய்து வெளிக் கொண்டுவரவேண்டிய கடமை கறுப்பு வகையினரின் கடமையே. மக்களியல், மொழியியல், பாரியியல், பண்பாட்டியல், வரலாறு என்ற ஐந்து துறைகளுடைய இக் கறுப்பியல் இருளர், தமிழர், மலயர்,மறவர், எயினர், என்றஐம்பெரும் குடிமக்களின் ஒற்றுமைப் பண்புகளை வெளிக் கொண்டு வரும். தமிழனின் உடன் பிறந்தாரை அறியும் இயலே கறுப்பியல். கறுப்பு வாழ்க. கறுப்பர் வாழ்க. ஐம்பெரும் குடியினர் வாழ்க. தமிழர் வாழ்க!



---

1 பாகபக கழகம் — UNESCO

2 Agglutinative Language

# நெருங்கி நெருங்கி வருகிறாள்!

A குணசீலன்
(புஜிரா)

துயில் எழுந்து சுற்றும் முற்றும்பார்த்தேன். வைகறைப் பொழுது கழிந்து இருந்தது. இரவில் உறக்கம் வராமல் அப்படியும் இப்படியும் புரண்டு கொண்டு கிடந்த பின் எப்பொழுது உறங்கினேன் என்று நினைவு இல்லை. எழுந்து குளியல் அறையில்புகுந்தேன். குளித்து முடித்து உடை அணியும்போது கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. அறை வாசலில் விடுதி ஆள் காலை உணவு கொண்டு வந்து இருந்தான். உணவு உண்டு முடித்துக் விட்டு அறையைப் பூட்டிச்சாவியை பையில் வைத்துக் கொண்டு அவசர அவசரமாக லிப்டில் நெருக்கி அடித்துக் நுழைந்தேன். வருடங்களுக்கு முன்தொடங்கிய வாழ்க்கையின், ஒரு அத்தியாயம் இன்றுடன் முடிவடைகிறது. ஏன் இப்படி நடந்தது? விடை கிடைக்காத புதிர்.

வழக்கறிஞரின் அறையை அடைந்தபோது எனக்காக அவர்கள் காத்து இருந்தது தெரிந்தது; என் மனைவி இல்லை இல்லை என் முன்னாள் மனைவி, எங்கள் இரவு நேரப்புரட்சியின் ஒரே சின்னம் என் அன்பு மகன், மாமியார். என்னைப் பார்த்ததும் பார்க்காதது மாதிரி முகத்தை திருப்பிக் கொண்டாள் மனைவி; மகன் அழுது கொண்டு என்னிடம் ஓடிவர முயன்று கொண்டு இருந்தான். மாமியார் அவனைத் தன் கையில் சிறைப்படுத்திக் கொண்டாள். அவன் அழுகை என் நெஞ்சைப் பிளக்கிறது; நஷ்டப் பட்டுப்போன என் இன்ப வாழ்க்கையின் ஒரு நினைவு அலை.

டைப் செய்யப்பட்ட சில காகிதங்களை என் முன் வைத்தார் வழக்கறிஞர், அவள் மௌனமாக இருந்தாள். கையொப்பம் வைக்கும்படி அவர் வேண்டிக் கொண்டார்! அதைப் படிக்கும் தைரியம் என்னிடம் இல்லை. ஏன் அதைப் படிக்க வேண்டும்? படிக்காமலே அதில் என்ன எழுதியுள்ளது என்பது தெரிந்ததுதானே! அவள் என்னுடன் நடத்திய பயணத்தை என்றோ முடித்துக் கொண்டாள், எங்கு எங்கு ஒப்பம் வைக்க வேண்டும் என்று பார்த்து ஒப்பம்வைத்தேன் ஒரு வாழ்க்கை அத்தியாயத்தின் முற்றுப் புள்ளி இன்று சட்டப் பூர்வமாக வைக்கப்பட்டுவிட்டது.

''காதலிக்க வேண்டாம்; அதிலும் பணக்கார பெண் வேண்டவே வேண்டாம்'' என்று நண்பர்களும் உறவினர்களும் பல தடவை எச்சரித்தனர். அவளின் அன்பு மழையில் நனைந்து கொண்டிருந்தபோது அவை ஒன்றும் மனதில் பதியவில்லை. அவளை நான் மன்தாரக் காதலித்தேன். அவளைத்தான் நான் உலகம் என்று லயித்து இருந்தேன். அவளுடன் நடத்திய குடும்பம் தான் எல்லாம் என்று இறுமாந்து இருந்தேன். ஆனல் இன்று எல்லாம்பிரிக்கப்பட்டுவிட்டது. இப்பொழுதுதான் அறிஞரின் வாக்கு நினைவுக்குவருகிறது. ''எப்பொழுதும் பிரிவுக்குத் தயாராக இருக்கவேண்டும், தாய், தந்தை, சகோதரர், மனைவி, குழந்தை எல்லாமே செயற்கைதான். பிரிவும், தனிமையும்தான் இயற்கை; இணைப்பும் கூட்டும் பாவனைகள்'' என்னால்தாங்க முடியவில்லை. மனம்உடைந்து சுக்கல் சுக்கலாகப் போயிற்று.

விடுதிக்கு வந்து அறையைக் காலி செய்து விட்டு புகை வண்டி நிலயத்தை அடைந்தேன். எங்கு போக வேண்டும் என்று உணர்வு இல்லை.

நான்கு பேர் மாத்திரம் தங்கும் வசதியுள்ள முதல் வகுப்பு அறையில்நுழைந்தபோது ஒரு இனம் தெரியாத நிம்மதி உலகம் சுருங்கி விட்டதைப்போல! அறையில் ஒரு வயதான தம்பதியும் அவர்களின் மகளும் உறங்கத் தயார் செய்து கொண்டு இருந்தார்கள். என் வரவை அவர்கள் விரும்பவில்லை என்று அவர்கள் முகம் காட்டியது. எந்த முகம் இளம் பெண்களைச்சுண்டி இழுத்துப் பயித்தியம் ஆக்கியதோ, அந்த முகத்தை இன்று யாருக்கும் பார்க்கக்கூட வெறுப்பாக இருக்கிறது. என் மனைவி கூட வெறுத்த முகம், சாதாரண மனைவி இல்லை-காதல் மழையில் நனைந்த மனைவி. அவர்கள் உறங்கத் தொடங்ஞர்கள். எனக்கு உறக்கம் வரவில்லை. எப்படி வரும்? ''நான் உங்களை விரும்பவில்லை; வெறுக்கிறேன், என்னை விட்டு போய்விடுங்கள்'' அவள்வார்த்தைகள் என்னையேச் சுற்றி வருகின்றன. அவை எழுப்பும்ஒலிஅலைகள் எழுந்து என்னை ஆட்கொண்டன. அவை என் தசையடுக்கினைப் பிளந்து கொண்டு என் உள்ளத்தைச் சூழ்ந்தன.

யாரை உலகம் என்று நினைத்து வாழ்ந்தேனோ அவளே என்னை வெறுத்தாள். அவள் வாய் வீசிய தீப்பொறிகள் இந்த உலகத்திலிருந்தே கிளம்பிய அனற் புயலாகஎன்னைத்தாக்கின. ஆம் உலகத்தால் வெறுக்கப் பட்டஎனக்கு இனி வாழ்வு எதற்கு?என்னை விட்டுப்போய் விடுங்கள் என்ற வார்த்தைகள்என்னைத் துரத்துகின்றன. இந்த துரத்தலுக்கு இன்று முடிவு காண வேண்டும். புகை வண்டி அதன் பாதையில் சீராகப் பயணத்தைத் நடத்திக் கொண்டு இருந்தது. அவர்கள் நல்ல உறக்கத் தில் இருந்தார்கள். மெதுவாக எழுந்து கதவைக் திறந்தபோது குளிர்ந்த காற்று என்னைத் தள்ளிக் கொண்டு உள் புகுந்தது.

பாலமும், அதன் கீழே வெண்ணிலாவின் ஒளியில் பளபளத்துக் கொண்டு பாய்ந்து செல்லும் நதியும் தெரி கிறது. அவள் விலகி விலகிப் போகச் சொன்னுள். இதோ காவேரி என்னை ஆறத் தழுவித் தன்னுள் சங்கமப்படுத்திக் கொள்ள நெருங்கி நெருங்கி வருகிருள் !



# மாரியே வாழ்க நீ!

A. நீலகண்டன் B. Sc.

மழைக் காலம் மலருது
மனம் யாவும் மகிழுது!
கோடை தந்த சூடுபோக்கக்
குளிரு காத்து அடிக்குது!
வெத்து டம்பு நடுங்குது.
போர்த்த பின்னே அடங்குது.
காய்ந்தி ருந்த நிலத்தினில்
பசுமை கௌவிப் படருது!
மேய்ந்தி ருந்த ஆட்டுமந்தை
மழையைக் கண்டு ஒதுங்குது!
துவண்டி ருந்த ஆற்றினில்
வெள்ளம் புரண்டு ஒழுகுது!
ஆற்று வெள்ளம் சதிராட
அயிரை மீன்கள் குதிக்குது!
கொத்தி ஓட நேரமதை
கொக்கும் பாத்து நிற்குது!
மனம்ம கிழ்ந்து புள்ளினம்
வான் வெளியில் பறக்குது!
குரல்கொ டுக்கும் குஞ்செலாம்
சிறகு கொண்டு அணைக்குது!
களிப்பு மிக்க தவளைகள்
கரைந்து மழையை அழைக்குது!
வனப்பு கொண்ட வண்டினம்
மலரில் தேனை எடுக்குது!
கொடுக்கு நீண்ட நண்டுகள்
வளை வெளியில் களிக்குது!
புல்லை உண்ணும் ஆவினம்
மகிழ்ந்து பாலைச் சுரக்குது!
பால்சு ரக்கும் மடியினை
கன்று மோதிக் குடிக்குது!
வைய மெல்லாம் குளிருது
வளமை எங்கும் மிளிருது
மாரி நல்கும் நன்மைகண்டு
மனம்பு கழ்ந்து வாழ்த்துதே!



பெருஞ்சாலேயில் நிமிர்ந்து நின்று ஐந்து மாடிக்கட்ட டத்தின் கீழ் நடுப்பகலில் இராமக்கம்பர் தொலேவில் பார்வை செலுத்தி உட்கார்ந்திருந்தார். பங்குனிமாதச் சூட்டில் தார் வீதியின் மிகத் தூரத்தில் கானல் நீர் சாலேயில் கொதித்துப் பெருகும் சூட்டின் அலேகள்.

இராமக் கம்பருக்கு தனது மூதாதையரைப் பற்றிய நினேப்பு வந்தது- நான்கு தலேமுறைக்கு முன் பாலக் காட்டு ராஜாவுக்குச் சொந்தமான கோவிலில் நாத சுவரம் வாசிக்க வந்த மாணிக்கக் கம்பரைப் பற்றி. கோவில் உற்சவங்களில் அவரது நாதப்பிரம்மம் அலே களாகப் பாயும் திருவிழா ஊர்வலத்தில் தேவியின் அலங் காரமும் கம்பரின் நாதவிந்தும் மக்கள் வெள்ளத்தை தேக்கும். ராஜா, மாணிக்கக் கம்பரின் பெருமை அறிந்து கொட்டாரத்துக்கு அழைத்து வந்து அவரது நாதசுவர இசை லயத்தில் கலந்து பரிவட்டமும் வீர சங்கிலியும் கொடுத்து சிறப்பித்தார்,

'அது-பழங்கதை: கடன் 'கதை, அதை நினேத்துப் பார்த்தால் பெருமை திரும்பி வரவா போகிறது'.

மாணிக்கக் கம்பரோடு பக்கமேளமும் ஒத்து ஊத லுக்குமாக வந்து குடியேறிய நான்கு குடும்பங்களின் வாரிசுகள் இங்கு இப்போதும் உண்டு, பெரிய கடை

'கோவில் அர்ச்சகர் வேலேக்குக் கூட சவுண்ட் என்ஜி னீயரிங் தெரியணுமாக்கும் .............. காலம் போற போக்கு.........குழலே மூட்டை கட்டி வைச்சு, சுமை தூக்கப் போனுக் கூட ரேஷனுக்கு காசு கெடைக்கும். பாழாப்போன கலேயை கத்துஎன்னதான் கெடைக்குது'.

கோவிலில் ஒரு நாளேக்கு மூன்று நேரம் குழலே எடுத்து வாசிக்கணும். கோவில் பிரகாரத்தைச் சுற்றி ஐயர்சாமி சிலேயோடு சீவேலி வலம் வரும் போது தீபா ராதனே வேளேயிலும் வாசிப்பு .அதற்கு சம்பளம் மாதம் இரண்டு பறை நெல்லும் ஒவ்வொரு நாளும் ஒரு தேங்காயும். நடைவரவு அதிகமாயிருந்தால் ஐம்பது காசும்.

காலேயிலே வந்து சேர்ந்த கிராக்கி கைநழுவுவது போல் இருந்தது. வந்த கிராக்கியை விடவேண்டா மென்று நாயரின் டீக்கடைக்குக்கூட்டிச்சென்று பேசியது பளிச்சிட்டது.

''கம்பரே..........வெர்ற வள்ளிக்கிழமை உற்சவம். நீங்க வியாழக் கிழமையே அங்க வந்திட வேண்டியது... என்ன முடியுமா?''

''எனக்கென்ன இதைவிட்டா சோலி. வந்து சேர்ந்திடறேன்''.

# பாம்பின் கால்

சுப. அப்பன்

வீதியில் சுமை தூக்கியாகவும் கட்டட வேலேயில் சித்தா ளாகவும் ஆங்காங்கே கடைகளில் எடுபிடியாகவும் வயிறு பிழைக்கிருர்கள்.

நாயன்த்தின் இடத்தை ஒலிபெருக்கியும் இசைத் தட்டுகளும் பிடித்துக்கொண்டு விட்டன. வைகறையின் அமைதிக்குக் கோடரியாகி விட்டன. சுப்பிரபாத இசை கேட்டு அம்மனும் சாமியும் துயில் உணர்வதற்குப் பதில் அலறிப்புடைத்துத் திடுக்கிட்டு எழுவார்கள். அப்படிப் பட்ட கர்ணகடூரமான ஓசை. பெருஞ்சாலே அருமார் கோவிலில் வேலேக்குச் சேர வந்த அர்ச்சகரிடம் தர்ம கர்த்தா—

''என்ன ......... ஐயருக்கு ரெக்கார்டெல்லாம் வைக்கத் தெரியுமா?'' என்றுதானே கேட்டார். ''பூஜை அநுஷ்டானங்கள் முறையாக செய்யத் தெரியுமா'' என்ரு கேட்டார்?.

''ஓ9...... நான் ஐ. டி. ஐ. எலக்டிரிக்கலாக்கும்''.

''அப்போ சரி, காலே ஐந்து மணிக்கும் சாயங்காலம் ஐந்து மணிக்கும் ஒவ்வொரு மணி நேரம் தவ்ருமல் கீர்த்தனேப் பாடல்களே வைக்கணும்''.

தர்மகர்த்தாவின் ஆணே. நியமனம் ஆனது.

காவியேறிய பற்கள் தெரியச் சிரித்தார். ''பெரிய மேளமில்லே. ரொம்பவும் சின்னதாக்கும். பணப்பிரி வும் இந்த தடவை மோசமாக்கும். அதனுலே பணமும் கம்மியாவே பேசி வாங்கிக்கிங்க''.

''அது சரி' மேளம் என்னதான் சின்னதானுலும் தவுலும் சுருதியும் கூட வந்துதானே ஆகணுங்க'',

''நீங்களே ஒத்து ஊதினுலும் சரி; வேறே ஆள் பிடிச்சாலும் சரி, காரியம்நடக்கணும்...அவ்வளவுதான்''

''..... ............................''

''என்ன ரேட்..............இப்பவே பேசிக்குவோம்.',

''ஒங்களுக்கு இஷ்டமானது கொடுங்க. வருஷா வருஷம் நடத்தற ஒங்களுக்குத் தெரியாதா என்ன?''

ரேஷன் கடையை ஆறுமணிக்கு மூடிவிடுவான். காலேயிலிருந்தே சிங்கிள் டீ தான். இராமக்கம்பர் வேகமாகக் கணக்கிட்டுப் பார்த்தார். இந்த வார ரேஷன் வாங்குவதற்கு பதினேந்து ரூபா. டீக்குடிக்கவும் பக்க மேளக்காரர்களேக் கூட்டிப் போவதற்கும் ஒரு ஐந்து ரூபாய்.

''பதினஞ்சு ரூபா அட்வான்ஸ் குடுங்க''

''அது இப்போ எதுக்கு?''

சித்தூரிலே இருக்கிற பக்கமேளக்காரர்களைப் போய் கூட்டியார.''

''அதுக்குத்தான் இன்னும் நாளிருக்கே''

''அப்போ.................அட்வான்ஸ் இல்லையா?''

''நமக்குள்ளே இதென்ன புதுப் பழக்கம், எல்லாம் அங்கெ வந்து மொத்தமா வாங்கிக்கலாம்.''

நாயர் கொண்டு வைத்த டீயை மடமடவென்று குடித்துவிட்டு வந்தவன் வந்த வழியே சென்றுவிட்டான் இராமக்கம்பர் டீக்கு கடன் சொல்லிவிட்டு, தீப்பெட்டிக்குள் பாதி குடித்து அணைத்து வைத்த துண்டு பீடியை எடுத்துத் திரும்பவும் பற்ற வைத்தபடி கடையை விட்டு எழுந்தார்.

உச்சி வெடிக்கிற வெயில்.

இன்னும் விடை வாங்காமல் வழுக்கைத் தலையின் பக்கவாட்டில் வளர்ந்து நின்றநீளமான முடியை பின் கழுத்து முடியோடு இரு கைகளாலும் தள்ளிவிட்டார். அடர்ந்த புருவங்களில் வெண்மை படர்ந்திருந்தது. மூக்கின்கீழ்இருபக்கங்களிலிருந்தும் இதழ்க் கோடிகளை நோக்கி வகிடாகச் சதைக் கோடுகள். மேல் துண்டால் முகத்தில் துளித்த வேர்வையைத் துடைத்தார்.

உஷ்ணக் காற்று வீசியது.

பெருஞ்சாலைப் பிள்ளையார் கோவிலுக்குப் போனால் என்ன? சங்கர ஐயர் பூஜையை முடித்துப் புறப்படும் சமயம் ஆகிறது. இன்று செவ்வாய்க் கிழமையும் சதுர்த்தியுமானதால் ஐயருக்கு ஸ்பெஷல் பூஜை இனத்தில் நல்ல வருமானம் இருக்கும். அவரைப் பார்த்துக் கேட்டால் ஏதாவது பணம் கிடைக்கும்.

பாதத்தைப் பதம் பார்க்கும் உருகிய தாரையும் பொருட்படுத்தாமல் கம்பர் நடந்தார்.

கோவில் பிரகாரத்திலிருந்து ஆட்கள் கலைந்து விட்டிருந்தார்கள். இன்னும்கோவில் வெளிக்கதவு சாத்தப் படவில்லை. கொஞ்சம் சமாதானம்.

பகலின் அதிதீவிர வெப்பத்தில் கோவிலும் பிரகாரமும் அரசமரக் காற்றில் இளைப்பாறுவது போல் ஒய்ந்து கிடந்தன. கோவில் உட்சுவற்றில் நுழைந்தபோது விரிந்து படர்ந்த அரச மரத்திலிருந்து காற்று சுகமாக வீசியது.

ஐயர் கதவைத் தாழிட்டு வெளியே வந்து கொண்டிருந்தார்.

''என்ன கம்பரே ..........இந்தப்பக்கம்.........''

''ம்......... ஒண்ணுமில்லே ஐயரை பார்த்திட்டு போகலாமின்னுதான்.

''சந்தோஷம், இந்தாரும் நைவேத்தியமும் தேங்காயும், வீட்டுக்கு கொண்டுபோயிடும்''

மடியிலிருந்து இருபத்தி ஐந்து காசு நாணயமும் எடுத்துக் கொடுத்தார்.

வருமானம் வரவர மோசம். ஜனங்களுக்கு அர்ச்சனை பண்றது, அபிஷேகம் பண்றதிலேநம்பிக்கையே குறைஞ்சுண்டு போறது,தேவஸ்தானம் கொடுக்கிற சம்பளத்திலே எதை சரிக்கட்டறது. வீடுநெறஞ்சு மூணு நிக்கறதுகள். ஒரோருத்தரையா எவன்கிட்டேயாது பிடிச்சுக் கொடுக்கறதுக்கும் வழியைக் காணோம். என்ன பண்றதுன்னே தெரியலே. பூஜை பண்ணின நைவேத்தியம் கால் வயித்தை நெரப்பறது. எல்லாம் அவன் விட்ட வழி.................சரி, நான் வரட்டுமா.......'' ஐயர் தனது பாரத்தைச் சற்று இறக்கி வைத்துவிட்டு படியைத் தாண்டி தெருவில் நடந்தார்.

கம்பருக்கு நினைக்க நினைக்கச் சிரிப்பாக இருந்தது.

சண்டாளன் போற பக்கம் பாதாளம் என்றபடி அல்லவா எல்லாம் அமைகிறது. பூபாளமும் புன்னாகவராளியும் தோடியும் தேடிச் சென்றாலும் யாருக்கும் தேவையில்லை!.

சித்திரை மாதம்—விஷு நாள் அதிகாலையில் வீடு வீடாகச் சென்று நாதசுவரம் வாசித்தால் மகானுபாவர்கள் தருகிற பணம் ஒன்றுதான் ஒரு நாள் கிடைக்கிற அதிக வருமானம். அந்த வருமானம் வருடம் முழுமைமையிலும்.

வருடத்தில் வேறு நாட்களில் யாருக்கும் தேவைப் படாத—விருப்பமில்லாத நாதக்கலை தொலைந்து போகட்டும்' — சபித்தார்

பகலை அஸ்தமனம் ஜீரணித்துக் கொண்டிருந்தது. நேரம் மெல்ல மெல்ல நகர்ந்தது. கம்பரின் சிரிப்பு மங்கியது. 'மாலையில் கடை சாத்து முன் ரேஷனை எப்படி வாங்கலாம்?' வெயிலில் நடந்து வந்ததாலும் பசியாலும் உடல் தளர்ந்து தள்ளாடியது. பெருஞ்சாலையில் பாய்ந்தோடும் பெரிய ஊர்திகளும் கூட கண்களில் மங்கலாகத் தெளிவற்று பட்டுத் தெளிந்தன. கானல் நீரை நோக்கி வெயிலின் சூட்டிலிருந்து தனது மேனி நனைக்க விரைந்தோடும் ஊர்திகள்!

அருகில் இருந்த பெட்டிக் கடையில் பீடியை பற்ற வைக்க நெருங்கினர். அங்கு தொங்கிக் கிடந்த மாலைக் கதிர்' நாளேட்டின் பெரிய எழுத்துக்கள் அவரது

கவனத்தை ஈர்த்தன. கம்பர் கண்களை மூடிப் புகையை உள்ளுக்குள் இழுத்து அனுபவித்து, வெளியே ஊதித் தள்ளியபின் கையிலிருந்த பீடியை ஓரத்தில் வீசி எறிந்தார். நாளேட்டைக் கவனித்தார்.

'தேசிய விருது பெற்ற நாதசுவரக் கலைஞர் கிருஷ்ணப்பா வருகை.... ........………...…ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைட்டியின் சார்பில் வரவேற்பும் பாராட்டும்.....…' செய்தியைப் பரபரப்பாகப் படித்தார்.

உள்ளுக்குள் இன உணர்வு. கம்பர் மனம் துள்ளி எழுந்தது.

கலைஞர் கிருஷ்ணப்பா எங்கு தங்கி இருக்கிறார். என்று மனம் துருவியது. அவர் தேவி இன்டர் நேஷனல் ஓட்டலில் தங்கியிருக்கிறார் என்பதை விசாரித்துத் தெரிந்து கொண்டார்.

சில கணங்கள் ஓடின.

இராமக்கம்பர் ஒரு முடிவுக்கு வந்தார். விடுவிடென்று நடையைத் தொடர்ந்தார். அவரது உடம்பிலிருந்த வியர்வைத் துளிகள் ஆவியாகப் பறந்தன.

ஓட்டல் தேவி இன்டர் நேஷனல் — அகன்ற முன் பக்கத்தில் வரவேற்பு கூறுவது போல் தலை தூக்கி நிற்கும் சூரியகாந்தி மலர்கள் நிறைந்த அழகான பூந்தோட்டம். அதன் நடுவே சிமின்ட் பாதை. இவற்றின் பின்னணியில் ஓட்டல் கம்பீரமாக நிற்கிறது:

வாசலில் நின்ற அட்டென்டர்களைத் தாண்டி வெகு வேகமாக உள்ளே நுழைந்தார். அவரை அட்டென்டர் தடுத்து நிறுத்தி விசாரித்தான்.

''என்ன வேணும்''

ஆஜானுபாகுவாக வளர்ந்துவிட்ட உருவம். வெள்ளுடை, தலையில் அரச மரியாதை தரும் தொப்பி, அந்த அட்டென்டரின் கேள்வியில் சற்றுத் தடுமாறிய பின் தன்னைச் சமாளித்துப் பதிலளித்தார் கம்பர்.

''நாதசுவரங்க தொழில். இராமக்கம்பர் எம் பெயருங்க''

''யாரை பார்க்கனும்''

தேசிய விருது பெற்ற கலைஞரை பார்க்கனுங்கோ''

அட்டென்டர் கம்பரின் கோலத்தைப் பார்த்தான்.

அவன் வழி விடவில்லை. நகரப் பிரமுகர்களும் சபா காரியதரிசிகளும் பத்திரிக்கையாளர்களும் மொய்த்துக் கொண்டிருக்கிற அந்த பகுதியிலே- 'நாய்க்கு என்ன வேலை: பொன் உருக்கிற இடத்திலே'- என்று எண்ணி மெல்லச் சிரித்தான்.

அவனது அலட்சியப் பார்வை.

அவன் முன் தன் உள்ளமும் உருவமும் சிறிய அளவாக மாறிக் கொண்டிருப்பதை உணர்ந்தார். அடுத்தாற்போல் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தார்.

சிறிது நேரம் சென்றது

லிப்ஃட் கிரவுண்ட் ஃப்ளோருக்கு வந்தது. கதவு திறந்ததும் யார் யாரோ நான்கு பேர் வெளியே வந்தார்கள், அவர்களைத் தொடர்ந்து மாமிசங்கள் தொங்கும் பெரிய தாடைகளும் அகலமான நெற்றியில் பெரிய சிந்தூரப் பொட்டும் நீண்ட சில்க் ஜிப்பாவும் ஜரிகை வேஷ்டியும் அணிந்த ஒருவர் வெளியே வந்தார். அப்போது ஜவ்வாதின் மணம் அங்கு நிறைந்தது. கூட்டமும் பெருகியது.

கம்பர் கூட்டத்தைத் தள்ளி முன்னால் வந்து உடம்பைக் குறுக்கித் தொழுது பணிந்து நின்றார்.

தேசிய விருதுக் கலைஞர் தன் முன் மேனி குறுகி உள்ளம் மருகி நிற்கும் கம்பரை பார்த்தார்.

'யார் நீ?' என்ற கேள்வியைப் பார்வையிலே வீசினார்.

''நாயனம்தாங்க தொழில். எம் பேரு இராமக் கம்பருங்க.''

'ஆமா உனக்கென்ன வேணும்?' பார்வையின் தொடர் ஓட்டத்தில் மறு கேள்வி பிறந்தது,

''பூர்வீகம் தஞ்சாவூருங்க. பஞ்சத்துக்குப் பிழைக்க வரலீங்கோ. ராஜ சபையிலே வாசிக்க வந்த மாணிக்க கம்பரு எங்க மூதாதைங்கோ……....…....…....''

''ஓ ஓ....…....…அப்படியா''

கலைஞர் கிருஷ்ணப்பாவின் கண்களில் ஒரு வியப்பும் திகைப்பும்.

சற்று சிந்தனை.

வலக்கை கட்டை விரலும் ஆள் காட்டி விரலும் அகன்று கீழ்த்தாடையை மேலும் கீழும் வருடின. அப்போது அவரது விரல்களில் நவரத்தின மோதிரங்கள் டாலடித்தன.

அமைதியை நெருடி நீக்கினார் இராமக்கம்பர்.

''நம்ப கலைக்கு இப்போ தேசிய விருது கிடைச்சிருக்குதுங்களே, அதுதான் ஒங்களெ ஒரு தவா பார்த்து…….....''

கறுத்த வெற்றுடம்பில் மார்புக் கூடு தெரிகிறது. இடையிலே காவி படிந்த பழைய கதர் துண்டு. குதிகாலுக்கு மேலே தொங்கும் பழுப்பேறிய வேட்டி.

''நம்ப தொழிலுக்கே ஒரு அங்கீகாரம் ஒங்க மூலமா தான் இப்போ கிடைச்சிருக்கு. அதிலே நமக்கும் கூட சந்தோஷமுங்க..................'' காவிப் பற்களின் மங்கல் தெரிய இராமக்கம்பர் பேசினர்.

'வேறென்ன வேண்டும்? -மௌனமான கேள்வி.

உடம்பின் கூனிக் குறுகல் - சலன விடை.

ஐம்பது ரூபாய் தாள் இராமக்கம்பரின் கரங்களில் விழுந்தது. கம்பீரமாக நடந்து அகன்றார் கலைஞர் கிருஷ்ணப்பா.

இடுப்பில் கட்டிய துண்டை அவிழ்த்து வீசி உதறித் தோளில் போட்டுக் கொண்டு ரேஷன் கடையை நோக்கி நடந்தார் இராமக்கம்பர். அப்போது தானும் கலைஞன் பரம்பரையில் ஒரு கண்ணி என்ற பெருமிதம் அவர் உள்ளத்தில் பிறந்தது.

சீனக் கட்டுக் கதை

# பாம்பும் முயலும்

வி. சின்னத் தம்பி (பிக்கிங்)

முயலின் வீட்டுரிமைக்கு மதிப்புக் கொடுக்கும் பொருட்டு பாம்பு சட்டம் ஒன்றை இயற்றி விட்டு அதைத் தானே சென்று முயலுக்கு அறிவித்தது.

''கேள். இன்று முதல் நான் முதலிற் கதவைத் தட்டி உன்னுடைய அனுமதி பெறுமல் உனது உறைவிடத்துக்குள் வந்தால் நீ எனக்கு எதிராக வழக்குத் தொடரலாம்''.

பாம்பு பாரதூரமாகவே இதனைஅறிவித்தது. ஆனால் முயல் அதனை அமுல்படுத்துமா என்பது பாம்புக்குத் தெரியவில்லை. முயலுக்குச் சட்ட உணர்வு கிடையாது எனப் பாம்பு கருதியது. தான் கூறியதை முயல் நம்ப வில்லை எனப் பாம்பு சந்தேகித்தது. ஆகவே முயலைச் சோதித்துப் பார்ப்பதெனப் பாம்பு முடிவெடுத்தது.

பாம்பு தட்டாமல் வேண்டுமென்றே முயலின் பற்றைக்குட் புகுந்ததுடன் முயற்குட்டி ஒன்றையும் கொன்றது. பின்னர் பாம்பு, முயல் வந்து குற்றச்சாட்டுத் தாக்குதல் செய்யவேண்டும் என்பதற்காக வெளியே காத்திருந்தது.

முயல் வரவே இல்லை. பாம்புக்கு ஆத்திரம் படமெடுத்தாடியது. அது உள்ளே சென்று முயலைக் கைது செய்து கோபத்துடன் கேட்டது:

''நீ ஏன் சட்டப்படி நடக்கவில்லை?''.

''என்ன சட்டம் பாம்பு ஐயா? யாருடைய சட்டம்?''

''குற்றச்சாட்டு தாக்குதல் செய்ய நீ ஏன் வரவில்லை?''

''நீ தான் கொலைகாரன். இப்பொழுது நீதான் நீதிபதி. யாருக்கு எதிராகக் குற்றச்சாட்டுத் தாக்கல் செய்வது? யாரிடம் சென்று குற்றச் சாட்டைத் தாக்குதல் செய்வது?''

பாம்பு கோபத்துடன் இரைந்து கொண்டே முயலை விழுங்கியது.

பின் அது எல்லோருக்கும் பிரகடனம் செய்தது: ''நான் முயலைச் சட்டப்படிக் கொன்றேன். கைது,விசாரணை ஆகியன சம்பந்தப்பட்ட முழுச் சட்ட ஒழுங்கும் அனுசரிக்கப்பட்டுள்ளது''.

********

## மூதுரை

தொகுத்தவர்: எஸ். சுரேஷ் கிருஷ்ணகுமார்

1 ஒருவனின் ஓய்வு நேரத்தில் என்ன செய்கிறான் என்பதை வைத்தே அவன் எப்படிப் பட்டவன் என முடிவு செய்துவிடலாம்.

2 உயர்ந்த சாதனைகளைச் செய்ய அல்லது அடைய முடியாத மனிதன் ஒன்றுக்கும் உதவாதவன். அவன் இறந்தவன். அவன் ஒரு நடைப் பிணம்.

3 கல்யாணத்திற்கு முன் ஏற்படும் காதல் மிக மோசமான நாடகத்திற்கு எழுதப்படும் முன்னுரையைப் போல.

4 நீ மௌனமாயிருக்கும் போது உன்னுடைய குற்றங்களைப்பற்றிச் சிந்தனை செய்து அவற்றை அகற்ற முயற்சி செய்.

5 என் தலைவிதிக்கு நானே எஜமான். என் ஆத்மாவிற்கு நானே தலைவன்.

6 வறுமை ஒருவனது உணர்ச்சியையும் உயரிய குணங்களையும் அழித்துவிடலாம்.

7 பணம் பேசுகிறது; உண்மை ஊமையாகிறது.

8 புத்திசாலியான பகைவன், முட்டாளான நண்பனைவிட மேல்.

9 வாழ்வதற்காக உண்; உண்பதற்காகவே வாழாதே.

10 சுறுசுறுப்புதான் வாழ்க்கை-சோம்பேறித்தனமோ சாவுக்கு ஒப்பாகும்.

# மான்மியம் ★ ஒரு ★ சிறந்த ★ இலக்கியம்

இலக்கியங்களால் எப்பயனுமில்லை, அவைகளைப் படிப்பது சோம்பேறிகளின் வேலை; பொழுது போக்கிற்காகத்தான் அவைகள் பயன்படும். இலக்கியம்படித்தவன் ஒன்றுக்கும் உதவமாட்டான். இனிமையாகப் பேசிப் பொழுது போக்குவான். ஆகையால் இலக்கியங்களைப் படிப்பதிலே எல்லோரும் கருத்தைச் செலுத்துவது வீண் வேலை என்று சொல்வோர்உண்டு.

கவி புனையும் கவிஞன் தானே ஒரு கவிதையாக இருக்க வேண்டும் என்கிறார் ஆங்கிலப் பெரும்புலவர் ஜான் மில்ட்டன். கவிதையானது மக்களுக்கும் அரசாங்கத்திற்கும்நன்மைதரக்கூடிய சாதனந்தான்என்று நிரூபிக்கப்பட்டால் அதனால் நமக்கு இலாபம்தானே என்றார் ஆசிரியர் பிளேட்டோ. இத்தகைய கவிதையால் அமைந்த இலக்கியமேநாஞ்சில்நாட்டுமருமக்கள் வழி மான்மியம்.

''வெய்யிற் கேற்ற நிழலுண்டு;
வீசம் தென்றற் காற்றுண்டு;
கையிற் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுண்டு
வையந் தருமிவ் வனமின்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ''

என்று பாடிய கவிஞன், பொன்னாடை போர்த்திப் புலவரெல்லாம் கொண்டாடும் தென்னாடு போற்றுகின்ற தேவி நாஞ்சில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை தான் இவ்வருமை நூலின் ஆசிரியர்.

வஞ்சி நாடதனில் நன்செய் நாடெனச்செந்தமிழ் வழங்கும்தேயம்நாஞ்சில் நாடு. உயர் சிமைய உழாஅ நாஞ்சிலைத் தன்னகத்தே கொண்டது. சங்க காலம் முதல் பற்பல படையெடுப்புகளுக்கும் உள்நாட்டுக்கலகங்களுக்கும் நிலைக்களனாக விளங்கியது நாஞ்சில் நாடு. அந்நாட்டில் வாழ்வோர் பலரும் சோழ பாண்டி நாடுகளினின்றும் குடியேறியவரே. நாஞ்சில்நாட்டு வேளாளர் வழக்க வொழுக்கங்களெல்லாம் பாண்டி நாட்டிலுள்ளவேளாளர்களின் வழக்கவொழுக்கங்களே. அவர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்பாமல் இருக்க ஒரு சேர மன்னன் மருமக்கட் தாயத்தை அவர்கள் மீது திணித்தனன் என்பது கர்ண பரம்பரைச் செய்தி. ஒரு முறை நாஞ்சில் நாட்டினர் மருமக்கட் தாயிகளே என்றும், சேரர் குடிகளே என்றும் அம்மக்களே தீர்ப்பளித்ததாகவும் அது நடந்தது கி. பி. 1116 ல் என்றும் திருவிதாங்கூர் ஸ்டேட்மானுவல் தெரிவிக்கின்றது.

இத்தாய முறை மிகவும் விசித்திரமானது. ஒரு காரணவரது பூர்வீக சொத்து அனைத்து சகோதரியின் குழந்தைகளுக்குத் தாய முறைப்படி இறங்கும். அவனது குழந்தைகளுக்கு உகந்துடைமை எனப்படும்.ஒரு சிற்றுரிமையைத் தவிர வேறுஎந்த உரிமையும் இல்லை. சகோதரியின் குழந்தைகளுக்கும் பாகப்பிரிவினைகேட்க உரிமையில்லை. தன் குழந்தைகள் ஒருபாலும், சகோதரியின் குழந்தைகள் ஒருபாலும் அரித்துத் தின்பதுதான் நாஞ்சினாட்டுக் குடும்பக்காரணவன் என்ற நிலை ஏற்பட்டது. முற்போக்கான சீர்திருத்தங்களில் நாட்டங்கொள்ளாதோரின்எதிர்ப்புகிடையே தோன்றியதுதான் கவிமணியின் ''மலபார் குவார்டர்லி ரிவியூ''கட்டுரையும்இம் மான்மியமும். மான்மியம் 1917-18 ஆண்டுகளில் ''தமிழன்'' பத்திரிக்கையில் பழைய ஏட்டு நூல் ஒன்று பதிப்பிக்கும் பான்மையிலேயே வந்தது.

பிள்ளையவர்கள் இம்மான்மியத்தின் மூலம் வரைந்த சமுதாயச் சித்திரம் ஒரு புதிய இலக்கிய மரபையே தோற்றுவித்தது எனலாம். சட்டத்தால்ஏற்பட்ட சமூக சிக்கல்கள் இந்நூலில் அவலம், நகை, இகழ்வு ஆகிய சுவைகளில் புரையோடுவதைக் காணலாம். கவிதை நடையோ பேச்சு மொழி போல் அமைகிறது; மொழியின் நடையிலோ உயிர்த்துடிப்புமிகுதி. காரணவர் பஞ்சகல்யாணிப் பிள்ளையின் ஐந்தாம் மனைவியின் உள்ளக் குமுறலும் உணர்ச்சிக் கொந்தளிப்பும்தான்இந்நூலின் கரு. ''எளியேன் சென்ற நாள் முதலாக எல்லா வேலையும் என் தலைமேலாம்'' என்கிறாள் அவள். அடுக்களைவந்திடாத அரக்குப் பாவை கரிக்கலம் கைப்படாத கனக சுந்தரி மஞ்சள் பூச்சும் மயக்கிடு பேச்சும்

பேராசிரியர் வ. விநாயகப் பெருமாள்

கோலஉடையும் குறுக்கு நடையும் உடைய பெண் மற்றெருமனைவி. சுருங்கச் சொன்னால் இக்காவியத் தலைவி சமுதாயம் சீர்திருந்த ஓலமிட்ட தற்கால கண்ணகி. ஓர் இலக்கியக் கர்த்தா வாழும் சமூகம் அவனது சிருஷ்டியைப்பெரிதும் கட்டுப்படுத்துகிறது என்பதற்கு இந்நூல் ஒரு சான்று.

''உள்ளத்துள்ளது கவிதை-இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்-உண்மை
தெளிந்துரைப்பது கவிதை''

என்று கவிதைக்கு இலக்கணம் வகுத்தவர் வேறு யாருமல்லர்; நம் கவிமணியேதான். கவிமணிவாழ்ந்தகாலத்திய நாஞ்சில் நாட்டு வேளாள சமுதாயம் பற்றி அவர் உள்ளத்தூறிய கவிதை இலக்கியம் அந்நாளைய அரசையே சிந்திக்கச் செய்தது என்றால் இந்நூலின் சிறப்புக்குவேறு என்ன சான்று வேண்டும்?

இரண்டாவதாக அவர் கூறும் இன்பம் என்னும் பண்பு சொல் நயம், பொருள் நயம், கற்பனை அணி முதலான பல வகைகளால் நுகரலாம். மான்மியத்தில் சொல் நயத்தைத் துருவிப் பார்ப்பது சர்க்கரைக்கு எந்தப் பக்கம் இனிப்பு என்பதுபோன்றது. ஆதி முதல் அந்தம் வரை சரளமான தமிழ் நடை, நகை,அழுகை

உவகை முதலிய பல்வகைச் சுவைகளும் தழுவியநாஞ்சில் நாட்டுப் பேச்சு வழக்கு ஆகியவைநூலுக்கு உயிரோட்டமாய் விளங்குகின்றன.

''அரிசியை நிதமும் அளந்து வைப்பாள்?
நல்ல மிளகை நறுக்கி வைப்பாள்
கொல்ல மிளகை குறுக்கி வைப்பாள்''

என்ற மாமி மொழியும்

''வாழ்க்கைப் பட்ட மனைவிய ருக்குள்
இழுப்பும் வலிப்பும் எதிர்ப்பும் வந்தன .
அடியும் பிடியும் கடியு மாயின''

எளிமையும் எதுகையும் மோனையும் இவ்வரிகளிளெல்லாம் மின்னிடுகின்றது.

''கண்டாங்கிகளைக் கண்டதே இல்லை'' என்னும் வரியில் கண்டாங்கி என்பது நாஞ்சில் நாட்டு வழக்கு. ஆலடி மாடன் கொடை, மிஷியன் தெரசர், புளியடிச் சூடுவட்டம், சல்லடம், கொடியிறைச்சி, படிப்புரை, கொத்து, அப்பமுத்து. கோட்டுக் குடவை, குட வண்டி என்பன அத்தகையவை.

''ஏலே ஏழு வருஷமா இங்கிலீஷுப் படிச்சியே
ஏ பி சி டி எழுதத் தெரியுமா?''

என்று காரணவர் கேட்கும் கேள்வியும்,

''ஒவ்வொரு நாளைக் கொவ்வொரு மனைவி
புருஷன் எச்சிலைப் புசித்திட வேண்டும்''

என்று மேல வீட்டு வெள்ளையம்பிள்ளை வழங்கிய தீர்ப்பும்

''ஏக காலத்தி வர்களை யெல்லாம்
அங்கை பிடித்து நீராடுதேற்குநான்
பன்னிரு கரத்த பரமன் அல்லவே''

என்று நெடிது நின்று கண்டோருக்கு விடை கூறும் பஞ்சகல்யாணிப்பிள்ளை மணந்த முறையாய் மனைவியரைத் தனித் தனியாகத் தடங்கை பற்றிக் கடல் நீராடிய காட்சியும் நம்மைக் குலுங்கக் குலுக்க நகைக்க வைக்கும் வரிகளாகும்.

வீட்டில் பெற்றோர் தம் மக்களை சாம, பேத, தான தண்டத்தால் திருத்த முற்படுவர். ஆனால் கவிஞனோ தான் வாழும் சமுதாயத்தினைத் திருத்தப் பலவகை யுக்திகளைக் கையாளுவான். அவற்றுள் ஒன்று, அச்சமுதாயத்தினை, அச்சமுநாயத்தின் அங்கத்தினர்களைப் பழித்துரைப்பதாகும். அப்பழிப்புரை சமுதாயத்தைச் சீர்திருத்தும் நற்கருவி. பழிப்புரை உடனொன்றி வரும் கவிஞனின் நகைச்சுவையினால் மாறிவிடுகிறது. நன்மை பெருகுவதற்குத் தக்க வாய்ப்பு ஏற்படுகிறது. நகைப்பு இகழ்ச்சி நன்னோக்கம் ஆகிய மூன்றும் கலந்து வரும் செய்யுள் வகையை நம் புலவர் பெருமகன் கையாண்டதில் வியப்பில்லை. அதையே தொல்காப்பியர் அங்கதம் என்றனர். வசையொடும் நகையொடும் கூடி வரும் என்றுஇலக்கணம் வகுத்து, செம்பொருள் அங்கதம், பழிகரப்பு அங்கதம் என அவர் பிரித்த வகையில் இந்நூல் பழிகரப்பங்ககத்துள் அடங்கும். பஞ்சகல்யாணிப்பிள்ளை ஐவரை மணந்து பட்ட பாட்டைப் படிப்பவன் பல தார மணம் செய்யக் கூசுவான்.

''கோர்ட்டுப் பீஸா, குமஸ்தாப் பீஸா
கூடிக் காப்பி குடிக்கப் பீஸா
வெற்றிலை வாங்கிட வேறொரு பீஸா
வக்கீல் பீஸா; மகமைப் பீஸா
வக்கா லத்து வகைக்கொரு பீஸா
நிற்கப் பீஸா இருக்கப் பீஸா
நீட்டின கையை மடக்கப் பீஸா''

என்ற வரிகளைப் படிக்கும் குமஸ்தா, வக்கீல் ஆகியோர் தங்களைப்பற்றி என்ன நினைப்பர்? மக்களும் கோர்ட்டுப் படிக்கு ஏறக்கூடாது என்பதை நயமாக எடுத்துரைக்க இதைவிட வேறென்ன செய்ய முடியும்?

''உடைந்த ஓட்டை ஒருகையி லேந்தி
வழக்கி ழந்தவன் வாடி நிற்பதையும்
தாட் பொதி யொன்று தலையிற் சுமந்து
வென்றவ் னுடலம் மெலிந்து நிற்பதையும்''

என்று பாடும் வரிகள் உண்மையிலேயே அங்கதச்சுவையில் ஊறித்திளைப்பநாகும்.

ஒரு நூலில் ஒழுக்கநெறியைச் சுட்டிக் காட்டித் திருத்தும் நிலையை வட மொழியில் பிரகசனம் என்பர். லத்தீன் ஆசிரியனை ஹொரேஸ் கையாண்ட நெறி மென்மையானது. ஜுவெனல் கையாண்ட நெறியோ வன்மையானது. கவிமணி கையாண்ட நெறி ஜுவெலியன் நெறி. நகையும் வசையும் புரையோடிக் கிடக்கும் தம் காவியத்தில்

''காரணத் தீனம் கடிய தீனம்
கண்டு ரத்தில் மருந்து கருத்தாய்க்
கொடுத்தா லன்றிக் குணமா காது''

என்று பாடும் வரிகள் சமுதாயத்தையே ஒரு உலுக்கு உலுக்கிவிடுகிறது.

துன்பத்தில் நைந்து நைந்து வெந்த நவீனக் கண்ணகியின் இறுதி ஓலம் வெறுப்பில் வெடித்த வேதனை ஓலமாகும்.

''நீதியும் உளதோ? நீதியும் உளதோ?
மாதர் கண்ணீர் மாறு நிலத்தில்
நீதியும் உளதோ? நீதியும் உளதோ?''

என்ற அவலச் சுவையைப் பிரதிபலிக்கும் வரிகள் ஆசிரியரே கும்பியெரியப் பாடிய பாட்டாகும்.

# வள்ளுவர் வழங்கும் வாழ்த்து

திருமதி. மு. மரகதம்

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. (400)

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம் போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். (997)

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். (282)

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் தலை. (294)

உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லா தறிவு. (425)

பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல். (979)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். (50)

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர். (240)

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல். (415)

குடம்பை தனித்தொழியப் புள்புறந் தற்றே
உடம்போ(டு) உயிரிடை நட்பு. (338)

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று. (259)

ஒரு கவிதையைப் படித்துக்கொண்டே போகும் போது அதிலே உள்ள உயர்ந்த நயங்களையும் கண்டு ரசிப்பதற்கு நமது மனம் சதா முயன்று கொண்டேயிருக்க வேண்டும். மெய்யான உயர்ந்த நயங்களை அனுபவிக்க வேண்டும். உள்ளத் துடிப்பு நம் மனதில் இடையறாது கிளர்ந்து கொண்டேயிருக்க வேண்டும். இவைகளில் இருந்து நாம் பெறக் கூடிய ஆத்மபலம், மனஇன்பம் ஆகியவற்றைப் பொறுத்தே கவிதையையும் இலக்கியத்தையும் மதிப்பிட முடியும். இதைத்தான் கவிமணி ''இன்ப ஊற்றெடுப்பது கவிதை'' என்று இலக்கணம் சொல்கிறார். மருமக்கள் வழி மான்மியத்தைப் படிக்கத் தொடங்குபவன் நூலை முடிக்காமல் எழமாட்டான். அது தான் இன்பம். ''கல்லும் உருகிக் கண்ணீர் விடும் இப் புல்லும் கேட்கிற் புறப்படும் போர்க்கு'' என்ற சுந்தரனார் வாக்குக் கேற்ப இதைப் படிப்பவன் எடை இரண்டு கிலோ கூடி சமூகச் சீர்திருத்தம் செய்யப் போர்ப்பறை கொட்டிவிடுவான். இதுதான் ஆத்ம பலம், உண்மையான இலக்கியத்தினை ரசிக்கும் அளவு கோல்.

கற்பனை, வடிவம் ஆகிய இரண்டும் கவிதைக்குக் கண் போன்றவை. கவிஞன் தன்னை மறந்து கற்பனையில் சஞ்சரிக்கும் பொழுது ஒரு தனிப்பட்ட நிலையை அடைகிறான். மகா கவி காட்டே, ரூஸ் என்ற ஓவிய நிபுணர் தீட்டிய செம்மறியாட்டைக் கண்டு ரசித்து அவரே ஓர் ஆடாகி விடுவாரோ என்று பயந்ததும் உண்டு. ''கவலையின்றிப் பறந்து திரியும் சிட்டுக்குருவி எனது பலகணியின் வழியே வரின் யான் என்னை மறந்து சிட்டாகவே மாறிவிடுகிறேன். மேலும் சிறு பரற் கற்களையும் கொத்தத் தொடங்கி விடுகிறேன்'' என்பது கீட்ஸ் என்னும் கவிஞன் வாக்கு. சமுதாயத்திலே காரணவன் தனது மக்களுக்கும், தனது சகோதரியின் மக்களுக்கும் இடையே சிக்கித் தவிப்பதைக் கண்ட கவிமணிக்குத் தானே ஒரு காரணவனாகக் கற்பனை செய்ய வெகு நேரம் ஆகவில்லை.

அது போல் பெண்கள் படும் அல்லலைக் கண்டு அப் பெண்ணாகத் தன்னைக் கற்பனை செய்ய நொடிப்பொழுதே தேவை. இத்தகைய மனமே, பஞ்சகல்யாணிப்பிள்ளையின் பேச்சாகவும் நவீனக் கண்ணகியின் ஓலமாகவும் மான்மியத்தில் பரிணமிக்கும் கற்பனை. இக்கற்பனை மக்களின் மனத்தில் நன்கு பதிய கவிமணி கையாண்ட தந்திரம், இந்நூல் பழைய ஏட்டுச் சுவடி என்றும் அதில் சில பகுதிகள் பொடிந்து போயின என்றும் கூறி பத்திரிகையில் பதிப்பித்ததுதான்.

''கள்ளின் வெறிகொளுமோர் பாட்டிலேயடா-
ஊற்றாய்க்
கண்ணீர் சொரிந்திடுமோர் பாட்டிலேயடா''

என்று பாரதியின் பாடல்களைக் குறித்துப் பாடிய கவிமணியின் வாக்கு அவரது பாடல்களுக்கும் பொருந்தும்.

கருத்தும் கற்பனையும் வளமிடுவது போலவே யாப்பு நயம் கவிமணியின் பிறவிச் சொத்து. எதுகை மோனை இவரிடம் பிச்சை கேட்கும்.

இருவழி கட்கும் இடைவழி யாய் வரும்
வழியிது போலிவ் வையகத் தெங்கும்
உண்டோ அம்மா உண்டோ அம்மா''

என்று ஓலமிடும் நடை மிக எளிது; ஆனால் காரம் பெரிது.

---

# பத்ரகாளி

கிருஷ்ணவேணி பத்மனபன்

இந்தாய்ய ...... அப்பாலே கொஞ்சம் தள்ளி நில்லு'' பஸ் ஓர் குலுக்குக் குலுக்கி மண்டைகளை மோத விட்டு ஓடிக்கொண்டிருந்தது. இதுதான் சாக்கென்று மூட்டை மறிவது போல் மேலே விழுந்து அழுத்திய வாலிபனைக் குடைப்பிடியால் குத்தி நிமிர்த்தியவாறே பகவதி சீறினாள்.

''பஸ்ஸானால் கொஞ்சம் அப்படி இப்படி இருக்கும் .....தொட்டால் உருகுகிற உடம்பானால் டாக்ஸியில் போயிருக்கவேண்டியது''. விலாப்புறமாய்க் குத்துப்பட்டு நெளிந்தவாலிபன்முறைத்தபடியே, ஆண் சிங்கங்களின் ஆமோதிப்பிற்காக பக்கவாட்டில் நோட்டம் விட்டான்.

''என்ன சொன்னேய்யா.........
ஏறினதிலிருந்து உன்னை நோட்டம் பண்ணிட்டுத்தான் வாரேன். முதுகிலே அரிசி மூட்டையாட்டம் அசிங்கமாத் தொங்கிட்டு வந்ததுமில்லாமெ ...? இப்ப....முன்னாலே எப்படி இடம் முளைத்தது?''.... ஆத்திரத்தால் அவள் முகம் செக்கச் செவேல் ஆகியது.

''ஐயா...ஊருக்குப் புதிசா அவங்ககிட்டப்போய்.......'' அப்புறம் தெளிவாகக் கேட்கவில்லை. ''பத்ரகாளியாயிற்றே ......... '' என்று சொல்லியிருப்பான்... வேறென்ன?பகவதி நிம்மதியுடன் நிமிர்ந்து நின்றாள்.

''ஆளிறங்கணும்....செவி கேட்டுடே....'' யாரோ கத்துவது கேட்டது. பஸ் ஸ்டாப்பிலிருந்து வெகு தூரம் தள்ளிப் போய் நின்றது. யாரெல்லாமோ முண்டியடித்துக் கொண்டுஏறியதுபாதி இறங்கியது பாதியாய் பஸ் புறப்பட்டது. புழுதி படிந்த வெள்ளைப் பான்டும் டீ ஷர்ட்டுமாய் புருவம்கூட நரைத்த ''குமரன்'' பெண்கள் தொங்கிக் கிடந்த மேல் கம்பியில் பாரபட்சமில்லாமல் ஊடுருவிய படி, ஆற அமர நின்று சீண்டி விளையாடப் பதம் தேடி வந்துக் கொண்டிருந்தான். பகவதியைப் பார்த்ததும் 'வம்புக்கு நானில்லை' என்பதுபோல் முன்பக்கம் தள்ளிப் போய் 'அய்யோ பாவம்' போல் நின்று கொண்டிருந்தான்.



சிரிப்பு முட்டியது. நல்ல காலம் அவளுக்கு இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டது.

இரண்டு வயது மகனுடன் வாழ்க்கைப் படகைத் தன்னந் தனியே செலுத்தத் துவங்கிய அன்றிலிருந்து சாட்சாத் பத்ர காளி வேடம் போட நேர்ந்த இடங்கள் பல......

இந்த பட்டப்பெயரைத் தனக்கு வழங்கிய சமூகத்திற்கு நன்றிக் கடன் செலுத்த அவள் காத்திருக்கிறாள். ஏனென்றால் சமயசஞ்சீவி போல் அது அவளுக்கு உதவிய இடங்கள் ஏராளம்.

''எதற்கெடுத்தாலும் குதர்க்கமாய்ப் பேசாதடீ....பெண் பிள்ளையாட்டம் அடக்கமாய்ச் சொன்னதைக் கேள்...'' என்ற அம்மா பல்லவி அவளிடம் பலிக்காமல் போனதற்குக் காரணம் அவள் முற்றிலும் மாறுபட்டவள் என்பதே.

குழந்தைப் பருவத்தில் தனக்கு விளங்காத காரணங்களுக்காக அப்பா படுக்கையைச் சுருட்டிக் கொண்டு திண்ணைக்குப் போவதும், இரவின் நடுச்சாம வேளையில் அப்பா காலைப் பிடித்துக் கொண்டு அம்மா விசும்புவதும் அவளுக்கு அருவருப்பையே தந்ததுண்டு.

''நீ பெண்பிள்ளையடீ.........'' என்று அம்மா ஆரம்பிக்கும்போதே உள்ளுக்குள் முண்டெழும் அனல், போகப் போக அம்மாவின் அடிமைத் தன்மை புரிய வந்ததும் நீறுபூத்த நெருப்பாய் அடங்கியது என்னமோ உண்மை.

''என்னைப் போல்கால் காசுக்கு வக்கில்லாமல் நாயாட்டம் அவஸ்தைப்பட விடக்கூடாதென்றுதான் படிக்க வைத்தேன். அந்தத் திமிரில் வாழ்க்கையையே பாழடித்து விட்டு வந்து நிற்கியேடீ...'' வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அம்மா அரற்றியது நேற்றுப் போல் இருக்கிறது.

''அம்மா...அப்பா... என் பூஜை அறையில் வந்து பாருங்கள். முதலாவதாக உங்க மாப்பிள்ளையின் படம் தான் வைத்திருக்கிறேன்.

எதற்கென்று ....

பூச்சு அப்பட்டம் ஆகும் வரையில் அவர் தந்த இன்பத்தைப் பரிபூரணமாக அனுபவித்து...பெண்மையின் மிகப்பெரிய தாய்மை என்ற பதவியை எனக்கு அளித்தவராயிற்றே... அந்த ஆனந்தம் மட்டும் இந்த ஜன்மத்துக்குப் போதும்.........

இரண்டாவதாகத்தான் உங்கள் படம் மாட்டியிருக்கிறேன்,

எதற்காகத் தெரியுமா......

உண்மையை முகமூடி போல் மறைத்துப் பொய்க் குதிரை ஆட்டம் ஆடித்தான் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்ற கட்டாயத்தை உண்டுபண்ணுமல் தன் காலில் நிற்க எனக்குக் கல்வி அளித்தவர்களல்லவா... அதற்காகத்தான்'' அவள் மனம் ஓலமிட்டுக்கொண்டேயிருந்தது.

வெற்று வண்டியில் கட்டியமாடுகளைத் தூங்கும் வண்டிக்காரனை வீடு கொண்டு சேர்ப்பது போல், எண்ணச் சுழலில் சிக்கித் திணறி பிரக்ஞை இழந்த நிலையிலும், கால்கள் அவளை விட்டுக்குள் கொண்டு சேர்த்தன.

''அவர் ஆண்பிள்ளையடீ.... சகதியில் மிதிக்கவும் செய்வார், தண்ணீரில் அலம்பவும் செய்வார். உனக்கு ஏதேனும் குறை வச்சிருக்காரா....:... பெண்கள் கண்டும் காணுமல் இருக்கப் பழகிக்கனும்......'' வராந்தாவைத் தாண்டும் போது பக்கத்துப் போர்ஷன் மாமியின் நாரீதர்மோபதேசம் கேட்டு பகவதியின் கால்கள் நங்கூரம் இட்டது போல் அசையாமல் நின்றன.

''நான் பாரமாயிடுவேன்னு பயமாயிருக்கா உனக்கு...... நாலு வீட்டில் பாத்திரம் தேய்த்தாவது பிழைக்கிறேன்... அந்த மனுஷன் குடித்துவிட்டு கூட்டிவார கூத்திச்சிகளுக்குப் பொங்கிக் தட்டிப் பிழைக்கிற பிழைப்பு வேண்டாம். படிக்க வைத்திருந்தீர்களானல் பகவதியக்காளை மாதிரி யார் கையையும் எதிர் பார்க்காமல் காலம் கழித்திருப்பேனே...'' மீனுவின் குரல் உடைந்து சிதறி அம்பாய்ப் பாய்ந்து பகவதியின் இதயத்தில் குத்தி ரத்தம் கசிய வைத்தது...

உலகமெங்கும் புகழ்ந்துபோற்றப் படும் பாரதப் பெண்மையே உன் சீழிரவை உணர்ந்து ரத்தக் கண்ணீர் வடி... வடித்துக்கொண்டே இரு... மனுநீதியும், வேத சாஸ்திரப்புராணங்களுமான போர்வைகளால் கைதேர்ந்த ஆண் வர்க்கம் உன் கண்ணீரை உலகத்திற்குத் தெரியாமல் மறைத்துக் கொள்ளும்!

நிற்கத் திராணியற்றுப் போய்க் கட்டிலில் தொப்பென்று விழுந்தாள்.......

வருங்காலக் கணவனைக் குறித்து ''உங்கள் எதிர் பார்ப்பு'' என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டிக்கு முதற்பரிசு வாங்கியது பி.ஏ. படிக்கையில்தான்.......

''மாப்பிள்ளை ரொம்ப ஸிம்பிள் அவர் மேஜை மீது பகவத் கீதையும், காந்தியடிகளின் 'மை எக்ஸ்பீரியன்ஸ் வித் ட்ருத்'' தும் தான் இருக்கிறது. நம் பகவதியின் கொள்கைகளுக்கு ஏற்றவர்தான்.......'' அப்பாவின் குரலில் ஆசுவாசப் பெருமிதம் வெளிப்படையாகத் தெரிந்தது.

வீடு திரும்பும் கணவனை எதிர்பார்த்து, தலை நிறையப் பூவும் மனம் நிறைய மணமுமாய் வாயிலில் காத்து நிற்கையில்.........

''நீ எதற்காக இந்த ரோட்டில் நின்று பராக்குப் பார்க்கிறாய்'' என்றபடியே அவ நம்பிக்கைப் பார்வையை நாலாபுறமும் செலுத்தி, எதிர் வீடுகளிலோ, ரோட்டிலோ இருந்து ஆண் பார்வை மனைவியின் கற்பைச் சூறையாடிவிட்டதோ என்று பதறிப் போய் நோட்டமிட்டபடியே உள்ளுக்கு ஓடும் கணவனைக் கண்டு அதிர்ந்துபோன நாட்கள்....

தன்பேரில் ஏற்பட்ட அபாரமான அன்புதான் அவரை இப்படியெல்லாம் சிந்திக்க வைக்கிறது என்று அன்றெல்லாம் அதை ஓர் பெருமையாய் எடுத்துக் கொண்டதும்... கூடுமானவரையில் கணவனின் நிழலில்லாமல் புற உலகை அணுக வேண்டாம் என்று எண்ணிச் செயல்பட்டதும்.

அவரே உலகம் என்று இருமாந்திருந்ததும்......

பகல் கனவு போல் பொய்யாய் முடிந்தது....

பகவதியின் அடைந்த விழியிலிருந்து கண்ணீர் அணை முறிந்து ஒழுகியது......

வீட்டு வேலைக்காரி 'உண்டாகியிருந்தாள்....' 'கட்டு, கட்டாயிருக்க புட்டு நாய் கொண்டுபோனகதை' போல் ஆயிற்று. ஆதரவற்ற பெண்ணைத் தன்னிடம் ஒப்படைத்த அவள் அண்ணனிடம் எப்படி இதை வெளிப்படுத்துவது?

சந்தேகப் பேய் பிடித்து துர்வாசாவெனத் துள்ளிக் குதிக்கும் தன் கணவனிடம் எப்படிச் சொல்லுவது ... ? சொல்லாமலிருப்பதெப்படி......?

கூட்டிலடைத்த புனுகுப்பூனை போல் நிலை கொள்ளாமல் தவித்த நாட்கள்.........

அந்தப் பெண்ணின் கட்டுமஸ்தான கறுத்த மேனிக்கு மெருகேறின போது.........

எடுப்பான உடல் வனப்புக் கண்ணைக் குத்தியபோது......

பெரிய உதடுகளும் உருண்டை மூக்கும் மேலும்-மெருகு பெற்று வந்தபோது பகவதியை கிலி பிடித்தது.

எவ்வளவு கேட்டும் ஆளைச் சொல்ல மறுக்கும் பெண்ணைக் கண்டதுண்டமாக வெட்டிப்போடு மளவுக்கு கோபம் மூண்டெழுந் தது....

ஆனல்......

கணவனே வந்து பெண்ணை லேடி டாக்டரிடம் அழைத்துப் போகத் தனக்குக் கட்டளையிட்ட போது....

மூச்சிரைத்துப்...பேச வாயெழ வில்லை......

'உண்டானதை' இல்லாமைப் பண்ணிவிட்டு, ஏதாவது கை மடக்குக் கொடுத்து ஒதுக்கி விடத் தனது ஒத்துழைப்பு வேண்டு மாம்...

சமூகத்தில் அந்தஸ்தை நிலே நாட்டணுமாம்.........

ஆண்களைப் பொறுத்தவரையில் இதெல்லாம் இயற்கையாம்....... அழகாய், நேர்த்தியாய், நாகரிக மாய், சற்றுக்கர்வத்துடன் நிமிர்ந்து நின்ற தன்னுடைய எண்சாண் உடம்பும் கூசிக்குறுகியது ..........

வெறும் தரையில் புழுவாய் நெளிந்தது...... இன்னெருத்தி யின் அழகோ, குணமோ, திற மையோ அவரைக் கவர்ந்திருந் தால், தன் பெண்மையைச் சபித் துக் கொண்டாயினும் அவர் உள் ளத்தைப் புரிந்து கொண்டிருக்க லாம்.

ஒரு வேளை தன்னிடம் ஏதோ குறை இருந்ததனுல்தான் கண வன் புறக்கணித்து விட்டார்என்று தேறியிருக்கலாம்......

தனி மனிதர் என்ற முறையில் ஒரு பெண்ணை விரும்புவதும் வெறுப்பதும் அவர் சொந்த விஷ யம் என்று ஒதுங்கியிருக்கலாம்.

இல்லையேல் அதை ஒர் சவா லாக ஏற்றுக் கொண்டு தன்னிடம் எந்தக்குறை என்று ஆராய்ந்து அதை அவர் இஷ்டத்திற் கேற்ப பூர்த்தி செய்து முன்பிருந்ததை விட இரண்டு பங்கு ஆர்வத்து டன் தன்னை நேசிக்கும்படி செய் திருக்கலாம்........

ஆனல் இந்த மிருக வெறிக்கு ஈடு கொடுக்க முடியாது.....அந்த வேலைக்காரியை அணுகிய அதே வெறியுடன்தான் தன்னையும்அணு கியிருப்பார்.......

தன் சபலமும், ஆடு இலைகடிப் பதுபோல் பெண்களை மொய்க்கும் உணர்வுகளும் தான் சந்தேகம் என்ற உருவில் அவரை பேயாட் டம் ஆடவைக்கிறது......

உண்மை பயங்கரமாகப் பல்லி ளித்தது.

இத்தனைக் காலம்சேர்த்துவைத் திருந்த தன்னம்பிக்கை, விசுவா சம், உயிரைக் கொடுக்கத்துடிக் கும் அன்பு எல்லாம் தூள்...தூள்!

உடைந்த முத்து, பிரிந்துபோன பால், என்றெல்லாம் உவமை சொல்லலாம் மேலும் அவருடன் சேர்ந்து வாழ்வது சாத்தியமா...? அவர் உடற்பசிக்குத் தீனியாக மட்டும் இசைந்து கொண்டு, அவர் தரும் முகமூடியை அணிந் துக் கொண்டு அவர் மாட்டிவிடும் மூக்கணாங்கயிற்றின் இழுப்புக் கெல் லாம் சமாளிந்துக் கொண்டு...... வாலில்லாமல்... கொம்பில்லாமல் ...இரண்டு கால்களில்... முடியாது ...முடியாது .. கட்டுக்கடங்காமல் நியாயம் கோரும் உள்ளத்தை குடத்திலடைத்துக் கடலில் விசி விட முடியுமா?

வேலைக்காரிப் பெண்ணின்உடல் விட்டத்தில் தொங்குவதுபோல்...

ஆற்றில் மிதப்பது போல்......

பச்சிளம் பிள்ளைத் தாய்ச்சியாய் ...தெருத் தெருவாய் அலைந்து பிச்சை எடுப்பது போல்......

பிரமை பகவதியை வாட்டி வதைத்தது.ஓட ஓட விரட்டியது..

எக்காரணம் கொண்டும்அவரை விட்டுப் போகாதே என்று அந்தப் பெண்ணிற்கும்..., கடவுளை முன் நிறுத்தி ஏழைப் பெண்ணைத் தெரு விலிறக்கி நிராதரவாய் விடக்கூ டாதென்று அவருக்கும் எழுதி வைத்து விட்டு..., யாருக்கும்தெரி யாமல்... கண்ணனையும் எடுத்துக் கொண்டு கணவன் வீட்டிலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் புறப் பட்டாள்......

குழந்தையுடன் பிறந்த வீட்டுப் படியேறிய தன்னை வீட்டிற்குள் அனுமதிக்கவே மறுத்து விட்டாள் அம்மா......

சீலாவதியின் பரம்பரையில் வந் தவளாயிற்றே.

ஓடுகாலி பட்டம் பெற்ற ஒன்று விட்ட அத்தையின் ஆதரவில்.

கல்வி தந்த ஜீவனும்சத்தில்... உறுதி அளித்த உருக்குச் சட்டை யை அணிந்து கொண்டு........ பஞ்சேந்திரியங்களின் கடிவாளத் தை இழுத்துப் பிடித்துக் கொண்டு......

இவ்வளவு தூரம் வந்தாயிற்று. கண்ணன் இந்த வருடம் ராங்கு டன் பி. யு. சி. பாஸ்பண்ணிவிடு வான். அப்புறம் டாக்டருக்கா, எஞ்சினியரிங்கிற்கா... சிந்தனை லயிப்பில் கண்களில் மீண்டும் நீர் நிரம்பியது. ஆனந்தக்கண்ணீரா, துயரக்கண்ணீரா...? முற்றத்தில் ஏதோ அரவம் கேட்கவும் பகவதி எட்டிப்பார்த்தாள்...

இரண்டு வீடு தள்ளியிருக்கும் பாமா இளவட்டங்களின் படை சூழ மூச்சிறைக்க வந்து கொண் டிருந்தாள். 'ஏய்பகவதி ... அல்லி ராணி பிள்ளையை பெத்துட்

டேன்னு ஊருக்கெல்லாம் எமனுகவா வளர்க்கணும். இந்த அநியாயத்தைப்பாரு'' கூட்டத்திலிருந்து ஓர் பி. யு. சி. யை இழுத்து நிறுத்தினுள்.

அவன் கன்னம் வீங்கியிருந்தது.

''என்ன நடந்தது பாமா அமைதியாகச் சொல்லேன்... இங்கே வா ராஜா...'' பகவதி அவனைத் தன் பக்கம் அழைத்தாள்....

''என்ன நடந்ததா? அவன் கன்னத்தைப் பாரு. உன் மகன் செய்த காரியம்தான். என்னதான் சண்டை போட்டாலும் இப்படியா அறைவது?. நடந்ததை விளக்கமாக சொல்லேன் ராஜா''.

அவள் குரல் பரிதாபமாகஒலித்தது.—

''நான் சொல்றேனம்மா...'' கண்ணனின் குரல் அருகிலிருந்து ஒலித்தது. ''இன்று இவனும் இவன் சகாக்களும் செய்த வேலை என்ன தெரியுமா? லைப்ரரி காம்பவுண்டுக்குள் ஒரு பெண் வந்து கொண்டிருந்தாள். அவள்முந்தானையை இழுத்துக் கீழே போடறவனுக்கு காப்பிவாங்கிக்கொடுப்பதாக 'பெட்' வைத்தார்கள்''. கண்ணனின் கழுத்து நரம்பெல்லாம் புடைத்தெழுந்தன. ''நான் தடுத்தும் கேளாமல் இந்த ராஜா சைக்கிளில் போய் அவள் முந்தானையை இழுத்து போட்டு விட்டு ஓடிவிட்டான். கும்மாளம் போட்டுக் கொண்டுவந்த இவன் கோஷ்டி கொல்லென்று சிரிக்க அந்தப் பெண் செயலிழந்து நின்ருள். அதையெல்லாம் பார்த்து விட்டு சும்மாவா இருக்கணும்''.

''அதற்கு நீ யார் அவனைத் தண்டிப்பதற்கு ஆண் குழந்தைகள் அப்படித்தான் சுட்டியாயிருக்கும்... பாமா முடிப்பதற்குள் பகவதியின் இரத்தம் சூடேறியது. அவள் விழிகள் பிதுங்கி ரத்தச் சிவப்பாயின.

''நிறுத்து பாமா...'' பகவதியின் ஆவேசம் பாமாவை வாயடைக்க வைத்தது.......... வெறிபிடித்தவள் போல் அவள் தொடர்ந்தாள்...

''உன்னைப் போல் தாய்மார்கள் தான் ஆண் குழந்தைகளைப்பெத்து துச்சாஸனன்களாக அலையவிடுகிறீர்கள். உன் பெண்ணை அந்தப் பெண்ணின் இடத்தில் நிறுத்திப் பார். அப்போது உன் நியாயம் வேறுவிதமாக இருக்கும். ஆண் என்ருல் எதுவும் செய்யலாம் என்று சொல்லிச் சொல்லி வளர்த்து சமூகத்திற்கே வினைகளாக உருவாக்குகிறீர்கள். தாயை மதிக்கத் தெரியாத, சகோதிரிகளை மதிக்ககத் தெரியாத, பெண்களை எக்ஸ்ரே கண்களால் பார்க்க மட்டும் தெரிந்த அனுகரீகக் கோலங்களாக இந்த உலகத்தில் உலாவ விடுகிறீர்கள்... இன்று விளையாட்டிற்காக ஊரார் பெண்களைச் சீண்டுவார்கள்.... நாளை மனைவிகளைத் தூசிக்கும் கீழாக மதித்து அவர்கள் உடம்பையும் உணர்ச்சிகளையும் மிதிப்பார்கள். உன்னைப் போல தாய்மார்கள்தான் பெண் குலத்துக்கே துரோகிகளான ஆண்களை உருவாக்குகிருர்கள்.... கண்ணனின் இன்றைய செயலால் தான் செய்த தவம் பூர்த்தியாயிட்டது. நீங்களெல்லாமாகச் சேர்ந்து அவனை வேண்டுமானுல் பதிலுக்கு அடித்து நொறுக்குங்கள்........ இப்படி மூலைக்குப் பத்துக் கண்ணன்மார்களை உருவாக்க வேண்டியது நம்மைப்போல் தாய்மார்களாக்கும். அப்போதுதான் உலகமே உருப்படும். பெண்குலம் சிறப்புப் பெறும்...........'' கோஷமிட்டுக் கொண்டு வந்த இளம் வட்டங்களின் கூட்டம் எப்போதோ சிதறிப் போயிருந்தது.......

பாமா விக்கித்து நின்ருள்.

# மயன் கவிதைகள் (3)

''நகுலன்''

எனக்கும் க.நா.சு வுக்கும் சுமார் முப்பது வருஷப் பழக்கம் உண்டு. அவர் சமீபத்தில் இங்கு திருவனந்த புரத்திற்கு வந்திருந்தார். அவருடன் ஒரு சில நாட்கள் கழித்த பிறகு, அவருடைய கவிதைகளுடன் அடிக்கடி சமயத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்றேன். கவிதை களில் அவருடைய உருவம் தெளிவாகவும் இன்னும் ஊர்ஜிதமாகவும் புலப்படுகிறது. இது நான் மயன் கவிதைகளைப்பற்றி எழுதும் மூன்ருவது கட்டுரை. கவிதை களில் ஒரு சிருஷ்டி பூர்வமான மனம் இயங்குவதைக் காண்பதில் ஒரு மகிழ்ச்சி; அதைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதில் ஒரு மகிழ்ச்சி.

பிரம்மராஜன் கவிதைகளைப்பற்றி எழுதுகையில் ஒரு சிருஷ்டிப் பரமான படைப்பு நமது எதிர்பார்ப்புகளை நமது பழக்க வழக்கங்களை மீறியிருப்பதால் அதை நாம் வாங்கிக்கொள்ள ஒரு பயிற்சி தேவைப்படுகிறது என்று எழுதியிருந்தேன். படிமம், ஓசை, இவைகளின் தேய்ந்து போன தடங்களில் இருந்து விடுபட்டுப் புரிந்தும்-புரியாம லிருக்கிற மாதிரி இருப்பது என்று மயன் எழுதியிருக் கிருர் என்று நினைக்கிறேன். புதுக்கவிதைபற்றி, அவரது கவிதை ஒரு ஏமாற்றக்கூடிய எளிமை வாய்ந்தது என்று எழுதியிருந்தேன்.

அதைத் தொடர விரும்புகிறேன். மயன் இந்த மண்ணின், இந்த சம்ஸ்காரத்தின் வாரிசு. அந்த நிலை யில் மனித மனத்தைப்பற்றி அவருக்கு ஒரு நுண்ணிய ஆழ்ந்த ஞானம் உண்டு. அவர் மனித மனதைப்பற்றிய பார்வை நமது தொடர்ந்து வரும் தத்துவ நம்பிக்கை களில் உருவானது என்று தோன்றுகிறது. இந்த அடிப் படையில்நான் மிகச் சிக்கலான சூக்குமமான அனுபவங் களை மிகச் சாதாரணம் என்று தோன்றும்படி மயன் சொல்வதால், அதை நாம் சாதாரணம் என்று ஒதுக்கி விடுகிறோம்.

புதுக் கவிதையில் இருக்கும் ஒரு, நாம் எல்லோரும் காணக்கூடிய தன்மை. ஒரு மயன் கவிதையில் ஒரு அனுபவத்தை ஒரு எல்லை வரைக்கும் எடுத்துச் சென்று விட்டு கவிஞர் திடீர் என்று நிறுத்துகிருர். எஞ்சிய பகுதியை வாசகன் உய்த்துணர்வான் என்ற அடிப்படை யில். அதனுல்தான் ''விஜய தசமி'' என்ற கவிதையில் தேவி மனிதனுடன் சண்டையிட்டுக் கடைசியில் மனி தனை மணந்துவிடுகிருள். பிறகு எப்பொழுதும் சண்டை. இதை உத்தி வகையில் பார்க்கையில் ஒரு சாதாரணத் திடீர்த் திருப்பம் என்று தோன்றலாம். ஆனல் இதன் பின்னர் உள்ள தத்துவம் இக்கவிதைக்கு ஒரு ஆழத் தைக் கொடுக்கிறது. இதைப் போலவே சாதாரண மாகத் தோன்றும் கவிதைகளான ''குருவும் சிஷ்யனும்'' ''தேடிக்காண்பது'' போன்ற கவிதைகளின் முடிவுகள் நம்மைச் சிந்திக்க வைத்து அவைகளுக்கு ஒரு புதிய பரி மாணத்தைக் கொடுத்து விடுகின்றன.

''கவிதை'' என்ற கவிதையில் மயன் ஒரு சோடை போனக் கவிதையை ''அலைகள் எழுப்பாத கவிதை'' என்று கூறுகிருர். கவிதையில் வார்த்தைக்கு—அனுப வத்தின் அடிப்படையில் பிறக்கிறது என்பதிஞல்-ஒன் றுக்கு மேற்பட்ட 'அர்த்தங்கள்' உண்டு. இது கவிதை யில் பாஷையின் அடிப்படைத் தன்மை. இந்த முறை யில் பார்க்கையில் ''அலிகள்'' என்ற கவிதையில் அதில் உள்ள அலைகள்-அம்சம் நமக்கு பைபிளில் இருந்து யேசு தனது சிஷ்யர்களிடம் மனித குலத்தை உஜ்ஜீ விக்க அவர்கள் தங்களை அலிகளாக்கிக் கொள்ளவேண் டும் என்று சொன்னது ஞாபகம் வரும். இங்கும் கவிதை யின் முடிவு வேறொரு எல்லையை நோக்கி நகர்கிறது. இதைப் போலவே 'சுவற்றுக்கோழி', 'கிஞ்சிஞ்ஜங்கா', 'சிட்டுக்குருவி' என்ற கவிதைகளில் இந்த அம்சத்தைக் காணலாம். 'கிஞ்சிஞ்ஜங்கா' என்பதில் ஒரு நேர்த்தி யான கிண்டல் உருவாகிறது; அதே சமயத்தில் நமது தொடர்ந்து வரும் ஒதத்துவச் சாயல் அதற்கு ஒரு ஆழத் தையும் கொடுத்துவிடுகிறது. ஒருவன் 16 வயதில் கிஞ் சிஞ்ஜங்கா மலைத் தொடரைப் பார்க்கிருன். அவன் மன தில் ஒரு சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. 50 வயதில் அதை மீண்டும் பார்க்கையில் அதே நிலைதான். கவி தை இவ்வாறு முடிகிறது. ''என் கண்தான் சற்று மங்கி விட்டது'' இங்கு விஷயம் அவன் கண் எப்போதுமே மங்கித்தான் இருக்கிறது என்பது. ஆனல் மனிதன் தன்னைப் பற்றிய குறைகளைத் தன்னல் காண முடியாது என்பதுதான் இதற்கு ஆழத்தைக் கொடுக்கிறது. பிறர் குறைகளை மிகத் தெளிவாகப் பார்க்கும் நமக்கு நமது குறைகள் கண்ணில் படாமலேயே போய்விடுகின் றன. இதே விஷயத்தை ''வயசு'' என்ற கவிதையில் கவிஞர் நேரிடையாகச்சொல்கிருர். 'சுவற்றுக் கோழி' என்ற கவிதையில் இந்த அலை-அம்சம் அடை மொழியில் இருக்கிறது என்று மேலே போகிறேன். 'சிட்டுக்குருவி' யில் கவிஞனும் சாதனை அளவில் ஒரு சிட்டுக்குருவி மாத் திரம் என்று.

ஒவ்வொரு கலைஞனும் அவன் அறிந்தோ அறியாம லேயோ அவன் எந்த நாட்டில், எந்த சமூகத்தில் வாழ் கிருனே அந்த சமூகத்தில்காலம்-காலமாக ஆக்ஷி செய்து வரும் சில தத்துவக் கட்டுப்பாடுகள், நம்பிக்கைகள் இவைகளிலிருந்து விடுபடுவதில்லை. இந்தக் கோட்பாடு கள்-நம்பிக்கைகள் அவன் வாழ்க்கையில் அனுபவ சத்தி யங்களாக உணர்ச்சியில் படுகிற வரை அவன் ஒரு இரண்டு-பட்ட நிலைக்கு உள்ளாகிருன். இந்த அடிப் படையில் ''சாவு'' என்ற கவிதை-த்-தொடரில் 'சாவு

என்றால் ஒரு அதிசய உணர்ச்சியும் தோன்றாமல் வாழ்ந்துவிட்டுச்செல்கிறோம்'-இது ஏன்?'' என்று எழுப்பப்படும் கேள்வி 'கதா உபநிஷத்தில்' வரும் நசிகேதன் கேள்வியைத்தான் ஞாபகப்படுத்துகிறது. இதைப் போலவே 'தர்சனம்' என்ற கவிதையில் நம் பக்தி இலக்கியங்களின் கடவுளின்-சிந்தனையும் இப்பொழுது மேல் நாட்டில் ஆக்ஷி செலுத்தி வரும் ஒரு சூன்யவாதத் தத்துவமும் வருகின்றன. இதைப்போலவே ''கவிதை, ''சாவு'', ''போதுமோ'' என்ற கவிதைகள் நமது தொடர்ந்து ஒரு தத்துவத்தை வற்புறுத்துகிறது—வாழ்க்கையின் வரும் அடிப்படை இன்றுவரை நமக்கு ஒரு அவிழ்க்க முடியாத புதிராகவே இருந்துவருகிறது என்பதை.

மயன் கவிதைகளில் படிமங்கள் அருகி வருகின்றன என்பது கூட ஒரு மேலெழுந்த பிரமை. ஒரு சிருஷ்டிபரமான மனம் மனித உள்ளத்தை இவ்வாறு பார்க்கிறது.

எத்தனையோ மங்கலான
அருவங்கள் பலவும் எழுப்பி
ஏற்றி வைத்த ஒளி காணாத விளக்கு

(நினைவுச் சுவடு)

வலிவற்ற கவிதைகளைக் கீழ்க்கண்ட படிமம் ஒரு அபூர்வ அழகுடன் தெரிவிக்கிறது.

உபயோகமற்ற
பாத்திரங்களை
ஏற்றி வைக்கும்
மச்சிருட்டாக
கவிதையை நினைக்காதே

மயன் கவிதையில் வார்த்தை வார்த்தை-தாண்டிய நிலையில் இருக்கிறது. நம்மைச் சிந்திக்க வைக்கிறது-நுண்மையான கிண்டல் உடையது.

மயன் கவிதையில் சூத்திரமாக இயங்குவது ஒரு 'கோடி' காட்டிவிட்டு வாசகர்களுக்கு மற்றவற்றை விடுவது போல், என் கட்டுரையை இங்கு முடித்துக் கொள்கிறேன்.



# நிழல்கள்

ஞானம்பாடி

வானில் பறக்கும் சூரியப்பறவை
மண்ணில் இட்ட எச்சங்கள்
நிழல்கள்.
இருள் மரம் பூமியில் பதிக்கும்
இளம் விழுதுகள்.
ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு வேஷமாய்
நடந்து கொள்ளும் மனிதரைப் போல
நிற்கும் இடத்திற்கேற்ப மாறும்
எத்துப் பேர்வழிகள்
காலையில்
நமக்குப் பின்னால் கைகட்டி வாய் புதைத்து நடந்த
அதே நிழல்
மாலையில் நம்மையும் மீறி முன்னால் செல்லும்.
அதட்டி வைத்தாலும் அடங்கிவராது.

நிழல்கள் பொல்லாதவை.
காலன் வந்து
நம் கண்களை மூடி
மண்ணில் தூங்க வைக்கும் முன்னரே
நம் கண் முன்னாலேயே
நம்மை வீழ்த்திக் காட்டி
நாளை அரங்கேறப் போகும்
நாடகத்திற்கு
இன்றே ஒத்திகை பார்க்கும்
நிழல்கள்.

எனக்கொரு ஆசையுண்டு
நான் நிழலற்றுப் போக வேண்டுமென்று.
நிழலற்றுப் போக வேண்டுமாயின்
உடலற்றுப் போக வேண்டுமோ?
தேவையில்லை.
என் சூரியன்
என் தலைமேலேயே உச்சியில் பிரகாசிப்பானானால்
என் நிழல்
என் மேலேயே விழுந்து
நானும், நிழலும் ஒன்றாகிப்போவோம்.
அப்போது
நான் நிஜமா, என் நிழல் நிஜமா
எனும் விசாரம் தீர்ந்து போய்விடும்.

நகரச் சந்தையில்
நாளும் அலைந்ததில்
முக அடையாளங்களை இழந்து
'நான்' எனும் முகவரியையும் இழந்து
ஒரு நிழலாகிப் போனேன்.
இழந்த அடையாளங்களை மீட்பதுதான் எங்ஙனம்?
ஒழுங்கு செய்யப்படாத நிழல்களை
முகத்தில் பூசிக் கொண்டு
படித்துப் படித்துத் தடித்த கண்ணாடியோடு
எவ்வளவுதான் சிந்தித்தாலும்
இறுதியில் கையில் எஞ்சுவதெல்லாம்
நிழல்கள். நிழல்கள். நிழல்கள்.

# யாதும் ஊரே யாவரும் கேளிர்!

மங்களாம் ரவிந்திரன்

ஓணம் பண்டிகைக்கு இன்னும் நான்கு நாட்களே இருந்தன.

அந்த நேரம்—

திருவனந்தபுத்திற்கு வரும் டிரெயின்களில் எல்லாம் கூட்டம் நிரம்பி வழிந்தன. ஓணம் கொண்டாட வெளி மாநிலங்களில் உள்ள மலையாளிகள் எல்லோரும் தங்களுடைய 'நாட்டு'க்கு வந்து கொண்டிருந்தார்கள். ஏர் போர்ட்டில் துபாய், குவைத்திலிருந்து வரும் உறவினர்களுக்காக காத்துக் கொண்டிருந்த கூட்டம் எக்கச்சக்கம். டாக்ஸி ஓட்டுபவர்கள் கொள்ளை கொள்ளையாக சம்பாதித்துக் கொண்டிருந்த நேரம்—

ஏர்போர்ட் வாசலில் நின்று கொண்டிருந்த பிச்சைக்காரர்களுக்கு துபாய் பிரைட்டுகள் இருக்கும் நாட்கள் கொண்டாட்டம்தான். ஐந்து ரூபாய், பத்து ரூபாய், நோட்டுகள் சர்வ சாதாரணமாக பிச்சையாக விழுந்து கொண்டிருந்த நேரம்...

மாதம் ஒரு பண்டிகை கொண்டாடும் தமிழர்களைப் போல் இல்லாமல்வருடத்திற்கு ஒரே பண்டிகையை பல நாட்கள் சிறப்பாக அனுபவித்துக் கொண்டாடுபவர்கள் மலையாளிகள்.

திருவனந்தபுரத்தின் புகழ் பெற்ற கடை வீதியான 'சாலை' நிரம்பி வழிந்தது.

இந்தியாவிலேயே அதிக அளவு அந்நிய செலவாணியை வருமானமாகப்பெற்று வரும் மாநிலத்தின் செழுமையை முழுமையாக உணர்த்தும் நேரம்—

பவுன் விலை ஏறும் செய்தியைக் கேட்டு, எல்லோரும் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்க, நகைக்கடைகளில் உள்ளே போகஇடமில்லாமல் ஜனங்கள் வெளியே நின்று கொண்டிருப்பதைக் கண்டு, 'பாவங்கள்' வாயை பிளந்து பார்த்துக் கொண்டிருந்த நேரம்.

இருபது பர்சென்ட் ரிடெக்ஷனில் ஹேண்ட்லூம் ஹவுஸ்களுக்கு மூச்சு இரைத்துக் கொண்டிருந்த நேரம்—

பெண்கள் லோ நெக் கழுத்தும், மதமதர்த்த மார்பும், இரண்டு மூன்று இடுப்பின் மடிப்புகளும்தெரியஒரே மாதிரியான இண்டிமேட் சென்டின் மணம் எல்லோர் உடம்பிலும் தவழ, ஜோடி, ஜோடியாக ஆணும் பெண்ணும்கை கோர்த்து ஆனந்தமாக சாலையை சுற்றி வயளை வந்து கொண்டிருக்கும் நாட்கள் அவை—

மூக்குக்கு முக்கு அத்தப் பூ.

ஊர் முழுதிவலும் ஒரு செடியிலாவது ஒரு பூ இல்லை

வெளுப்பிலேயே சிறு பையன்கள் பாலிதீன்பை நிறைய செடிகளில் உள்ள பூக்கள் அத்தனையும் பறித்துக் கொண்டு போய் விட்டிருந்தார்கள்.

பள்ளி, கல்லூரிகளுக்கு ஒரு வாரமாக விடுமுறை.

ஓணத்தை ஒட்டி திருவனந்தபுரத்தில் காணும் மாறுதல்கள் மனதிற்குள் அசைபோட்டபடி, அன்றைய இரவுடிபனுக்கு சப்பாத்தி மாவு பிசைந்து கொண்டிருந்த நான் "சேச்சி.... என்ட ட்ரஸ் கண்டா... பழவங்காடியில் இந்நல போயி மேடிச்சது ....... கொள்ளாமோ?'' என்ற குரல் கேட்டு, கையை அலம்பிக் கொண்டு வாசலுக்கு வந்தேன்.

பக்கத்து வீட்டு கீதா நாயர்—என் பெண்ணுடைய கிளாஸ்மேட்—என்னிடம் அவள் ஓணத்திற்காக வாங்கிய துணிகளைக் காட்டினாள்.

"கொள்ளாம்........'' என்றேன்,

"சேச்சி ஒண்ணும் எடுத்தில்லே?........''

"உகூம்...... நாங்கள் தீபாவளிக்குத்தான் புதுசு எடுப்போம்......''

"சேச்சி... அப்போ சாந்தைக்கு கூட ஓணக்கோடி எடுத்தில்லே!...!...''

நான் இல்லையென்று சிரித்துக்கொண்டே தலையாட்டினேன்.

கீதா நாயர் துணிகளை எடுத்துக் கொண்டு போய் விட்டாள்.

ஆறு வயது சாந்தா-என் மகள்-அப்போது ஓடி வந்தாள். "அம்மா .... அம்மா எனக்கும் புது டிரஸ் வாங்கித்தா பக்கத்து வீட்ல கீதாவுக்கு, ரீனுவுக்கு எல்லாம் புது மேக்ஸி வாங்கியிருக்காங்க... எனக்கும் வாங்கித்தா ......'' சிணுங்கல்

"இப்ப எதுக்கு புதுசு? நாம என்ன மலையாளியா? ஓணம் பண்டிகை கொண்டாட? நமக்குத் தீபாவளிக்குத்தான் புதுசு எடுக்கணும்; பலகாரம் செய்யணும்...'' என்றேன்.

மலையாளிகள் பண்டிகை, தமிழர் பண்டிகை என்ற இந்த வேறுபாடெல்லாம் அவளுக்கு எங்கே தெரியப் போகிறது என்று நினைத்துக் கொண்டேன்.

முதலாம் ஸ்டாண்டர்டு படிக்கும் அவளுக்கு இப்போ வேண்டியதெல்லாம் புதுக்கவுன்.

முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு, மூலையில் போய் உட்கார்ந்து விட்டாள்.

''எதுக்குக் குழந்தை டல்லா இருக்கா?'' என்று வெளியில் போய்விட்டு அப்போது உள்ளே வந்த என் கணவர் கேட்டார்.

'' அவளுக்கென்ன? ஓணக்கோடி வேணுமாம்'' என்றேன்.

உடனே அவர் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு, ''சாந்தாக் கண்ணு புது ட்ரெஸ் தானே வேணும் .. இன்னும் இரண்டு மாசம் பொறு ··· அக்டோபர்ல தீபாவளி வருது···அப்ப புதுசு வாங்கித் தரேன். அப்பாவோட ஆபீஸ் திருவனந்தபுரத்திலே இருக்கு .... அதுக்காக அம்மாவும், அப்பாவும் இந்த ஊர்ல இருக்கா அப்பா அம்மா கூட சாந்தாக்குட்டியும் இருக்கா··· நம்மளோட ஊர் மெட்ராஸ். மெட்ராசில எல்லோரும் தீபாவளி அன்னிக்குத்தான் புதுசு போட்டுக்குவா ···நிறைய பலகாரமெல்லாம் செய்து சாப்பிடுவா···அன்னிக்கு நாமளும் புதுசு கட்டிக்கலாம்···'', என்று ஏதேதோ சமாதானம் சொல்லிக் கொண்டு இருந்தார்.

அவர் பேசுவதையே ரசித்து, சிரித்துக் கொண்டிருந்தேன். சாந்தாவோடு பேசிக்கொண்டிருந்த போது 'என்னுடை ஆபீஸ் என்று சொல்லாமல், அப்பாவோட ஆபீஸ் என்று யாரோ ஒரு 'தேர்ட் பர்சனை'க் குறிப்பிட்டுச் சொல்வது போல் அவர் பேசிக் கொண்டிருந்த மலையாளப்பாணி, திருவனந்தபுரத்து பேச்சு வழக்கில் அவர் எவ்வளவு தூரம் பழக்கமாகி விட்டிருக்கிறுர் என்பதை பறைசாற்றிக் கொண்டிருந்தது.

அன்றுதான் ஓணம்.....

திருவனந்தபுரமே கலகலத்தது.

அத்தப்பூ அலங்காரங்களில் பந்தல் போட்டு கலர் பல்புகளின் வண்ணங்கள் கண்களைப் பறித்தன. மைக் செட்டுகள் 'கண்ணு கருமை நிறக்கண்ணு' பாட்டை மலையாளத்தில் ஒலி பரப்பிக் கொண்டிருந்தது. லேட்டஸ்ட் மலையாளப்படத்தில்வரும் ஹிட் சாங் அது. தமிழ்பாடல்களுக்கும் குறைச்சல் இல்லை. மலையாளம், தமிழ், இந்தி பாடல்கள் பல முனைகளிலிருந்து 'ஹைபிட்சில்' வந்து சங்கமமாகிக் கொண்டிருந்தது, கேட்பவர்கள் காதில் விழும் பாட்டு தமிழா, மலையாளமா, இந்தியா என்று தலையைப் பிய்த்துக் கொண்டிருந்தார்கள்.

நான் நிதானமாக எழுந்து வேலைகளைத் தொடங்கினேன்.

தலை முழுகின முடியின் நுனியில் முடிச்சிட்டு அதில் பிச்சிப்பூவை தொங்கவிட்டுக்கொண்டு, 'நேரிய முண்டு' உடுத்தி நெற்றியில் சந்தனக் கீற்று இட்டு ஸ்ரீபத்மனுபரை தரிசிக்க விடியற்காலையிலிருந்தே மக்கள் போய்க் கொண்டிருந்தார்கள்.

அக்கம் பக்கம் வீடுகளிலிருந்து அடுப்பில் தேங்காம் எண்ணை காயும் வாசனை 'கமகம' வென்று வந்துகொண்டிருந்தது.

மதியம் 12.30 மணி.

''சேச்சி ... சாந்தே......'' என்ற குரல் கேட்டு கதவைத்திறந்தேன். கீதா நாயர் ஒரு கிண்ணம் நிறைய பாயசமும், இன்னொரு தட்டில் உப்பேறியும், சிப்ஸும் வைத்துக் கொண்டு நின்றிருந்தாள்.

''ஓணமெல்லாம் கொண்டாடியாச்சா?....'' என்று கேட்டபடி நான் அவைகளையெல்லாம் வாங்கிக் கொண்டேன்.

''ஓஹோ..........''

''நல்ல காலம்···இந்த வருஷம் போனஸ் பிரச்சனையை வச்சு டிரான்ஸ்போர்டும், எலக்ரிசிடி போர்டும் ஸ்டிரைக் செய்யலை......'' என்றேன் நான்.

''ஆமா....சேச்சி......அச்சனுக்கு ஈ வருஷம் நேரத்தே போனஸ் கிடைச்சு......அப்பு நான் வரட்டா சேச்சி......'' அவள் கிளம்பினுள்.

நான் பாயாசத்தை வேறு கிண்ணத்தில் மாற்றிப் பாத்திரத்தை அலம்பி, தட்டையும் கிண்ணத்தையும் அவளிடம் கொடுத்தேன்.

அவள் போய் அரை மணி நேரம் ஆகியிருக்கும். வாசலில் யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. எழுந்து போய்க் கதவைத் திறந்த எனக்குப் பெருத்த ஆச்சர்யம்!

வாசலில் பம்பாயில் வசிக்கும் என் தங்கையும் அவள் கணவரும், அவர்களுடைய குழந்தையும் நின்றுகொண்டிருந்தனர்.

நான் சந்தோஷ மிகுதியில் அவளை அப்படியே கட்டிக் கொண்டேன்.

''என்னடி ஒரு லெட்டர் கூடப் போடாம திடுதிப்புன்னு வந்து நிக்கிறே?!......''

''மெட்ராசுக்கு ஒரு மாச லீவிலே வந்தோம். அப்படியே குருவாயூர் போயிட்டு, உன்னையும் பார்க்கலாமேன்னு இங்கேயும் வந்தோம். திடீர் பயணம் அதனுல் லட்டர் எழுதலை.....

எங்கள் பேச்சு கேட்டு, உள்ளே வாரப் பத்திரிகை ஒன்றைப் படித்துக்கொண்டிருந்த என் கணவர் வெளியே வந்து அவர்களை வரவேற்றார்.

நான் அவசர அவசரமாக அவர்களுக்காக அரிசியை களைந்து குக்கரில் வைத்து, காஸ் அடுப்பைப் பற்ற வைத்து, அதன் மேல் வைத்தேன்.

சித்தியைக் கண்டால் ஆவலோடு ஓடி வந்து கழுத்தைக் கட்டிக் கொள்ளும் சாந்தா முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு நாற்காலியில் பேசாமல் உட்கார்ந்திருப்பதைக் காண எனக்கே பாவமாக இருந்தது.

பையிலிருந்து எடுத்து ஒரு பெரிய பிஸ்கட் பாக்கெட்டை அவள் கையில் கொடுத்து விட்டு, ''என்னக்கா சாந்தா பேசவே மாட்டேங்கரு?...... ஏன் என்னமோ மாதிரி இருக்கா? கலகலப்பா இருப்பாளே!......'' என்று வசந்தி—என் தங்கை—கேட்டதும்,

''சாதாரணமாகத்தான் இருக்கா...... அவளுக்கென்ன......'' என்று மழுப்பினேன்.

தங்கை பெண் ஹேமா சாந்தாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வாசலுக்கு விளையாட ஓடினாள்.

தாகத்திற்காக அவர்களுக்கு 'நாரங்காய் வெள்ளம்' உண்டாக்கிக் கொடுத்து விட்டு காய்கறிகளை நறுக்க ஆரம்பித்தேன்.

## வாழிய "கேரளத் தமிழ்"!

ஆ. முரளி சுப்பிரமணியன்

வாழ்கஎன் றென்றும் வாழ்கஎன் றென்றும்
வளம்மிகு 'கேரளத் தமிழே'! — உன்றன்
வயதிரண் டெண்ணி மனதினில் இன்பம்
வழங்கிடச் செயும்எழில் இதழே!—புகழ்
சூழ்திரு வனந்த புரத்தமிழ்ச் சங்கம்
சிறந்திடப் படைத்திடும் மலரே!— உயர்
தூயஎம் சிந்தைத் தொழுதிடும் அழகே!
தொடர்மலை நாடதில் ஒளியே!—இவண்
வாழ்தமிழ் மாந்தர் திரண்டுசெந் தமிழை
வளர்த்திடத் திங்களோர் இதழாய்-மலர்ந்து
வான்புகழ் ஈட்டும் தேன்தமிழ் ஏடே.
வாழிய வாழிய நீடே!

''எதுக்கு அக்கா இப்ப சமையல் பண்றே? ஏதாவது சிம்பிளா டிபன் செய்துடேன்........?

''இதோ பத்துமினிட்ல சமையல் ரெடியாயிடும்....''

''அக்கா...... வர வழியில் மூலைக்கு மூலை பூவெல்லாம் வெச்சு அலங்காரம் பண்ணியிருந்தாங்களே......... எல்லோரும் புதுசு வேற கட்டிக்கிட்டு இருந்தாங்க...... இந்த ஊர்ல இன்னிக்கு என்ன விசேஷம்?......''

''இன்னிக்கு ஓணம் பண்டிகையாச்சே! மலையாளிகளுக்கு ரொம்பவும் விசேஷமான பண்டிகை. நம்ப பொங்கல் மாதிரி மூணு நாள் சிறப்பாகக் கொண்டாடுவாங்க'' என்றேன்.

வசந்தி உடனே வீட்டைச் சுற்றி ஒரு நோட்டம் விட்டு என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துச் சிரித்தாள்.

''ஏங்கா...... இன்னிக்கு இந்த ஊர்ல முக்கியப் பண்டிகை நாளா? அப்ப பாயசம் பண்ணியிருப்பியே!'' என்றாள் ஆவலோடு......

''நமக்கு என்ன வந்துச்சு? பாயசம் வைக்க.......?''

''நீயும் புதுசு ஏதாவது எடுத்தியா.......?''

''என்னடி இது? சாந்தா மாதிரி நீயும் கேக்கிறியே? அவதான் பச்சப் புள்ள...... ஒண்ணும் தெரியாம கேட்கிரு...... உனக்கு என்ன? வா....வா... சமையல் ரெடியாச்சு...... சாப்பிடலாம்......''

எல்லோரும் ஹாலில் உட்கார்ந்து சாப்பிட்டனர். ''நீங்க திருவனந்தபுரத்துக்கு வந்து எத்தனை வருஷமாச்சு?'' என்று என் கணவரைப் பார்த்துக் கேட்டாள் வசந்தி.

''அஞ்சு கொல்லமிருக்கும்......''

''உங்க பேச்சில எல்லாம் மலையாள வாடை வீசுது...... ஆனு மலையாளப் பண்டிகை அன்னிக்கு ரொம்ப் சாதாரணமா இருக்கீங்களே!......'' என்று ஆச்சர்யத்தோடு கேட்டாள் அவள்.

''ஏன் என்ன செய்யணும்? நம்பபண்டிகையா இருந்தா நாம கொண்டாடலாம். இது 'அவங்க' பண்டிகை...... இதை நாம் ஏன் கொண்டாடணும்?''

அவருடைய பதிலைக் கேட்டதும் என் தங்கையின் கணவர் சிரித்தார்.

''நீங்க சொல்றதை நான் ஒத்துக்கமாட்டேன். சொந்த மாநிலத்தை விட்டு வெளியே வந்தப்புறம் எந்த மாநிலத்திலே இருக்கிறோமோ அந்த மாநிலத்தின் முக்கியப் பண்டிகையும் நம்முடையதாகக் கருதி நாமும் அதைக் கொண்டாடினுல்தான் நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கு நம்மீது ஒரு பற்றும் பாசமும் உண்டாகும்.

எல்லோரும் ஒண்ணுங்கிற ஃபீலிங் வரும். தனித்தே இருந்தோம்னு அவங்க வேற, நாம வேறங்கிற கசப் புணர்ச்சிதான் மிஞ்சும்…ஏன் எங்களேயே எடுத்துக்குங்க ளேன்…… நாங்க பம்பாயில் செட்டில் ஆனபிறகு 'ஹோலியை கொண்டாட ஆரம்புச்சிட்டோம். அன்னிக்கு எங்க வீட்டிலேயும் நிறைய ஸ்விட்ஸ் செய்வதுண்டு. அன்னிக்கி நாங்களும் பல நண்பர்கள் வீட்டிற்குப் போவோம்; அவங்களும் எங்க வீட்டுக்கு வருவாங்க.

அதே மாதிரிதான் 'ரக்ஷா பந்தன்' தினத்தையும் நாங்களும் கொண்டாடுவோம். இதனுலே எல்லாம் ஒரு சகோதர, சகோதரி பாசம் பெருகும். நட்பு பலப்படும். நாம இருக்கிற இடத்தில அமைதியாகவும், நிம்மதியாகவும் இருக்கலாம்.''

அவர் பேசப் பேச என் கணவர் வாயைப் பிளந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

எனக்கோ வெட்கமாகப் போய்விட்டது. ''அக்கா …… ஒரு செடியை வேரேடே ஓரிடத்திலிருந்து பிடுங்கி இன்னெரு இடத்தில் பயிராக்கினு, அந்த இடத்தோட மண், வளம் இதெல்லாம் அந்தச் செடிக்கு ஒத்துப் போனுத்தான் அந்தச்செடி நல்லாவளரும்… இல்லேன்னு ……. ஒண்ணும் பிரயோஜனமில்லே… மெட்ராசிலிருந்து நீங்க இந்த ஊர்ல வந்து செட்டில் ஆயிட்டீங்க. அப்படி இருக்கும்போது இந்த ஜனங்களோட பண்டிகை, பழக்க வழக்கங்கள் இதோட ஒன்றிப் போற மனப்பக்குவம் இன்னும் உங்களுக்கு வரலியே அக்கா…….''

வசந்தியின் பேச்சைக் கேட்டு நான் அவமானத்தால் குன்றிப் போனேன்.

ஐந்து வருடங்களாக கேரளாவில் இருந்தும்' ஓணம் பண்டிகையை நம்முடையதாகக் கருதி ஒரு பாயசம் கூட வைக்கத் தோன்றவில்லேயே! மூன்று வருடம் பம்பாய் வாழ்க்கையில் தங்கைக்குத்தான் எத்தனே பரந்த மனப்பான்மை?

எந்த மாநிலத்தில் இருந்தாலும், அந்த மாநிலப் பண்டிகைகளேயும் நம்முடையதாகக் கொண்டாடவேண்டும் என்று வசந்தி சொல்லுவது எவ்வளவு பெரிய உண்மை.

காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஒரே இனம் என்று பள்ளியில் படித்ததோடு சரி… அதை செயலில் காட்டத் தெரியவில்லேயே நமக்கு! என்று எண்ணி வெட்கப்பட்டேன்.

இனி அடுத்த ஆண்டு முதல் ஓணம் நாமும் கொண்டாட வேண்டும் என்று தீர்மானித்தேன்.

எப்போது 'யாதும் ஊரே……. யாவரும் கேளிர்….' என்ற புறநானூற்றுப் பாடலுக்குச் சரியான அர்த்தம் வாழ்க்கையில் கிடைக்கும் என்பது எனக்கு இப்போது தான் புரிந்தது.

# தமிழின் தனிச் சிறப்புகள்

( ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு சிறப்பு மலரில் 'நாவலர்' டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் எழுதிய "அருந்தமிழர் போற்றிய அழகுக் கலைகள்" எனும் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி)

(1) தமிழ்மொழி இயற்கையோடு இயைந்து நின்று இயற்கையாகவே தோன்றிய மொழியாகும்!

(2) இயற்கையழகும், செயற்கைப் பொலிவும் ஒருங்கே கொண்ட மொழி — தமிழ்!

(3) தோற்றக் காலத்தைக் கணக்கிடமுடியாத அளவுக்குத் தொன்மை வாய்ந்த மொழி— தமிழ்!

(4) பழைமைக்குப் பழைமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் விளங்கும் பொற்புள்ள மொழி —தமிழ்!

(5) காலங்கள் பலப்பல கடந்தும் காலமாகாத மொழி—தமிழ்!

(6) மூத்த மொழி எனினும் முதுமைக்கோலம் பூணாமல், கன்னிகோலம் பூண்ட மொழி —தமிழ்!

(7) இனிமையான மொழி; எளிமையான மொழி; வளமையான மொழி—தமிழ்!

(8) தொண்டைக்கு அப்பால் போகாமல், இப்பாலேயே பிறக்கும் வல்லோசை, இடையோசை, மெல்லோசை ஆகியவற்றைக் கொண்ட மொழி—தமிழ்!

(9) எழுத்தோசைகளைச் கூட்டினாலே சொல்லோசை பிறக்கும் என்ற சிறப்புத் தன்மையைக் கொண்ட மொழி—தமிழ்!

(10) ஐந்து எழுத்துகளுக்குள்ளாகவே பெரும்பாலான சொற்களையும் உருவாக்கும் திறன் படைத்த மொழி—தமிழ்!

(11) பன்னிரண்டு உயிரெழுத்துக்கள் தனித்து நின்றும், பதினெட்டு மெய்யெழுத்துக்களோடு இரண்டறக் கலந்து நின்றும், மெய்யெழுத்துக்களை அணைத்துக் கொண்டும் சொற்களை தேவைக்கு ஏற்றபடி உருவாக்கும் அரும் மொழி—தமிழ்!

(12) சிறப்பு 'ழ' கரத்தையும், சிறப்பு 'ற' கரத்தையும், சிறப்பு 'ன' கரத்தையும் தனக்கேயுரிய எழுத்துக்களாகக் கொண்ட மொழி—தமிழ்!

(13) உலக மொழிகள் பலவும் 'ந', 'ம', என்ற இரண்டு எழுத்துக்களை மட்டுமே மூக்கின் துணையோடு பிறக்கும் மெல்லோசைகளாகக் கொண்டிருக்க, வடமொழி 'ங', 'ஞ', 'ண', 'ந', 'ம' என்ற ஐந்து மெல்லோசை எழுத்துக்களை மட்டுமே கொண்டிருக்க, 'ங', 'ஞ', 'ண', 'ந', 'ம', 'ன' என்ற ஆறு மூக்கின் வழி மெல்லோசை எழுத்துகளைக் கொண்ட சிறப்பான மொழி—தமிழ்!

(14) தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, கோண்ட், கூ, ஒராவன் போன்ற பல மொழிகளைப் பெற்றெடுத்த பிறகும், சீரிளமை குன்றாமல் இருக்கும் கன்னிமொழி—தமிழ்!

(15) வரிவடிவில் எழுத்துகள் ஒன்றோடொன்று பிணையாமல், தனித்தனியாக நின்று சொற்களை உணர்த்தும் பாங்குடைய மொழி—தமிழ்!

(16) இல்லாத புதிய ஓசையைப் பெறுவதற்கு, ஆங்காங்குப் பயன்படுத்திக்கொள்வதற்கு, ஆயுத எழுத்து என்ற பெயரில் 'ஃ' ஐ உடைய மொழி—தமிழ்!

(17) 'குற்றியலுகரம்' என்னும் தனிச் சிறப்பைக் கொண்ட மொழி—தமிழ்!

(18) உயிர் — மெய் — உடன்படுமெய் — குறில் — நெடில் — இடைச்சொல் — உரிச்சொல்— சாரியை — உயிரீற்றுப் புணரியல் — மெய்யீற்றுப் புணரியல் — ஒற்று — எழுவாய் — பயனிலை — செயப்படு பொருள் என்பன போன்ற இயற்கையோடு இயைந்த காரணப் பெயர்களைக் கொண்ட இலக்கணத்தை உடைய மொழி—தமிழ்!

(19) பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து இலக்கியச் செறிவுடையதாய், இலக்கணக் கட்டுக்கோப்பு உடையதாய், போற்றிக் காப்பாற்றப்பட்டு வரும் மொழி—தமிழ்!

20) வேறு எந்த மொழியின் துணையில்லாமல் தானே தனித்து இயங்கவல்ல மொழி—தமிழ்!

(21) தொன்றுதொட்டுஅறம்—அன்பு—அருள்—அடக்கம்— அமைதிஅறிவு — ஆற்றல் — உண்மை— உழைப்பு—நேர்மை— நாணயம் — உயர்வு — ஒழுக்கம் — இரக்கம் — ஈகை — வீரம் — தீரம்—காதல்—கடமை—நீதி—நெறி போன்ற பண்பாடுகளை வற்புறுத்தி வரும் மொழி-தமிழ்!

(22) 'உவமை' என்னும் அணியை மட்டுமே உலக மொழிகள் பலவும் கையாள, அகப்பொருட் செய்யுள்களில் 'உள்ளுறை உவமம்' என்னும் அணியைத் தனிச் சிறப்பாகக் கையாளும் பெற்றி பெற்ற மொழி—தமிழ்!

23) அறநெறிகளை வற்புறுத்திக் கூறும் செய்யுட்களையும் நூல்களையும் மிகவாகக் கொண்டுள்ள மொழி—தமிழ்!

(24) இயல்—இசை—இயக்கம் என்னும் முத்தன்மையையுடையது மொழி என்பதை உணர்த்தும் முறையில், 'முத்தமிழ்' என்று போற்றிப் புகழப்படும் மொழி—தமிழ்!

---

# கவிக் குரல்கள்

## கவிதை ஒரு மனப்பழக்கம்!

கவி எழுத முயன்ற சாத்தூர் வித்துவான் விசுவநாத பாரதியிடம், மகாகவி பாரதியார் கூறிய அறிவுரை: ''கல்லாடமும் தாயுமானவரும் படிக்க வேண்டும்; சிறிய சொற்களாகக் கல்லாடத்தில் பெறலாம்! கவிச்சுவையே தேவை. பல சுவைச் சொற்கள் வேண்டாம்!. தாயுமானவரிடம் கம்பீர ஓசைமிக்க மொழிகள் (வடமொழிகள்) உண்டு. அவற்றைப் பெறு; வேறு நூல்கள் தேவையில்லை; உனக்குக் கவிவரும்; பழக்கம் விடாதே'' என்பதாகும்.

— யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் ''கவிக்குயில் பாரதியார்'' நூலிலிருந்து.

## புதுக்கவிதை ஒரு கூத்தடிப்பு!

''இன்று கவிதை என்ற பெயரிலும் புதுக்கவிதை என்ற பெயரிலும் பலர் கூத்தடிக்கிருர்கள். எவ்வளவு தான் வசனக்கவிதை எழுதினலும், சந்தம் உள்ள கவிதையின் லட்சணம் அதற்கு வராது............ இனி கவிதை விரும்புகிற ஒவ்வொருவரும் திரு. கி. வா. ஜ. அவர்களைச் சந்தித்து, குறைந்த பட்சக்கவிதை இலக்கணத்தையாவது தெரிந்து கொள்ளவேண்டும்.

காலையில் எழுந்தேன்; கண்ணனைப் பார்த்தேன்;
வேலையைச் செய்தேன்; வீட்டுக்குத் திரும்பினேன்.

—இதுவும் கவிதைதான். இந்த அளவுக்குக் கூடவா யாருக்கும் சந்தம், தாளம் தெரியாமல் போய் விட்டது?. அருமையான விஷயங்களை ஏன் வீணடிக்க வேண்டும்? சந்தத்தில் சொல்லுங்கள்; தாளத்தில் சொல்லுங்கள்; பாரதிபாடல்களை வழிகாட்டியாகக் கொள்ளுங்கள்; ஓசையுள்ள பாடல்களை மனப்பாடம் செய்யுங்கள்; 'குற்றாலக் குறவஞ்சி' படியுங்கள்; 'அம்மானை' நூல்கள் படியுங்கள்.

பெரிய இலக்கியங்களுக்குள் புகுந்து தலையை உடைத்துக் கொண்டு தடுமாருமல் சிற்றிலக்கியங்கள் மூலமாகவே நீங்கள் சிறந்த கவிஞராகிவிட முடியும்.

—'கல்கி' வார இதழில் 'புதுக்கவிதை' எனும் தலைப்பில் வெளியான 'கண்ணதாசன் பக்கம்' ஒன்றிலிருந்து.

## மரபுக் கவிதை ஒரு வேலியிட்ட வீடு!

''உனக்கு எழுதும் கடிதங்களெல்லாம் மெல்ல மெல்ல உருமாறி கவிதைகளாகி விடுகின்றன. எனக்கு நீந்தத் தெரியும்; ஆனலும் உன் மன ஆழத்தில் மூழ்கிப்போகிறேன். எனக்கு மருத்துவம் தெரியும்; இருந்தாலும் உன் பார்வை நோயில் பலியாகிப் போனேன்'' என்ற 'தீபம்' இதழில் வெளியான ஒரு புதுக்கவிதை குறித்து கி. வா. ஜ. கருத்து :

''இது புதுக் கவிதை அல்ல; வசனக் கவிதை! நல்ல கவிதையாக முயற்சி பண்ணக்கூடாதா அவர் அவரால் முடியாது; முடிந்தால் பண்ணட்டுமே. அவரிடத்தில் கவிஞனுடைய உள்ளம் இருப்பதாகத் தெரிகிறது. உள்ளம் உரையினலே, செயலாலே தான் வெளிப்படுத்த வேண்டும். அவருக்கு வடிவாக்க முடியவில்லையே. முடியாது. வடிவமாக்க முயற்சி பண்ண வேண்டும். அப்படிச் சிறைக்குள் அகப்படலாமா என்று நினைப்பார். சிறை வேறு; வேலி வேறு. சிறைக்கும் வீட்டுக்கும் என்ன வித்தியாசம்?... சிறை என்பது உள்ளே இருக்கிற கள்ளன் வெளியே வராமல் நாம் வெளியே நின்று கதவை அடைப்பது. வீடு என்பது வெளியே இருக்கிற கள்ளன் உள்ளே வராமல் கதவை அடைப்பது. அது அவன் அடைப்பது அல்ல; அவனை உள்ளே போட்டு நாம் அடைப்பது. இது நாமே நம்மை உள்ளே போட்டு அடைப்பது. நாமே எதைக் கட்டுப்பாட்டுடன் செய்கிருேமோ அதே ஒழுக்கம், கதை, கவிதை, ரிதம் எல்லாம்............''

—ஒரு முறை திருவனந்தைக்கு வருகை தந்த கி. வா. ஜ வுடன் சங்கப் பேராளர்கள் நிகழ்த்திய கலந்துரையாடலிலிருந்து.




அவளுக்கு வயது நிர்ணயம் செய்ய முடியாததொரு தோற்றம். முப்பதும் சொல்லலாம். முப்பத் தைந்தும் சொல்லலாம். நாற்ப தும் சொல்லலாம்.

ஆள் ரொம்பக் கட்டை. நாலு நாலரையடி உயரம் கூட இருக்க மாட்டாள். எந்த நிறத்தையும் சொந்தம் கொண்டாட முடியாத ஒரு பழைய கண்டாங்கி. யாருக் கோ தைத்து இறுகிப்போன அல் லது கிழிந்த ஜெம்பர் பளிச் சென்ற நிறத்தில். அது தோள் களில் இருந்து கீழே வழுகிவிடா மல் இரண்டு பக்கமும் ஊக்கால் கோத்திருப்பாள். உடம்பும் கை களும் அந்த ஜெம்பரின் உள்ளே தொளதொளத்துக் கிடக்கும்.

சற்றும் கவர்ச்சியற்ற உடல மைப்பு. மேல்வாய்ப் பற்கள் மிக வும் தூக்கலாக முன்நோக்கிஇருக் கும். அவள் எப்படி முயற்சி செய் தாலும் வாயைமூடவே முடியாது.

ஆறு நிறையத் தண்ணீர் போனாலும் விசாலத்துக்கு குளி யல் எட்டு நாட்களுக்கு ஒரு முறை தான். குளித்தால் மாற்றி உடுக்க வேறு கண்டாங்கி இல்லாததும் ஒரு காரணம்.

குளிக்கும் அன்று கூட தலையில் எண்ணெய்ப் பிறப்பு காண முடி யாது. ஆவாரம் கொழுந்தை பறித்துக் கொண்டு வந்து, வரிக் கல்லில் கசக்கி, அதன் சாறும் நுரையும் பச்சையாய் கொழுப் பாய் வடிய ஆரம்பிக்கும் போது வழித்துக் கூந்தலில் புரட்டிக் கழு வுவதுதான்.

கூந்தல்தான் அப்படி என்ன ஆடு சதை வரை அடிக்கும் அருணகிரி சீயக்காய் பொடி விளம்பரக் கூந்த லா? சிறியதோர் பங்கொண்டை போடுவதற்குக் காணும்.

குளிக்கும் அன்று ஒரு முந்தியை நெஞ்சு கட்டி, மறு முந்தியை ஆல மரத்து கவிந்த கிளையில் கட்டி உலர்த்துவாள். பிறகு அந்த முந் தியை உடுத்துக்கொண்டு மறு முந்தியை உலர்த்துவாள்.

அது என்ன பிறவி என்று தெரி யவில்லை. யார் என்ன வேலை சொன்னாலும் விசாலம் செய்து கொடுப்பாள்.

''விசாலம்! தெக்குத் தெருவி லே கொளும்புப்பிள்ளை பாட்டா கடையிலே போயி ரெண்டு கூடு தேயிலை வாங்கீட்டு வா'' என்றால் போவாள்.

''ஏட்டி! விட்டிலே ஒரு சொட் டுத் தண்ணி இல்லே பாத்துக்கோ .... அந்தச்சவம் பார்வதியை இன் னும் காணவும் இல்லே; எட்டி ரெண்டு கொடம் தண்ணி கோரி குட்டி'' என்றால் செய்வாள்.

''விசாலம் ... சிவஞானத்துக்கு கடையிலே போயி ஒரு தேயிலை யும் ரெண்டு வடையும் வாங்கீட்டு வாயேன்... இன்னு வாளி! போதங் கெட்டுப் போயி விட்டு நடையிலே வந்து நிக்காதே...... பொறவாசலோடே வா என்ன? திண்ணையிலே பாட்டா படுத்துக் கெடக்காரு. பாத்தா எமத்து தான்'' என்றால் கேட்பாள்.

இதற்கெல்லாம் விசாலத்துக்குக் கூலியாகக் கிடைப்பது உப்புப் போட்ட பழஞ்சித் தண்ணியும் ஊறுகாயும். இரண்டு காய்ந்த தோசை, ஐந்து காசு.

விசாலத்தின் வீட்டில் இரவு ஒரு நேரம்தான் வடியல். உழக்கு அரிசி பொங்கி ஒரு குழம்போ, கறியோ வைத்து வழித்துத் தின்றுவிட்டுப் படுப்பதுதான் வழ மை.

பகல் முச்சூடும் ஏதாம் வேலை உண்டா என்று விடுவிடாக அலை வதற்குத்தான் பொழுது சரியாக இருக்கும். ரைஸ் மில்லில் கொண்டு ஐந்து மரக்கால் புழுங் கல் குத்திக் கொடுத்தால் நாலணா கிடைக்கும். அதைத் தவிடும் உமி யும் போகப் புடைத்துக் கொடுத் தால் உழக்கு குருணை கிடைக்கும். பங்குனி சித்திரையில் உழுந்து நெற்று எடுக்கப் போனால் எட்டுக் கொன்று ஆறுக்கொன்று எனகூலி கிடைக்கும். புன்னைக்காய் அடிசீச னில் புன்னைக்காய் பொறுக்கப் போனால் ஆறணா சம்பளமும் மத்தி யானம் உளுந்தங்கஞ்சியும்கிடைக் கும். நடவுக்களை பறிக்கப் போனால் ஒரு ரூபாய் சம்பளம் கிடைக்கும். விதைப்புக்களை பறிக்க விசாலத் தை யாரும் கூப்பிடுவது கிடை யாது. பயிருக்கும் களைக்கும் பேதம் தெரியாது என்று.

சீசனைப் பொறுத்துச் செய்கிற சுய தொழில்களும் உண்டு. அறுப்புக்காலத்தில் கதிர் பொறுக் குவது. பொடி உழவுக் காலத் தில் குழைக்கம்பு பொறுக்குவது. வேப்பமுத்து பொறுக்குவது. சுள்ளி பொறுக்குவது. சருகு அரிப்பது. கொடுப்பைக் கீரை பறிப்பது.

யார் விட்டுக்குப் போனாலும் விசாலத்துக்கு என்று ஒரு வேலை இருக்கும். வாரியலை எடுத்து வீட்டைத் தூத்து ஒதுக்குவாள். காயப்போட்டிருக்கும் நெல்லை கிண்டிக் கொடுப்பாள். கீரையை ஆய்ந்து கொடுப்பாள், மீனைக் கழுவிக் கொடுப்பாள்.

ஆனல் இவற்ருல் மாத்திரம் பசியும் பட்டினியும் இல்லாமல் இருக்க முடியவில்லே. அதற்காக யாரிடமும் சென்று கேட்கவும் தோன்றுவதில்லே. இரண்டு நாள் பட்டினி என்ருல் சோர்ந்தாற் போல் காணப்படுவாள். யார் விட்டிலாவது சோறு வடித்த கஞ்சித் தண்ணியைக் கூப்பிட்டுக் கொடுப்பார்கள்.

விசாலத்தின் அம்மா இருந்த போது வயிற்றுக்கு அவ்வளவு வாட்டம் கிடையாது. காலேயில் இட்டிலி வியாபாரம். மாலேயில் வடை அப்பம். விசாலத்தின் அம்மா அவித்துக் கொடுத்து விட்டு அவள் ஒரு பக்கம் விற்கப் போவாள். விசாலம் இன்னெரு பக்கம் போவாள்.

சில சமயம் முதுகிலும் நெஞ்சி அம்மா அறைவதும் குத்துவதும் மகள் ஒப்பாரி வைத்து அழுவதும் கேட்கும். சில சமயம் வழியெங் கும் தெருவெங்கும் மகளே கண் முன் கற்பித்துக் கொண்டு முன் னிலேப் படுத்திப் பேசுவது கேட் கும்.

''நாப்பது இட்டிலி எண்ணிக் குடுத்தா ஒண்ணு பத்து பைசாண்ணு வித்து நாலு ரூவா கணக்காக்கி கொண்டாரத் தெரி யாதா? சோறு திங்கியா பீயைத் திங்கியா? கேக்கேன் இல்லே தெரியாமத்தான் கேக்கேன்...... ஏளு தொலியிலே ஒரு தொலியி லேயாவது ஒணறு இருந்தா உனக்குத் தெரியும். சவம் ஒணறு கெட்ட செம்மத்தை என்ன செய்ய?'' என்று பேச்சு நீளும். அவள் மனசுக்குள் பேச மறந்து வெகுகாலம் ஆகிவிட்டது போல் தோன்றும்.

விசாலத்திடம் யாருக்கும் விளே யாடத் தோன்ருது. அந்த சோகம் தங்கிய முகத்தைப் பார்க்கவே ஆகாது ஆண்களுக்கு. பெண்கள், சவம் மூதேவி என்று திட்டினுலும் கூட, வேலே செய்வாள் என்பதற் காக ஒன்றும் அதிகம் சொல்வ தில்லே

பெரும்பாலான பெண்களுக்கு விசாலத்தின் மீது ஓர் இளக்கார மும் உண்டு. காரணம், இருபத்தி நாலு வயசாகியும் விசாலம் சமை யாமல் இருந்ததுதான். அது ஒன்றும் அவள் அம்மாவுக்குப் பெரிய பிரச்சனேயாக இல்லே.

இருபத்தி ஐந்தாவது வயதில் விசாலம் சமைந்தபோது பல பேருக்கு அதை நம்பக்கூட முடிய வில்லே.

''சும்மா யாரே சீலேக்கு சாயம் புடிக்கதுக்கு வெடி எளக்கி விட்டி ருக்காங்கேன்.......''

''சவம் தொடையிலே பருவு என்னமாம் வந்து உடைஞ்சிருக் கும்...'' என்று பேசிக் கொண் டார்கள்.

ஆனல் விசாலத்தின் உடலில் சில சில்லரை மாற்றங்கள் ஏற்பட் டன. தட்டையாக ஆணின் நெஞ்சு போல் இருந்த மார்பு புன்னேக்காய் அளவில் திரண்டது. விசாலம் உடுத்திருக்கும் கண்டாங் கியும் ஜெம்பரும் அதைப் பெரிய வித்தியாசமாய்க் காட்டவில்லே. என்ருலும் விசாலத்தின் அம்மா வின் கெடுபிடிகள் அதிகமாகிவிட் டன. அவள் பயத்திலும் நியாயம் இல்லே என்று சொல்லிவிட முடி யாது.

நிரம்ப சிரமப்பட்டு இருபத்தே ழாவது வயதில் விசாலத்துக்குக் கல்யாணம் நடந்தது. பக்கத்தூ ரில் கைலாசம் கைலாசம் என் ரெரு ஆள். சமையல் வேலேக்குப் போவான். நாற்பது வயது பேசும் உடல்; தாரைப் பிசைந்து நல்லெண்ணெய் ஊற்றிக் குழைத்து இருட்டைத் தூவியது போல். ஆள் வாட்ட சாட்டம். வாழைக்காய்க்கறை, மஞ்சள்கறை புகைக்கரி எல்லாம் படிந்த வேட்டி யும் தலே முண்டும், திருவலேக்குத் தியோ, இரும்புக் கரண்டியோ எப்போதும் முருகனுக்கு வேல் போல தோள் மீது சாத்தப்பட்டி ருக்கும்.

வைப்பு ஐயருக்கு மெயினன ஆள்களில் கைலாசமும் ஒருவன், பெரிய அண்டாவைத் தூக்கி கிடார அடுப்பில் எரிய வைக்க வேண்டுமா? சாதம் வெந்த செம் பை அடுப்பில் இருந்து இறக்க வேண்டுமா? கைலாசத்தைக் கூப் பிடு. அர்ச்சென்டாக நாலு குடம் தண்ணீர் வேண்டுமா? கைலாசம் கையில் குடத்தைக் கொடு. நுணுக்கமான காரியங்களில் அவ னுக்கு அவ்வளவு நோட்டம் இல்லேயே தவிர சுற்றுக் காரியங் களில்தேர்ச்சி உண்டு. முன்னிர வில் தொடங்கி கிச்சடிக்கு தடியன் காயோ, பச்சடிக்கு மாங்காயோ அரிய — கைலாசம். தேங்காய் பாலுக்குத் திருவிய தேங்காயை சதைத்து எடுக்க — கைலாசம்.

வேலேயைப் போலவே சாப்பா டும். நேரத்துக்கு ஒரு குத்துப் போணி. அவன் சாப்பிடுவதை யாரும் பார்த்தால் பொருமைப் படுவார்களே தவிர வயிற்றெரிச் சல் படுவது கிடையாது. ரொம்பப் பாயாசம் மிஞ்சிப் போனுல் கைலா சத்துக்கு முன்னுல் குத்துப்போணி யை வைத்து ஒரு அகப்பை மிள காய்ப் பச்சடியும் வைத்துவிட்டால் பாயசத்தை மாட்டுக்குத் தொட்டி யில் விடவேண்டிய அவசியம் இருக்காது.

மற்றெந்த வேலேயும் அவனுக் குத் தெரியாது. சமையல் கார னுக்கு வரும் முன்னூற்றறுபத் தைந்து நாளும் வேலே வந்து கொண்டேயா இருக்கும்? ஏதோ இரண்டு கல்யாணம், ஒரு இழவு அடியந்திரம், ஒரு சடங்கு என்று இருந்தாலே அதிகம். சில மாதங் கள் ரொம்பவும் வறண்டு போகும் ஆடி. மார்கழியைப்பற்றிச் சொல்லவே வேண்டாம்.

வேலையில்லாத நாட்களில் அழகம்மன் கோயில் முகப்பில் கைலாசம் கண்வளர்வான். யாராவது வந்து வண்டியில் இருந்து விறகுப் பாரம் இறக்கவோ நெல் மூட்டை ஏற்றவோ என்று கூப்பிட்டால் போவான்; பீடி குடிப்பதும் கல்யாண வீட்டில் வெற்றிலை போடுவதும் தவிர அவனுக்கு வேறு எந்தப் பழக்கமும் கிடையாது. ஒரு சிறிய வீடு உண்டு. அதைத் திறப்பதோ, பொங்கித் தின்பதோ அவன் சுதந்திரம்.

சுற்று வட்டாரத்தில் அவனைத் தெரியாதவர்கள் கிடையாது. யாவரும் அவனிடம் கேட்கும் கேள்வி ஒன்றுதான் — ''எப்பம் கலியாணம்?''

எப்படியோ கைலாசத்துக்கும் விசாலத்துக்கும் கல்யாணம் ஆகியது. அன்றுபெரியதோர் கோலாகலம். கைலாசம் உடுப்புப்போட்டு எல்லோரும் அன்றுதான் பார்த்தார்கள். சரிகை வேட்டியும் சந்தனக்கலர் சட்டையும் அவனுக்கு ரொம்ப அம்சமாக இருந்தது. விசாலம்அதற்கும் மேல். சின்னாள பட்டி பட்டு, திருப்பன் வைத்துப் பின்னிய சடை. சடை நிறைய செவந்திப்பூ.

அம்மன் கோயிலில் வைத்துத் தாலிகட்டி ஆளுக்கொரு தம்ளர் அரிசிப் பாயசம் கொடுத்தார்கள்.

கல்யாணம் ஆன அன்றே அவன் அவளைக் கூட்டிக்கொண்டு போய்விட்டான். அவன் சமையலுக்குப் போகும்போது விசாலம் இங்கு தென்படுவாள். கொஞ்சம் கதை இப்படிப் போயிற்று. கைலாத்துக்கு இந்த கல்யாண வாழ்க்கையில் அலுப்புத்தட்டி மறுபடியும் அழகம்மன் கோயிலில் உறங்கலானான். இருக்கும்போது கஞ்சியோ சோறோ பொங்கி வைத்து விட்டுவிசாலம் அவனை எழுப்ப வருவாள்.

''இன்னாருங்கோ...எந்திரிங்கோ...இன்னாருங்கோ... எந்திரிங்கோ...''

கைலாசத்தின் உறக்கம் இதற்கெல்லாம் தெளிவது இல்லை. அந்தப் பக்கம் வந்த ஆட்கள் யாராவது மேல் துண்டை மடக்கி படார்படார் என்று இரண்டு அறை வைத்தால் திருதிருத்து எழுந்திருப்பான்.

தொடர்ந்து சாப்பிட ஒன்றும் இல்லாமல் போகும் போது விசாலம் என்ன செய்வாள்? பழகிய ஊரானால் வேறு கதை. இங்கு அப்படி யாரைத் தெரியும்.

ஒரு நாள் ராத்திரி கைலாசத்துக்கும் விசாலத்துக்கும் சரியான சண்டை. கைலாசத்தின் அடிக்கு விசாலம் பலப்பாளா? அடுத்த நாள் காலையில் சொந்த ஊருக்கு வந்தாள். இப்படி சண்டையும் சமாதானமுமாய் இரண்டு மூன்று முறைநடந்தது. விசாலம்சூலுற்று ஒரு பெண்பிள்ளையைப் பெற்றதும் அம்மா காலாவதியானாள்.

பிள்ளை பெற்று நாட்கள் ஆகியும் விசாலம் மாப்பிள்ளை வீட்டுக்குப்போகவில்லை. கைலாசம் அந்தத் திசையிலேயே தலை வைத்துப் படுக்கவில்.

எப்போதாவது கைலாசம் அந்தப் பாதையில் நடந்து போகும் போது, விசாலம் கண்டு விட்டால், ''இன்னாருங்கோ...... இன்னாருங்கோ....'' என்று கூப்பிடுவாள்.

சிலசமயம் நின்று முந்தியில் இருப்பதை அவிழ்த்துக் கொடுத்து விட்டுப் போவான். சில சமயம் நடையை எட்டிப் போடுவான்.

விசாலத்தின் ஊருக்கு கைலாசம் சமையலுக்கு வந்தால் அங்குள்ளோர் எல்லோரும் சொல்லுவார்கள்—''ஏ! உன்னை ராத்திரி அவ வரச்சொன்னா... '

அதற்கும் அவனிடம் சிரிப்புதான்.

வேலையுள்ள நாட்களில் கூட இந்தப் பிள்ளையின் ஏதுவினால் விசாலத்தால் ஏதும் வேலைக்குப் போக முடியவில்லை.

எனவே ஆரம்பத்தில் அந்த வீட்டின் முன்னால் கையில் ஒரு அலுமினியக் கிண்ணத்தோடும் இடுப்பில் பிள்ளையோடும் போய் நெடு நேரம் நின்றாள் விசாலம்.

அது ஒரு கம்பி அளி போட்ட வீடு. அங்கிருந்து கூப்பிட்டால் —சத்தமாக — ஒரு வேளைதான் அடுக்களையில் ஆளிருந்தால் கேட்கும். பசித்திருக்கும் பிள்ளைக்குச் சோறு கேட்க வந்திருப்பவள் சத்தம் போட்டுக் கேட்பாளா? யாராவது தலைதட்டுப்படும் வரை நிற்பாள். ஆளரவம் குறைந்த நடுப்பகல் வேளைகளில் யாரும் அவ்வளவு எளிதில் தட்டுப்படுவதில்லை. வேலைக்காரர்கள் பார்த்தால் கூட விசாலம் நிற்கும் நோக்கம் தெரியுமாதலால் வீட்டு உடைமைக்காரி கண்ணில் படட்டும் என்று பேசாது இருந்து விடுவார்கள்.

வீட்டுச் சொந்தக்காரிக்கு விசாலம் வந்து நிற்கும் காரணத்தை ஒரு நாள் மட்டும் தான் கேட்டு அறிய வேண்டியதிருந்தது. அந்த அம்மாள் ஊரிலேயே நல்ல மனசு உடையவள். அதுவும் பிள்ளைக்கு சோறு என்று வந்து நிற்கையில் இல்லை என்று சொல்ல முடியுமா? அதற்காக வீட்டு ஆண்பிள்ளைகள் சாப்பிடும் முன்னால் இவளுக்கு ஊற்றி விளம்பவும் முடியாது. எனவே எல்லோரும் சாப்பிட்ட பிறகு அந்தக் கிண்ணம் நிறையச் சோறு போட்டு மேலே ஒரு குழம்போ, கறியோ ஊற்றிக் கொடுப்பாள்.

இப்படி இரண்டு மூன்று வீடுகளில் விசாலத்தின் தவம் நடந்து முடியும்போது மாலை சாய்ந்து விடும்.

---

# ராமனும் கண்ணனும் இந்த மண்ணில் பிறக்கவே இல்லை

மா. தக்ஷிணமூர்த்தி

'ஜம்புத்வீபே பாரதவர்ஷே பரதகண்டே....' என்று அந்தணர்கள் ஹோமம் செய்வதற்கு முன் சொல்லுவ துண்டு, 'ஜம்புத்வீபத்திலுள்ள பாரத நாட்டில்...' என்று இதற்குப் பொருள் சொல்லுவதையும் கேட்டிருக்கிறோம். ஜம்புத்வீபம் என்பது ஆசியா என்றும், பாரதவர்ஷம் என்பது குமரி முதல் காஷ்மீர் வரை பரந்து கிடக்கும் இந்தப் பாரத நாடு என்றும் கூறுவார்கள். இப்படிப் பொருள் கூறுபவர்கள் 'பாரதவர்ஷே' என்பதற்குப் பிறகுள்ள 'பரதகண்டே' என்பதற்குப் பொருள் சொல்வ தில்லை. பாரதவர்ஷமும் பரதகண்டமும் ஒன்றே என்பார் கள். அப்படியென்றால் 'பரதகண்டே' என்ற வார்த்தை தேவையில்லை. தவத்தின் வாயிலாக மந்திரத்தைக் கண்டறிந்த முனிவர்கள் தேவையில்லாமல் ஒரு வார்த் தையைப் பயன்படுத்துவார்களா என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஜம்புத்வீபத்தை ஒன்பது வர்ஷங்களாகப் பிரித்திருக் கிறார்கள். இளால்ருதம், ரம்யகம், ஹிரண்மயம், குரு வர்ஷம், ஹரிவர்ஷம், கிம்புருஷவர்ஷம், பாரதம், கேது மால், பத்ராசுவம் என்பவை ஒன்பது வர்ஷங்கள். பாரத வர்ஷத்தைப் பற்றிக் கூர்மபுராணத்தில் சொல்லப்பட்டி ருப்பதைக் கேளுங்கள்.

*பாரதேஷு ஸ்த்ரிய: பும்ஸோ நானாவர்ணா: ப்ரகீர்த்திதா*
*நானா தேவார்ச்சனே யுக்தா நானா கர்மாணி குர்வந்தே*
*பரமாயுஸ்ம்ருதம் தேஷாம் சதம் வர்ஷாணி ஸுவ்ரதா:*
*நவயோஜன ஸாஹஸ்ரம் வர்ஷமேதத் ப்ரகீர்த்திதம்*
*கர்மபூமிரியம் விப்ரா நாராணாம் அதிகாரிணாம்*
*சத்வாரி பாரதே வர்ஷே யுகானி கவயா அப்ருவன்.*
*க்ருதம் த்ரேதா த்வாபரஞ்ச கலிச்ச அன்யத்ர ந க்வசித்*
*யானி கிம்புருஷாத்யானி வர்ஷாண்யஷ்டௌ மஹர்ஷய*
*ந தேஷு சோகோ நாயாஸோ நோத்வேக: க்ஷுத்பயம் ந ச*
*ரமந்தே விவிதைர்பாவை ஸர்வாச்ச ஸ்திரயௌவனா:*

(பாரத வர்ஷத்திலுள்ள ஆண்களும் பெண்களும் பல வர்ணத்தைச் சேர்ந்தவர்கள், பல கடவுளை வழிபடுப வர்கள், பல வேலைகளைச் செய்பவர்கள். அவர்களு டைய மிகவும் அதிகமான ஆயுள் நூறு ஆண்டு. ஒன்ப தாயிரம் யோஜனை பரந்து கிடக்கிறது இந்த பாரத வர்ஷம். பாரதவர்ஷத்தில் உள்ளவர்கள் கர்மம் செய்யும் உரிமையுடைய உத்தமர்கள். பாரதவர்ஷத்தில் நான்கு யுகங்களுண்டு என்று ஞானிகள் கூறியிருக்கின்றனர். க்ருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் என்ப வை நான்கு யுகங்கள். இந்த நான்கு யுகங்கள் பாரத வர்ஷத்தைத் தவிர வேறு எங்கும் இல்லை. கிம்புருஷா வர்ஷம் போன்ற மற்று எட்டு வர்ஷங்களும் மகர்ஷி களுக்கு உரியவை. அந்த எட்டு வர்ஷங்களில் எல் லோரும் கவலை, களைப்பு, பசி, நோய் இவையொன்றும் இல்லாமல் குன்றாத இளமையுடன் பல்வேறு வழிகளில் இன்பமாக வாழ்கின்றனர்.)

ஜம்புத்வீபம் ஆசியா என்றும் பாரதவர்ஷம் என் றால் பாரத நாடு என்றும் நினைத்தால், அது மேலே கொடுக்கப்பட்டிருக்கும் செய்யுளுக்குப் பொருந்தாது. ஆசியாவில் பாரத நாட்டைத் தவிர மற்ற எட்டு நாடுகள் என்றால் அவை திபெத், சீனா, ஜப்பான், மங்கோலியா, ஸைபீரியா, மலேயா, பர்மா, பிலிப்பைன்ஸ் போன்ற வையாகத்தானே இருக்க முடியும்? அந்த நாடுகளி லுள்ள மனிதர்கள் எல்லோரும் மஹர்ஷிகள், அவர்கள் பசியும் நோயும் சாவுமின்றி குன்றாத இளமையுடன் என் றும் இன்புற்று வாழ்கின்றனர் என்று சொல்லுவது எப் படிப் பொருந்தும்? இன்னொரு புராணத்தில் மற்ற எட்டு வர்ஷங்களிலுள்ளவர்கள் பசியும் நோயும் சாவுமின்றி பத்தாயிரம் ஆண்டு குன்றாத இளமையிடன் வாழ்கின்ற னர் என்று றிப்பிகுட்டுள்ளது. புராணங்களை இயற்றின ஞானிகள் முட்டாள்த்தனமான கருத்துக்களைச் சொல்லி யிருக்கமாட்டார்கள் என்பது உறுதி. எனவே ஜம்புத் வீபம் என்பது ஆசியா அல்ல, பாரதவர்ஷம் என்பது பாரத நாடு அல்ல, மற்ற எட்டு வர்ஷங்கள் சீனா, ஜப் பான் போன்ற நாடுகள் அல்ல. ஜம்புத்வீபம், பாரத வர்ஷம், மற்ற எட்டு வர்ஷங்கள் இவற்றுக்கெல்லாம் வேறு பொருள் இருக்கத்தான் வேண்டும்.

இப்படிச் சொல்லுவதற்கு இன்னுமொரு காரண முண்டு. பாரதவர்ஷம் ஆசியாவிலுள்ள ஒரு நாடு என் றால், சதுர்யுகம் பாரதத்தில் மட்டும்தான் உண்டு. சீனாவிலோ ஜப்பானிலோ இல்லை என்று கூறுவது எப் படிப் பொருந்தும்? திருவனந்தபுரத்திலும்சென்னையிலும்

பகலும் இரவும் மாறி மாறி வருவதைப் போல பிகிங்ஙி லும் டோக்கியோவிலும் பகலும் இரவும் மாறி மாறி வரத்தாதன செய்யும்? இங்கு ஓராண்டு என்றால்அங்கும் ஓராண்டு ஆகத்தான செய்யும்? இங்கு ஒரு யுகம் என்றால் அங்கும் ஒரு யுகம் ஆகத்தானே செய்யும்? எனவே சதுர்யுகம் என்ற கால அளவு மற்ற நாடுகளில் இல்லை என்று சொல்லுவது பொருந்தாது.

இதே போல ராமாயாணத்தையும் தற்போது பொருள் சொல்லி வரும் முறையில் ஏற்றுக்கொண்டால் பல முரண்பாடுகள் எழுகின்றன. (1) பத்து தலையும் இருபது கைகளும் உடைய ராவணன் என்ற அரசன் இலங்கையை ஆண்டான். (2) ''இந்த உலகம் உள்ளளவும் நீ இந்த இலங்கையின் அரசனாக இருப்பாய்'' என்று ராமன் விபீஷணனிடம் சொன்னான். எனவே இப்பொழுது, இந்த 1981-லும், இலங்கையை ஆள்வது விபீஷணன்தான்.

இப்படிப் பல முரண்பாடுகளையும் சுட்டிக் காட்ட முடியும். எடுத்துக்காட்டாக இந்த இரண்டை மட்டும் சுட்டிக் காட்டுகிறேன். இந்த முரண்பாட்டுக்குத் தீர்வு காண்பது எப்படி?

இரண்டு வழிகள் உண்டு. (1) ராமாயணம் கட்டுக் கதை. அறிவே இல்லாத காட்டு மிராண்டிகள் எழுதின ராமாயணம், மகாபாரதம் போன்றக் கட்டுக்கதைகளைப் படிப்பதால் பயனே இல்லை. இப்படிச் சொல்லுவது குருட்டுத்தனமான குறுக்கு வழி. இந்த வழியைத்தான் நாத்திகர்கள் பின்பற்றுகின்றனர்.

(2) ராமாயணத்துக்கு இப்பொழுது அளிக்கப்பட்டு வரும் விளக்கம் தவறானது. ராமாயணம் ஒரு ஞானக் களஞ்சியம். அதனை இயற்றிய வால்மீகி மாபெரும் ஞானி. ராமாயணத்தை நன்றாகக் கற்று அதனைச் சரியாகப் புரிந்து கொண்டால், அதில் எத்தகைய முரண்பாடும் இருக்காது.

வேதப்பொருள்களுக்கு ஏற்ற முறையில்தான் புராணங்களுக்குப் பொருள் கூறவேண்டும் என்று ஸ்கந்தபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சூத்திர வடிவில் தரப்பட்டிருக்கும் வேதப் பொருளை உணர ஆழ்ந்த அறிவும் தவமும் தேவை. மனப்பக்குவம் இல்லாதவர்களுக்கு 'தத் த்வம் அஸி', 'அஹம் ப்ரம்மாஸ்மி', 'ஏகமேவ அத்விதீயம் ப்ரம்மா', 'அயம் ஆத்மா ப்ரம்மா' போன்ற வேத வாக்கியங்கள் உயிரற்ற வார்த்தைகளாகவே இருக்கும். சாதாரண மக்கள் வேத வாக்கியங்களை உணர வேண்டும் என்பதற்காகத்தான் முனிவர்கள் புராணங்களையும் இதிஹாஸங்களையும் இயற்றியுள்ளனர் ஹாஸம் என்றால் சிரிப்பு என்று அர்த்தம். இதிஹாஸம் என்றால சிரிப்பின் வடிவில், அல்லது சுவையாக வேதப் பொருளை எடுத்துச் சொல்லுதல்.

புராணங்களும் இதிஹாஸங்களும் வேதப் பொருளைக் கதை வடிவில் எடுத்துச் சொல்கின்றன என்பதால் அவற்றிற்கெல்லாம் பொதுவான சில அடிப்படைக் கருத்துக்கள் உள்ளன. இந்த அடிப்படையைப் புரிந்து கொள்ளாததால் தான் தவறான விளக்கங்கள் தரப்படுகின்றன.

படைப்பு இரண்டு விதம்—திவ்யமான படைப்பு, அசுரப் படைப்பு; பக்தியுடையது திவ்யமான படைப்பு. பக்தியில்லாதது அசுரப் படைப்பு. (ப்ருஹன்னாரதபுராணம்). ஜம்புத்வீபம், ப்ளக்ஷத்வீபம், சால்மலத்வீபம், குசத்வீபம், க்ரௌஞ்சத்வீபம்' சாகத்வீபம், புஷ்கரத்வீபம் என்ற ஏழு தீவுகளும் திவ்யமான படைப்பு. அவையெல்லாம் தேவர்களுக்கு உரியவை.

தேவர்கள் யார்? ஸத்வ குணமுடைய மனமும் ஐம்புலன்களுமே தேவர்கள். ஸத்வ குணமுடைய மனதில் முக்தி வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது. இந்த எண்ணம் தோன்றும்போது மனம் ஜம்புத்வீபத்தில் புகுந்துவிட்டது. முக்தி வேண்டும் என்று எண்ணுபவர்கள் எல்லோரும் ஜம்புத்வீபத்திலுள்ளவர்கள். அதாவது ஜம்புத்வீபம் என்பது முக்தி வேண்டும் என்ற மனநிலை.

அஸுரர்கள் யார்? 'அஸு' என்றால் இந்த உலகம். இந்த உலக வாழ்க்கைதான் இன்பம் என்று நினைத்து லௌகீக வாழ்க்கையிலேயே இன்பம் காண்பவர்கள் அஸுரர்கள். அவர்கள் ஆன்மீக வாழ்க்கையில் நம்பிக்கை இல்லாதவர்கள்.

முக்தி வேண்டும் என்ற மனநிலை ஜம்புத்வீபம். முக்தி வேண்டும் என்று நினைத்த பிறகுதான் மனிதன் முக்தி அடைவதற்காக முயற்சி செய்கிறான். முக்தி வேண்டும் எண்ணத்துடன் முக்தி அடைவதற்குள்ள வழியில் செயல்படுபவர்களின் மனநிலைதான் பாரதவர்ஷம். பாரத வர்ஷம் கர்மபூமி என்று சொல்லுவதன் பொருள் இதுதான். முக்தி அடைவதற்குரிய கர்மத்தைச் செய்பவர்களின் மனநிலை என்பது இதன் பொருள். 'பூமி' என்ற சொல்லுக்கு நிலை என்பது பொருள்.

புராணங்களிலும் இதிஹாஸங்களிலும் சொல்லப்பட்டிருக்கிற பாரதவர்ஷம் இந்த உலகத்திலுள்ள ஒரு நாடு அல்ல. அது ஒரு மனநிலை. இந்த உலகத்திலுள்ள எந்த நாட்டைப்பற்றியும் புராணங்கள் கவலைப்

படவில்லை. முக்தி அடைய விரும்புவோனின் மனநிலையைப் பற்றித்தான் புராணங்கள் கூறுகின்றன.

முக்தி அடைவதற்காகக் கர்மம் செய்பவனின் மனநிலை பாரதவர்ஷம். அந்த மனநிலையை உடைய தனிப்பட்ட மனிதனைக் குறிக்கும் சொல் பரத கண்டம். மற்ற எட்டு வர்ஷங்கள் எட்டு ஸித்திகளைக் குறிப்பவை. எண் வகை ஸித்திகளை அடைந்த சித்தர்கள் காலத்துக்கு அப்பாற்பட்டவர்கள். அவர்களைப் பசியும் நோயும் சாவும் அணுகாது. அவர்கள் குன்றுத இளமையுடன் இன்பமாக வாழ்கிறார்கள். அவர்கள் காலத்துக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதால்தான் அவர்களுக்குக் கால வரம்பைக் குறிக்கும் சதுர்யுகம் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

முக்திக்காகச் செயல்படுபவனுக்கு சதுர்யுகம் உண்டு. அதாவது பாரதவர்ஷத்தில் சதுர்யுகம் உண்டு. முக்திக்காகச் செயல்படுபவனின் வாழ்க்கை வரலாற்றிலுள்ள நான்கு படிகள்தான் சதுர்யுகம் (நான்கு யுகங்கள்).

முதற்படி கலியுகம். முக்தி வேண்டும் என்ற எண்ணம் இருந்தபோதிலும், உலக வாழ்க்கையில் ஈடுபட்டு எப்பொழுதாவது சில வேளைகளில் மட்டும் கடவுளை நினைத்துப் பார்க்கும் சாதாரண பக்தனின் மனநிலைதான் கலியுகம். கடவுளை அடைவது, அதாவது முக்தி அடைவதுதான் வாழ்க்கையின் குறிக்கோள் என்று தெரியும். இருந்தாலும் அதைப்பற்றித் தீவிரமாக எண்ணித் தவ வாழ்க்கையை மேற்கொள்ளாமல் உலக வாழ்க்கையிலேயே மயங்கிக் கிடந்து, இடையிடையே கடவுளை நினைத்து, ''கடவுளே! முக்தி அடைய அருள்புரிய வேண்டும்'' என்று வேண்டிக் கொள்ளும் மனநிலைதான் கலியுகம். அனேகமாக நாம் எல்லோரும், அதாவது பக்தர்கள் என்று சொல்லிக்கொள்ளும் நாம் எல்லோரும் இந்த நிலையில்தான் இருக்கிறோம். எனவேதான் இப்பொழுது நடக்கும் யுகம் கலியுகம் என்று எல்லாப் புராணங்களும் சொல்லுகின்றன, இந்த மனநிலையிலுள்ள சாதாரண பக்தனுக்காகத்தான் புராணங்களும் இதிஹாஸங்களும் எழுதப்பட்டுள்ளன.

கலியுகம் என்ற முதற்படியிலுள்ள சாதாரண பக்தன் புராணங்களையும் இதிஹாஸங்களையும் கேட்டுக் கேட்டுக் கொஞ்சம் மனப் பக்குவமடைந்து கடவுளைப்பற்றி அதாவது பரம்பொருளைப்பற்றிச் சிந்தனை செய்ய ஆரம்பிக்கிறான். அப்பொழுது அவன் இரண்டாவது படியாகிய த்வாபரயுகத்துக்கு வந்துவிடுகிறான். 'த்வாபரம்' என்ற சொல்லுக்கு சந்தேகம் என்பது பொருள். கடவுளை அடைய வேண்டுமா, அல்லது உலக வாழ்க்கையில் கவனம்செலுத்த வேண்டுமாஎன்ற சந்தேகம் அவனுக்கு. அவனுடைய கவனம் பாதி உலக வாழ்க்கையிலும்,பாதி கடவுளிலும் ஆகிவிடுகிறது. கடவுளை அடைய வேண்டும் என்று அவன் தீவிரமாக நினைக்கும்போது, காமம், கோபம், பொறாமை போன்ற அரக்கர்கள் அவனுக்கெதிராகப் போர் முரசு கொட்டுகின்றன. இந்த நிலையிலுள்ள பக்தனுக்குக் கடவுள் கண்ணனாகத் தோன்றி கீதோபதேசம் செய்கிறார். கண்ணன் தோன்றின த்வாரகையும் மதுராபுரியும் பக்தனின் இதயம்தான். பக்தனின் இதயத்தைத்தவிர வேறு எங்கும் கண்ணன் தோன்றவும் இல்லை, வளரவுமில்லை. 'விருந்தா' என்ற சொல்லுக்கு பக்தி என்பது பொருள். விருந்தாவனம் என்பது தீவிரமான பக்தியைக் குறிக்கும் சொல். உள்ளம் பக்தியில் லயித்துப் பக்தன் தன்னை மறக்கும் வேளையில் கண்ணன் தோன்றுகிறான். பேரின்பத்தின் நுழைவாயில் என்பதால் த்வாரகாபுரி என்ற பெயரும், இனிமை நிறைந்தது என்பதால் மதுராபுரி என்ற பெயரும் ஏற்பட்டன. 'த்வாரம்' என்ற வார்த்தைக்கு 'வாயில்' என்பது பொருள். 'மதுரம்' என்ற வார்த்தைக்கு இனிமை என்பது பொருள் பக்தனுடைய இதயத்தில் கண்ணன் தோன்றி, காமம், கோபம், பொறாமை போன்ற அரக்கர்களை அழிக்கிறான். இதுதான் கண்ணனுடைய திருவிளையாடல்.

வேதங்களையும், புராணங்களையும்கவனமாகப் படித்து அவற்றின் பொருளை நன்றாக உணர்ந்த பிறகுதான் அவை பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பண்டிதர்கள் முன்வர வேண்டும். அரை குறைப் பண்டிதர்கள் புராணங்களுக்குச் செய்யும் துரோகத்துக்குக் கண்ணனுடைய வரலாறு சிறந்ததோர் எடுத்துக் காட்டு. கண்ணன் வடக்கே டில்லிக்கு அருகேயுள்ள மதுராபுரியில் பிறந்தான், என்றும், ஆயர் குல மங்கையர் அனைவரும் அவனுடைய காதலியர் என்றும் அரைகுறைப் பண்டிதர்கள் கூறுகின்றனர். ஒருவேளை அப்படிப்பட்ட கண்ணனைப் போற்றினால் தங்களுக்கும் அப்படிப்பட்ட அழகான மங்கையருடன் கூடி மகிழும் பேறு கிடைக்கும் என்று அந்தப்பண்டிதர்கள் நம்புகிறார்கள் போலும். அவர்கள் சொல்லும் கதையைக் கேட்டுத்தான் வெள்ளைக்கார ஆராய்ச்சியாளர்கள் இத்தகைய முட்டாள்த்தனமான கதைகளை மாபெரும் இலக்கியம் என்று போற்றும் பாரத நாட்டு மக்களுக்கு மூளை இல்லை என்ற தவறான முடிவுக்கு வந்துவிட்டார்கள். அந்தப் பண்டிதர்கள் புராணங்களைக் கவனமாகக் கற்று உண்மையான பொருளை எடுத்துக் கூறியிருந்தால் ஆராய்ச்சியாளர்கள் புராணங்கள் ஞானக்கருவூலங்கள் என்று உணர்ந்து போற்றியிருப்பார்கள்.

பத்மபுராணத்தில் கோபியர்களைப் பற்றியும் கோபர்களைப் பற்றியும் சொல்லியிருப்பதைப் பார்ப்போம்.

*கோப்யஸ்து ச்ருதயோ ஜ்ஞேயா ரிசோ வை கோப கன்யகா :*

*தேவகன்யாச்ச ராஜேந்த்ர தபோயுக்தா முமுக்ஷவ:*
*கோபாலா முனயஸ்ஸர்வே வைகுண்டானந்த மூர்த்தய:*

(மன்னரே, கோபியர்கள் வேதங்கள். அவர்களுடைய பெண்குழந்தைகள் வேத மந்திரங்கள். அவர்கள் எல்லோரும் தபஸ்வினிகள். கோபாலர்கள் எல்லோரும் முனிவர்கள்.) கண்ணன் வேதப்பொருளான பரம் பொருள். கோபகன்னியர்கள் வேதமந்திரங்கள். காதலனுக்கும், காதலிக்கும் இடையே உள்ள பிரிக்க முடியாத பிணைப்பைப் போன்றது. வேதமந்திரத்திற்கும் அதன் பொருளுக்கும் இடையே உள்ள பிணைப்பு மந்திரத்துக்கும் அதன் பொருளுக்கும் (கடவுளுக்கும்) இடையே உள்ள இந்தப் பிணைப்பை வலியுறுத்தத்தான் முனிவர்கள் பரம்பொருளைக் கண்ணனாகவும், பரம்பொருளை இன்னதென்று எடுத்துக்கூறும் வேதமந்திரங்களைக் காதலியராகவும் கற்பனை செய்து காவியம் இயற்றியுள்ளனர். கண்ணனுக்கு உடல் இல்லையென்று மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

*நித்யானந்த்தனு: சௌரி: யோ அசரீரி பாஷ்யதே.*

(சௌரி, அதாவது கண்ணன், அழியாத ஆனந்த உருவம் அவனுக்கு உடல் கிடையாது)

கண்ணனை நம்முடைய புறக்கண்களால் காணமுடியாது. அகக்கண்களால் தான் காண முடியுமென்றும் தெளிவாகக் கூறியுள்ளார்.

*ஸேந்த்ரியோபி யதா ஸதர்யஸ்தேஜஸா ந்நேப லக்ஷ்யதே.*
*ததா காந்தியுத: க்ருஷ்ண: மாஹேயதி த்ருவம்*
*ன தஸ்ய ப்ராக்ருதீ மூர்த்தி: மேதோமாம்ஸாஸ்தி ஸம்பவா*

(நமக்குக் கண்கள் இருக்கின்றன என்றாலும் ஸூர்யனின் ஒளி காரணமாக ஸூர்யனைய் நேரடியாகப் பார்க்கும் திறமை கண்களுக்கு இல்லை. அதே போல கண்ணனுடைய பேரொளி காரணமாகக் கண்ணனை யாரும் புறக்கண்களால் காணமுடியாது. கண்ணனுக்கு சதையும், எலும்பும், கொழுப்புமுடைய புறவுடல்இல்லை. அதாவது கண்ணனை ஞானக் கண்களால் மட்டுமே காணமுடியும்.)

கண்ணனுக்கும் உடல் இல்லை. கோபகன்னியர்களுக்கும் உடல் இல்லை. எனவே கண்ணன் பலபெண்களைப் புணர்ந்தவன் என்றெல்லாம் சொல்வது முட்டாள்த்தனம்.

கோபர்கள் அல்லது கோபாலர்கள் யார்? 'கோ' என்றால் 'பசு' என்றும், கோபாலர்கள் பசுக்களை மேய்க்கும் இடையர்கள் என்றும் பொருள் சொல்வது வழக்கம். அது வெளியே தெரியும் புறப்பொருள். உண்மையான அகப்பொருள் வேறு. 'கோ' என்ற சொல்லுக்கு வேதம், ஒளி, ஒளிக்கதிர் என்றெல்லாம் பொருளுண்டு. கோபாலன் என்றால் வேதத்தைக் காப்பாற்றுபவன் என்பது பொருள். வேதங்களை நன்றாகக்கற்று வேதப் பொருளை உணர்ந்த முனிவர்கள் அல்லது ஞானிகள் தான் கோபாலர்கள். அத்தகைய ஞானிகளின் உள்ளத்திலிருந்துதான் வேத மந்திரங்கள் தோன்றுகின்றன. எனவே வேதமந்திரங்கள் கோபாலர்களின் புதல்வியர்கள் — அதாவது கோபகன்னியர்கள்.

கண்ணன் தோன்றிக் காமம், கோபம், பெருமை போன்ற அரக்கர்களை அழித்தப் பிறகு பக்தன் இரண்டாவது படியிலிருந்து மூன்றாவது படியான த்ரேதாயுகத்தை அடைகிறான். இந்த நிலையை அடைந்த பக்தன் தன்னுடைய உடலுக்காக எதையும் செய்வதில்லை. கடவுளை அடைவதற்கான வழியில் முழுக் கவனத்தையும் செலுத்துகிறான். இந்த நிலையில்தான் ராமன் பக்தனுடைய உள்ளத்தில் தோன்றுகிறான். அயோத்தி என்பது பக்தனின் இதயம். தசரதன் யாகம் செய்த பிறகு ராமன் தோன்றுகிறான். தசரதன் என்பது பத்து உறுப்புகளுடைய மனித உடல். செவி, உடம்பின் தோல், கண், நாக்கு, மூக்கு என்ற ஐந்து கர்மேந்திரியங்களும்தான் பத்து உறுப்புகள். வேள்வியால் தூய்மையாக்கப்பட்ட உறுப்புகளோடு கூடிய பக்தனின் இதயத்தில் ராமன் தோன்றி இலங்கைக்குச் சென்று ராவணனையும், கும்பகர்ணனையும் அழித்து விபீஷணனை இலங்கைக்கு அரசனாக்குகிறான். ராவணன் என்பது ஆணவம், அதாவது அகங்காரம். அகங்காரம் அழியாவிட்டால் பக்தன் சமாதி நிலையை அடைய முடியாது. காமம், கோபம், பெருமை போன்ற தீய குணங்கள் அழிந்த பிறகும் அகங்காரம் ''நான் நல்லவன்'' என்ற எண்ணத்துடன் இருந்து கொண்டேயிருக்கும். அகங்காரம் கடைசி வரை இருக்கும். அகங்காரம் அழிந்த உடனே சமாதி நிலை கைகூடும்.

ராவணன் (அகங்காரம்) ரஜோகுணம்: கும்பகர்ணன் தமோகுணம். ஞானத்தை மறைக்கும் இருள் அல்லது மயக்கம் தமோகுணம். இலங்கை என்பது ஸூக்ஷ்ம சரீரம் — அதாவது மனம் பக்தனுடைய மனதிலுள்ள தமோகுணத்தையும் ரஜோகுணத்தையும் அழித்து ஸத்வகுணத்தை (விபீஷணனை) மனதின் அரசனாக முடிசூட்டுகிறான் ராமன். ''உலகம் உள்ள வரை நீ இலங்கையின் அரசனாக இருப்பாய்'' என்று ராமன் அருள்புரிகிறான்.

அத்துடன் பக்தன் நான்காவது படியான க்ருதயுகத்தை அடைகிறான். 'க்ருதம்' என்ற சொல்லுக்கு 'செய்து முடிக்கப்பட்டது' என்பது பொருள். யுகம் என்றால் யோகம். அதாவது கடவுளுடன் சேர்த்தல் இனி மேல் அவன் செய்ய வேண்டிய காரியம் ஒன்றுமில்லை.

அதாவது அழிக்கப்பட வேண்டிய அழுக்கு ஒன்றும் அவனுடைய உள்ளத்தில் இல்லை. அழுக்கே இல்லாத அவனுடைய உள்ளத்தில் என்ன இருக்கிறது? ஒன்றும் மில்லை. கடவுள் மட்டும் இருக்கிறார். ஆனந்த ஸ்வரூபனை கடவுளை உள்ளத்திலே கண்டு இருபத்தி நான்கு மணிநேரமும் பேரின்பத்தில் லயித்திருக்கிறான் அவன்—ஹனுமானைப் போல. அந்தநிலைதான்ஸவிகல்பஸமாதி. கடவுளின் உருவத்தை உள்ளத்திலே கண்டுகளிக்கிறான் பக்தன். உடல் அசையாமல் உயிரற்ற நிலையில் இருக்கும். ஆனால் உள்ளத்திலே கடவுளின் உருவம் ஒளி வீசுகிறது. இந்த நிலை தாண்டி, கடவுளின் உருவம் மறைந்து, பக்தன் கடவுளுடன் இரண்டறக் கலக்கும் நிலை வரும். அதுதான் நிர்விகல்ப சமாதி. நிர்விகல்ப சமாதிநிலை அடையும் வரை என்பது ''உலகம் உள்ள வரை'' என்பதன் பொருள். க்ருதயுகத்திலுள்ள பக்தனின், அதாவது ஸவிகல்ப சமாதிநிலை அடைந்தவனின் உள்ளத்தில் ஸத்வகுணம் நிறைந்து நிற்கிறது. அங்கே

---

**ஒருவர்:-** (வழியில் ஒருவரிடம்): ஏன் சார் ஆசுபத்திரிக்கு இந்த வழியாகத்தானே போகணும்?

**மற்றவர்:-** ஆமாம் ஒரு பெரிய மரம் ஒண்ணு வரும்; அதுக்குப்பக்கத்திலே தான் ஆசுபத்திரி....... ஏன் கேட்டு விட்டு நிக்கிறீங்க.

**வழிகேட்டவர்:-** (மனநிலை குழப்பத்தில்) மரம்தான் வருமே அது வரை நடப்பானேன்? அதுக்குப் பக்கத்தில்தானே ஆசுபத்திரி....?

ஆ. முரளிசுப்பிரமணியன்

---

கொஞ்சம் கூட ரஜோகுணமோ, தமோகுணமோஇல்லை. ராமகிருஷ்ண பரஹம்ஸரை இந்த நிலைக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். நிர் விகல்ப சமாதி நிலை வரும் பொழுது ஸத்வகுணம் அழிந்துவிடும். பக்தன் குணமே இல்லாத நிர்குணப்ரம்மத்துடன் ஒன்றிவிடுகிறான்.

ஸத்வகுணம் ஸத்தை, அதாவது உண்மைப்பொருளைக் காட்டும். அமைதியும் ஆனந்தமும் தரும். ரஜோகுணம் அகங்காரத்தையும், ஆசையையும் தூண்டும். தமோகுணம் ஒளியை மறைக்கும் இருள். சோம்பலும் மயக்கமும் நல்லதை அழிக்கவேண்டும் என்ற எண்ணமும் தமோகுணத்திலிருந்து உண்டாகின்றன.


கதை வடிவில் ஆன்மீக நெறியைப் புகட்டும் நூல்கள் இதிஹாஸங்களும், புராணங்களும் என்று அறிந்து அந்த முறையில் அவற்றை அணுகினால் முரண்பாடுகள் இருக்காது.

# வெங்காயப் பாட்டு

கவிஞர் பெ. வேலு, தாரமங்கலம்

இளஞ்சிவப்பு மெல்லியளே !
ஆதி மனிதர்
ஆடையின்றித் திரிந்தார்,
அன்றைக்கே
சருகு சேலை கட்டியவள் நீதான்!
உன்
நிறத்தைக் கடன் கேட்காததால் தான்
கிளியோ பாட்ரா
கறுப்பு வில்லாகவே
காலத்தை வளைத்தாள்.
உன்னைப் பார்க்கின்ற
போதெல்லாம்
என்னைக் கையெடுத்துக்
கும்பிடுவது போலவே
காட்சி தெரிகிறது.
எந்த வரத்தைக் கேட்க
இப்படியோர் கும்பிடு போடுகிறாய்?
உன்னைக் கடவுளென்பேன்
தேடத் தேட
ஒன்று மில்லாமல் போவதால்.
ஒன்று மில்லாத ஒன்றுக்கே
ஒரு நூறு ஆடைகளைப்
போர்த்திருக்கிறாயே
என்ன ரகசியத்தை
இப்படிக் காக்கிறாய்?
பெண் குலத்தை
உன்னால் மட்டுமே
கண்ணீர் விடச் செய்ய முடிகிறது.
அங்கத்தைத் திறக்கிறார்களே என்று
அவர்தம் கண்களுக்கு
இப்படியோர் தண்டனையா?
எரிச்சல் தரும் குளிர்ச்சியே!
சூட்டைத் தணித்தது போதும்
கொஞ்சம் சுறு சுறுப்பு தந்து
நாட்டை முடுக்கி விடு!

# மனுநீதிக்கு மேல்?



காசியபன்

-:பாத்திரங்கள்:-

அரசன், அரசி, இளவரசு, வாசந்தி, காவலாளர்கள்.

## அரங்கம்

அரசனின் அரண்மனையில் விசாலமான அறை.

**அரசி:** வாசந்திகா !

*[வாசந்திகா என்ற சேடி வருகிறாள்]*

**வாசந்திகா:** மகாராணி !

**அரசி:** வாசந்திகா, எத்தனை தடவை நான் உன்னிடம் சொல்ல வேண்டும், என்னை மகாராணி, மகாராணி, அரசி என்றெல்லாம் அழைக்க வேண்டாம் என்று? உன்னைப் பணிப் பெண் போலவா நடத்துகிறேன்? மகளைப் போலல்லவா வளர்த்துகிறேன்? அம்மா என்று கூப்பிட்டால் போதும் என்று சொல்லியிருக்கிறேனா இல்லையா?

**வாசந்:** சொல்லிருக்கிறீர்கள் மகாரா—அம்மா!

**அரசி:** பின் ஏன் அப்படி கூப்பிடுகிறாய்? மகாராணி... மகாராணி...அப்படி நீ அழைக்கும்போது உனக்கும் எனக்கும் இடையே வெகு தூரம் இருப்பது போலத் தோன்றுகிறது.

**வாசந்:** அம்மா, இது பழக்க தோஷத்தினால் ஏற்படுகிறது. நீங்கள் இந்த சோழ சாம்ராஜ்யத்தின் அரசி. நானோ வெறும் ஏழை குடிமகன் ஒருவனின் ஏழாவது மகள். தரித்திரத்தில் பிறந்து தரித்திரத்தில் வளர்ந்து, செல்வந்தர்களைக் கண்டு பல்லிளித்துக்காட்டி வாழமுயலும் வர்க்க பரம்பரை நாங்கள். அதனால் மகாரா—அம்மா எத்தனை சொன்னாலும் எங்கள் பழக்கமே வருகிறது. நமக்கு இடையே உள்ள தூரமும் இருக்கத்தான் செய்யும். அதனால் எப்போதாவது வாய்தவறி மகாராணி என்று வந்துவிட்டால் மகாரா — அம்மா, நீங்கள் பொறுத்தருள வேண்டும்.

**அரசி:** அடியே,வாசந்திகா, நீ சொல்வதைக்கேட்டால் இந்த சோழ சாம்ராஜ்யத்தில் தரித்திரர்கள் இருக்கிறார்கள் என்று அல்லவா தெரிகிறது. அது எப்படி முடியும்? ஈவோரும் இல்லை, இரப்போரும் இல்லையால் என்று கவிகள் பாடிய கோசலம் போல் அல்லவா இந்த காவிரி நாடு அதுவும் இந்த நாட்டை ஆளும் அரசன், என் கணவன், தர்ம தேவதையே அல்லவா? அப்படி இருக்க, இந்நாட்டில் ஏழை, பணக்காரன் என்றெல்லாம் எப்படி இருக்க முடியும்?

**வாசந்,** அம்மா, அரசன் தர்மமூர்த்தியே தான். அதுக்கு சந்தேகமே இல்லை. இங்கே வந்து இந்த ஜன்னல் வழியாகச் சாலையைப் பாருங்கள். ஒரு நொண்டிப் பிச்சைக்காரன் போகிறதைப் பாருங்கள்.

*[அரசி எழுந்து ஜன்னல் வழியாகப் பார்க்கிறாள்.]*

**வாசந்:** பார்த்தீர்களா? இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லே. உலகத்தில் எப்போதும் தர்மம் செய்பவர்களும் அதைப் பெறுபவர்களும் இருக் கத்தான் செய்வார்கள். இது போன்ற வித்தி யாசங்கள் இல்லாமல் எல்லோரும் ஒரு போல இருந்தார்களானால், பின் தர்மம் தன்னையே காத்துக் கொள்ளும். அதைக் காப்பாற்ற அரசு வேண்டியதில்லே. அல்லவா?

**அரசி:** நீ ரொம்ப சாமர்த்தியமாகப் பேசுகிருயடி. உனக்கு பதில் சொல்லுவது சிரமம்தான், ஏழை பணக்காரன், திடமாய் இருப்பவன், மூடவன், ஆரோக்கியமாக இருப்பவன், ரோகி இப்படி எல்லாம் இருப்பதுக்கும் தர்மத்துக்கும் என்ன சம்பந்தம்!

**வாசந்:** அம்மா, அது பெரிய கேள்வி. என்னேப்போல உள்ளவர்களுக்கு அதுக்கு பதில் சொல்ல முடியு மா? நீங்கள் அரசையே கேட்க வேண்டும்.

*(அரசன் இதைக் கேட்டுக் கொண்டு வருகிருன்)*

**அரசன்:** அரசையே கேட்க வேண்டுமா? அரசையே என்ன கேட்க வேண்டும்?

*[அரசியின் பக்கத்தில் அமர்கிருன்.]*

**அரசி:** நம் நாட்டில் ஏழை பணக்காரர்கள் எல்லாம் இருக்கிருர்கள் என்கிருள் வாசந்திகா. தங்க ளேப் போன்ற தர்ம தேவதையே நாடாளும் போது எப்படி ஏழைகள் என்ற ஒரு வர்க்கம் நாட்டில் இருக்க முடியும் என்று நான் கேட் டேன். அதுக்குத்தான் அவள் சொல்கிருள் உங் களே கேட்க வேண்டுமென்று.

**அரசன்:** நல்ல கேள்விதான், சந்தேகமில்லே. பிரிய முள்ளவளே உனக்கு ஒன்று தெரியுமா? கேள்வி கள் கேட்பது எளிது. விடைகள் சொல்வது தான் கடினம். நசிகேதசின் கதை கேட்டி ருக்கிருயே? மனிதன் மனசில் எழும் எல்லாக் கேள்விகளேயும்அவன் கேட்டுவிடுகிருன். ஆனல் யமதர்ம ராஜனிலிருந்து, எல்லோரும் விடை சொல்லிக் கொண்டுதான் இருக்கிருர்கள். அவை திருப்தியைத் தருகின்றனவையாக இருக்கின்றனவா? இல்லே, சில கேள்விகளுக்கு விடைகளே இல்லே. இதை மனிதன் புரிந்து கொள்வதே இல்லே. அவன் கேட்டுக்கொண் டே இருக்கிருன், இருப்பான். இம்மாதிரி ஒரு கேள்விதான் இந்த ஏழை பணக்காரன் விஷய மும். நமக்குத் தெரிந்த வரையில் தரித்திரர் களும் தனவந்தர்களும் இல்லாத காலமே கிடை யாது.

**அரசி:** அப்படியானல், ஆர்யபுத்திரா, நீங்கள் நீதி வழுவாமல், மனு சொன்னபடியே நாடு ஆளுகி றீர்கள் என்பதின் பொருள் என்ன?

**அரசன்:** பிரியே, இது என்ன பெரிய கேள்வி? எல்லோ ரும் ஒரே போல இருக்கும்படி செய்வதன்று நீதி.

**அரசி:** அப்படியா அரசே? நான் பிறந்த சேரநாட்டில் மக்கள் பாடுவார்கள்: 'மாவேலி நாடு வாழும் காலம் மனிதர்கள் எல்லோரும் ஒன்று போலே" என்று.

**அரசன்:** அது கிருதயுகத்தைக் குறிப்பிடுகிறது. ஆனல் நாம் தெரிந்த அளவில், இந்த மனிதர்களால் ஆன உலகம் இப்படியேதான் இருந்திருக்கிறது இதை உணர்ந்து நம் முன்னேர்கள் இந்த உலகத்தை எப்படி நடத்த வேண்டும் என்று நீதிகள் வகுத்திருக்கிருர்கள். ஏட்டில் எழுதி வைத்து விட்டும் போயிருக்கிருர்கள். அந்த ஏட்டுச் சுவடிகளின்படி இழை பிசகாமல் காரி யங்களே நடத்துவதுதான் என் கடமை.

**அரசி:** அது பெரிய பாரம் ஆயிற்றே?

**அரசன்:** அது அவ்வளவு சிரமமானது ஒன்றும் அல்ல. எனக்கு உதவியாக மந்திரிகள், உப மந்திரிகள், காரியதரிசிகள், உப காரியதரிசிகள், உதவி காரியதரிசிகள், நீதிபதிகள், ஒற்றர்கள், சிப்பந் திகள் இருக்கிருர்கள். இவர்கள் எல்லாம் அவர்களுடைய வேலேகளே ஒழுங்காகச் செய்கி ருர்களா என்று மேல் நோட்டம் பார்த்துக் கொண்டு இருந்தால் போதும் நான். அரசு நடந்து கொண்டிருக்கும்.

**அரசி:** பின் எதுக்காக அரண்மனே வாசலில் நீங்கள் அந்த மணியைக் கட்டும்படிசெய்திருக்கிறீர்கள்?

**அரசன்:** *[சேடியைப் பார்த்து]*, வாசந்திகா, நீ போய் கொஞ்சம் திராட்சை ரசம் கொண்டுவா. உன் அம்மாவிடம் பேசிக் கொண்டிருந்தால் தொண் டைவறண்டுபோகும். *[வாசந்திகாபோகிருள்.]* பிரியே, அந்த ரகசியம்உனக்குச் சொல்கிறேன் கேள். நான் பரம்பரை அரசன். சேர பாண்டி யர்களுடன் தொன்று தொட்டு வரும் வம்சம். என்னேயோ, என்னேப் போன்றவர்களேயோ மந்திரிகளே மாற்றுவது போல அவ்வளவு எளி தில்மாற்றமுடியாது. மாற்றவேமுடியாது என்று கூடச் சொல்லலாம். என் தாயாதிகளில் யாராவ வது விஷம் தந்தோ, அல்லது மக்கள் கலகம் செய்தோ தான் மாற்ற முடியும். அதனல் நான் எப்பொழுதும் என்னேயும் என் சூரிய வம்சத்தை யும் காப்பாற்றுவதில் ஜாக்கிரதையாக இருக்க

வேண்டும். இந்த ஜாக்கிரதை என்பது என்ன? நான் தர்மத்தின்படி நடப்பது. மனுநீதிநூல் தர்மம் என்ன என்று காட்டுகிறது. அதன் படிக்கு நடந்து விடுகிறது. அவ்வளவுதான், தர்மம் தலைகாக்கும். ஆனால் இதுக்கு உதவும் மந்திரிகளும் மற்று பரிவாரங்களும் தர்மத்தின் வழியில் சரியாக நடக்கிறார்கள் என்று தெரிய வேண்டாமா? அவர்களுக்குத் தவறு ஏற்படாதா? நம்முடைய நீதிபதிகள் எல்லோரும் ஒரு தவறு கூடச் செய்யமாட்டார்கள் என்று சொல்ல முடியுமா? மனிதன் மனிதனாக இருக்கும் வரையிலும் பிழைகள் செய்யத்தான் செய்வான். அந்தப் பிழைகள் யாருக்கு இழைக்கப் பட்டதோ அவன் என்னைத் தெரிவிக்கத்தான் இந்த மணியைக் கட்டும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். அப்போது நானே நேரில் விசாரித்து நீதி வழங்கலாம் அல்லவா?

*[வெளியில் ஒரு தேர் வரும் சப்தம் கேட்கிறது.]*

அரசி: உங்களுக்குத் தவறு ஏற்படாதா?

அரசன்: எனக்குத்தான் இருக்கிறதே மனுஸ்மிருதி. அது பிசகுமா?

அரசி: நீங்கள் கெட்டிக்காரர்தான். அதுதான் உலகம் உங்களை நீதி தவறு மன்னன் என்று புகழ்கிறது.

அரசன்: *[பெருமிதத்துடன் சிரித்துக் கொண்டு]* இந்த வழியை, நான் இளவரசாக இருக்கிறபோதே யோசனை பண்ணி வைத்திருந்தது தான். என் அப்பாவுக்கு அவ்வளவு விவரம் போதாது.

அரசி: உங்கள் மகன்?

அரசன்: பார்த்துத்தான் சொல்ல வேண்டும்.
*[இளவரசு அவசரமாக வருகிறான்]*

இளவரசு: வணக்கம் அப்பா. வணக்கம் அம்மா. நான் இப்பொழுது உறையூர் வரையிலும் போய்வரலாம் என்றிருக்கிறேன். அங்கே மல்லர்கள் சண்டைப் போட்டி விழாவொன்று திறந்து வைக்க ஒப்புக் கொண்டிருக்கிறேன். இன்று சாயங்காலம் ஆரம்பமாகிறது. நான் போய் வருகிறேன்.

அரசன்: இது என்னடா இவ்வளவு அவசரம்? நீ இந்த நாட்டு இளவரசு என்ற ஞாபகம் உனக்கு இருக்கிறதா? மல்லர் சண்டையாம்! திறந்து வைக்கப் போகிறானாம்! நாளை கோழிச் சண்டை திறந்து வைக்கப் போகிறேன் என்பாய்! உன் மதிப்பையும் நிலையையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற அறிவே உனக்கு இல்லை போல இருக்கிறதே?

இளவரசு: என் நிலைமையையும் அந்தஸ்தையும் காப்பாற்றாமலா இருப்பேன்? ஆறு மாதங்களுக்கு முன்னாலேயே இந்தப் போட்டியை நடத்துபவர்கள் நான் திறந்து வைக்க வேண்டுமென்றுவேண்டுகோளை அனுப்பியிருந்தார்கள். என் அந்தரங்க காரியதரிசி அதை உள்நாட்டு இலாகாவுக்கு அனுப்பி, அவர்கள் வேண்டிய விசாரணை செய்து, வேண்டுகோளை ஒப்புக் கொள்ளலாம் என்றதின் பேரில்தான் நான் சரி என்றேன். மந்திரி நாகை ஆந்தையார் மகாராஜா சமூகத் தெரிவிக்கவில்லையா?

அரசன்: அவன் தெரிவித்திருந்தால் நான் கேட்பேனா? அந்த ஆந்தையார் என்ன மந்திரி? சுத்த உபயோகமற்றவன். அவனை உள்நாட்டு இலாகாவிலிருந்து போக்குவரத்து இலாகாவுக்கு மாற்றிவிடலாம் என்று நினைக்கிறேன்.

அரசி: வேண்டாம், வேண்டாம் அப்போது நாட்டில்

போக்கு வரத்து நிலைத்துவிடும். இப்போது ஏதோ சுமாராக சாலைகளிலும் இடைவழிகளிலும் வண்டிகளும் குதிரைகளும் போய்வந்து கொண்டிருக்கின்றன. அவன் வந்தால் அவ்வளவுதான் எல்லாம் தள்ளு வண்டியாகிவிடும். அவனை எதுக்காக மாதிரியாக வைத்திருக்கிறீர்கள்? நாகை சுங்க அதிபதியாக போட்டு விடுங்கள்.

அரசன்: அப்போது சுங்கம் சர்க்காருக்கு வந்து சேர்ந்த மாதிரிதான்!

இளவரசு: பழைய தஸ்தாவேசு காப்பாளராகப் போடலாம்.

அரசன்: அது நல்ல யோசனை! கரப்புக்களும், கரையானும் கூட சாகாமல் இருக்கும். அகிம்சை வழியில் சிறிது முன்னேற்றம் காண்பித்தாற் போலவும் இருக்கும்.

அரசி: நீ உறையூர் போக சதுரங்க சேனை தயாராகி விட்டதா?

இளவரசு: அரசாங்க நிர்வாகத்தில் சிக்கனம் வேண்டுமென்று அப்பா உத்தரவு போட்டிருக்கிறாரே? அதன் படிக்கு நான் ஆடம்பரம் ஒன்றுமில்லாமல் என் தேர் மட்டுமே கொண்டு போகிறேன், சாரதியும் இரண்டு மெய்க்காப்பாளர்களும் மட்டும்என்னுடன் வருகிறார்கள்.

அரசன்: இன்னும் கொஞ்சம் கூட பந்தோபஸ்து வேண்டாமா? நீ இந்த நாட்டில் இரண்டாவது நபர் ஆயிற்றே?. எவனாவது கல்லையோ, கவணையோ எறிந்தான் ஆனால்?

இளவரசு: என் மேலா? நான் தான் வாலிபர்களில் செல்வம் ஆயிற்றே? மக்கள் என்னிடம் என்னவெல்லாம் எதிர்பார்க்கிறார்கள்! அவர்கள் என் ஆட்சிக்காக விருப்பத்துடன் காத்துக் கொண்டல்லவா இருக்கிறார்கள்?

அரசன்: பேஷ். அவர்களுக்கு என் ஆட்சி போதும்என்று ஆகிவிட்டதா? நீதியும் தர்மமும் தவறாமல் நான் ஆளுவது அவர்களுக்குப் பிடிக்கவில்லையா?

இளவரசு: அதில் அவர்களுக்கு சந்தோஷம் தான். ஆனால் அமிர்தமும் அளவுக்கு மேல் ஆனால்?

அரசன்: ஓகோ, நீதியாக ராஜ்ய பரிபாலனம் பண்ணுவதற்கும் அளவு உண்டு என்கிறாயா? என்ன முட்டாள்தனம்! எம் வம்சத்து இராமன் பல்லாயிரக்கணக்கான வருஷங்கள் அறநெறி தவறாமல் நாட்டை ஆளவில்லையா?

இளவரசு: அதில் சலிப்புத்தட்டித்தான் அந்த வண்ணாரப் பயல் ஒருவன் எதையோ சொல்லி, சீதையை காட்டுக்கு அனுப்பும்படிச்செய்து, ஒரு சின்ன பரபரப்பை உண்டாக்கினான். ஒரே சமாதானமும் தர்மமும் ஆனால் மனிதன் எப்படி வாழ்வான்? அவனுக்கும் அடிக்கடி ஒரு சின்ன மாற்றம் வேண்டுமென்றுதான் தோன்றும்.

அரசன்: நீ சொல்லுவது புதிதாக இருக்கிறது. தர்மத்தைப் பற்றி இதுக்குமுன் யாரும் இது போலச் சிந்தனை செய்ததாகத் தெரியவில்லை. *(திடீரென ஞாபகம் வந்து)* அந்த வாசந்திகா எங்கே? திராட்சரசம் கொண்டுவர இவ்வளவு நேரமா? *(மணி அடிக்கிறார்)*

*(வாசந்திகா மதுபாத்திரமும் கிண்ணங்களும் ஒரு தட்டில் கொண்டு வருகிறாள்)*

அரசி: ஏனடி இவ்வளவு நேரம்?

வாசந்: மதுசாலையில் காவற்காரர் யவனமது எடுத்து வர தாமதமாகி விட்டது.

அரசன்: யவனமது எதுக்கு? உள்ளூர் சரக்கே எமக்கெல்லாம் போதுமே. சாதாரணமாக நம் சுதேசி சாமான்களையே ஆதரிக்க வேண்டும். வெளி நாட்டு பிரதிநிதிகள், அரசர்கள் யாராவது வந்தால் மட்டும் யவனமது எடுத்தாற் போதுமே.

வாசந்: இளவரசின் தேர் வரும் ஓசை கேட்டது. அவருக்கு யவன மதுதான் பிரியம் என்று அந்தக் காவலருக்குத் தெரியும்.

இளவரசு: யவனமதுவின் ஜோர் உள்ளூர் சரக்குக்கு இல்லை, அப்பா. சரி, வாசந்திகா, எனக்கும் ஒரு பெரிய கிண்ணம் நிறைய ஊற்றிக்கொடு வழிக்காயிற்று.

அரசி: எனக்கும் ஒரு சின்னக் கிண்ணத்தில்...

*(வாசந்திகா எல்லோருக்கும் கிண்ணங்களில் மது பகர்ந்து கொடுக்கிறாள்)*

அரசன்: *(மதுவை அருந்திக் கொண்டு)* நமது ராஜ புரோகிதர் நாட்டில் மதுவிலக்குக் கொண்டு வர வேண்டும் என்கிறார். அதனால் மக்களுடைய பொருளாதாரம் சீர்படுமாம்.

அரசி: மனு நீதியில் மதுவிலக்கைப் பற்றிஎன்னசொல்லியிருக்கிறது?

அரசன்: ஒன்றும் சொன்னதாகத் தெரியவில்லை.

இளவரசு: அப்போது ஆசாரியாரிடம் மனு சொன்னதைத் தான் செய்வோம். சொல்லாததைச் செய்யமாட்டோம் என்று விட்டால் போகிறது.

அரசன்: அப்படித்தான் சொன்னேன். அதுக்கு அவர் வேறு ஏதோஸ்மிருதியில் சொல்லியிருப்பதாகச் சொன்னர்.

அரசி : இந்த மனு நீதியே நமக்குப் போதும். வேறு நீதிகளையும் நாம் புகுத்தப்புறப்பட்டால் ஜனங்கள் தாங்கமாட்டார்கள்.

இளவரசு: வாசந்திகா இந்தக் கிண்ணத்தை இன்னும் நிறை.

அரசி : போதுமடா. நீ யாத்திரை போகிருய். ஜாஸ்தி குடிக்காதே.

இளவரசு: இல்லே அம்மா, இரண்டு கிண்ணமாவது போட்டுப் போனுல்தான் ஜோராக இருக்கும்.

*(வாசந்திகா இளவரசின் கிண்ணத்தை நிறைக்கிருள்.)*

அரசி : எதுக்கும் நீ குடித்து விட்டு தேர் ஒட்டாதே பாகனே ஒட்டட்டும்.

இளவரசு: (மது அருந்திக் கொண்டு) நான் ஒட்டினுல் என்ன அம்மா? ஆறு கிண்ணம் அடிச்சாலும் நான் தேர் ஒட்டினுல் ஒரு பிசகும் வராது கவலேப்படாதே.

அரசி : எதுக்கும் ஜாக்கிரதையாக இரு.

இளவரசு: சரி, அம்மா, அப்பா நான் போய் வருகிறேன் தாமதமாகி விட்டது. உறையூரில் அத்தமனத்துக்கு இரண்டு நாழிகைக்குமுன் இருக்கவேண்டும். வருகிறேன். (போகிருன்)

அரசி: மகனுக்கு அவசர புத்தி.

அரசன்: இன்னும் பக்குவம் ஆகவில்லே. அவன் வயசில் நான் அரசாட்சி ஏற்று எட்டு வருஷம் ஆகியிருந்தன. இப்போது இருக்கிற பேரும், புகழும் அப்போதே வந்துவிட்டது. பாண்டியனும், சேரனும் என்னே வணங்குபவர்கள் ஆகி விட்டார்கள். தொண்டை மண்டலத்தாரும் மஹிஷ நாட்டாரும் அஞ்சினுர்கள். ஈழத்தரசன் திரை அனுப்பத் தொடங்கி விட்டான். என் செங்கோலின் பிரதாபமும் சீர் சத்தியும், இந்தக் காலே சூரியனின் கிரணங்களேப் போல உலகமெங்கும் பரவி விட்டது.

அரசி: ஆர்யபுத்திரா, நீங்கள் குழந்தையிலிருந்தே அறம்காக்கும் மன்னனுக இருக்க உங்களேத் தயார் பண்ணி கொண்டு விட்டீர்கள். அதன் விளேவைத் தருந்த சமயத்தில் பெற்றீர்கள். இப்போது நீங்கள் அடைந்திருக்கும் நிலே இன்னும் சில நேரத்தில் அந்த சூரியன் அடையும் உச்ச நிலே போல ஆகிவிட்டது.

அரசன்: ஒரு நிலேமையை அடைவது சிரமம்தான். ஆனுல் அதைக் காப்பாற்றுவது இன்னும் சிரமமானது.

*(வெளியில் ஆரவாரம் கேட்கிறது. அரசனும், அரசியும், வாசந்திகாவும் ஜன்னல்கள் வழியாகப் பார்க்கிருர்கள்)*

அரசன்: ஜனங்கள் கூட்டம் கூட்டமாக எதையோ பற்றி பேசிக் கொண்டு போகிருர்களே? எதையோ பற்றி தீவிரமாக விவாதம் செய்து கொண்டு போவது போலத் தெரிகிறது.

அரசி : சிலர் கும்பல் கும்பலாக நின்றும் பேசுகிருர்கள்.

அரசன்: அவர்களேக் காவல் துறையாளர்கள் போகும் படி கோருகிருர்கள். வாசந்திகா நீபோய் அரண்மனே காரியஸ்தனிடம் சொல்லி என்ன நிகழ்ந்தது என்று தெரிந்து கொண்டு வா.

வாசந்: ஆகட்டும் அரசே (போகிருள்)

அரசி: ஒன்றும் இராது, கூட்டம் கலேந்து விட்டது பார்த்தீர்களா? சில நாய்களும் மாடுகளும்தான் தெருவில் திரிகின்றன. தெரு வெகு அமைதியாக இருக்கிறது.

அரசன்: இந்த அமைதிதான் எனக்குப் பயத்தை உண்டாக்குகிறது. மக்கள் சாதாரணமாக போய் வந்து கொண்டிருந்தால் நாம் பயப்பட வேண்டியதில்லே. ஆர்ப்பாட்டம் பண்ணினுலும் பயம் இல்லே. விஷயம் என்ன என்று தெரியும். ஆனுல் இந்த மயான அமைதி—இது பயத்தைத் தருகிறது.

அரசி: நீங்கள் எதற்குப் பயப்பட வேண்டும், ஆரிய புத்திரா? நடுநிலேமை தாங்கி, தர்மத்தையே தலேயில் வகித்து, மக்களின் தந்தை போல இருக்கும் உங்களுக்கு எதிரி ஏது? நீங்கள் எதைக் கண்டு பயப்பட வேண்டும்?

அரசன்: நீ சொல்லுவது சரிதான் பிரியே! ஆனல் அரசன் என்பவன் எப்போதுமே ஒரு எரிமலேயின் மேல் தான் வசிக்கிருன். அவனுக்கு மனசுக்கு நிம்மதி என்பது கிடையவே கிடையாது.

வாசந்: (வந்து) அரசே! காரியஸ்தர் சென்று விசாரித்து விட்டு வந்து விட்டார். ஒன்றும் பிரமாதமாக இல்லேயாம். ஏதோ ஒரு வீதியில் சின்ன இசைகேடான சம்பவம் ஏதோ நடந்ததாம். ஒரு தேர் ஏறி, ஒரு கன்று செத்துவிட்டதாம். எதிர்

பாராமல் அதைப்பற்றித்தான் ஜனங்கள் பேசிக் கொண்டு போனுர்களாம்,

*(அரசனும் அரசியும் மஞ்சத்தில் உட்காருகிருர்கள்)*

அரசி : இவ்வளவுதானு? ஒரு பெரிய நகரம் என்ருல் இதைப் போன்ற பல நிகழ்ச்சிகள் ஒவ்வொரு நாளும் நடந்து கொண்டுதான் இருக்கும். ஏதாவது பக்கத்துத் தெருவில் நடந்திருக்கும். அது தான் இந்தத் தெரு வழியும் ஜனங்கள் பேசிக் கொண்டு போனுர்கள்.

அரசன்: உம், வெறும் சாதாரண சம்பவம் ஏதாவது இருக்கும். ஜனங்களுக்கும் பேச விஷயம்வேண்டுமே? பேசிக் கொண்டேயிருப்பார்கள். கூட்டம் கூட்டமாக நிற்பார்கள். போக்கு, வரத்துக்கு இடைஞ்சலாக நிற்பார்கள்.

*(டாண், டாண், டாண் என்று நீதி மணி அடிக்கும் சப்தம் மெதுவாகக் கேட்கிறது.)*

அரசன் : *(திடுக்கிட்டு)* யார் நீதி மணி அடிக்கிருர்கள்? வாசந்திகா, உடனே சென்று மணி அடிப்பவரை அழைத்து வா. *(வாசந்திகா போகிருள்)* எத்தனையோ வருஷங்களாக மௌனமாக இருந்து, தூசி படிந்து தொங்கும் அந்த மணி இன்று அடிக்கிறது. இது என் ஆட்சியின் தோல்வியைக் காட்டுகிறது. இல்லையா மகாராணி? அதர்மம் ஒளிந்து விட்டது என்று தற்பெருமை கொண்டிருந்த எனக்கு சவால் விடுகிறது இந்த மணி. அதர்மம் ஒழியவில்லை என்கிறது. எனக்கு வெட்கமாக இருக்கிறது. யார் என் முன் வந்து நிற்கப் போகிருர்களோ ? அவர்களுக்கு என்ன தீங்கு இழைக்கப் பட்டதோ?....

*[அரசன் அங்கும் இங்கும் உலாவுகிருன், பின் மஞ்சத்தில் இருக்கிருன். வாசந்திகா வருகிருள்.]*

வாசந்: அரசே, யாரும் வந்து மணியை அடிக்கவில்லை.. ஒரு பசுமாடு அந்த மணியின் பக்கத்தில் போய் நிற்கவே அதன் கொம்பு முட்டி மணி அடித்திருக்கிறது, அவ்வளவுதான்.

அரசி: அவ்வளவுதானு? நான் ஏதோபெரிய அநீதிக்கு ஆளானவன் யாரோ வந்து மணியை அடிக்கிருன் என்றல்லவா நினைத்தேன். ஒரு மாடு தானு? போகட்டும் *(அரசன் மௌனமாக மஞ்சத்தில் இருப்பதைப் பார்த்து)* ஆரியபுத்திரா, நீங்கள் என்ன பேசாமல் யோசனையில் மூழ்கி இருக்கிறீர்கள்? ஒரு மாடு வந்து மணி அடித்ததுக்காகவா? *(சிரிக்கிருள்.)*

அரசன்: ஏன் அந்த மாட்டுக்கு யாராவது அநீதி நிகழ்த்தியிருக்கக் கூடாதா? மனுநீதி தவருத சோழன் நாட்டில விலங்குகளுக்கு தீங்கு இழைக்கப்படலாமா? அப்படி இழைக்கப்பட்டால் அவை நியாயம் கோரக் கூடாதா? தர்ம ராஜ்யத்தில் தர்மம் கிடைக்கும் என்ற போதம் விலங்குகளுக்கு இல்லை என்று நினைக்கிருயா?
*[மணி இன்னும் பலமாக அடிப்பது கேட்கிறது.]*

அரசன்: அந்த மாடு இன்னும் மணி அடிக்கிறது. *(எழுந்து ஜன்னல் அருகில் சென்று வெளியில் பார்க்கிருர்.)* மகாராணி வந்து பார். அந்த மாடு மணி அருகில் நின்று கொம்பால் மணி அடிப்பதை. இங்கிருந்து நன்ருகத் தெரிகிறது. *(அரசியும் வாசந்திகாவும் ஜன்னல் வழியாகப் பார்க்கிருர்கள்.)* அந்த மாடு நிற்பதைப் பார். அது கொம்பால் மணி அடிக்கிறது. *(மணி யோசை கேட்கிறது.)* பார்க்கப் பரிதாபமாக இல்லையா? அதற்கு ஏதோ துக்கம் நேரிட்டிருக்கிறது. வாசந்திகா நீ காவலாளர்களிடம் சொல்லி அந்த மாட்டுக்கு என்ன நிகழ்ந்தது என்று விசாரித்து வரச் சொல்லி என்னிடம் சொல்.

*[வாசந்திகா போகிருள். மணி அடிக்கும் ஓசை இடை விட்டுக் கேட்கிறது. அரசன் திரும்பவும் ஜன்னல் வழியாக வந்து பார்க்கிருன். அரசி மஞ்சத்தில் வந்து உட்காருகிருள்.]*

அரசி: இந்த மாட்டுக்காக நீங்கள் உயிரை விட்டுவிடுவீர்கள் போல இருக்கிறதே? கறவை நின்ற மாடுகள் ஆயிரக்கணக்காகவே தினமும் கசாப்புக்குப் போகின்றனவே அவற்றைப்பற்றி நீங்கள் வருத்தப்படுவதுண்டா? எத்தனை ஆடுகளும் கோழிகளும் கொல்லப்படுகின்றன? இவற்றுக்கு நீங்கள் இரங்குகிறீர்களா? ஏன் இந்த மாட்டைப் பார்த்தவுடன் மாத்திரம் இந்தக் கனிவு?

அரசன்: (ஜன்னல் பக்கத்திலிருந்து முன்னுக்கு வந்து நீ விஷயம் தெரியாமல் பேசுகிருய். கசாப்புக் கடைக்கு ஆடும் மாடும், கோழியும் வாத்தும் போவது ஒரு தர்மத்தின் பேரில். அர்த்தசாஸ்திர விதிகளின்படி அந்த கொல்லப்படும் ஜந்துக்கள் மனிதர்களுக்கு வேறு விதத்தில் உபயோகமுடையவையாக பரிணமிக்கின்றன. மக்களின் பட்டினியைத் தீர்க்கும் உணவு ஆகின்றன. உணவின்றி மனிதன் வாழ முடியாது. *(மணி யோசை கேட்கிறது)* இங்கே இந்த மாட்டுக்கு ஏதோ தீங்கு யாராலோ இழைக்கப்பட்டிருக்கிறது. மனிதனுலோ, விலங்கினுலோ, தெய்வத்தினுலோ தெரியவில்லை. அது என்ன என்று

அறிந்து, அதற்குத் தகுந்த பரிகாரம் செய்ய வேண்டியது, அரசன் என்ற முறையில் என் கடமை. அந்தக் கடமையைச் செய்து முடிக்கும் வரையிலும் என் மனசுக்கு சமாதானம் ஏற்படாது.

*[மணி அடிக்கிறது. அரசன் ஜன்னல் அருகில் போய்ப் பார்த்து நிற்கிறன். அரங்கத்தில் இருள்காலம் சென்றதைக் குறிக்க. வெளிச்சம் வந்தும் அரசன் முன் போல நடந்து கொண்டிருக்கிறன். அரசி மஞ்சத்தில் உட்கார்ந்து அவரைப் பார்க்கிறள். வாசந்திகா வருகிறள். பேசாமல் தயக்கத்துடன் நிற்கிறள்.]*

அரசன்: என்ன சேதி வாசந்திகா? பேசாமல் நிற்கிறய்?

வாசந்: அந்த பசுவின் கன்று செத்துவிட்டதாம்.

அரசன்: செத்துப் போய்விட்டதா?

வாசந்: ஆம், அரசே.

அரசன்: எப்படி? அகால மிருத்யுவா?

*[வாசந்திகா பேசாமல் நிற்கிறள்.]*

அரசன்: அகால மிருத்யு. நாட்டில் தர்மம் சரிவர நடக்காததினுல்தான் இதுபோன்ற துர்மரணங்கள் ஏற்படுகின்றன.

அரசி: அதனுல் இல்லே, ஆர்யபுத்திரா! அவரவர் ஜன்மாந்தர பாப புண்ணியங்களைப் பொறுத்து இருக்கிறது, இந்த ஜன்மத்தில் தீர்க்காயுசாக இருப்பதும் அற்பாயுசாக இருப்பதும். அதனுல்தான் சித்திர குப்தனின் வள்ளுவன் பூவுதிர பிஞ்சுதிர காயுதிர கனியுதிர என்று பறைசாற்றினன். அந்த நியதிப்படி நடக்கிறது.

அரசன்: பிரியே நீ சொல்வது தவறு. உனக்குத் தெரியாது. ராஜ்யத்தில் மழை பெய்வதும் பெய்யாமல் இருப்பதும், நல்ல கர்மங்கள் நடப்பதும் நடக்காமல் இருப்பதும், துர் மரணங்கள் ஏற்படுவதும் ஏற்படாமல் இருப்பதும், எல்லாம் அரசனைப் பொறுத்து இருக்கிறது. ராஜகாலஸ்ய காரணம் என்று பாரதத்தில் சொல்வது கேட்டதில்லேயா? வாசந்திகா அந்தக் கன்றுக்குட்டி நோய்வாய்ப்பட்டு செத்ததா இல்லே வேறுஏதாவது காரணத்தினுலா?

வாசந்: ஒரு தேர் அதன்மேல் ஏறியதாம். அதனுல் செத்துப் போயிற்றும்.

அரசி: ஓகோ, சாலே விபத்தா? இம்மாதிரி பெரிய நகரங்களில் சாலேகளில் போக்குவரத்து நெருக்கடி இருக்கத்தான் செய்யும். ரதங்கள் மாட்டு வண்டிகள், பார வண்டிகள் எல்லாம் போய் வந்த வண்ணமாக இருக்கும். ஒரு தேரின் சக்கரத்தில் இந்தக் கன்றுக் குட்டி அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. பொறுப்பு இல்லாமல் மாட்டையும் கன்றையும் யார் இப்படித் தெருவில் அவிழ்த்து விட்டார்கள் என்று பார்க்க வேண்டும். அந்த மாட்டின் உடைமையாகத் தான் இருக்கும். பொறுப்பற்றவன். அவன் யாராம் வாசந்திகா?

வாசந்: யார் என்று விசாரித்து வரவில்லே, அந்தக் காவல்காரன். அம்மா, நான் அவனிடம் விசாரித்து வரச் சொல்லட்டுமா?

அரசி: சொல்.

அரசன்: மனிதனுக்கும் அவனுடைய வாகனங்களுக்கும் சாலேயில் போய்வர எவ்வளவு உரிமை இருக்கிறதோ அந்த உரிமை இந்த பசு மாட்டுக்கும் அதன் கன்றுக்கும் உண்டு. வாகனங்கள் ஓட்டுபவர்கள் சாலேயைப் பார்த்து அவற்றை ஓட்ட வேண்டும். கவனமில்லாமல் ஓட்டினுல் இம்மாதிரி விபத்துக்கள் நிகழத்தான் செய்யும். தங்களுக்கு வாகனம் இருக்கின்றது என்ற மமதை. அதனுல் கவனமில்லாமல் ஓட்டுகிருர்கள். அவர்களுக்குத் தகுந்த தண்டனே கொடுக்க வேண்டும். இந்தக் கன்றின்மேல் யார் தேரை ஓட்டினர்கள் என்று தெரியுமா வாசந்திகா? காவல்காரன் விசாரித்தானு?

வாசந்: விசாரித்தான் மகாராஜா.

அரசன்: விசாரித்ததில் யார் என்று தெரிய வந்ததா?

வாசந்: தெரிய வந்தது மகாராஜா.

அரசன்: பின் சொல்வதற்கு என்ன? ஏன் மழுப்புகிருய்? சொல்.

வாசந்: அது..........................

அரசன்: உம்?

வாசந்: அது நம்ம.....................

அரசன்: நம்ம?

வாசந்: உறையூருக்கு இளவரசு போய்க் கொண்டு இருந்தார் அல்லவா? அந்தத் தேர்தான் கன்றின் மேல் ஏறியது.

அரசன்: அந்தத்தேரா ? யார் அதை அப்போது ஓட்டிக் கொண்டு போனுர்கள்?

வாசந்: இளவரசு.

அரசன்:
அரசி: } : இளவரசா?

[வாசந்திகா பேசாமல் நிற்கிருள். மணி அடிக்கும் ஓசை. அரசன் எழுந்து ஜன்னல் வழியாகப் பார்க்கிருன்.]

அரசன்: அந்த மணியோசை கேட்கிறது அல்லவா? [அரசியும் வாசந்திகாவும் ஒருவரை ஒருவர் ஆச்சரியத்துடன் பார்த்து விட்டு ஜன்னல் அருகில் சென்று பார்க்கிருர்கள்.]

அரசி: மாடு போய்விட்டதே அரசே? மணி நிச்சலமாக தொங்க அல்லவா செய்கிறது ?

அரசன்: மாடு போய்விட்டது. ஆனுல் மணியோசை கேட்கிறது.

[மஞ்சத்தில் வந்து உட்கார்ந்து சிந்தனையில் மூழ்குகிருன்.]

என்னைச் சோதனை செய்வதற்காக இந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது.……மனு நீதி தவருத சோழன்……மனு……நீ தி… த வ ரு த …… சோ ழன்…… கடல் கடந்து கடாரம் கொண்ட சோழன்…… சூரிய குலத் திலகம்…… அதோ, அந்த மணி அடிக்கிறது. (மணியோசை கேட்கிறது) உன் காதில் விழவில்லையா மகாராணி? … உன் காதில் விழாது…வாசந்திகா, உனக்கு கேட்கவில்லையா? உனக்கும் கேட்காது. [இப்பொழுதெல்லாம் மணி சப்தம் மெல்லிசாக கேட்டுக் கொண்டு இருக்க வேண்டும்.] அந்த மணியோசை என்னிடம் கேட்கிறது: ஏ சோழ சக்கரவர்த்தியே! உன் மகன் தகாதது செய்து விட்டான். நீ நீதி நிகழ்த்துவாயா?… சோதனை புரிகிறது….சோதனை… அன்று குருக்ஷேத்திரத்தில் அர்ச்சுனன் முன் குரவர்களும் தாதையர்களும், உற்றுரும் உறவினரும் நின்றது, அர்ச்சுனனுக்கு ஏற்பட்ட சோதனை. இன்று எனக்கு …… என் மகன் யாதுமறியா ஒரு கன்றின் மேல் தேரை விட்டு, அதைக் கொன்றிருக்கிருன். அதன் தாய் நியாயம் கேட்கிறது. அரசனே, உன்னுடைய மனு நீதிப்படிக்குநடப்பாயா? அந்த மணி ஓசை. அது காதில் முழங்குகிறது. [மணியோசை மெல்லிசாக கேட்கிறது.] வாசந்திகா, இளவரசு எங்கே தெரியுமா!

[வாசந்திகா பேசாமல் நிற்கிருள்.]

அரசன்: ஏன் பேசாமல் நிற்கிருய்? சொல்.

வாசந்: அரசே, கன்றின் மேல்தேர்ஏறியதும், இளவரசு தேரை நிறுத்தி இறங்கிப் பார்த்தாராம். பின் அங்கே வந்த காரியஸ்தனைப் பார்த்து கன்று யாருடையது என்று விசாரித்து, அந்த உடமைக்கு நூறு மாடும் கன்றும் வாங்கிக் கொடுக்கும்படி உத்தரவு போட்டுவிட்டு உறந்தையைப் பார்த்துப் போனுராம்.

அரசன்: பேஷ், நன்ருக இருக்கிறது!

அரசி: பின் அவன் என்ன பண்ண வேண்டுமென்று நினைக்கிறீர்கள் ஆர்யபுத்திரா! அந்தக் கன்றைக் கட்டிக்கொண்டு அவன் அழுது கொண்டு இருக்க வேண்டுமா! அப்படியானுல் உறையூரில் அரசாங்க வேலை நின்று போகாதா? இளவரசுக்காக எத்தனை ஆயிரம் ஜனங்கள் அங்கே காத்து நிற்கும்? அவன் சமயத்துக்குப் போகாவிட்டால் அவர்களுக்கு என்ன ஏமாற்றம் ஏற்படும்?

அரசன்: அரசாங்க வேலை! பெரிய அரசாங்க வேலை! மல்லர்கள் சண்டையைத் துவக்கி வைப்பது பெரிய அரசாங்க வேலையா?

அரசி: இல்லையா? கட்டிடங்கள், பாலங்கள், ஏன் கக்கூசுகள் கூடத் திறந்து வைக்க நீங்களும் உங்கள் மந்திரிகளும் பெரிய அரசாங்க வேலையாக நினைத்துப் போகவில்லையா? கட்டிடங்களுக்கும் பாலங்களுக்கும் கொத்தனுர்கள் அடிக்கல் போட்டால் போதாதா? கக்கூஸ் அடிக்கல் போட கனம் மந்திரி போக வேண்டுமா? இதுக்கொன்றும் நீங்கள் ஒன்றும் சொல்வது இல்லையே?

அரசன்: அவர்கள் எல்லாம் போகிற போது யாரையாவது கொன்றுவிட்டா போகிருர்கள்?

அரசி: மகன் யாரைக் கொன்ருன்? இவன் ஓட்டிச் செல்லும் தேரின் கீழ் இந்தக் கன்று போய் விழுந்திருக்கும். செத்துப் போயிருக்கும். இதை இவவளவு பிரமாதப்படுத்தும்படியாக என்ன இருக்கிறது. எனக்குப் புரியவில்லை.

அரசன்: உனக்குப் புரியாது, மகாராணி, உனக்குப் புரியாது. மட்டுமல்ல பெண்களுக்கே தர்மம் புரியாது. ஏன், அதுக்கு அவர்கள் எதிரிகள் என்றே சொல்லாம். அன்று தவத்தில் நின்று விசுவாமித்திரனைக் கலைக்கச் சென்றவளின் இனங்கள்தானே நீங்கள்? எதுவும் சொல்வீர்கள். செய்வீர்கள். உங்கள் நலம் ஒன்றுதான் உங்

கள் குறி. வாசந்திகா, உள்நாட்டு மந்திரியை நான் வரச் சொன்னதாகச் சொல். [*வாசந்திகா புறப்படுகிருள்.*] ......வேண்டாம். நில். அந்த மந்திரியாரிடம் சொல்லி, இளவரசை உடனே இங்கு வரும்படியாகச் செய்யும்படி நான் உத்தரவு இட்டதாகச் சொல். இளவரசு இங்கே அரை நாழிகைக்குள் இருக்க வேண்டும் போய் சொல்.

[*வாசந்திகா போகிருள் சற்று மௌனம் அரங்கத்தில்*]

அரசி: நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் அரசே?

அரசன்: என்ன செய்யப் போகிறேன்? அந்த பசுமாட்டுக்கு நீதி வழங்கப் போகிறேன். மனு நீதி தவருமல்.

அரசி: எனக்கு நீங்கள் சொல்வது புரியவில்லையே?

அரசன்: அதுதான், உனக்குப் புரியாது என்று முன்னுலேயே சொல்லவில்லையா? புரியாது. புரிவதற்குள்ள மனப்பான்மை உனக்கு இல்லை.

அரசி: பிழைத்தவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டியதுதான், அரசே; அதில் எனக்கு சந்தேகமே இல்லை. ஆனல், நீங்கள் தீர விசாரியாமல், ஏற்கனவே ஒரு முடிவுக்கு வந்து விட்டாற்போலத் தோன்றுகிறது. போக்கு வரத்து காவலாளர்களை வரவழைத்து, சாலையில் எந்தப்பக்கமாக மகன்தேரை ஓட்டிக் கொண்டு போனுன், கன்று எதிராகக் குதித்ததா, அவனல் தவிர்க்க முடியாத விபத்தாக இருந்ததா, பிழை அவனுடையதா, இல்லை, கன்றினுடையதா என்று ஒன்றும் விசாரியாமல் நீங்கள் முடிவுக்கு வந்திருப்பது சரியாக எனக்குப் படவில்லை.

அரசன்: எல்லாவற்றையும் விசாரியாமல் நான்முடிவுக்கு வந்துவிட்டேன் என்று சொல்வது தவறு நான் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. எல்லா வற்றையும் யோசனை பண்ணிக் கொண்டுதான் இருக்கிறேன். அவன் உன் மகன் மட்டுமல்ல. என் மகனும் கூட. உனக்கு இருக்கும் பாசம் எனக்கும் உண்டு. அத்துடன் எனக்குப் பின் அரசனுக வருபவன் அவன். அவனுக்கு ஏதாவது நேர்ந்தால் என் தம்பி மகன்தான் அரசனுக வருவான். சோழ வம்சம் முடியக் கூடாதே? தொன்று தொட்டு வருவதல்லவா?

அரசி: உங்கள் தம்பி மகன் அரசனுவது உங்களுக்குப் பிரியமானதா?

அரசன்: அரசனுக்கு பிரியம் அப்பிரியம் என்று ஒன்று கிடையாது. பற்றற்றவனுகத்தான் இருக்க வேண்டும். இல்லையானுல் அரசனுக முடியாது.

[*இளவரசனும் வாசந்திகாவும் வருகிருர்கள்.*]

அரசி: மகன் வந்து விட்டானே?

இளவரசு: எனக்கு உறையூர் வரையிலும் போக முடியவில்லை. சற்று தூரம் சென்றதும் தேரின் அச்சு முறிந்து விட்டது. அதுக்கு முன்ஒருகன்று வண்டியின் அடியில் விழுந்து செத்தது. அதனுல்தான் வண்டிக்குத் தகராறு ஏற்பட்டதோ என்னமோ? என்னடா, எல்லாம் சகுனப் பிழையாக இருக்கிறதே என்று வேருெரு ரதத்தை வரவழைத்துத் திரும்பி விட்டேன். நம் விளையாட்டு இலாகா மந்திரியை எனக்குப் பதிலாக உறையூருக்குப் போகச் சொல்லிவிட்டேன். [*அரசனையும் அரசியையும் நிதானமாகக் கவனித்து விட்டு*] ஏன் அம்மாவும் அப்பாவும் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்? என்ன நிகழ்ந்தது?

அரசன்: என்ன நிகழ்ந்ததா? [*சிரிக்கிருர்*]

அரசி: மகனே, உன் தேரடியில் செத்துப் போன கன்றின் தாய் வந்து நீதி மணியை அடித்தது.

இளவரசு: என்ன, நீதி மணியை அந்தக் கன்றின் தாய் வந்து அடித்ததா?

அரசன்: உன் அம்மா தமிழில்தானே பேசுகிருள்? மாகதியிலோ பாலியிலோவா பேசுகிருள்?

அரசி: அதன் கன்று கொல்லப்பட்டதற்காக அந்த மாடு நீதி வேண்டி மணி அடித்தது என்கிருர் உன் தகப்பஞர்.

இளவரசு: நன்ருக இருக்கிறதே! மாட்டுக்கு நீதியைப் பற்றித்தெரியுமா? நீதி மணியைப்பற்றித் தெரியுமா? அது இப்படி வந்திருக்கும் அகஸ்மாத்தாக மணியின் பக்கத்தில் வந்து நின்றிருக்கும். அதன் வாலோ கொம்போ பட்டு மணி அடித்திருக்கிறது. இதுக்கு இப்படியொரு வியாக்கியானம் கொடுப்பது விசித்திரமாக எனக்குப் படுகிறது.

அரசன்: உனக்கு எல்லாமே விசித்திரமாகத்தான் படும். அந்த மணி அடிக்கிறது. கேட்கவில்லையா?

[*மணியோசை மெதுவாகக் கேட்கிறது.*]

இளவரசு: எனக்கு ஒன்றும் கேட்கவில்லையே.

அரசன்: உனக்கு கேட்காது. உனக்கு எல்லாம் விசித்திரமாகப்படும். அது உன் இயற்கை. எப்படி அந்தக் கன்று இறந்தது? உன் அசிரத்தையினால். அப்படித்தானே? சொல் ......... ஏன் பேசாமல் இருக்கிருய்?...... சொல். நீ சொல்ல மாட்டாய். நான் சொல்கிறேன். நீ போவதற்கு முன் இங்கே இரண்டு கிண்ணம் மது அருந்தி விட்டுச் சென்ருய். அதன் மயக்கத்தில் உன் நண்பர்களுடன் பேசிக் குலாவிக்கொண்டு தேரை விட்டிருக்கிருய். அந்தக் கன்று நிற்பதை நீ கவனிக்கவில்லை. உன் பேச்சின் சுவாரசியத்தில், உன் நண்பர்களுடன் குலாவும் உற்சாகத்தில் தேரை ஓட்டிக் கொண்டு போயிருக்கிருய். அந்தத் தேர் கன்றின்மேல் ஏறின பின்தான் அந்தக் கன்று நின்றது உன் உணர்வுக்கு வந்திருக்கிறது. அப்படித்தானே ஏன் பேசாமல் நிற்கிருய்? அத்துடன் நீ நிற்கவில்லை. அந்த மாட்டின் உரிமைக்குப் பரிகாரமாக பல மாடுகளையும், கன்றுகளையும் கொடுத்துவிடும்படி ஏற்பாடு செய்திருக்கிருய் அந்த உரிமையாளனின் வாயை அடைக்க இதெல்லாம் ஏதைக் காட்டுகிறது? என்னமா பேசாமல் நிற்கிருய்? உனக்குப் பேசுவதற்கு ஒன்றுமில்லையா? மகா ராணி உன் மகன் நிற்பதைப் பார்.

அரசி: அவன் வந்ததும் வராததுமாக நீங்கள் இப்படிப் பாய்ந்தால் அவனுக்கு அதிர்ச்சி ஏற்படாமல் என்ன செய்யும்? அதுதான் பேசாமல் நிற்கிருன். இல்லையா மகனே?

இளவரசு: [அரசியைப் பார்க்கிருன். பின் அரசனை] அரசே, தாங்கள் சொன்னபடிதான் நடந்தது. ஒப்புக் கொள்கிறேன். இதைப் பிழை என்றே வைத்துக் கொள்வோம். சிறியவர் பிழையை பெரியவர் பொறுத்தல் கடமையல்லவா?

அரசன்: நீதியைப் பாலிப்பது அரசன் கடமை. பொறுத்தருள்வது கடவுளின் கடமை.

இளவரசு: அப்போது மனிதன் இரக்கம், பரிவு ஒன்றும் இல்லாமல் இருக்க வேண்டுமா!

அரசன்: இரக்கம் பரிவு காண்பிக்க வேண்டியவரிடம் காண்பிக்க வேண்டும். ராஜ தர்மத்தை அனுசரிப்பவன் அவன் மனசை இளகும்படி செய்யக் கூடாது. மனு நீதியைப் பாலித்து அரசைக் கொண்டு செல்வது அரசன் கடமை. அதுக்கு மேலான நீதி இல்லை. சூரியனின் புத்திரன் வைவச்வதன். அவன் சந்ததிகள் நாம். அதனல் அவன் வகுத்த நீதிகளை நடத்துவதற்கு மேல் ஒன்றுமில்லை.

இளவரசு: இப்போது, என் தேர், நான் ஓட்டும் போது ஒரு கன்றின் மேல் ஏறி, அது இறந்ததனுல், என் மேல் ஒரு தேரை ஓட்டி, நான் மரிக்க வேண்டும். இது மனுநீதி அல்லவா?

அரசன்: நீ நீதி சாஸ்திரம் நன்ருகப் படித்துவிட்டாய் என்பதில் எனக்கு சந்தோஷம்.

அரசி: மகன் மேல் ஒரு தேரை ஓட்ட வைத்து அவன் மரிக்க வேண்டுமா? இதுவா நீதி?

இளவரசு: அப்படித்தான் தோன்றுகிறது.

அரசி: இப்பொழுது ஒரு விலங்கின் உயிருக்கும், ஒரு மனிதன் உயிருக்கும் ஒரே மதிப்புத்தானு?

இளவரசு: அதுதான் நீதி போல் தோன்றுகிறது, அம்மா.

அரசன்: போலத் தோன்றுகிறதா? உனக்கு நிச்சயம் இல்லையா? நான் சொல்கிறேன் கேள். அது தான் நீதி. அதில் என்ன தவறு இருக்கிறது?

இளவரசு: நான் தவறு இருக்கிறது என்று சொல்லவில்லை அரசே அதுதான் நீதி போல இருக்கிறது என்றேன்.

அரசி: இது என்ன நீதி என்று எனக்குப் புரியவில்லை.

அரசன்: உனக்குப் புரியாது மகாராணி, தாய்ப் பாசம் உன் கண்களையும் புத்தியையும் மறைத்திருக்கிறது. [மகனைப் பார்த்து] போல இருக்கிறதாம்! மனுஸ்மிருதியையே என்ன நீதி என்று கேட்கும்படி ஆகிவிட்டதா?

அரசி: தாய்ப்பாசம் அல்ல, அரசே. சாதாரண பகுத்தறிவின் மேல் தோன்றுவதைச் சொல்கிறேன். அன்று யவனர்களுடன் ஒரு யூதன் வந்திருந்தானே, ஞாபகம் இருக்கிறதா? அவன் சொன்னுன் அவர்களுக்கு மூசா என்று ஒருவர் தான் நீதி வகுத்துக் கொடுத்தாராம். கடவுளின் ஆணைப்படி அந்த நீதியிலும், ஒரு கண்ணுக்கு ஒரு கண், ஒரு கைக்கு ஒரு கை, நாக்குக்கு நாக்கு, மூக்குக்கு மூக்கு வாங்குவதுதான் நீதியாம்.

அரசன்: அதிலிருந்து என்ன புரிகிறது? உலகத்தில் மகான்களெல்லாம் ஒரே போல சிந்தனை செய்கிருர்கள் என்பதுதானே?

அரசி: ஆனல் அந்த யூதன் வேருென்றும் சொன்னுன். அந்த நீதிகள் மனிதனுக்கு மட்டும்தானும். விலங்குகளெல்லாம் மனிதனுடைய அவசியத்துக்காக கடவுள் படைத்திருக்கிருராம். அது சரி என்று எனக்குத் தோன்றுகிறது.

அரசன்: உனக்கு இப்போதுஅது சரியென்று தோன்றும். விலங்குகளேயும் நம்மில் ஒன்ருக பாவிக்கவேண்டும் என்பது நம்முடைய தொன்று தொட்டு வரும் அறம். எல்லா ஜீவன்களும் ஒன்றுளன் பது நம்முடைய கொள்கை. அந்தக் கருணையின் அடிப்படையில்தான் மனு நீதி வகுக்கப்பட்டிருக்கிறது.

அரசி: அரசே, நம் மகன், நீங்கள் சொன்னதுபோல நம் மகன் மட்டுமல்ல. சோழ தேசத்து இளவரசு. அவனுக்குத் தண்டனைகள் ராஜதர்மத்தின் படியளிக்கவேண்டுமேயன்றி, சாதாரண தர்மத்தின்படியல்ல.

அரசன்: மனு நீதியில் ராஜ தர்மமும் அடங்கியிருக்கிறது. ஒன்றுக்கொன்று முரண் அல்ல. ஆளுவோருக்கு ஒரு நீதி, ஆளப்படுபவர்களுக்கு ஒரு நீதி என்று கிடையாது.

அரசி: அப்படித்தானே எல்லா நாடுகளிலும் நடக்கிறது.

அரசன்: நான் ஆளும் நாட்டில் அப்படி நடக்காது.

இளவரசு: அப்பா, அரசே, நீங்கள் விதித்துள்ள தண்டனை கொடுமையானது. ஏதோ ஒரு பிழை நேர்ந்து விட்டது என்ருல் அதற்காக எனக்கு இத்தனைப் பெரிய தண்டனையா? அம்மாவைப் பாருங்கள் அவளால் சகிக்க முடியுமா? நான் இல்லாமல் அவளால் வாழமுடியுமா?

அரசன்: மகனே... (*மணியோசை மெல்லிசாக கேட்கிறது*) மகனே, நீ அந்தப்பசுமாட்டைப்பார்த்தாயா? இல்லை. நானும் உன் அம்மாவும் பார்த்தோம். அதன் கொம்பு பட்டு மணிஅடிக்கவில்லை. அது கொம்பால் மணி அடித்தது. அதன் கண்களில் நீர் கொட்டிக் கொண்டிருந்தது. அது நின்ற நிலை என் மனதை விட்டு அகலமாட்டேன் என்கிறது. எப்படி அந்த நிரபராதியான கன்றின் தாய் அனுபவித்ததோ அதே அனுபவம் அபராதியான உன் தாய்க்கும் ஏற்படுகிறது. எனக்கும் என் மகன், தேரின் சக்கரத்தில் நசுங்கிச் சாவானே என்று வருத்தம் இல்லையா? ஆனுல் ஒரு அரசன்என்ற முறையில் நான் அந்த வியாகுலத்துக்கு இடம் கொடுக்க இயலாதவனுக இருக்கிறேன். இடம் கொடுக்கக் கூடாது, கொடுக்க மாட்டேன். ஒன்றும் இல்லையானுலும் நீதியைக் காப்பாற்றினேன். நம் முன்னேர்கள் வகுத்துள்ள நீதியைக் காப்பாற்றினேன் என்ற திருப்தியாவது எனக்கு இருக்கும்.

இளவரசு: அரசே, உங்கள் முடிவை ஏற்றுக் கொள்கிறேன். அது நீதி என்பதிஞல் அல்ல. நீங்கள் நீதி என்று நினைப்பதிஞல். புத்தகங்களில் உள்ள நீதிக்கு அப்பால் ஒரு நீதியுண்டு. அந்த நீதி உங்களுக்குத் தெரியாது. தெரிந்தாலும் புறக்கணிக்கிறீர்கள் போகட்டும். ஆனுல் மக்கள் இந்தத்தீர்ப்பை ஒத்துக் கொள்வார்களா? அவர்களுடைய இளவரசின் மேல் தேரோட்டிக் கொல்வதை அவர்கள் வரவேற்பார்களா? சரி என்பார்களா? இராமன் முன், ஜனகன் வில்லை எடுத்துப் போட்ட போதே வெள்ளை மனத்தவன் வில்லை எடுத்து இப்பிள்ளை முன் இட்டது பேதமை என்ருர்கள் அல்லவா? அதற்கே அப்படியானுல் இதற்கு என்ன சொல்லுவார்கள்?

(*வெளியில் ஆரவாரம்*)

அரசன்: வாசந்திகா, வெளியில் என்ன சத்தம் பார்....

(*வாசந்திகா போகிருள்.*)

இளவரசு: மக்களுக்கு நீங்கள் செய்யப் போவது தெரிந்திருக்கிறது. மனம் சகியாமல் அவர்கள் வந்து ஆர்ப்பாட்டம் பண்ணுகிருர்களென்று நினைக்கிறேன்.

(*வாசந்திகா வருகிருள்*)

வாசந்: அரசன் இளவரசுக்கு அளித்த தண்டனையை ஜனங்கள் அறிந்து திரளாக அரண்மனை வாசலில் கூடி இருக்கிருர்கள் இளவரசைக் கொல்லக் கூடாது என்று கத்துகிருர்கள்.

(*ஆரவாரம் கேட்கிறது*)

அரசன்: பேஷ். மக்களா நீதி வழங்குவதும் தண்டனை கொடுப்பதும்?

இளவரசு: அப்படியும் ஒரு காலம் வரும்.

அரசன்: இப்போது அது வரவில்லை. கலி முற்றும் போது வரும். இப்போது நான் தான் அரசன் என் கடன் எனக்குத் தெரியும். வாசந்திகா காரியஸ்தனிடம் மக்களிடம் சென்று விஷயத்தைச் சொல்லிப் போகச் சொன்னேன் என்று சொல். [*வாசந்திகா போகிருள்*]

இளவரசு: அரசே, காவலாளர்களை அழையுங்கள். நான் என் தண்டனையை ஏற்கப் போகிறேன்

(*அரசன் மணி அடிக்கிருர் இரண்டு காவலர்கள் வருகிருர்கள்*)

அரசன்: இளவரசனுக இருந்த என் மகன், நிரபராதியான ஒரு கன்றை தேரேற்றிக் கொன்றதற்

காக, அவன் மேல் தேரேற்றி, அவன் மரிக்கும்படி செய்யுங்கள். அழைத்துச் செல்லுங்கள்

இளவரசு: அம்மா போகிறேன். அப்பாவின் தர்மம் வாழ்க!
(இளவரசை காவலாளர்கள் அழைத்துச் செல்கிருர்கள்)

அரசி: மகனே! (மஞ்சத்தில் சாய்கிருள்)

அரசன்: மகாராணி! பிரியே...! அவள் உணரவில்லே. .........நான் உணர்ந்திருக்கிறேன்......... மனு நீதிக்கு மேல் ஒரு நீதியா?.... நான் தவறு இழைத்து விட்டேனு? (தூரத்தில் மணி அடிக்கும் ஓசை மயங்கிப் போகிறது)

— திரை —

# தமிழ்ச் சங்கங்கள்

*[ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலரில் " இந்திய மாநிலங்களில் தமிழர்கள் " எனும் தலைப்பில் முனைவர் சாலை இளந்திரையன் எழுதிய கட்டுரையின் சில பகுதிகள்]*

வெளி மாநிலத் தமிழர்கள் தமிழ்க் கல்வியிலே காட்டும் ஆர்வத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும் தமிழ்ச் சங்கங்கள் அமைத்துக் கொள்வதில் இந்தத் தமிழர்கள் பெருமளவு ஆர்வம் காட்டியே வந்திருக்கிறார்கள். அதுபோலவே, தமிழர்களில் உயர் நிலையினரும் தாழ்நிலையினரும், தத்தம் வழிபடு தெய்வங்களுக்கு கோயில்கள் கட்டுவதிலும் விழா எடுப்பதிலும் எந்தக் குறையும் வைக்கவில்லை. இவர்களில் பல பேர், வாழ்க்கை முன்னேற்றத்துக்கு வேண்டிய பணிகளில் ஊக்கமாக ஈடுபடவில்லை என்கிற குறை இருக்கலாம்; சைவ, வைணவ மற்றும் சிறுதெய்வ வழிபாட்டுக்கான கோயில்களை எழுப்பவில்லை என்ற குறையே கிடையாது.

மேற்படி சங்கங்களின் வரிசையில் திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம், பெங்களூர்த் தமிழ்ச் சங்கம், பம்பாய்த் தமிழ்ச் சங்கம் தில்லித் தமிழ்ச் சங்கம், முதலியவை குறிப்பிடத்தக்கவை. வள்ளுவர், சுப்பிரமணியக் கவிஞர் முதலியோர் பெயரில் அமைந்த தமிழ்ச் சங்கங்களும் சில ஊர்களிலே உண்டு.

தமிழகத்திலிருந்து எளிதான போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இந்த நகரங்களில் மட்டுமல்லாமல் கான்பூர், ஆக்ரா, பூனா, பத்ராவதி, நாகபுரி, சித்தூர் கோலார் தங்கவயல், பிலாய், ரூர்கேலா, துர்க்காபூர் போன்ற இடங்களிலும் தமிழின் பேரால் சங்கங்களை அமைத்துள்ளார்கள். நாட்டின் பல்வேறு இடங்களில் உள்ள (அய். அய். டி.) தொழிலியல் கல்விக் கழகங்களில் சென்று சேரும் தமிழகத்து மாணவர்களும் அங்கங்கே, தங்கள் தமிழ்ச் சங்கங்களை அமைத்துள்ளார்கள். இலக்கியச் சொற்பொழிவு, இசை நடன நிகழ்ச்சி போன்றவைகளும் இவற்றிலே நடப்பது உண்டு. அந்தந்த மாநில மக்களில் விருப்பமுடையவர்களுக்குத் தமிழைக் கற்பிப்பதிலும் இச்சங்கங்கள் ஈடுபடுவது உண்டு.

தமிழர் அல்லாதவர்களுக்குத் தமிழ் இலக்கியத்தை அறிமுகம் செய்வதிலும் இச்சங்கங்கள் அவ்வப்போது ஆர்வம் காட்டி வந்துள்ளன. கல்கத்தாவிலே உள்ள பாரதி தமிழ்ச்சங்கம், பாரதி இலக்கியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளது; சங்க இலக்கியத்தின் சில பகுதிகளையும் இச் சங்கம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளது. தில்லித் தமிழ்ச் சங்கம் வ. வே. சு. அய்யரின் கம்பராமாயண ஆய்வையும் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பையும் வெளியிட்டுள்ளது.

இவைதவிர, தமிழ் இதழ்களையும் புத்தகங்களையும் கூட இவை வெளியிடுகின்றன. பம்பாய்த் தமிழ்ச் சங்கம் அணுவைப்பற்றி எனும் தமிழ் நூலையும், சங்கத்தின் வெள்ளி விழாவின் போது நாடக நூல் ஒன்றினையும் வெளியிட்டதோடு, மாதம் தோறும் ஏடு என்னும் இதழையும் வெளியிடுகிறது. இச்சங்கத்தோடு தொடர்புடைய முருகையா என்பவர் விந்தியா என்னும் அழகிய மாத இதழைச் சிறிது காலம் நடத்தி வந்தார்.

திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம் கேரளத் தமிழ் என்னும் மாத இதழை வெளியிடுகிறது. பெங்களூர்த் தமிழ்ச்சங்கத்திலிருந்து ஊற்று (மாத இதழ்) வெளி வருகிறது. தில்லி தமிழ்ச் சங்கம் சுடர் என்னும் ஆண்டிதழை வெளியிடுகிறது. பொதுவாகவே 'சுடர்கள்' சிறந்த கட்டுரை, ஆய்வுரைகளைத் தாங்கி வரும். 1971-ல் தில்லித் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட வெள்ளி விழா மலர் பலராலும் சீரிய இலக்கியப் பெட்டகமாகப் போற்றப் பட்டது.

# புதுக்கவிதையில் புதுமை என்ன?

கவிஞர் நெல்லை சு. முத்து B. Sc.,

''புதுக்கவிதை ஒய்ந்துவிட்டது.......... பொதுவாகத் தமிழைப் பொறுத்தவரை கவிதையே ஓய்ந்து போயிருக்கிறது. மெட்டுக்காக எழுதப்படுகிற சினிமாப் பாடல்களையும்,மேடையில் எடுபடுகிற நகைச்சுவைத் துணுக்குகளையும் கவிதை என்று ஒப்புக் கொள்ள முடிவதில்லை. தமிழில் கவிதை ஒய்ந்து போக இவ்விரண்டும் கூடக் காரணமாயிருக்கலாம்''—மார்ச் 1981 'தீபம்' இதழில் 'இலக்கிய மேடை'யின் ஒரு பதில்.

கவிதையே காலாவதியாகி விட்டதாகக் கருதப்படும் இந்தக் காலகட்டத்தில் 1930-40 களில் பாரதியின் ''வசனக் கவிதை''களைப் பின்பற்றி எழுந்து ''இலகு கவிதை'' ''யாப்பில்லாக் கவிதை'', ''கட்டிலடங்காக் கவிதை'' (free verse) என்றெல்லாம் அவ்வப்போது வெவ்வேறு பெயர்களைத் தாங்கி வளர்ந்து, 'மாடர்ன் பொயட்ரி'(Modern poetry), 'நியூ பொயட்ரி' (New poetry) எனப்பலவாய் ஆங்கிலத்தில் கூறப்படுவதை ஒட்டித் தமிழில் 'புதுக்கவிதை' என்ற பரிணாமத்தை ஏற்ற ஒரு கவிதை இனத்தைப் பற்றி, ''புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்'' என்ற வரலாற்றின் அடிப்படையில், விமரிசனம் செய்வதுதான் இந்த ஆய்வுரையின் நோக்கம்.

''உள்ளத்(து) உள்ளது கவிதை—இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் — உண்மை
தெளிந்துரைப்பது கவிதை''

என்பதைக் கவிதையின் பொது இலக்கணமாகக் கொள்ளலாம். பாரதி குறிப்பிடும் புதுக்கவிதை என்பது சொல்லில், பொருளில், சுவையில், வளத்தில் ஒளிரும் புதுமையுடைய கவிதை ஆகும். அதையே

''சுவைபுதிது பொருள்புதிது வளம்புதிது
சொற்புதிது சோதி மிக்க
நவகவிதை''

என்று வகுக்கின்ருன்.

சொற்சுருக்கம், பொருட்செறிவு, சுவைநுணுக்கம், வளமைப் பெருக்கம், தெளிவு இதயத்தின் தாளலயம், கவித்துவ அழுத்தம் இவையனைத்தும் புதுக்கவிதைக்கும் உரிய பொதுப்பண்புகளாகும்.

''கவிதை வேண்டுமானல்
சொற்களைக் கூராக்கு
இசையை ஒதுக்கி விடு
உருவங்களை உயிராக்கு
சிந்தனைகளை நேராக்கு''

என்று ''கவிதை''யை இசைக்கின்ருர் 'மயன்'. இதில் கூட ஒரு சீரான இசைத்தன்மை வெளிப்படுகின்றது. புதுக்கவிதைக்கு இசைத்தன்மை - அதாவது எதுகை மோனை சந்தம் இவற்ருல் எழும் ஒலிநயம் முக்கியம் இல்லை என்பது அவர் கருத்து. ''கருத்திலே மடை திறக்கும் உணர்வு நெகிழ்ச்சியிலே, சுட்டிக்காட்டும் பேருண்மையிலே கவிதை பொதிந்து கிடக்கிறதென்ற உண்மையைப் புதுக்கவிஞன் கண்டுபிடித்தான். கவிதை சொற்களில் இல்லை; ஒலி நயத்தில் இல்லை என்பதைக் கண்டு கொண்டான். இரண்டுக்கும் காரணமான தன்னிடத்தில் இருக்கிறதென்ற பேருண்மையை, அதிருஷ்டவசத்தால் தான் பெற்ற அனுபவத்தில் இருக்கிறதென்ற ரசனை நுட்பத்தை உணர்ந்தான்'' என்று 'எழுத்து' (பிப்ரவரி '61) 14 வது ஏட்டில் ந. பிச்சமூர்த்தி 'வசனகவிதை' பற்றித் தன்கருத்தைக்குறிப்பிட்டுள்ளார்.

''சந்தத்தைக் கொண்டு வார்த்தைகள் ஓசையைத் தாளப்படுத்திக் காட்டி கவிதையை உணரச் செய்வது தான் என்பதல்ல'' என்று கவிதையின் மென்மையான ஒலிநயம் — சவுக்கைத் தோப்பின் வழியே காற்று பாய்ந்து சென்ற பிறகு தோன்றும் ஒரு ஓயும் ஒலி சொப்பனக்குரல் — குறித்து ''புதுக்கவிதைபற்றி'' என்ற தலையங்கக் கட்டுரையை 'எழுத்து' (மார்ச் 1960) இதழில் சி. சு. செல்லப்பாவும் எழுதியுள்ளார். தவிர புதுக்கவிதையின் இசை நயம், இருதயத்தின் 'தாளலயம்' (rhythm)என்று முழங்கிடுவோரும் உண்டு.

ஆனல் வளர்ந்து வந்த புதுக்கவிதை இயக்கத்தில் தந்த 'மென்மையான ஒலிநயம்' இருந்து வந்ததா என்பது இன்னும் வினக்குறியாகவே தெரிகின்றது. மரபுக் கவிதைகளில் சந்த அடிப்படை (prosody) யில் எழுந்த தாளலயமும், இசைத்தன்மை (melody) யும் பாரதி, பாரதிதாசன் கவிதைகளில் யாப்பு என்னும் கட்டுக்கோப்புக்குள் சீராக்கப்பட்ட சிந்தனையாக உணர்வு வேகத்தில் வெளிப்பட்டிருந்தன அன்ருே?

''கொலைவாளினை எடடா உயர்
துணமேவிய தமிழா''

என்ற ஒரே அடியில் நான்கு சீர்களின் யாப்பில் காணப்படும் கவிஞனின் அவசரம், ஆத்திரம், வெறியுணர்வு, தமிழ்ப்பண்பு அனைத்தும் மின்னலித் தெறிக்கின்றதைப் போல நிலையாக நின்றுலவும் புதுக்கவிதைகளைத் தடவித் தான் பார்க்க வேண்டும்! கோபாலகிருஷ்ண பாரதியாரும் சுப்ரமணிய பாரதியாரும் ''கவிதையோடு இசை என்னும் உயிர் சேர்த்துக் கவிதை செய்தார்கள்'' என்று புதுக்கவிஞரான 'மயன்' கூட 'சரஸ்வதி' (ஆண்டுமலர் 1959) யில் (மரபுக்) கவிதையின் இசைத் தன்மையை உயிரென்றே ஒத்துக் கொள்வதாகத் தெரிகின்றது.

அடுத்ததாகப் ''புதுக்கவிதையில் விஷயம், கருத்து, உருவம் முக்கியம். சிக்கலும் சிடுக்கும் அதன் ஜீவாதாரம், வேகமின்மை அதன் உரிமை. அதனால் இசை நயம், இசைநயம் இல்லாமையும் அதன் சிறப்பாகும்'' (இலக்கிய வட்டம் 27. 3.'64) என்று க. நா. சு. புதுக்கவிதையின் உருவம் பற்றி உரைக்கின்றார். ''ஓரிருவரால் இப்பொழுது தமிழில்கையாளப்பட்டு வரும் வசன கவிதை முறை புதிதுதான்; நவீனம்தான். முற்காலத்தில் இருந்ததாக அவர்கள் (மரபுக் கவிதையாளர்கள்) குறிப்பிடும் வசனக் கவிதைக்கும் இதற்கும் சம்பந்தமே கிடையாது. கருத்திலும் சரி, உருவத்திலும் சரி'' என்று 'கவிதைத் தொண்டன்' (கு. ப. ரா.) நாற்பதாண்டுகளுக்குமுன்பு 'சூருவளி'(18.6.'39) யில் புயலாய் அடித்துரைத்துள்ளார். ''பிம்ருதி'' என்று திருப்புவதும் ''தா...... ம......த......ம்'' என்று நீட்டுவதும்



கு
ணி
வு

என்ற இறங்கு வரிசையில் எழுத்துக்களை சித்திரக் கவிதையாகத் தீட்டுவதும் தமிழில் கவிதை இலக்கியத்தில் ஒரு'வேறுபாடே'அன்றிப் புதுமையன்று. இலக்கியத்தின் அடிப்படை இலக்கண மரபுகளை ஓதுகின்ற ஒல்காப்புகழ் தொல்காப்பியத்தில் ''புதிதாகப் புனைதலாவது ஒருவன் சொன்னநிழல் வழியன்றித் தானே தோற்றுவித்தல்'' என்னும்உரை வரும்படி

விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே''
(தொல்பொருள். 540)

என்று இயம்புவதனால் கவிதை யாப்பின் உருவத்தில் புதுமை பண்டைக்காலத்தும் ஏற்பட்டிருந்ததாகவே கொள்ளலாம்.

மூன்றாவதாக, தொல்காப்பியம், நன்னூல் முதலான பழந்தமிழ் இலக்கண நூற்களின் செய்யுள் இயலுக்கு அப்பாற்படும்படி அசை, சீர், தளை, எதுகை, மோனை இவற்றை அறுத்தெறிந்து ''சுயேச்சா கவிதை'' (vers libre) என்ற இலக்கணச் சுதந்திரத்தை எதிர்நோக்கி எழுந்தன புதுக்கவிதைகள், என்ற கொள்கை பலருக்கு இருந்திருக்கின்றது, ''கவிதை எல்லாம் நன்னூல் இலக்கணத்தை ஒட்டியே இருக்க வேண்டும் என்று இலக்கணப் பிடிவாதம் பிடித்தால் நடக்காது. நன்னூலுக்கு மேலான ஒரு புது நூலை இலக்கியத்தின் போக்கிற்கேற்ப (இலக்கணம்) தயாரித்துக் கொள்ளவேண்டும்'' என்று கு. ப. ரா. 'கலாமோஹினி' 13-ல் ஏவுகின்றார்.

''சொல்லிய தொடையொடு வேறுபட்(டு)
இயலின்
சொல்லியற் புலவர் அது செந்தொடை என்ப''
(தொல். பொருள். 405)

என்றநூற்பாவின்படிஎதுகை மோனைமயக்கம் கூட'செந்தொடை' என்ற தமிழ்க் கவிதை மரபே அன்றிப் புதுத்தன்மை அன்று! ''மெய்யறு மரபின் தொடை வகை தாமே'' (தொல் பொருள். 406) 13699 வகைகள் இருக்கும்போது புதுக் கவிதை மட்டும் எப்படி இலக்கணத்தின் பிடியைவிட்டு விட்டு வேறுபட முடியும்?

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே''
(நன்னூல். உரியியல். 462

என்ற நன்னூல் நூற்பா புதுக்கவிதையின் தன்மைக்காகவும் புகலப்பட்டதொரு பொருள் மிக்க இலக்கணமோ எனுமாறு அமைகின்றது.

இனி, வலுக்கட்டாயமாக வடமொழிச் சொற்கள் ஆங்கில சொற்களை அப்படியே சேர்த்தும் பல முறை படித்தாலும் விளங்காத நிலையில் எழுதப்படும் புதுக்கவிதைகளும் ஏராளம் வந்துள்ளன. எடுத்துக்காட்டாக 'அசைவின்றி' என்ற சொல்லுக்குப் பதிலாக 'நிஸ்சலனமாக' என்று எழுதிவிட்டால் கவிதைக்கு அழுத்தம் கொடுத்துவிட்டதாகக் கருதுகிறார்கள் புதுக் கவிஞர்கள். மரபுக் கவிதைகளில் பயன்படுத்தப்படும் சொற்கள் யாப்பெனும் கூட்டுக்குள் நின்று எதிரொலிப்பதும்,சிலஇறந்து விடுவதும் உண்மை. அதனாலேயே அத்தனைப்புதுக் கவிதைகளும் ''சொல்லடுக்குப்பாடைகள்'' அல்லாதவை என்று அறுதியிடவும் இயலாது. புதுக்கவிதை என்பதில்இசையில்லாத்தன்மை, புது உருவம், யாப்பில்லாமை என்ற இயல்புகளே தனிப்பண்புகள்! மற்றபடி கவித்துவம்மரபுக்கவிதையிலும் வெளிப்பட்டுத்தான்ஆகவேண்டும். இதனால் மரபுக் கவிஞர்களை 'மடிசஞ்சி'கள் என்றோ

'குண்டுசட்டிக்குள் குதிரைவிடுபவர்' என்றே எள்ளுவ தில் மேதாவிலாசம் இல்லை.

புதுக்கவிஞர்களில் பாரதி, புதுமைப்பித்தன், பிச்ச மூர்த்தி தவிர அவரைப் பின்பற்றி கவிதை புனைந்த பல ருக்கும் தமிழ்க் கவிதையின் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற நான்கு வகைப் பாக்களையும் தாழிசை , துறை , விருத்தம் என்னும் மூவின உட்பிரிவுகளையும் வழங்குகின்ற யாப் பிலக்கண நுணுக்கங்களை தெரியாது என்பது அப்பட்ட மான உண்மை. ''எழுதுகிறவர்களுக்குத் தேவை யானல் யாப்பிலக்கணத்தைக் கற்றுக் கொள்ள எத் தனை நாழிகைகள் ஆகும்?...... அப்படிப்பட்ட பிரம்ம வித்தை ஒன்றுமில்லை அது நிச்சயம்'' என்பது கு. ப.ரா. வின் துணிவு. க. நா. சு. வும் 1936-37 ல் ''சுப்ரமணிய பாரதியாரின் கவிதைகளைப் படித்த வேகத்தில் கவிதை களையும் எழுத முற்பட்டேன். இந்தத் தடவை யாப் பிலக்கணம் கற்றுக் கொள்ளலாம் என்று நான் யோசித் கொண்டிருந்த சமயம், ச. து. சு. யோகியாருடன் நட்புக் கிடைத்தது—புதுமைப்பித்தன் மூலம். ''எப்படி என்ன எழுதினாலும் அதை யாப்பிலக்கணப்படி தரம் பார்த்துக் கொள்ள முடியும்'' என்ருர் யோகியார். அவர் சொன்ன (இவ்) விஷயம் என்னை யாப்பிலக்கணம் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை கவிதை எழுத என்கிற முடி வுக்கு வரச் செய்தது'' என்று 'மயன் கவிதைகள்' நூலில் குறிப்பிடுகின்ருர். புதுக்கவிதை எழுத ஊக்கம் தந்த(?) கருத்துக்கள் இவை. மேலும் 'வசன கவிதைக் கும் யாப்பிலக்கணம் உண்டு. அதிலும் மாவிளங்காய், தேமாங்கனி எல்லாம் வந்தாக வேண்டும். வரும் வகை மட்டும் வேருக இருக்கும். வசன கவிதைக்கும் எதுகை மோனை கட்டாயம் உண்டு'' என்று கு. ப. ரா. கூட வறட்டு வாதம் புரிந்திருக்கிருர். உரைநடையில் கூடத் தான் வார்த்தைகளை அசை, சீர், தளையாக அலகிட முடி யும். ஆதலுல் உரைநடை யாப்பிலக்கணப்படி அமைந்த கவிதையாகிவிடுமா? ஆனுலும் உரைநடை 'கவிதை மாதிரி' என்று பாராட்டைப் பெறுவதென்பது வேறு விஷயம்.

நல்ல உரைநடையில் சிறுகதை நாவல்களில் வரும் புதுமையான உவமைகளைக் கூட சொற்களை ஒன்றன் கீழ் ஒன்ருக அடுக்கிப் புதுக்கவிதையாக்க முடியும். அமைப் பிலும் பொருளிலும் புதுமையிலும் அதனைப் புதுக்கவி தையாக ஒத்துக் கொள்வதில் தவறில்லை. சான்ருக, 'குடிசைகள்' என்ற தலைப்பில்

கோடை.
நிலத்தின்
வேனற்
கட்டிகள்

என்று எழுதினல் அது புதுக் கவிதையாகி விடுகிறது.

வசனமே கவிதை சுகம் தருவது உண்டு. பாரதி யாரின் 'ஞானரதம்' இந்த வகையே! கவித்துவம் உடை யவர்களின் எழுத்து, கவிதைதான். கண்ணதாசனின் செப்பு மொழிகளில்' வசனத்திலும் கவிதை சுகம்-புதுக் கவிதை சுகம் இருக்கத்தான் செய்கிறது.

காந்திஜி ஒரு
ராம ராஜ்ஜியத்தைக்
கனவு கண்டார்
இன்று—
ஏராளமான மனிதர்கள்
இந்த ராம ராஜ்ஜியத்தை
உருவாக்கிக் கொண்
டிருக்கிருர்கள்.
குரங்குகள் இல்லாமல்
ராம ராஜ்ஜியம்
ஏது?

—'செப்பு மொழி'யை உடைத்தே புதுக்கவிதை இப்படிப் பொறித்து விடலாம். இதனல் புதுக்கவிதை ஏதோ தமிழுக்கு ஒரு புத்தம் புதிய துறை என்பதை இன்னும் ஏற்றுக் கொள்ளத் தயக்கமாகவே உள்ளது.

''அற்புதமான உவமைகளைக் கையாளுகிருர்கள். அருமையான விஷயங்களைச் சொல்லுகிருர்கள். ஆனல் வசனத்தை வளைத்துப் போட்டு, அதைப் புதுக்கவிதை என்கிருர்கள்......வசன கவிதை கூடாதென்பது என் வாதமல்ல. வசனத்திலும் கேவலமான வசனத்தைக் கவிதை என்று, கவியரங்கங்களிலே படிக்கிருர்களே, அதைத்தான் என்னல் தாங்க முடியவில்லை. இந்தப் பாவத்துக்குத் தந்தை, தமிழகத்து அரசியலில் பிரபல மான ஒருவர். அவரே அப்படித்தான் எழுதுகிருர் என்ற உடனே இலக்கணம் தெரிந்தவர்கள் கூட வசனத்தை எழுதி வளைக்க ஆரம்பித்துவிட்டார்கள்......அண்மையில் ஒரு பத்திரிகையின் ஆண்டு விழா நடைபெற்றபோது அதில் ஒரே ஒருவர் கவிதை பாடுகிறேன் என்று பாடி னர். அட ஆண்டவனே, கவிதையா அது? அப்பட்ட மான வசனம்! கவியரங்கங்களில் கரகோஷம் வாங்குவ தற்காகப் பலபேர் அதைச் செய்துவருகிருர்கள்'' என்று 1979 ஏப்ரல் அல்லது மே மாத 'கல்கி' இதழ் ஒன்றின் 'கண்ணதாசன் பக்க'த்தில் கவிஞர் ஆதரிக்கப்படுகின்ருர்

என்ருலும் புதிய நோக்கில் கவித்துவம் வெளிப் படும் புதுக்கவிதைகளைக் கூட 'அலர்ஜி' காரணமாக வெறுத்து ஒதுக்கும் மரபுக் கவிஞர்களும் உண்டு. யாப் பிலக்கணக் சந்தக் கவிதை அழகுதான். அதற்காக அதையே விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு புதுக் கவிதைகளை 'உளறல்கள்',வசனத்துண்டுகளின்சேர்க்கை, இலக்கணக் கொலைபாதகம், 'வெஜிடபிள் பிரியாணி', 'கோவேறுகழுதை'என்றெல்லாம் பரிணமங்களில் வசை பாடுதல்கூடாது ஏனெனில் புதுக்கவிதையும் தமிழ்மரபே! புதுக் கவிஞர்களில் கூடப் பலர் அசையின் அடிப்ப டையில் சீரான ஒலியளவில் கவிதைகள் எழுதியுள்ளனர்.

சான்ருக சி. மணியின் 'அரக்கம்' என்றக் கவிதையைக் குறிப்பிடலாம்.

'வாடிய பூக்கள் விழ்ந்து ஒழிந்தாலும்
விழித்த மலர்கள் சிரித்து மினுக்கும்
ஈன்ற வாழை இளைத்துச் சாய்ந்தாலும்
உயிர்த்த கன்று முகிழ்த்து மிளிரும்.
வீசிய விண்மீன் சரிந்து அணைத்தாலும்
மிகுந்த மீன்கள் விரித்துச் சிமிட்டும்
ஊட்டிய அன்னை உழைத்து ஓய்ந்தாலும்
எஞ்சிய குமரன் குமரியைப் பிடிப்பான்'

மேலும் படிமச் சிறப்பை[Image]ப் பொறுத்த மட்டில் ஒரு பொருளைக் கண்டு மரபுக் கவிஞன் சொல் லோவியம் படைப்பானுனால் புதுக் கவிஞன் வர்ணப் பூச்சில்லாத வரைப்படம் [Sketch] ஆக அமைகின்ருன். 'ஞாயிறு' என்ற தலைப்பில் பாவேந்தன் பாடலிலிருந்து சில பகுதிகளைக் காண்போம்.

'பொங்கியும் பொலிந்தும் நீண்ட
புதுப்பிடர் மயிர்சி லிர்க்கும்
சிங்கமே! வான வீதி
திருதிரு எனவி ரிக்கும்
மங்காத தனற்பி ழம்பே!
மாணிக்கக் குன்றே! தீர்ந்த
தங்கத்தின் தட்டே! வானத்
தகளியின் பெருவி ளக்கே''
''உன்கதிர் இருட்ப லாவை
உரித்தொளிச் சுளையூட் டிற்றே''
''இலகிய பனியின் முத்தை
இளங்கதிர் கையால் உண்டாய்''
''மலையெலாம் சோலை எல்லாம்
நனைக்கின்ருய் சுடர்ப் பொன் நீரால்''

'தருமு. சிவராமு' வின் 'விடிவு' என்ற கவிதையின் படிமப் பிரயோகத்தைக் காண்போம்.

பூமித் தோலில்
அழகுத் தேமல்.
பரிதி புணர்ந்து
படரும் விந்து.
கதிர்கள் கமழ்ந்து
விரியும் பூ.
இருளின் சிறகைத்
தின்னும் கிருமி.
வெளிச்சச் சிறகில்
மிதக்கும் குருவி.

தந்திச் செய்திப் போல 'நறுக்'கென்று உவமை களை அடுக்கிச் சொல்லி விடுவது புதுக்கவிதையின் பண்பாக இருந்திருக்கிறது. ''கற்பனையை அறிவிற்குத் துணையாக கையாண்டு, இன்பத்தை உண்மையோடு இணைத்துக் கூறும் கலையே கவிதையாகும்'' என்ற டாக்டர் ஜான்சனின் கருத்துப்படி நோக்கினுல் தேமல், விந்து, பூ, கிருமி, குருவி, இவற்றோடு பகலவனைக் கற்பனைச் செய்வது முறையே நிறம், பயன், தோற்றம், வினை, இயல்பு போன்ற பண்புகள் அடிப்படையில் எழுந்த படிமங்களாக அமைகின்றதே அன்றி, இன்பம் விளைவிப்பதாக இல்லையே! கவிதை ஒரு கலை! அது வெறும் ''தகவல் கூடு'' (information packets) களாக அமைவதில் என்ன இன்பம் பெருகும்?

வள்ளுவர், கம்பர், புகழேந்தி, சேக்கிழார், திருத் தக்கத் தேவர், நாயன்மார்கள், ஆழ்வார்கள், பாரதியார், பாவேந்தர் பலராலும் மரபுக் கவிதை களாக இலக்கியம் எழுந்தமைக்கும் வளர்ந்தமைக்கும் ஆழமான, கருத்துப் பொதிவான, அடிப்படை நோக் கம் அறம், மறம், பக்தி, பகுத்தறிவு, நாட்டுப் பற்று, மொழிப் பற்று, சமுதாய வளர்ச்சி-போன்றவற்றில் ஒன்று உள்ளடக்கமாக இருந்து வந்தது. புதுக் கவிதைக்கும் கட்சி அரசியல் கொள்கைகள், பகுத்தறிவு வாதம், இயற்கை ரசனை போன்றவையே உள்ளுணர்வாக (intuition) இருந்திருக்கிறது. அதிலும் மன முறிப்பு (frustration) தான் முனைப்பாகத் தெரிகின்றது.

''புதுக்கவிதையின் புதுப்பாதையை, அதன் சொல் ஆட்சியை, படிமச் சிறப்பை, உருவ நயத்தை நான் ரசிக்கிறேன். இப்படியும் கவிதை வரவேண்டியது தான் என்று உணர்கிறேன். ஆயினும் புதுக்கவிஞர்களின் குரல்களை என்னுல் ரசிக்க முடியவில்லை. வெறுமை, விரக்தி முனைப்பு, மன முறிவு ஆகிய குரல்கள் பல புதுக்கவிதையின் அடிநாதமாக ஒலிக்கின்றன. நவீன பட்டினத்தார்களாகவும், பத்திர கிரியார்களாகவும், திருமூலர்களாகவும், திகம்பரச் சித்தர்களாகவும் சில புதுக் கவிஞர்கள் மாயாவாதம் (Mysticism) பேசுவது, அதுவும் இந்திய வரலாற்றின் முக்கியமான இக்காலக் கட்டத்தால் அழுது புலம்பிக் கையறு நிலையில் கை விரல்களைச் சொடுக்குவது, எனக்கு மிகவும் பிடிபடாத சங்கதி, இந்தக் கவிஞர்கள் தமிழ்ச் சொல்லை முறிக் கட்டும். மனித மனத்தை ஏன் சிரமப்பட்டு முறிக்க வேண்டும்? அது தான் தெரியவில்லை ஐயோ பாவம் இவர்களுக்கு என்ன சுகக்கேடு, நோய்?'' — என்று

தி. க. சிவசங்கரன் 1964 லேயே (இலக்கிய வட்டம் 17 வது இதழ்) நொந்து கொண்டிருக்கின்றார்.

புதுக்கவிதை இயக்கம் தோன்றியதின் குறிக்கோள் சமுதாயப் புரட்சியோ, அரசியல் சீர்திருத்தமோ, பக்தி நெறியில் புதுப் போக்கோ, இயற்கை இன்பத் திளைப்போ, ஆளுமை (Personality) இயல்போ அல்லாமல், வால்ட்விட்மன், T. S. இலியட், எட்வர்ட் கார்பெண்டர் இவர்களைப் போலத் தளையகற்றிய ஆங்கிலக் கவிதை முறையைத் தமிழிலும் புகுத்த வேண்டும் என்ற தூண்டுதல் மட்டுமே என்பது ந. பிச்சமூர்த்தி, மய்ன் போன்றோர் பல இடங்களிலும் இசைந்து ஒத்துக் கொண்ட உண்மையாகும். அவர்களே பாரதியின் 'காட்சிகள்' வசனக் கவிதையைத் தம் முயற்சிக்கு ஆதாரமாக எடுத்துக் கூறினர்.

இந்தப் புதுக் கவிதைகள் ஜனரஞ்சகப் பத்திரிக்கைகளில் இன்று துணுக்குகள் வடிவெடுத்து உள்ளத்தில் ஏதோ ஒரு உணர்வை மட்டும் எழுப்புவனவாக அமைகின்றன. உவமைச் சிறப்பு (Simile), படிமச் சிறப்பு (Image), நகைச்சுவை (Comic) பாலுணர்ச்சி (Sex) என்ற அடிப்படையில்தான் வெளிவருகின்றன, அளவிலும் சிறியதானவை அவை. தற்போது தமிழ்ப் பத்திரிகைகளில் எழுதிக் குவித்து வரும் சுஜாதாவின் தயாரிப்பில் வெளியான 'சாவி' (22.3.'81) இதழில்,

'வந்த கவிதைகளில்
கொஞ்சம் எனைத் தொட்ட
வரிகள் இவை'

என்று முன்னுரையுடன் தரப்பட்டுள்ள புதுக் கவிதைகள் சிலவற்றை இங்கேக் குறிப்பிடத்தான் வேண்டும்.

''புதுக்கவிதை அனுப்பத்தான் எண்ணினேன்
எனக்கது வராது என்றெண்ணி
எழுதாமலிருந்து விட்டேன்''

'சிறப்பிதழுக்கு' எனும்தலைப்பில்புதுக்கவிதை என்றஅங்கீகாரம்(?) பெற்ற வரிகள் இவை. மேலும், 'ஒரே ஒரு ஆங்கில வார்த்தை பிரயோகிக்கப்பட்ட கவிதை' ஆபாசம் இதோ:

போன தையில் கல்யாணம்
இந்த தையில் குழந்தையாம்
இரண்டு 'தை'களுக்கிடையே

என்னவோ நடந்ததால்......!


இதுவும் புதுக்கவிதையின் போக்கோ என அச்சமாக உள்ளது. தவிர கணையாழி, தீபம், சதங்கை போன்ற இலக்கியத்தரமுள்ள சஞ்சிகைகளிலும் சில சமயம் ஊன ஆண்டு, குழந்தைகள் ஆண்டு, பொங்கல், தீபாவளி, புத்தாண்டு, உலகத்தமிழ் மாநாடு, காந்தி ஜெயந்தி, மே தினம் குறித்த 'ஃபார்முலா'க் கவிதைகள் அந்தந்த 'சீசனி'ல் வெளிவருகின்றன.



தமிழ் இலக்கிய வரலாற்றில் கவிதைத் துறையில் ''மரபுக் கவிதைகள்'' செய்து விட்ட சாதனையை—மனதில் ஒரு நிலையான பாதிப்பை— புதுக்கவிதைச் சோதனைகள் இந்த நாற்பதாண்டுகளில் சாதித்துவிடவில்லை. என்பது கடந்த காலம்.

உணர்ச்சிகரமான சொல்லாட்சியும் தோய்ந்த கருத்துகளுக்கு மெருகூட்டும் முயற்சியும் கையாண்டு ''மரபி''லிருந்து தாவி இன்றைய புதுக் கவிதைக்குச் சொந்தக்காரர்களாகத் திகழும் பலரும் அரசியலில் வாலை நுழைத்துச் சினிமாவில் தலைகாட்ட எத்தனித்து தனித்தன்மை இழந்துள்ளமை நிகழ் காலம்.

என்றாலும் இன்னும் வரவேற்பு இருப்பதாகக் கருதப்படும் புதுக்கவிதை என்ற பழைய துறையின் எதிர்காலம்?



# தெய்வத்தை நம்பினோர் கைவிடப்படார்

G. பஞ்சாபகேசன்

''கொட்டையூரில் செய்த பாபம் கட்டையோடு'' என்பது பெரியவர்கள் வாக்கியம்

சோழ நாட்டின் தலைநகராகிய தஞ்சை ஜில்லாவில் கும்பகோணம் தாலுகாவில் உள்ள சிற்றூர் கொட்டையூர். பத்ரயோகி என்ற முனிவர் ஸ்ரீ பரமசிவனைக் குறித்து ஹிமய மலையில் கடுந்தவம் செய்கையில் சத்யரதி என்ற அரசன் அங்கு வேட்டையாட வந்தான். முனிவர் தவநிலையில் இருந்ததால் அரசனது வரவை அறியவில்லை. அரசனோ முனிவர் தன்னை மதிக்காததாகக் கோபித்து முனிவரின் தவத்தைக் கலைத்தான். தவம் கலைந்த முனிவர், அரசனை பிசாசாகப்போகும்படி சபித்தார். கோபத்தின் காரணமாக முனிவரின் சாபத்திற்குள்ளான அரசன் பிசாசாக மாறினான். அதற்கு முனிவர் பிராயச்சித்தமாக கோடி சிவக்ஷேத்திரங்கள் தரிசித்து வருகையில் ஒரு நாள் கொட்டையூரை அடைந்தார். அவ்வமயம் ஓர் அசரீரி உண்டாயிற்று, ''ஓ முனிவரேகோடிக்ஷேத்திரங்களுக்குச்சென்று அவதியுற்று கால் தேயவேண்டாம். இந்த ஏரண்டேஸ்வரை தரிசித்த மாத்திரத்திலேயே உமக்கு கோடி சிவலிங்கங்களை தரிசித்த புண்யம் கிட்டும், உமது விரதமும் பூர்த்தியாகும்'' என்று கூறிற்று. உடனே ஸ்ரீ பரமேஸ்வரன் கோடி அம்பாளுடன், கோடிமுருகனுடன், கோடி விநாயகருடன், தானும் கோடிலிங்கமாக ஆவிர்பவித்தார். [இந்த அற்புத காரியங்களினால் இங்கு ஸ்ரீ ஈஸ்வரனுக்கு கோடீஸ்வரர் எனப் பெயர் ஏற்பட்டது. ஒரு நாள் முனிவர் பத்ர யோகியார் கொட்டையூரில் தங்கி ஸ்ரீ ஈஸ்வரனை வழிபட்டு வருகையில் அம்பாள் பந்தாடும் காட்சியைக் கண்டுகளிக்கும் பேறு பெற்றார்! அது முதல் அம்பாளுக்கு ''பந்தாடு நாயகி'' (கந்துகக்ரீடாம்பிகை) எனப் பெயர் வந்தது]

பைசாச உருவம் கொண்ட சத்யரதி ஸ்ரீ கோடீஸ்வரரை தரிசித்து அங்குள்ள அம்ருத தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பிசாசு தன்மை விலகப்பெற்றான் என்பது தல வரலாறு.

இவ்வூரில் தெற்குத் தெருவில் கும்பேஸ்வர ஐயர் என்பவர் வசித்து வந்தார். இவருக்கு பாலாஜி என்ற ஒரு மகன் உண்டு. இவர் வறுமையால் வாடினாலும் வைதீகத்தைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். இவர் மகன் பாலாஜி சிறுவயது முதல் தன் தந்தையாருடன்கோயில் முதலிய புண்ணியஸ்தலங்களுக்குச் சென்று சிறந்த தெய்வ பக்திமானாகத் திகழ்ந்தான். இவனுக்கு பத்து வயதாக இருக்கும்போது ஒரு தினம் அவன் நண்பர்களுடன் காவேரிக்கரையில் விளையாடிக் கொண்டிருந்தான். அதுசமயம் மணலில் ஒரு ரூபாய் நோட்டு ஒன்று கிடப்பதைக்கண்டான். உடனே அதைக் கையில் எடுத்து, அங்கு உள்ளவர்களிடமெல்லாம் 'உங்களுடைய பணமா?' என்று கேட்டான். எல்லோரும் தங்களுடையது இல்லை என்று சொல்லிவிட்டார்கள். பிறகு பணத்துடன் வீடு திரும்பி தந்தையிடம் நடந்த விபரத்தைக் கூறினான். வறுமையால் கஷ்டப்படும் கும்பேஸ்வரன் அப்பணம் தன் மகனுக்காக ஈஸ்வரனே கொடுத்ததாக எண்ணி மறுநாள் காலையில் மகனை அழைத்துச் சென்று அவனுக்கு லாட்டரி சீட்டு ஒன்று வாங்கிக் கொடுத்தார். பரிசுச்சீட்டைப் பாலாஜி ஸ்ரீ கோடீஸ்வரஸ்வாமி சந்நதியில் வைத்து வழிபட்டுப் பிறகு பெட்டியில் வைத்து விட்டான். சில தினங்களில் தந்தையும் மகனும் இதைப் பற்றி மறந்தும் விட்டார்கள்.

ஒரு திங்கள் கழிந்து அவர்கள் இல்லத்திற்கு பத்திரிகை நிருபர்கள் சிலர் வந்து பாலாஜியின் பெயருக்கு குலுக்கலில் முதற்பரிசு ரூ. 50,000/- விழுந்திருப்பதாகவும் அது விஷயமாக பேட்டி காண வந்திருப்பதாகவும் கூறினார்கள். உண்மையறிந்து கும்பேஸ்வரனும் பாலாஜியும் கோவிலுக்குச் சென்று ஈஸ்வரனுக்கு அர்ச்சனை செய்து விட்டு, பரிசுத் தொகையை பாலாஜியின் பெயரில் பாங்கில் டிபாசிட் செய்தார்கள். அந்த டிபாசிட் மூலம் வரும் வட்டியில் பாலாஜி மேல் படிப்புப் படித்து அவ்வூரிலேயே டாக்டராக வந்து பணிபுரிந்தான். கும்பேஸ்வரனும் தான் பட்ட கஷ்டத்தையும், பிறகு ஈஸ்வர க்ருபையால் மகன் டாக்டர் ஆன விஷயங்களையும் எல்லோருக்கும் சொல்லித் தெய்வபக்தியை பரப்பி வந்தார்.

சுபம்.

# பெண்மை

கோ. மா. கோதண்டம்

"ஏன்ன சாமி நீங்கமட்டும் திரும்பி வந்திருக்கீக" பூசைமணியின் கிண் கிணிநாதமாய்ஒலித்தன அந்தச் சொற்கள்.

"அந்தஆலமரத்தடிலே என் பர்சை மறந்து வச்சிட்டுப் போயிட்டேன்"

"அட... வாங்கசாமி பாத்து எடுத்துறலாம்" அழகு மயிலாய் அவள் முன்னே நடந்தாள், அவன் பின் தொடர்ந்தான்.

அறைக்கு முன்னே வந்து விட்டதில் அவனுக்கு மிகவும் திருப்தி, கபடமற்ற அவளின் போக்கு அவனுக்கு விந்தையாகவே தெரிந்தது. பாவம் இவளையா......?

மீண்டும் அவனது இயல்பு தலை தூக்கியது. காட்டு வழியில் முன்னால் விழுந்து கிடக்கும் மாங்கனி! அதனை ஓரத்தில் ஒதுக்கிவிட்டுச் செல்வதா....? அவன் மனதில் புயல் விஸ்வரூப மெடுத்தது.

முன்னே நடந்து கொண்டிருந்தவளின் பின்னழகு ஊட்டிய போதை அவனை கிறுகிறுக்க வைத்தது. இப்படி ஒரு வாய்ப்பை நழுவ விடுவதா....'அழகு என்பது ஆராதிக்க மட்டுமே'யாம் சிறிது நேரத்திற்கு முன்னே இதேஇடத்தில் நண்பர்கள் கூறிய, வாசகம் அவன் செவியலையில் மோதியது, 'நான் என்ன அழித்துவிட வேண்டும் என்று சொன்னேன் அனுபவிக்க வேண்டும் என்பது தானே என் கருத்து'. பெரும் பச்சைக்குடைகளாய் விரிந்திருந்த உடைமரங்கள்! சீரான கடற்காற்று மெல்லிய வெண்குறு மணல்! காற்றுக்கு அசைந்து விண்ணை அளந்து கொண்டிருந்த தென்னை மரங்கள். மணலுக்குகிடையே முள்ளுமுள்ளாய் பலவித கடல் சங்குகள். இந்த வெயிலுக்குநீலநிறமாய்த்தெரியும் கடல்நீர்ப் பரப்பு! வெண்ணுரையாய் ஒடிவரும் கடல் அலைகள்கரையில் வந்துமோதும் ஆரவாரம்.

ஆமாம் அது ஒரு சின்னத்தீவு.

நெல்லைமாவட்ட முந்தல் என்ற ஊரிலிருந்து சில மைல் தூரத்தில் கடலில் மிதக்கும் சொர்க்கமாய்க் காட்சி தரும் தீவுதான்! இங்கே ஒற்றைக்கொற்றையாய்—தேவதையாய்—தனித்த ஒரு பெண். அதிலும் நாகரீகப் பெண்களை யெல்லாம் அவள் முன்னே மண்டியிட வைக்கும் அப்படி ஒரு அழகு! பெண்மைக் கவர்ச்சிகளெல்லாம் ஒன்று திரண்டிருந்த வாகான உடற்கட்டு! வெறிப் பார்வைகளைப் புரிந்து கொண்டுஅங்கங்களை அதிகம் மூடத்தெரியாத ஒரு பட்டிக்காட்டு பாவம். 'அகப்பட்டதும் நடுங்கியவாறே அடங்கிக் கொள்ளும் முயலா? அறிந்ததும் சீறும் பாம்பா?

'இருக்கட்டுமே எத்தனை பாம்புகளை பணமகுடியால் பணிய வைத்துள்ளேன் மையால் எத்தனை......'

அந்தப் பகுதிக்கு புதிதாக மீன் வளத்துறையின் அதிகாரியாக சேர்ந்திருந்தான் அவன். கடற்கரையைச் சேர்ந்த அந்த ஊரிலுள்ள அலுவலக நண்பர்களுடன் இலாகாவுக்குச் சொந்தமான 'ஸ்டீமரி'ல் டிபன் வகைகளை வாங்கிக் கொண்டு தீவுக்கு வந்து அங்கே கும்மாளம் அடித்துப் பொழுது போக்கினர்.

தென்னை மரங்களை கவனித்துக் கொள்ள வென்று ஒரு மீனவக் குடும்பம் அங்கே தங்கியிருந்தது. கணவன் மீன்பாடுக்கு கடல் மேல் போய்விட்டு வேம்பாரில் விற்றுவிட்டு மாலையில் திரும்புவான், அவள் தென்னை மட்டைகளை சேகரித்து கிடுகு பின்னிவைப்பாள்.

ஆளரவமற்ற தீவில் அழகான ஒருத்தி தனியாக இருப்பதை அறிந்ததும் அவனால் நிலைகொள்ள முடியவில்லை.

நண்பர்கள் அவளை விளையாட்டாக ரசித்து வர்ணித்துப்பேசிக்கொண்டிருந்தனர். "அடுத்த பொம்பளங்களை இப்படிக்கூட பேசக் கூடாது அக்கா தங்கச்சிகளை மத்தவங்களும் இப்படி பேசவாங்கன்னு நெனக்கனும்" என்றார் பெரியவர் போத்தையாசார்.

இதெல்லாம் அவனுக்குப் பிடிக்கவில்லை 'ரசிப்பு என்பது பொழுது போக்காக மட்டுமே இருக்க வேண்டுமாம் சந்திரனை ரசிக்கவேண்டுமே தவிர பிடித்து வர வேண்டும் என்று நினைக்கக் கூடாதாம்' இதெல்லாம் நண்பர்கள் உரையாடல்கள் 'அதுசரி கைக்கு எட்டக்கூடிய ரோஜாமலரை பறித்துக் கொள்வதில் தவறென்ன?"

டிபன் முடிந்ததும் அவர்கள் கிளம்பினர்.

வேம்பாரில் அவர்கள் இறங்கும் போது, "அடடா" என்றான் அவன்.

''என்ன என்ன'' என்றனர் நண்பர்கள்.

''என் மணிப்பர்சை அந்த மரத்தடியிலே வச்சிட்டில்லே வந்திட்டேன்''

''இப்ப என்ன செய்ய''

''நீங்க ஆபீஸ் போங்க நான்மட்டும் இதே 'ஸ்டீமர்' லேயே போய் எடுத்திட்டு திரும்பி வந்திர்றேன்.''

அவன் அதை வேண்டுமென்றே வைத்து விட்டுத் திரும்பியும் வந்து விட்டான்.

''இந்தாங்க சாமி மணிப்பாசு''

அவன் அதை வாங்கிக் கொண்டான்.

அவளது அங்கங்களில் மேய்ந்து கொண்டிருந்த கண்களைத் திருப்பிச் சுற்றும் முற்றும் பார்த்தான். தீவிற்கு எந்தத்திசையிலேனும் இருந்து படகு ஏதேனும் வருகிறதா என்று.

நிலப்புனல் வேலி, அலைகளின் ஆரவாரம் தவிர ஏதுமற்ற சூன்யம். அவன் பர்ஸைத் திறந்து இருபது ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்தான்.

''இந்தா இத வச்சிக்கோ''

''அதெல்லாம் வேண்டாஞ்சாமி நாங் குடிசைக்குப் போறேன்''

''சும்மா வச்சிக்கோன்னு''

அவன் படக்கென்று அவள் கையைப் பிடித்தான்.

''உடுங்க சாமி'' அவள் கோபமாக கையை உதறினாள்.

அவன் பிடி மேலும் இறுகியது.

''இந்தா இருபது காணுதுன்னு அம்பது தாறேன் பேசாமெ நான் சொல்ருப்புல நடந்துக்கோ''

''எம் புருசங் கண்டாண்ணு இப்படியே ரெண்டு பேரையும் வெட்டி மணல்லே பொதச்சுடுவான்; அடவுடு சாமி'' அவள் உடல் பதட்டத்தால் நடுங்கியது.

''அவந்தா இப்ப இல்லேயே பேசாம சரின்னு சொல்லிடு வீம்பு செஞ்சா நா விடப்போறதில்லே ஒன்னெக் காப்பாத்தவும் ஆளில்லே எங்கிட்ட தப்பிக்கவும் முடியாது''

''சாமி சாமி வான்டாஞ்சாமி உட்டுருங்கசாமி'' அச்சங்கலந்த துடிப்பு அவளுக்கு மேலும் அழகூட்டவதாக அவன் நினைத்தான்.

''பேசாமெ நீயா சரிங்கப் போறயா இல்லே......''

''படிச்சவிக உங்களுக்கே நல்லாருக்காசாமி நா ஏழசாமி உட்டுருங்கசாமி ஐய்யோ......உடுங்களேன்'' அவன் இரண்டு கைகளாலும் அவளைச் சேர்த்து அணைத்தான். திமிறியும் முடியாத நிலையில் வெய்யில் புழு வாய்த் துடித்தாள். திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவளாக ''சரி சாமி'' என்றாள் பதட்டத்தினூடேயும் ஒரு தெளிவாக.

அணைத்திருந்த கைகளை விட்டு விட்டு ''என்ன சொல்றே'' என்றான் அவன். இந்த எடம்வேண்டாஞ்சாமி அதோ தெக்கு மூலயிலே பெரியால மரந் தெரியுது பாருங்க அத மறவுல போயிருவோம்; எம் புருசங்காரன் வந்தாலும் தெரியாம பூடும்''

''தப்பிச்சி ஒடப்பாக்குரியா''

''நெசமம்மா இல்லே சாமி நா மொதப் போயி மரத்தடியிலே நிக்கேன்; நீங்க கொஞ்ச நேரங் கழிச்சி இந்த ஒத்தடித்தடம் மாரும நேரா வந்துருங்க. நாம் போட்டா சாமி''

''சரிபோ......ஓடனும் ஒளியனுமுன்னு நெனச்சே கொல்லாமப் போகமாட்டேன்''

அவள் நடுக்கத்துடன் விடுவிடு என நடந்தாள். ஆல மரத்தின் முன்புறம் ஒரு குறிப்பிட்ட இடம் மட்டும் முள்வேலியிட்டு அடைத்திருந்தது. அந்த இடம் வந்ததும் சற்று யோசித்தாள். பின்னர் மடமடவென்று ஒரு பக்க முள்வேலியை ஒதுக்கி அவள் வந்த பாதையை மறைத்துப் போட்டுவிட்டு முன்பு வேலியிட்டிருந்த பகுதியின் வழியாக மரத்தடிக்கு வருகிறாற்போல் அந்த இடத்தைச் சரிசெய்துவிட்டு பெருமூச்சு வாங்க மரத்தடி வேரில் அமர்ந்து கொண்டாள்;

அவன் வந்து கொண்டிருந்தான். ''சாமி முள்ளுருக்கு கொஞ்சம் தெக்கால வாங்க'' சத்தம் போட்டுச் சொன்னாள். ஒற்றையடித் தடம் மறைந்ததும் அவன் நின்றான்.

''சும்மா இப்பிடி வாங்க சாமி'' அவள் கையைத் தென்புறம் வளைத்துக் காட்டினாள்.

அவள் காட்டிய பாதையில் அவன் முன்னேறினான்.

''இதென்ன மணலு அமுங்குது''

''அட சும்மா வேகமா வாங்க சாமி, நேரமானு புருசங்காரன் வந்துருவான்'' அவள் துரிதப்படுத்தினாள்.

அவனும் கால்களை வேகமாக எடுத்து வைத்தான். திடீரென்று ''ஐய்யோ......'' வென அலறல். அவன் தத்தளித்துக்கொண்டிருந்தான்.

சேற்றில் புதைவதைப்போல அவன் கால்கள் அந்த மணலில் புதைந்து கொண்டிருந்தன. இப்படியும் அப்படியும் உடலை அசைத்தான். ஒருகாலைத் தூக்கினால் மறு கால் மேலும் புதைகிறது. அந்தப் புதை மணலில் பாதித் துடைகள் உள்ளே சென்றுவிட்டன. அவள் அதைப் பார்த்துக்கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தாள்.

''ஐய்யோ... என்னைக் காப்பாத்தேன்.''

'என்னை உட்டுருங்க சாமி'..........

அவள் சோகத்தோடு புலம்பிய காட்சி அவன் கண் முன்னே நிழலாடியது.

''நாஞ் செஞ்சது தப்புத்தான் என்னைக் காப்பாத்தேன். ஒ அண்ணம் மாதிரி நெனச்சி என்னைக் காப்பாத்தேன். ஐய்யோ நான் செத்துப் போயிருவேனே'' அவன் சோகத்தோடு புலம்பினான்.

அவள் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தாள்.

''இங்கே புதை மணலு இருக்குன்னு எனக்குத் தெரியாமெ போச்சே என்னைக் கொல்றதுக்கு இங்கே கொண்டாந்து விட்டுட்டியே. ஐய்யோ ஒங்கால்லயாச் சும் விழுந்து கும்புடுதேனே தங்கச்சி என்னைக் காப்பாத்த மாட்டியா.......''

அவன் இடுப்பளவு புதைந்து விட்டான். கண்களை மூடிக்கொண்டு புலம்பினான்.

'உட்டுருங்கசாமி வாண்டாஞ்சாமி' அந்த சோகப் படலம், மூடிய கண்களுக்கு முன் படமாக ஓடியது. கத்தல்கள் பயனற்றுப் போகவே மௌனமுடன் கைகளை தூக்கித் தொழுதான். கண்களில் நீர் ஆறுகப் பெருகியது. பார்க்கச் சகிக்காமல் அவள் கண்களை மூடினாள், நீர் முத்துக்கள் சொட்ட எழுந்து முன்னே நடந்தாள்.

★ ★ ★

## மாணவர் இலக்கணம் !

ஆசிரியரிடத்தில் மாணுக்கர்கள் அடங்கி ஒடுங்கி ஆர்வமுடன் கேட்டுப் படிக்க வேண்டிய இலக்கணத்தை நன்னூலார் விளக்குகின்றார்.

''கோடன் மரபே கூறுங் காலை
பொழுதொடு சென்று வழிபடல், முனியான்
குணத்தொடு பழகி, அவன்குறிப்பில் சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்,
பருகுவன் அன்ன ஆர்வத்த னாகிச்,
சித்திரப் பாவையின் அத்தக(வு) அடங்கிச்,
செவி வாயாக நெஞ்சு களனாகக்
கேட்டவை கேட்டவை விடா(து)உளத்(து)
அமைத்துப்
போவெனப் போதல் என்மனார் புலவர்''

—நன்னூல் 40



## புலம்பல் கவிதை

பி. மதனன் M. A.

புதுக்கவிதை படித்திட்டேன்
புத்தக மொன்றில் !
புரியவில்லை அதில்கவிஞன்
பொருளென்ன வென்று ?
புரிந்தது காரணமவன்
மொழிதான் என்று !
புரிந்துகொள்வோம் கற்பனைக்குத்
தடை கூடாதெனில் ?
பொறுப்போமோ மொழிக்குமது
பொருந்தும் எனில் ?
பொருளுண்டு இலக்கணத்
தடைகூடா தெனில் !
பொருளுண்டோ மொழித்தூய்மை
கூடாது எனில்?
புலம்பினேன் புதுக்கவிதைப்
போக்கினை எண்ணி!
மண்கலமுடைக்க இரும்பேன்?
எனப் புறப்பட்டேன்
வெறியிலொரு புதுக்கவிதைப்
புனைந்திட நானும் ! !



## ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது

### கேரள மாநில முதலமைச்சர்

# மாண்புமிகு திரு. இ. கே. நாயனார் அவர்கள்

## ஆற்றிய உரை

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். உங்கள் முதல்வர், மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன் என்னை இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுமென அழைத்தார். எங்களிடையே நிலவி வரும் நெருங்கிய சுமுக உறவுகள் காரணமாக நான் அதனை விரும்பி ஏற்றுக்கொண்டேன். அது மட்டுமல்ல, கேரளமும், தமிழ் நாடும் அண்டை மாநிலங்கள். இரண்டுக்கும் பொதுவான பல பிரச்சினைகள் உண்டு. எங்கள் மொழியாகிய மலையாளம், தமிழ் மொழியின் சகோதர மொழியாகும். முந்தைய வரலாற்றில்; கேரளம் தமிழ் நாட்டுடன் இணைந்திருந்தது; கேரளத்தின் பிரதான மொழியாகத் தமிழே இருந்து வந்தது. இந்த மொழி வாரிக் கலாசாரத் தொடர்புகளை, இரு மாநில மக்களும் மறக்க முடியாது. தமிழ்மொழி, ஒரு வளமையான மொழியாகும். இந்த வரலாற்றுப் பின்னணிதான், தமிழ் மக்களை, இந்தியத்துணைக் கண்டத்தின் மக்களில் பழமையான ஒருவராக, வெளிப்படுத்துகிறது.

தமிழ் மற்றும் ஏனைய திராவிட மொழிகளின் தோற்றம் பற்றி, பலகருத்துக்கள் உள்ளன. அதேபோலத் தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதிகளைப்பற்றியும் பல கருத்துக்கள் உள்ளன. அவற்றில் 'லெமூரியா' என்ற குமரிக் கண்டம்பற்றிய கருத்து மிகவும் பழமையான நாகரீகத்தைக் குறிப்பிடுகிறது. அந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்ட திரைப்படத்தைத்தான் நான் துவங்கி வைக்கவிருக்கிறேன். அந்தக் கருத்தின்படி, தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதி இன்றைய ஸ்ரீலங்கா, மற்றும் இந்துமாக் கடலில் ஆப்பிரிக்கா வரை பரவியிருந்தது. ஆப்பிரிக்க மக்களில் சில பகுதியினர் பேசும் மொழிகளில், தமிழ் மொழிக்கு இணையான பல சொற்கள் இருக்கின்றன. அதே போல ஆப்பிரிக்க மக்களின் சில பழக்க வழக்கங்கள், தமிழ் மக்களின் பழக்கங்களை ஒத்ததாக உள்ளன. எனவே ஒரு பெரும் எரிமலை பொங்கி எழுந்ததை யடுத்து ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு காரணமாக தொடர்ந்திருந்த ஒரு நிலப்பகுதி கடலில் மூழ்கியது என்பதையே இந்தக் கருத்து கூறுகிறது. இதற்கு அறிவியல் ஆதாரங்கள் இல்லையென்றும் ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால் குமரிக்கண்டம் அல்லது லெமூரியா பற்றிய கருத்து, தமிழ் மக்களிடையே விரிவாகப் பரவியுள்ளது. 'குமரிக்கண்டம்' எத்தனை தொலைவுக்குப் பரவியிருந்தது என்பது பற்றியும் பல்வேறு கருத்துக்கள் உள்ளன.

தொல்காப்பியத்தின் பாயிரத்தில் 'தமிழ் கூறும் நல்லுலகம்' என்ற குறிப்பைக் காண்கிறோம். தமிழ் இலக்கணத்தின் சிறப்புக்கள் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் கூறப்பட்டுள்ளன. தமிழ் மொழி, தமிழ் மக்கள் மற்றும் குமரிக்கண்டம், தமிழரின் நாடு, மிகவும் பழமையானது என்பதையே, இப் பழம் பெரும் நூல் உணர்த்துகிறது. குமரி என்பதை ஒரு தீபகற்பமாகவும், துறைமுகமாகவும் யாத்திரைத் தலமாகவும் ''பெரிப்லஸ்'' என்ற நூல் கூறுகிறது. சேர நாட்டு மக்களின் பழம் பெரும் காப்பிய இலக்கியமான சிலப்பதிகாரத்தில், கடலில் மூழ்கிய இந்தக் குமரிக் கண்டம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

''பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள'' என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளதை எவரும் மறந்துவிட முடியாது.

சிலப்பதிகாரத்தை ஆராய்ந்த புகழ்மிக்க ஆராய்ச்சியாளரும் உரையாசிரியருமான அடியார்க்கு நல்லார், குமரிக் கண்டத்தின் கடலில் மூழ்கிய பகுதிகளைப் பற்றி விவரித்துள்ளார். சங்க நூலாகிய கலித்தொகையும், மூழ்கிப்போன குமரிக் கண்டத்தின் தென் பகுதியைப் பற்றி குறிப்பிடுகிறது.

உலகின் அனைத்துப் பண்பாடுகளிலும், தமிழ் மொழியும், தமிழ்ப் பண்பாடும் தமிழ் நிலப்பரப்பும் மிகவும் பழமையானது என்பதனை இந்த ஆதாரங்கள்

வலியுறுத்துகின்றன. திராவிடமொழிகள்இன்றுகாண்பது போல் தென்னிந்தியாவில் மட்டும் கட்டுப்பட்டு, பரவியிருந்தவை அல்ல என்பதை இப்போது அனைவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். வடஇந்தியாவிலும் திராவிட மொழிகள் விரிவாகப் பரவியிருந்தன என்று ஒரு கருத்து உண்டு. காஷ்மீர் மற்றும் ஆப்கானிஸ்தானம் ஆகிய பகுதிகளின் மலை வாழ் மக்களில் சிலரது மொழிகள் திராவிட மொழிகளை ஒத்து இருக்கின்றன. பழம்பெரும் இந்திய-ஆரிய இலக்கியமான இருக்வேதத்திலும் திராவிட மொழிகளின் சில பொதுவான அமைப்புக்கள் உள்ளன.

சிந்து சமவெளி நாகரீகத்தின் பொற்காலத்தை விவரிக்கும் மொகஞ்சதாரோவில், பேசப்பட்ட மொழியும் ஆதித்திராவிட மொழியின் முன்மாதிரியாக உள்ளது. மெசப்படோமியா தாழ்வரையிலுள்ள பல கல்வெட்டுக்களும் தமிழுக்கும், தமக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளனவென்பதை உறுதிப் படுத்தப்படுகின்றன. வேதங்களில் கூட தமிழ் மக்கள் பற்றியும், வட இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் அவர்களது வணிக உறவுகளைப்பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. எகிப்திய பிரமிடுகளில் உள்ள கல்வெட்டுகளுக்கும் தமிழுடன் தொடர்பு உள்ளதை அண்மையில் வந்த செய்திகள் குறிப்பிடுகின்றன. ஸ்ரீலங்காவிலும் சிங்கப்பூரிலும், தமிழ், தேசீய மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சமஸ்கிருதத்தை விட. தமிழ் மிகப் பழமையான மொழி என்பதும் தமிழ் மிகவும் வளமையானது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே நிகழும் இந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் அமைப்பாளர்கள், தமிழ் மொழியின் வரலாற்றுப் பாரம்பரியத்தை நினைவு கொள்ளத்தக்கவகையிலும், பண்டைத் தமிழரின் பழமையான நாகரீகத்தையும், பழம்பெரும் வரலாற்றையும் அனைத்து மக்களும் கண்டுகளிக்கும் வகையிலும் குமரிக் கண்டத்தைத் திரைப்படமாகத் தயாரித்து அளித்துள்ளமை மிகவும் பொருத்தமானதாகும்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பல, தமிழுக்கும் மலையாளத்திற்கும் பொதுவான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளன. தமிழ் இலக்கியத்தின் புகழ்மிக்க காப்பிய நூலாகிய சிலப்பதிகாரம் பற்றி நீங்கள் அனைவரும் அறிவீர்கள். கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் இன்றைய கேரளத்தையும் உள்ளடக்கிய பகுதியில் ஆட்சி செலுத்திய சேர அரச பரம்பரையில் வந்த இளங்வடிகளால் அது இயற்றப்பட்டது.

பேரியாற்றின் கரைகளில் மலைவளம் காணச் சென்றிருந்த சேரன் செங்குட்டுவனுக்கும், இளவரசன் இளங்கோவிற்கும் கோவலன்-கண்ணகியின் கதை சொல்லப்பட்டு அதையே அடிப்படையாகக் கொண்டு இளங்கோவடிகள் இந்த மாபெரும் நூலை' உருவாக்கினார். இந்தக் காவியம் நிகழ்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை நகரிலேதான், வையை யாற்றின் கரையிலேதான் நாம் இன்று கூடியிருக்கிறோம். பின்பு சேரன் செங்குட்டுவன் கேரளத்தில் கண்ணகிக்கு ஓர் சிலை எழுப்பி, கொடுங்கலூர் என்ற ஊரில் ஓர் கோவிலையும் கட்டினான். இன்றும் அந்தக் கோவில் 'ஸ்ரீ கரும்பா பகவதி' என அழைக்கப்பட்டு வழிபாடு நடக்கிறது. தமிழ் மக்களிடையே கண்ணகியின் கதைவிட்டுக்கு வீடு எவ்வளவு தூரம் பரவியுள்ளது என்பதை நான் அறிவேன். அதுவே தமிழர்களையும் மலையாளிகளையும் இணைத்துள்ளது. சேரமான் பெருமாள் நாயனார் மற்றும் குலசேகர ஆழ்வார் போன்ற பக்திப் புலவர்களையும் நாம் மறந்துவிட முடியாது. மனோன்மணீயம் என்ற முதல் தமிழ் நாடகத்தை இயற்றிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, கேரளத்து ஆலப்புழையைச் சேர்ந்தவர். ஆகவே இந்த இரு மொழியினரின் பழமையான வரலாற்றுத் துறைகளிலும், இலக்கியப் படைப்புகளிலும், இலக்கணத்துறைகளிலும், நாடகத்திலும், மற்றும் மக்களது வாழ்க்கையிலும் எங்கெங்கும் ஒரு பொதுவான ஒற்றுமை இழை ஊடுருவிக்கிடக்கிறது.

ஊர்ப்பெயர்களில், விழாக்களில், பண்டிகைகளில் சங்க இலக்கியங்கள் காட்டும் இயற்கைக்காட்சிகளில் அனைத்திலும் இன்றைய கேரள மாநிலப் பகுதியின் சாயலே பிரதிபலிக்கக் காண்கிறோம். தமிழர்களும் மலையாளிகளும் ஒன்றாக இணைந்தே வாழ்ந்து வளர்ந்து வந்திருக்கின்றனர். மலையாள மொழியில் வரலாற்றுரீதியாக ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் ஏற்பட்ட வளர்ச்சியே, மேற்கு மலைகளின் பின்னே வாழ்ந்த மக்கள் ஒரு தனி தேசிய இனமாக வளர்ச்சி பெறக்காரணமாயிற்று.

உலகில் வாழும் பல்வேறு வகையான மக்களின் வளர்ச்சியிலும் மொழிகளின் வளர்ச்சியிலும் இத்தகைய ஒரு வளர்ச்சிப் போக்கை நாம் காண முடியும், இத்தகைய மாறுதலுக்கும் வளர்ச்சிக்கும் இந்திய நாதே ஒரு எடுத்துக்காட்டாகும். வரலாற்றின் காலப் போக்கில், பல்வேறு தேசீய இனங்களின் தாய் மொழிகளிலும், கிளை மொழிகளிலும் தோன்றிய வளர்ச்சி அவைகளை முழுமையான தனிமொழிகளாகவே உருவாக்கியது, இந்த பரிணாமத்தில் ஏற்கனவே வளர்ச்சி பெற்ற சில மொழிகளும் சிதைந்து அழிந்து போயின. ஒரு காலத்தில் மிக வளமையாக வலிமையாக இருந்த சமஸ்கிருத மொழி இன்று அந்த நிலையில் உள்ளதை நாம் காண்கிறோம். இதே போல, ஐரோப்பாவில் மிகவும் செழுமையாகவிருந்த இலத்தீன் மொழிக்கும் அதே நிலை ஏற்பட்டது.

இப்படிப்பட்ட வளர்ச்சிகள் காரணமாகவே பல நூற்றாண்டுக்கால வரலாற்றுப் பின்னணியில் இந்தியா வில் பல மொழிகள் தோன்றின. ஒரு மக்களின் வர லாறு என்பது அந்த மக்களின் மொழியின் வரலாறாக வும் பல நூற்றாண்டுகளாக அவர்கள்வளர்த்தபண்பாட் டின் வரலாறாகவும் விளங்குகிறது, உண்மையில் ஒரு இனத்தவர் பேசும் மொழி, அவர்கள் பல நூற்றாண்டு களாக வளர்த்த வளர்ச்சிக் கதைகளைப் பிரதிபலிக்கும் கருவூலம் எனலாம். ஒவ்வொரு மொழியும் அதைப் பேசும் மக்களுக்கு ஒருதனித்தன்மையினை அளிக்கிறது. பல்வேறு மொழிகள் பேசும் பல்வேறு இனங்களைக் கொண்ட மக்கள் வாழும் நம் நாடு, பல மொழி நாடு. சுருங்கக் கூறினல், இந்தியா ஒரு பல்-தேசீய நாடு. வரலாற்றுக் காரணங்கள் காரணமாக பல்வேறு தேசீய இனங்கள் சகோதர மனப் பான்மையோடு வாழ்ந்து வரும் ஒரு பல்தேசீய நாட்டில், இந்த இனங்களைஒரு இனணப்பு மொழியால் இணைப்பது ஒரு பெரும் பிரச் சனையாகும். விடுதலைஇயக்கத்தின்நாள்முதலாக நாம் இந்தப் பிரச்சனையை விவாதித்து வருகிறோம், நாட் டுப் பற்றையும் இந்தியையும் ஒரே தட்டில் வைத்துப் பார்த்து, நாட்டின் பெரும் பகுதி மக்களின் மேல் இந் தியைத் திணிக்க திட்டமிட்ட முயற்சி மேற்கொள்ளப் பட்டது. நாடு முழுவதும் இந்தியையே பயிற்று மொழி யாக மாற்றவும் யோசிக்கப்பட்டது. பிறமொழி பேசும் மக்களது கடுமையான எதிர்ப்புக் காரணமாக, இந்தி வெறியர்களின் முயற்சி தடைப்பட்டது. நாட்டின் புகழ் மிக்க தலைவர்களாகிய பண்டித நேரு, இராசேந்திர பிரசாத், மற்றும் அபுல்கலாம் ஆசாத் ஆகியோர் இத்த கைய திணிப்பு, நடைமுறை சாத்தியமல்ல என்று உறு தியாக நின்றனர்.

பண்டித நேருவின் நாட்களுக்குப் பின்னர் ஏனைய தேசிய இனமக்களின் மீதும், பெரும் பான்மை மக்கள் மீதும், இந்தியைத் திணிக்கத் தொடர்ந்து முயற்சிக் கப் பட்டது. நெருக்கடி நிலையின் போதும், இந்தியை அனைத்து மக்கள் மீதும் திணிக்க ஒரு திட்டம் வகுக்கப் பட்டது. இன்று கூட நாட்டின் பிரதமரும், ஏனைய மத்திய அமைச்சர்களும் இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று சத்தியம் செய்கிறார்கள். இருப்பினும்இரயில்வே, விமான சர்வீஸ் மற்றும் இதர இலாகாக்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மூலமாக இந்தியைத் திணிக்கத் திட்டமிட்ட முயற்சி தொடர்ந்து நடக்கிறது. இந்தியை மெல்ல மெல்ல ஊசியேற்றுவது போலத் திணித்து விட் டால் நாட்டின் 60 கோடி மக்கள் அதனை ஏற்றுக் கொண்டு விடுவார்கள் என்று இந்தி வெறியர்கள் எண்ணி இறுமாப்படையலாம். இந்தியை விரும்பாத மக்கள் மீது இந்தியைத் திணிக்கத் திணிக்க, நாடு முழுதும் பிரிவினைச் சக்திகள் இரட்டிக்கத் துவங்குகின் றன, பெருகத் துவங்குகின்றன.

இந்தித் திணிப்பிற்கு எதிரான போரில் தமிழ் மக் கள் முன்னணிப் படையினராக நின்றனர். அந்தப் பெரும் போரில் உயிரிழந்த தியாகிகளுக்கு இந்த மாநாட்டு மேடையிலிருந்து நான் வீரவணக்கம் செலுத் துகிறேன். அவர்களது உறுதிப்பாடு, வீரம், தியாகம் அனைத்துமே, இந்தித் திணிப்பிற்கு எதிரான உறுதி யான போராட்டத்தில் இந்தி பேசாத மக்களனைவ ருக்கும் பெரும் ஊக்க சக்தியாக நிற்கும்.

ஒரு மொழியை விரும்பாத மக்கள் மீது அதனை திணிக்க முயல்வது, அவர்கள் கனவில் கூட நினைத் திராத விளைவுகளை ஏற்படுத்தி விடும் என பண்டித நேரு திரும்பத் திரும்ப எச்சரித்துள்ளார். இந்தியா வின் இணைப்பு மொழியாக இருக்க வேண்டியது ஆங் கிலமா? இந்தியா? என்பது முக்கிய பிரச்சனையல்ல. இங்குள்ள முக்கியமான பிரச்சனை எப்படி அனைத்து மொழிகளுக்கும் சமத்துவ நிலையினை நடை முறையில்

அமுல்படுத்துவது என்பதே. இன்று 59 மொழிகளில் பத்திரிகைகளும், புத்தகங்களும் வெளியாகின்றன. இந்த அனைத்து மொழிகளும் அங்கீகரிக்கப்பட வேண்டும். அவைகளைப் பேசும் பல தேசீய இன மக்கள் காலப்போக்கில் அவர்களே தங்களுக்கென்று ஒரு இணைப்பு மொழியை உருவாக்கிக் கொள்வார்கள்.

தமிழ் மொழிக்கும், தமிழ்மொழி பேசும் மக்களது வளர்ச்சிக்கும் ஒரு புதிய திருப்பத்தை இந்த ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு குறித்து நிற்கிறது. மலையாளம், தெலுங்கு, வங்காளி, நேபாளி, கொங்கணி ஆகிய இதர மொழியினரும் தங்களது உலக மாநாடுகளை நடத்துகின்றனர். இந்திய நாட்டில் வாழும் பல்வேறு தேசீய இனங்களின் வளர்ச்சிக்கு இது ஒரு திருப்பு முனையாக விளங்குகிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த பல்வேறு தேசீய இனங்களின் உறவையும், மத்திய மாநில அரசு உறவுகளையும், சமத்துவம் மற்றும் ஜனநாயக சமஷ்டி அடிப்படையில் அணுகுவதன் மூலமே, இந்த தேசீய இனங்களின் ஒற்றுமையை வளர்த்து உறுதிப்படுத்த முடியும்.

இந்தத் தருணத்தில் ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். காலம் காலமாக ஊறி வளர்ந்துள்ள தமிழ்ப்பண்பாடு மக்களைப் பிரிக்கும் குறுகிய சுவர்களுக்கு அப்பாற்பட்ட ஒற்றுமையைக் குலைக்கும் குறுகிய நாட்டு வெறிக்கு எதிரானது. கணியன் பூங்குன்றனார் என்ற புறநானூற்றுப் பெரும் புலவர் தனது பாடலில் ''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்று பாடியுள்ளார். மலையாள இனத்தவராகிய நாங்களும் இந்தப் பெரும் பண்பாட்டில் ஊறியுள்ளோம். அதனால்தான் இன்று இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் உலகெங்கிலும் தமிழர்களும், மலையாளிகளும் குடியேறி இருப்பதை நாம் காண்கிறோம். பிற மக்களது சிறந்த பண்பாடுகளை ஏற்றுக் கொண்டு, அவர்களோடு சுமுகமான உறவுகளை வளர்த்துக் கொண்டு வாழ்வது நம் இரு இனத்தவரின் தனிச்சிறப்பாகும். இந்தச் சிறப்பையும், பாரம்பரியத்தையும் கருத்தில் கொண்டே கேரளம், தமிழ் மொழி வளர்ச்சிக்கான அனைத்தையும் செய்து வருகிறது. கேரளத்தில் தமிழை பயிற்று மொழியாகக் கொண்ட பல பள்ளிகளும், தமிழை இரண்டாவது மொழியாகப் பயிற்றுவிக்கும் பல பள்ளிகளும் உள்ளன. தமிழ் கேரளத்தில் பலகல்லூரிகளில் இளங்கலைச் சிறப்புப் பாடமாக அமைத்துள்ளது. கேரள பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பிரிவு தமிழ் மொழியில்முது நிலைக் கல்வி மற்றும் மேல் நிலைஆராய்ச்சிக்கானதனிப்பிரிவை ஏற்படுத்தி வளர்ச்சி பெற்றுள்ளது. கேரள பல்கலைக் கழகத்தின் 150 முதுநிலைப்பட்டதாரிகளும் டாக்டர் பட்டம் பெற்ற 25 தமிழறிஞர்களும் உலகில் பல பகுதிகளில் உயர் பதவிகளை வகித்துத் தமிழ் மொழி வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி வருகிறார்கள். கேரளத்தின் பிற பல்கலைக் கழகங்களும் தமிழ் மொழி வளர்ச்சிக்குச் சிறந்த ஊக்கமளிக்கின்றனர்,

பண்டைய நாட்களிலிருந்து இன்றுவரை, தமிழ் இனத்தவரையும், மலையாள இனத்தவரையும் இணைக்கும் ஒரு பொதுவான பிணைப்பு உள்ளது என்று தெரிகிறது. அதுவே, இன்று ஜனநாயகம், சமஷ்டி அரசு சமூக நல்வாழ்வு, கல்வி மற்றும் அரசியல், சமூக பொருளாதார செயல்பாடுகளுக்கான நமது பொதுவான கண்ணோட்டத்தில் திகழ்கிறது. நமது கண்ணோட்டத்தில் உள்ள இந்த பரந்த சமூக உறவு, நமது பண்டைய பண்பாட்டின் உணர்ச்சிகளின் அடிப்படையில் உருவானதாகும். இந்த பிணைந்த நட்புறவு பிரிக்க முடியாத ஒன்றாகும்.

பொதுவான உறவுகளினால் நாம் இருவரும் இந்திய நாட்டின் மற்ற மக்களுடன் இணைக்கப்பட்டுள்ளோம்.

மலையாளம் தமிழ் மொழியின் சகோதர மொழியாகும். அவள் தமிழின் உடன் பிறப்பாகும். தமிழர்களுக்கு சகோதரியின் பால் உள்ள கடமை உணர்வைப் பற்றி நான் கூற வேண்டியதில்லை. தமிழ் தனது உடன் பிறப்பை என்றும் உடன் நின்று காக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்தத் தமிழ்க் குடும்பத்தின் ஒரு அங்கமாகிய நான் திருவள்ளுவரின் குறளொன்றைக் கூறி எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

''கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு''

இது நம்மைப் பொறுத்தவரை ஒரே குடும்பத்தின் விழாதானே! இத்தப் பெருவிழாவில் பங்கேற்க என்னை அழைத்தமைக்காக உங்கள் முதல்வர் மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களுக்கு என் அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, எனது உரையைக் கேட்ட உங்களனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு தமிழரின் வளமான பண்பாட்டினைச் சித்தரிக்கும் இந்தத் திரைப்படக் காவியத்தினைத் துவக்கி வைக்கிறேன்.

நன்றி! மீண்டும் ஒரு முறை நன்றி உரித்தாகுக!

வணக்கம்.




கொ. ச. பலராமன்

கோமாதா பூஜைக்கு கந்தனும் வள்ளியும் சுறு சுறுப்பாக இயங்கினுர்கள்.

கூரை வீட்டைச் சாணமிட்டு மெழுகி கோலமிட்டு, பசுமாட்டைக் கண்மாய் ஊரணியில் குளிப்பாட்டிக், கொண்டு வந்து பசுவுக்குத் திலகமிட்டு அருகம் புல் வைத்து, சாம்பிராணி புகையிட்டு சூடம் கொளுத்தி வணங்கினர்.

கந்தன் ''இந்தாவளே நா போயி பிரசாதத்தை சீனிக்கொடி பாத்தி ஈசான மூலேயில வச்சு கும்பிடுதேன். நீ மதியம் கம்மஞ் சோரை கரைச்சி வாளியிலே கொண் டா'' எனக்கூறித் துண்டை எடுத்துத் தோளில்போட்டுக் கிளம்பினுன்.

கந்தனின் மனைவி வள்ளி, ''சரிதாய்யா'' என அடுப் பைப் பற்றவைத்தாள்.

நல்லதங்காளுக்கு நாத்தனுர் வாழைத் தண்டை கொளுத்தக் கொடுத்தது போல்,

கிணத்தடியில் இருந்த தென்ன மட்டையைக் கொண்டு வந்து வைத்திருந்தான் கந்தன்.

முனகிக் கொண்டே மட்டையைப் பொடியாகக் கீறி பற்றவைத்தாள்.

புகைந்து கொண்டே இருந்தது.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டே ''மிளகாய் மாறுனுச்சும் அடுப்பெரிக்க வச்சிருந்திருக்கலாம் அதை யும் இந்த மனுசன் வித்துட்டாரே'' அடுப்பை ஊதினுள் வள்ளி.

'அவரு மென்ன கள்ளுக் குடிக்கவா வித்தாரு, கஞ் சித் தண்ணிக் காணும்தானே!'

குப்பையில் கிடந்த கூளத்தையும், கிழிந்த பேப்பர், காய்ந்த முட்கள் இவைகளைப் பொறுக்கி அடுப்பில் வைத்தாள். அது பொசு பொசுவென பிடித்து எரிந்தது. 'அரிசிக் கஞ்சியாவது சட்டுன்னு ஆகும், கம்மங்கஞ்சி சாமானியமா வேகுதா'

அங்கலாய்த்தபடியே இடித்த கம்பை கரைத்து உலே யில் ஊற்றினுள்.

அது ஊறவைத்த கள்ளுப் பானைபோல் பொதபொத வென நுரை தள்ளி வெந்தது.

கந்தனின் புஞ்சை கரிசல் பூமியாததலால் கிணற்றுத் தண்ணீர் சவராக இருந்தது. தண்ணீர் எவ்வளவு குடித் தாலும் தாகம் தீராது.

எந்தப் பயிர் சாகுபடி செய்தாலும் மேமழை விழுந் தால்தான் வெள்ளாமை கூடும். கரிசல் பூமியில் பெரும் பாலும், காட்டு வெள்ளாமைதான் உண்டு.

கேப்பை, சோளம், பெல்லாரி, உள்ளி, மிளகாய், கடலே என சில்லரை மகசூல்தான் கிட்டும்.

பெருங்கொண்ட விவசாயிகள்தான் தங்களின் சாப் பாட்டுக்கென நெல் பயிரிடுவார்கள்.

அதுவும் மேமழை பருவத்துக்கு பெய்தால்தான், நெல் தன் மேனி கிடைக்கும்.

அதிக மழை பெய்து விட்டாலோ வந்தது ஆபத்து. நெல் அருமையாக வளரும், பொதி சமயம் கொதித்து வளர்ச்சி நின்று பாதி வெள்ளாமை கிட்டாது.

விவசாயத்தில் கந்தனுக்கு இதுகளெல்லாம் அத்துப் படி.

மூளி வெள்ளை சீனிக்கொடி பாத்தி 50 ரூபாய் என வாங்கி நாற்றுப்பாவியிருந்தான்.

அது மிக நன்ருக இடைவெளியில்லாத பாத்தி நிரம்பி வளர்ந்திருந்தது.

அந்த சந்தோஷத்தில் வள்ளி போட்டிருந்த தாலி மஞ்சக் கயிறில் சிறு தாலி இரண்டு தொங்கிக் கொண்டிருந்தது.

சிறு தாலியை விற்று உழவு செய்து பாத்தி கட்டி, அடி உரமெனகலப்புரம் வைத்திருந்தான்.

பிரசாதத்தைக் கொண்டுபோய் ஈசான மூலையில் வைத்து சாமி கும்பிட்டான்.

ராம பாத்திகளில் நட பெண்களும், கொடி அறுக்க ஆண்களையும் அமர்த்தியிருந்தான்.

நாள் கொடி என கந்தன் புடுங்கி அரிவாள் முனையால் மூன்று மூன்று கணுவாக நறுக்கி வைத்தான்,

'இந்த தடவை தீபாளிக்கு சேலை துணிமணி, குழந்தைகளுக்கு கால்சராய், வள்ளிக்கு தாலியைப் புதுசா வாங்கிரனும்'

'சீனிக் கொடியே உன்னையேதான் நம்பியிருக்கேன்'

யோசனையில் ஆழ்ந்திருந்த கந்தனை சீமைச்சாமி, ''என்ன அப்படி யோசனை'' எனகுரல் கொடுக்க சிந்தனை கலைந்த கந்தன் ''அறுங்க அறுங்க பாத்திகள்லகொண்டு போயி தப்பாமவைங்க';

கந்தன் கூற, நடவு செய்யும் பெண்கள் சீனிக்கொடிகளை அடுக்கு அடுக்காக எடுத்துப் பாத்திகளில் வைத்தனர்.

மோட்டார் தண்ணீர் எடுத்துவிட்டான் கருவாயன். வாய்க்கால் வழியே வந்த தண்ணீர் பாத்திகளில் நிரம்பி மூன்றும் பாத்தியில் தலை வைத்தது.

''நடுங்க, தண்ணிக்குப் பின்னலேயே போவலேனு பாத்தி இருகிறும். அப்புறம் கொடியை ஊனமுடியாது'' எனச் சத்தமிட்டான் கந்தன்.

கொத்தாச்சி மரியா ''வள்ளி வரல்லியா?'' எனக் கேட்டாள்.

''அவ மதியக்கஞ்சி எடுத்துட்டுத்தா வருவா''

''அப்ப குழவ போடுதோம் சாமி கும்பிட துட்டுக் கொடுங்க.' மரியா சொல்ல,

நடுகைக்கு வந்த ஆட்களுக்கு தலைக்கு ஒரு முழு ரூபாயைக் கொடுத்தான் கந்தன்.

''சேசுவே இப்படி வெள்ளிப்பணமாக் கொட்டனும் எங்களுக்கு வருஷம் பூராவும் கொத்து வேலை கிடைக்கனும்'' என வேண்டியபடி மரியா ஈசான மூலையில் நட ஆரம்பித்தாள்.

கந்தனும், முனியாண்டி, வேலய்யா, மாரி எனத் தெய்வங்களை மானசீகமாக வணங்கி முதல் நடுகையை ஆரம்பித்து வைத்தான்.

கரிசல் மண் ஆனதால் தண்ணீர் பாய்ந்த இடத்தில் கால் வைத்ததும் கருப்புச் செருப்பு போட்ட மாதிரி மண் ஒட்டிக் கொண்டது.

தண்ணீர் பாய்ந்த இடங்களிலிருந்து பொந்துகளிலிருந்த நண்டுகள் வெளிவந்தன.

நண்டுகளை வேட்டையாட காக்கை, கழுகுகள் ஆலவட்டமிட்டன.

பக்கத்து புஞ்சைகளில் ஏர்கள் உழுதவண்ணமிருந்தன.

கரிசல் பூமியில் வெயிலடித்தால், மாரியம்மன் கோவிலுக்குப் பூக்குளி இறங்குவது போல மண் சுடும்.

கள்ளிச் செடி புதர்களில் இருக்கும் கொரண்டிப் பூச்சி (இது ஒரு வகை பாம்பு) வெளிவரும்.

இந்தக் கழுதை கடித்தால் விஷமில்லாவிட்டாலும் கால் வீங்கி விடும். உழுத சாலில் அவ்வப்போது தென்படும் கொரண்டி பூச்சியை உடனே அடித்து வெளியில் போட்டு உழவு செய்து கொண்டிருந்தனர்.

உழவு செய்யும் உழவர்கள் பக்கத்து புஞ்சை கேப்பையை கடித்துவிடக் கூடாதே என மாடுகளுக்கு வாய்ப்பெட்டி போட்டு கட்டியிருந்தனர்.

மாடுகள், வெயிலுக்கும், வாய்ப் பெட்டி போட்டுக் கட்டியதற்கும், வாயில் நுரைதள்ள நடந்து கொண்டிருந்தது.

X X X

சீனிக் கொடி நடவு ஒரு குறுக்கம் முடிந்து மறு குறுக்கத்தில் தலை வைத்தனர்.

நடவு செய்த இடத்தை கந்தன் பார்த்தான். நன்ருக தப்பு விடாமல் நட்டு இருந்தது.

சீனிக் கொடி பாத்தியும் அதிகமாக இருப்பதுபோல் தெரிந்தது.

சீனிக் கொடி அறுப்பவர்கள் வெற்றிலை போட்டனர்

வாயில் பொடி போட்ட பாலையா 'சட்டுன்னு அறுங்கப்பா, வெத்தலையைக் குதப்பிக்கிட்டு' என்ருன்.

'ஆமா உனக்கென்ன இத்தினி பொடியை வாயிலே இழுவிட்டாப் போதும். நாங்க பாக்கைக் கடித்து வெத்திலேயிலே சுண்ணும்பு தடவி போட வேணுமா?'

'ஏன் நீங்களும் வீட்டிலேயே வெத்திலேயை இடிச்சி கொண்டாரது'

'இனிம அப்படித்தான் செய்யனும்'

'என்னப்பா பேச்சு, சட்டுன்னு அறுத்துக் குவிச்சிட்டு கூடமாட நடவுக்கு வரப்படாதா?' கந்தன் கூறினன்.

'பாலேயாவும் நம்மளேப் போல வெத்தலே போட்டா தெரியாது' கருவாயன் கூறினன்.

'நீங்களும் பொடிப் போடுததுதானே, எனக்கு மட்டும் பட்டாவா குடுத்திருக்காக'

பாலேயா கூறி விட்டுக் கொடி அறுப்பதில் முனேந்தான்.

'ஆமா இனிம இதுக்கும் பட்டாக் கேக்க வேண்டியதுதான்' எல்லோரும் சிரித்தபடி வேலேயில் முனேந்தனர்.

X X X

இரண்டு குறுக்கமும் நடுகை முடிந்தது. மரியா சொன்னுள் 'தண்ணியை நிப்பாட்டு கஞ்சி குடுச்சிக்கிருவோம்.

'ஐயாவுக்கும் இன்னும் கஞ்சி வரல்லே' கருவாயன் கூறினன்.

'அவுகளுக்கு நெல்லுச் சோறில்ல வரும். நம்மளாட்டம் கரைச்சா குடிப்பாக, இலே போட்டில்ல சாப்பிடுவாக' மரியா சொல்ல,

நடவு செய்யும் மனக்கி 'அதா பாரு கரையில வள்ளி வாரா' எல்லோரும் கரையைப் பார்த்தனர். வள்ளி தலேயில் கஞ்சிக் கலயத்துடன் நடந்து வருவது தெரிந்தது. கந்தன், சரி 'சாப்புட்டு நடுவோம் என்ருன்.

எல்லோரும் தென்னே மர நிழலில் கஞ்சியைக் கரைத்து தொடு வெஞ்சனமாக உள்ளியைக் கடித்தனர். வள்ளி கொண்டு வந்த கஞ்சியைக் குடிக்க பம்பு செட் நிழலில் உட்கார்ந்தான் கந்தன்.

'ஆமா நீ என்ன கடிச்சிக்கிற நெத்திலியும் வெங்காயமும் வதக்கியாந்திருக்கே'

'ஆமா இந்த அடுப்புல பருப்புப் போட்டு வேகவச்சி குழம்பு ஆக்க மூனு நாளுல்ல ஆகும்'

'நீ பாட ஆரம்பிக்காதே, அடுப்புக்கு சமுசாரி விறகு வாங்கிக் கட்டுபடி ஆகுமா, கரையில இருக்கிற கொழை கொப்பை வெட்டித்தானே விறகாக்கனும்'

'அதுதான் தெரியுதில்ல, கொண்டாந்ததை பேசாம குடிப்பியா?'

கந்தன் கஞ்சியை அருமையாகக் கரைத்து, கடி வெஞ்சனத்துடன் சப்புக் கொட்டிக் குடித்தான்.

எல்லாரும் கரைத்த கஞ்சியைத் தேவாம்ருதமாகக் குடித்து வெத்திலேச் சருகைப் போட்டனர்.

கந்தனும் அவர்களோடு வெற்றிலே போட்டு, வள்ளிக்கும் கொடுத்தான். வள்ளியும் வெற்றிலே போட்டாள்.

'கொடி அறுத்தது போதும் கூடமாட நடவுக்கு வாங்க' என வள்ளியும் கந்தனும் கொடியை எடுத்துப் பாத்திகளில் அடுக்கினர்.

தண்ணீர் எடுத்து விட்ட கருவாயனும் வாய்க்காலில் விலகியபடி கொடியை வாய்க்கால் வரப்பில் நட்டான்.

வள்ளி தடுகை செய்திருந்த புஞ்சையைப் பார்த்து 'தாயே மாரி இந்த வருஷமாவது சோத்துக்கு நெல்லுப் பருக்கைக்கு வழி செய்மி' என வேண்டினுள்.

'யாத்தாசீனிக் கொடி நல்லா தளதளன்னு வளர்ந்திருக்கு, உம் மனசு போல நல்லாக் கிடைக்கும், எனக்கு மட்டும் போனவுடனே நாலு பொடிமட்டை தவ்வாபூத்து கடையில வாங்கிக் கொடுத்திடு'

பாலேயா சொல்ல எல்லாரும் சிரித்தபடி நடுகையில் ஆழ்ந்தனர்.

ஒவ்வொருவருக்கும் அவரவர் 'கனவுகள்' நிறை வேற வேண்டுமே என வேண்டினர்.

# பார்ப்போம்

டாக்டர் இரா. கோதண்டராமன்

மணி ஐந்தரை ஆகப் போகிறது. இன்னும் அரை மணி நேரம் இருந்தால் மறுநாள் வகுப்புக்காகச் சேகரித்த குறிப்புக்களை வகைப்படுத்திக் கொள்ளலாம். அதன் பிறகு.........

''சார் உங்களை யாரோ பார்க்க வந்திருக்கிறார்கள்'' இந்தக் கூர்க்கா எவ்வளவு இனிமையாகத் தமிழ் பேசுகிறான்! நேபாள மொழியின் ஒலிச்சாயல் தமிழில் படியும்போது.......

''வணக்கம் சார். என்னை உங்களுக்கு நினைவிருக்கும் என்று நினைக்கிறேன்''

தமிழ் எம். ஏ. தேர்வு முடிந்தகையோடு மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பது பற்றி ஆலோசிக்க நாலைந்து மாதங்களுக்கு முன்பு இவள் ஒரு முறை இங்கு வந்திருக்கிறாள். இவள் அப்பா ரயில்வேயில்......

''நீங்கள் கடைசியாகச் சொன்ன யோசனைதான் அப்பாவுக்குப் பிடித்திருந்தது சார்''

திருமணப் பத்திரிகையைக் கொடுத்துவிட்டு அவள் விடை பெற்றுக் கொள்கிறாள்.

மடி மீதில், ''லிங்விஸ்டிக் சர்வே ஆஃப் இந்தியா'' வின் நான்காம் தொகுதி கனக்கிறது. மனதில் மெல்லிய சோர்வு. காலையில் விடுதியிருந்து எட்டு மணிக்கு — இப்போதெல்லாம்ஏழரைமணிக்கேபுறப்பட்டாகிறது;இல்லாவிட்டால் அந்த மெஸ்ஸில் கூட்டம் சேர்ந்துவிடும். சே, இது என்ன வாழ்க்கை? மெஸ்ஸில் கூட்டம். தெருவில் கூட்டம். பஸ்ஸில் கூட்டம். எங்கே பார்த்தாலும் கூட்டம் கூட்டம் கூட்டம். இந்தியா என்னும் கிண்ணம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிவதைப்போல் வாஷிங்டன் போஸ்டில் வெளியான ஒரு கார்ட்டூனை தமிழ் வார இதழ் ஒன்றில் மறு பிரசுரமாகப்பார்த்த நினைவு. வற்றுத கங்கையும் தோற்றுப் போகிறது.

வெளியில் லேசான தூறல். சில்லென்ற இதமான காற்று. மேலே மின் விசிறி நாலில் ஓடிக்கொண்டிருந்தது. இதில் ஒரு வேடிக்கை. மேலே இருந்து பார்த்தால் க்ளாக்வைஸ் ஓட்டம். கீழேஇருந்து பார்த்தால் கீழே தானே இருக்கிறேம் — அதன் இலைகள் பின்னேக்கிச் சுழல்கின்றன,

''நீங்கள் ஒரு சரியான.........''

'சரியான?'

''ஒன்றுமில்லை. இதை நான் ஆறில் வைக்கப் போகிறேன். உங்களுக்கு என்னதான் ஆகிறது என்று பார்க்கிறேன்''

''நீ இன்னும் வீட்டுக்குப் போகவில்லையா?''

''நல்ல வெயில். எனக்கு உங்கள் குடைவேண்டும். இன்றைக்கு வீட்டுக்கு வாங்களேன் சாப்பிட''

''இன்றைக்கு குடை சாப்பிடட்டும். இன்னொரு நாளைக்கு நீ கூப்பிடாமலே......'' ஒரு முறைப்பு அவள் போய்விடுகிறாள்.

எப்படி மனம் இவளிடம் ஈடுபட்டது? அப்படி ஒன்றும் பார்த்தவுடன் இன்னொருமுறை மீண்டும் பார்க்க வேண்டும் என்று எண்ணத்தைத் தோற்றுவிக்கக் கூடிய தோற்றம் அல்ல. பிறகு எப்படி?

மழை லேசாக வலுக்கிறது. சாரலும் வலுக்கிறது. ஜன்னலை மூடிவிட்டு தலைக்கு நேராக தலைதெறிக்க நாலில் ஓடிக்கொண்டிருக்கும் மின் விசிறியை ஒன்றில் வைத்துவிட்டு......

இப்போது அந்த மின் விசிறியின் இலைகள் ஒவ்வொன்றும் பார்வையில் பிடிபடுகின்றன.

''லிங்விஸ்டிக் சர்வே ஆஃப் இந்தியா''வின் பக்கங்கள் ஒவவொன்றுகப் புரள்கின்றன.

திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த கோண்டி மொழியில் ஆரியமொழியாகிய மராத்தியின் மொழியியற் கூறுகள் எவ்வளவு செம்மையாகப் பதிந்து போயிருக்கின்றன!

''நான் எவ்வளவு நேரமாக நின்று கொண்டிருப்பது''

தூக்கி வாரிப் போடுகிறது. இது அவளுக்கு வழக்கம், ஓசைபடாமல் வந்து.......

''ஐ யாம் ரியலி சாரி. நான் கவனிக்கவில்லை''

''நீங்கள் ஒரு சரியான·······''

''சரியான?''

''ஒன்றுமில்லை. அப்படி என்னதான் இருக்கிறது உங்களிடம்?''

''எனக்குத் தெரிந்தவரையில் என்னிடம் ஏதுவும் இருப்பதாகத் தெரியவில்லை''

''அது உங்களுக்குத்தானே தெரிந்திருக்கிறது இந்தப் பேதை நெஞ்சத்துக்குத் தெரியவில்லையே''

அவள் நயந்து போய்விடுகிருள்.

இவளிடம் மட்டும் அப்படி என்ன இருக்கிறது இனிமையான குரல். நகைச்சுவையாக எழுதும் ஆற்றல். நிகழ்ச்சிகளை விவரிக்கும்போது ஓரங்க நாடகமாகிவிடும் நேர்த்தி. எல்லாவற்றிற்கும் மேலாக அவள் ஒரு பெண். இதெல்லாம் காரணங்களாக இருக்க முடியுமா? அது எப்படிச் சொல்ல முடியும்? பழக்க முதிர்ச்சியில் இவையெல்லாம் சாதாரணமாகிவிடக் கூடியவையல்லவா. பிறகு என்னதான்........

அவள் மெல்ல கனைத்துக்கொள்கிருள்.

''எனக்கு நேற்று இரவு முழுவதும் சிவராத்திரி''

''எனக்கு சுகமாக தூக்கம்''

'' தூங்காமல் என்ன. எல்லாவற்றையும்தான் இங்கே கொட்டியாகி விட்டதே''

''ஏதாவது கனவுகள்........?''

''சிவராத்திரியில் கனவுகள் வேறு''

அவள் கையில் இருக்கும் ஒரு துண்டுக் காகிதம் பல மடிப்புகளாகின்றன.

''காகிதம் விலையேறிப் போன காலத்தில் இப்படியா·······

''இது ஒன்றும் வெறும் காகிதம் இல்லை''

லிங்விஸ்டிக் சர்வே ஆஃப் இந்தியாவின் மீது அதைப் பிரித்து வைக்கிருள். பத்துப் பனிரண்டு வரிகளில் ஒரு கவிதை!

''இது என்னிடத்தில் இருக்கலாமில்லையா?''

''உம்ஹூம், இப்படிக் கொடுங்கள்''

அதைக் கொடுத்திருக்கக்கூடாது. இன்னொரு முறை படிக்க வேண்டும் என்று மனம் தவித்தது. அதற்குள் அதைத் துண்டு துண்டாகக் கிழித்து......

மனதில் ஒரு வெறுமை. இவளுக்கு என்ன வந்து விட்டது?

''இப்போது உனக்கு ரொம்ப திருப்தி. இன்றைக்கு ராத்திரி நன்ருகத் தூங்குவாயாக்கும்''

அவள் மருகிப் போகிருள்.

''இப்படிச் செய்திருக்ககூடாததுதான். நீங்கள் இந்த நெஞ்சத்தில் பத்திரமாக இருக்கிறீர்கள். ஒரு பயத்தில் நான் இப்படி.....''

''எப்படியோ தூங்கினல் சரி''

''நான் ஒன்றும் தூங்கப் போவதில்லை''

''தூங்காமல்......?''

''நீங்கள் எப்படித்தான் தூங்கிவிடுகிறீர்களோ?''

''எனக்குக் கனவுகள் வேண்டும்''

''உங்கள் கனவுகளில் நான் வருகிறேன''

''உனக்கு அதைவிட்டா வேறு வேலை தான் என்ன''

''நீங்கள் மட்டும் என்ன?

''கனவு காண்பதற்கு இரண்டு உந்துதல்கள் வேண்டும். ஒன்று தூக்கம். இன்னென்று எண்ணங்கள். நீ தான் தூங்குவதில்லையே. தூங்காதவர்களுக்கு எண்ணங்கள் எங்கே கனவுகளாக மலரப்போகின்றன?''

''அதை இந்தக் கவிதை சொல்லவில்லையா?''

''அதைத்தான் துண்டு துண்டாகக் ··· .... ''

அவள் கண்கள் கலங்கி நிற்கின்றன.

''நான் அப்படிச் செய்திருக்கக் கூடாதுதான். நான் என்ன செய்யட்டும்? என்னுடைய அனுபவங்கள் அப்படி விரக்தியடைந்த நிலையில், நெஞ்சின் குமுறல்களைக் கொட்டித் தீர்த்துக் கொள்ளும் ஒரு சுமைதாங்கியாக நீங்கள் என் வாழ்க்கையில் குறுக்கிட்டீர்கள். எனக்கு இந்தச் சுமைதாங்கி வேண்டும். இந்தச் சுமைதாங்கியும் இல்லையென்று ஆகி விட்டால்.... ··· ''

''அது ஒன்றும் இல்லை என்று ஆகாது. நான் சுமைதாங்கியாவே இருக்கிறேன். போதுமா?''

''நேதும். ஆனல் சுமை தாங்கியாக மட்டும்தான்''

''சுமைதாங்கியாக மட்டுமே தான்''

அவள் மெல்லச் சிரிக்கிருள்.

''மணி இரண்டாகப் போகிறதே. பசிக்கவில்லையா''

''எனக்குப் பசிக்கவில்லை. நீ சாப்பிடப் போகவில்லையா!''

''எனக்கும் பசி எடுக்கவில்லை''.

''இது நன்ருக இருக்கிறது. எனக்குப் பசிக்கவில்லை என்பதற்கும் எனக்குப் பசி எடுக்கவில்லை என்பதற்கும் என்னபொருள் வேறுபாடு?''

அவள் மனம்விட்டுச் சிரிக்கிருள்.

''நீங்களும் உங்கள் மொழியியலும் ... உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா?''

அவள் முகத்தில் ஒரு களை.

''உங்கள் பிறந்தநாளின் போது நான் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை படித்தேன். நிகழ்ச்சி நிரல்படி என் பிறந்த நாளின்போது உங்கள் ஆராய்ச்சிக்கட்டுரையைப் படிக்கப் போகிறீர்கள்.''

''இது தற்செயலாக அமைந்தது. இதற்குப் போய்......''

''ஆமாம். தற்செயலாய் பூனே குறுக்கே போனலும், பல்லி குரல் எழுப்பினலும், ஆந்தை கத்தினலும், ஐயர் எதிரே வந்தாலும் அதற்கெல்லாம் அர்த்தம் கற்பிக்க நமக்குத் தெரியும். ஆனல் இந்த தற்செயலுக்குமட்டும் அர்த்தமில்லாமல் போய்விட்டது போலிருக்கிறது''

''எனக்குப் பசிக்கிறது''

''இந்த நேரத்திலா''

''ீ''

''நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? ஒரு நாளில் இரண்டு மூன்று தடவையாவது உங்களைப் பார்க்கா விட்டால் எனக்குப் பைத்தியமே பிடித்து விடும் போல இருக்கிறது''

''இப்போது மட்டும் என்ன வாழ்கிறது! ஒன்று செய்யலாம். அடுத்த ஒரு வாரத்துக்கு நாம் ஒருவரை யொருவர் பார்க்காமல் இருந்து பார்ப்போம். என்ன சொல்கிருய்?''

''யாருக்கு இந்தத் தண்டனை''

''இரண்டு பேருக்கும் தான்''

''நீங்கள் இருக்கும் போது என்னல் முடியாதா என்ன?''

''இன்றைக்கு வெள்ளிக்கிழமை. நாளையிலிருந்து இந்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்.......''

''கொஞ்சம் பொறுங்கள். இடையில் ஞாயிற்றுக் கிழமை வருகிறது. அன்றைக்கு நீங்களோ நானே இங்கு வரப்போவதில்லை, ஆகவே இந்த ஒப்பந்தத்தை - பெரிய ஒப்பந்தம் - நாளைக்கு வேண்டாம். திங்கட்கிழமையிலிருந்து...''

அவள் உடலில் சோர்வும், நடையில் தளர்ச்சியும் தென்படுகின்றன. காற்றில் மூடிக் கொண்டு விட்ட கதவுகள் அவள் எரிச்சலைத் தாங்கிக் கொள்கின்றன. மின் ஓட்டம் தடைபட்டு மின் விசிறி நின்று போயிருக்கிறது. எதிரில் இருக்கும் மீன் தொட்டியில் மீன்கள் மேலும் கீழுமாக அலைகின்றன. மணி ஆறுக்கு மேல்ஆகியிருக்கிறது. சனிக்கிழமை வகுப்பு இல்லையென்ருலும் குறிப்புகள் எடுப்பதில் மிகுதியான நேரம் கழிந்து விடுகின்றது. மனம், உடல் இரண்டிலும் சோர்வு. லிங்விஸ்டிக் சர்வே ஆஃப் இந்தியாவை மூடி எடுத்து...

திரைச் சீலை மெல்ல அசைகிறது.

அவள் உள்ளே நுழைகிருள்.

''என்ன நீங்கள் இன்னும் கிளம்பவில்லையா?''

''நான் அவ்வளவு சீக்கிரத்தில் கிளம்பமாட்டேன் என்று தெரிந்துதானே வந்திருக்கிருய்''

அப்படித்தான் இருக்கட்டுமே. மழை இன்னும் விடவில்லை. எனக்கு உங்கள் குடை வேண்டும். நீங்கள் பஸ்ஸில் போகிறவர்தானே''

''அங்கிருந்து அறைக்குப் போக எனக்குக் குடை வேண்டாமா?

''பரவாயில்லை. மழையில் நனைந்து உங்களுக்கு ஏதாவது நேர்ந்தால் அதைப் பார்த்துக் கொள்ள நான் இருக்கிறேன்.''

''ரொம்ப சந்தோஷம். உனக்கு நினைவு இருக்கிறதா? இன்று சனிக்கிழமை. நாளைக்கு விடுமுறை. திங்கட்கிழமையிலிருந்து ஒரு வாரத்துக்கு நாம் ஒருவரையொருவர்......''

''பார்ப்போம், நான் போகணும். சின்னவளுக்கு உடம்பு சரியில்லை'' அவள் ஒருகணம் தயங்கி, பிறகு வேகமாக வெளியில் சென்று குடையை விரித்துக் கொள்கிருள். அவள் உருவம் மெல்ல மெல்ல பார்வையில் இருந்து மறைகிறது.

அது சரி. அந்த பார்ப்போமுக்கு என்ன அர்த்தம்!

# மனோன்மணீயத்துள் ஒரு கண்ணோட்டம்

சி. தில்லைநாயகம்



பாருலகிலேயே மிக்க பழமை வாய்ந்த தென்றும் இனிமை மிக்கதென்றும் அறிஞர்களால் போற்றப் படுகின்ற சிறப்பு தமிழ் மொழிக்குண்டு. இத்தகைய சீரும் சிறப்பு மிக்கதமிழ்மொழியைப் பண்டைக்காலம் முதற் கொண்டு புலவர்களும் வள்ளல்களும் போற்றி வளர்த்துள்ளனர். முடியுடை வேந்தர்களும் குறுநில மன்னர்களும் அரியணையில் ஏற்றி வைத்து அகமகிழ்ந்துள்ளனர். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ் கணக்கு, ஐம்பெரும் காப்பியங்கள், தொண்ணூற்ருறு வகையான பிரபந்தங்கள், பன்னிரு திருமறைகள், பக்திப் பாசுரங்கள், தேசியப் பாடல்கள் போன்ற ஆயிரக்கணக்கான நூல்கள் தமிழ் அன்னைக்குரிய அணிகளாக விளங்குகின்றன. இவ்விலக்கியங்களின் வரிசையிலே பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றியுள்ள ''மனோன் மணீயம்'' என்னும் நாடக நூல், சிறப்பானதோர் இடத்தைப் பெற்று விளங்குகின்றது. இந்நூற்ருண்டின் முற்பகுதியில் அனந்தைப் பகுதியில் வாழ்ந்து அருந்தமிழ்ப் பணியில் ஈடுபட்ட பேராசிரியர் அவர்களின் தமிழ்த் தொண்டு நம்மைப் பெருமகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றது.

சீவகசிந்தாமணி முதலான ஐம்பெரும் காப்பியங்களைத் தமிழன்னைக்கு ஐந்து அணிகளாகக் கொண்டு பாராட்டுவதுண்டு. தமிழன்னையின் அடிப்பகுதிபோல் அமைந்த சேர நாட்டில் வாழ்ந்த இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம், அன்னையின் பாதத்திற்குரிய சிலம்பாகவே அமைந்தது பொருத்தமானதாகும். அடிகளார் தோன்றிய அதே சேர மண்ணில் பிறந்த பேராசியர் அவர்களின் ''மனோமணீய''மும் அன்னையின் பாதத்து விரலுக்குரிய ஒரு அணியாக ஆசிரியர் அவர்களாலேயே கருதப்படுவது மிகப் பொருத்தமாக அமைகின்றது.

*''வெள்ளிய தாயினும் விளங்குறின் கணைக்காற்கு ஒள்ளிய சிறுவிரல் அணி''*யாகிய மிஞ்சியாக

அதைக் குறிப்பிடுதல் ஆசிரியர் அவர்களின் அடக்கமும், பணிவும் அனைத்தையும் விஞ்சி நிற்பதையே எடுத்துக் காட்டுகிறது.

இயற்கையின் கோலப் பேரழகு கூத்தாடும் ஆலப்புழையில் தந்தையார் பெருமாள்பிள்ளைக்கும் அன்னையார் மாடத்தி அம்மாளுக்கும் அருமகனாக 1855 ஆம் ஆண்டு (கொல்ல வருடம் 1030 பங்குனி 28) பிறந்த சுந்தரம்பிள்ளையவர்கள், அன்புத் தந்தையையே ஆசிரியராகக் கொண்டிருந்தார். ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் போன்ற நீதி நூல்களையும், தேவாரம், திருவாசகம் போன்ற பக்திப் பனுவல்களையும் ஐயமறக் கற்றுத் தமிழ் மொழியின் அருமை பெருமைகளை உணர்ந்து கொண்ட பேராசிரியர் அவர்கள், தனியாக ஒரு தமிழாசிரியரை அமர்த்தித் தமிழறிவைப் பெருக்கிக் கொண்டார். பொதுப் பணிகள் பலவற்றுள் ஈடுபட்டார். திருவனந்தபுரம் சைவப்பிரகாச சபை தோன்றுவதற்குக் காரணமாயிருந்ததே பிள்ளையவர்கள்தான் என்பதாக அறிகிருேம். அக்காலத்திலேயே இச்சபையின் கட்டிடப் பணிக்காகப் பிள்ளையவர்கள் ஐந்நூறு ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளாரென்ருல் அவர்தம் தமிழ்ப்பற்றினை என்னெப்பது?

''நீராரும் கடலுடுத்த நிலமடந்தை'' எனத் தொடங்கும் தமிழ்த் தெய்வ வணக்கப்பாடலுக்கு நிகரானதொன்றை தமிழ் இலக்கியக் கடலில் இதுகாறும் காண முடியவில்லை. ''பல்லுயிரும் பலவுலகும்'' எனத் தொடங்கும் இரண்டாவது பாடல் ஆசிரியர் அவர்களின் இலக்கிய ஆற்றலுக்கும் உவமைத் திறத்திற்கும் உரியதோர் எடுத்துக்காட்டாகும். சுருங்கக் கூறின் 'மனோன்மணீயம்' நாடகத்திற்கு நிகரானதோர் நாடகத்தை—சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய'' இலக்கியப் பேழையை—தமிழிலக்கியத்தில் காணமுடியவில்லை. ஆசிரியர் அவர்களின் அடக்கமும் ஆற்றலும் தமிழ்ப்பற்றும் பாசமும், பரந்துபட்ட அறிவும், விரிந்து விளங்கும் தத்துவ ஞான வித்தகத்திறமும் நூல் நெடுகிலும் இழைந்தோடுவதைப் பார்க்கிருேம்.

''அடியேன் கடையேன் அறியாச் சிறியேன்
கொடுமலை யாளக் குடியிருப் புடையேன்''
ஆயினும் நீயே தாயெனுந் தன்மையின்
மேயபே ராசையின் மீக்கொள ஒர்வழி
உழைத்தலே தகுதியென் றிழைத்தவிந் நாடகம்''

என்னும் அடிகள் உள்ளத்தில் இடம்பிடித்து உணர்வு களைக் கௌவுகின்றன. மலையாள நாட்டில் பிறந்தாலும், பிறப்பால் தமிழன் என்னும் உணர்ச்சியே, தமிழ்த் தாயிடம் கொண்ட அன்புக்குக் காரணம் என்று தெளி வாக்குகின்றார். அன்னைக்குத் தொண்டாற்றுவது மைந்தனின் கடமை என்பதைக் காட்டும் ஆசிரியர் சுவை மிக்கதோர் சுந்தர இலக்கியத்தைச் சமைத்து விட்டு, கணைக்காலின் சிறு விரலுக்குரிய வெள்ளி மிஞ்சியாக இதனை ஏற்றருள வேண்டுமெனக் கெஞ்சி நிற்கின்றார்.

''மனோன்மணீயம்'' மறுமலர்ச்சி இலக்கியத்திற் குரியதோர் உயரிய வித்து எனக்கூறுவது பொருத்த மானதாக அமையும். எளிய இனிய தமிழ் நடையில் உள்ளத்தை அகவுகின்ற அகவற்பா வழியாக உயர்ந்த கருத்துக்களையும், பண்டை இலக்கியத்தின் பிழிவையும் ஒரு சேரத் திரட்டுகின்றார். ஆசிரியர் திருக் குறள், புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, திரு வாசகம், இராமாயணம், வில்லி பாரதம், நைடதம், நள வெண்பா, பெரியபுராணம் போன்ற பல நூல்களிலி ருந்து மேற்கோள் காட்டி இருப்பது பிள்ளையவர்களின் தமிழ்ப் புலமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். நான்கு சீர்களைக் கொண்ட ஓர் அடியிலேயே வாழ்வுக்கு வழிகாட்டும் பெருமைகள் புலப்படுத்தப்படுகின்றன.

''நெருப்பையும் கறையான் அரிக்குமோ''
''பூவையை வளர்த்து பூனைக்கீயவோ''
''அரைக்கி லன்றோ சந்தனம் கமழும்''
''புத்தியே சகல சக்தியும்''
''பிடித்தாற் கற்றை விட்டால் கூளம்''
''போர்வந் திடிலிவண் நேர்வந்திடுமெலாம்''

இவை போன்ற பல தொடர்கள் நம் செவிக்குத் தேன் பாய்ச்சிச் சிந்தனைக்கு விருந்தாக அமைகின்றன. உல கத்தில் புலனுணர்வுக்கு அப்பாற்பட்ட பொருள்கள் எவ்வளவோ உள்ளன. அனைத்துப் பொருள்களையும் கண் ணும்,காதும், மூக்கும்,வாயும் உணர்ந்துகொள்ளக்கூடிய முறையில் எடுத்துக்காட்டமுடியாது. போதமாகிய உணர்வினால் அறியவேண்டிய பொருள்களை உணர்வி னாலேயே உணரவேண்டுமேயொழிய பொறிகளினால் உணர முடியாது என்னும் தத்துவ ஞானத்தின் அடிப் படையாகிய கருத்தை இரண்டே அடிகளில் அழகுற எடுத்துக்காட்டுகின்றார்.

''பூதப் பொருட்கே புலன்துணை யன்றிப்
போதப் பொருட்டுப் போதும் போதம்''

மனிதன் பெற்றுள்ள ''உள்ளம்'' எனப்படுவது அற்புதமான ஆற்றல்கள் பல நிறைந்தது. அது எல் லையற்ற பெருவெளியாக எங்கும் பரந்து கிடப்பது உள் ளத்தில்தோன்கின்றசிந்தனைக்கு தடைவிதிப்பதற்குஎதனு லும்,எவராலும் முடியாது; சிந்தனையைச் சிறைப்படுத்த முடியாதுஎன்னும் கருத்துக்களையெல்லாம் உள்ளடக்கி

'உளமெனப் படுவது அளவிலாப் பெருவெளி
கோட்டையு மதற்கிலை, பூட்டோ ழிதற்கிலை''

என்றும்

''கண்ணினும் எத்தனை நுண்ணிய துள்ளம்
களங்க மறுந்தோறும் விளங்குமங் கெதுவும்''

என்றும் பாவடிகள் தேன் வடியப் பாடியுள்ளார் பேராசிரியர் அவர்கள்.

நன்மைகள் அருகிப் போய் தீமைகள் மிகுந்து வரு கின்ற ஒரு காலத்தில் நாமின்று வாழ்ந்து வருகின்றோம்.

''நன்மையாவது, தீமையாவது ஒன்றுமில்லை. இவைகளெல்லாம் சமுதாயத்தை அடக்கி வைப்பதற்கு முன்னோர் காட்டிய பூச்சாண்டி'' என்னும் குடிலவாதம் இன்று பல இடங்களில் தலைதூக்கி வருவதைப் பார்க் கின்றோம். இவ்வாதத்தைப் பொருத்தமான இடத்திலே புகுத்திக்காட்டி, இம்மனப்பான்மையின் இறுதி வீழ்ச்சி யையும் குடிலனின் அழிவின் வழியாகக் காட்டுகின்றார் ஆசிரியர்,

''தீது நன்றென ஓதுவ தெல்லாம்
அறியார் கரையும் வெறுமொழி யலவோ
பாச்சீ பாச்சி என்றழும் பாலர்க்குப்
பூச்சி பூச்சி என்பது போலாம்''

என்பது குடில வாதமாகும்.

கலைகளுக்கு அரசி, கவிதை; கவிதைக்கு அடிப்படை கற்பனை. மனோன்மணீயத்துள் பல இடங்களில் இக் கற்பனை பட்டொளி வீசிப்பறக்கக் காணலாம். நாஞ்சில் வளத்தைச் சுட்டிக் காட்ட வந்த ஆசிரியர், கற்பனை கலந்த அழகியதோர் உவமையைக் கையாளுகின்றார். வீதிகளில் சிறுவர்களும் சிறுமியரும் சிந்தை மகிழ விளை யாடுவதைப் பார்க்கின்றோம். பறவைகளின் இறகெடுத் துச் சிறுமியரின் விலாப்புறத்தை மெதுவாகத் தொட்டு விட்டால் சிறுமியர் மயிர்க்கூச்செறிந்து 'குளுக்'கெனச் சிரித்து விடுவர். இதுபோன்ற நாஞ்சில் நாட்டுச் செழு நிலமாகிய மங்கை தன் மேனியை உழவர்கள் கலப் பையின் நுனிக்காலால் வருடித் தொட்டதும், பயிர்களா கிய மயிர் கூச்செறிந்து நெல்மணிகளைச் சிலிர்த்து நெஞ் சாரச் சிரித்து வளம் தருகின்றாள்நாஞ்சில் நன்மகள் என் பது கற்பனை.

*''தூவியால் தம்முடல் நீவிடில் சிரிக்கும்*
*சிறுமிய ரென்னஅச் செழுநில நங்கை*
*உடுபடை கொழுமுனை தொடும்முனம் கூசி*
*உடல்குழைந் தெங்கும் உலப்பறு செல்வப்*
*பயிர் மயிர் சிலிர்த்துப் பல்வளம் நகுவள்''*

இத்தகைய நயம் செறிந்த பகுதிகள் பல காண்கின்றோம்.

மனோன்மணீயத்தினுள் அமைந்துள்ள ஒரு கிளைக்கதையாக இலங்குவது சிவகாமி சரிதம். ஆசிரியரவர்களின் தத்துவ ஞானப் பேரறிவனைத்தும்இச்சிறு கதையினுள் சிந்தையை அள்ளும் முறையில் வெளிப்படுகின்றது. சைவசித்தாந்தக் கருத்துக்கள் செறிந்த உருவக்கதையாக ஆசிரியர் இதனைக்குறள் வெண் செந்துறைப் பாக்களாக அமைத்துள்ளார். ''வாழிய நின் மலரடிகள் மௌன தவ முனிவ'' என்னுந் தொடக்கமே நெஞ்சைப் பிழிந்துவிடுகின்றது. உவமைகளும், கற்பனைகளும், ஓசையும் மிகச்சிறப்பாக அமைந்துள்ளன. இளைஞர்களின் உயிர் வாடுவதற்குக் காரணமான அந்தியென்னும் தலைவியின் ஆட்சி ஆரம்பமாவதற்கு முன்னர் மாலைப் பொழுது நீங்கி இருள் ஆட்சிக் கொள்ளத் தலைப்படுகின்றது. வானத்தே விண்மீன்கள் மின்னத்தொடங்கி விடுகின்றன. அவ்வாறு அவை மின்னிக் கொண்டிருப்பது அவற்றிற்கிடையே ஏதோ இரகசியம் பேசுவது போல் அமைந்துள்ளன இதனை,

*''அந்தரத்தே கண்சிமிட்டி சுந்தரத் தாரகைகள்*
*அரிய ரகசியந் தமக்குள் அறைந்துநகை புரிய''*

என்கின்றார். அந்தி மயங்கும் நேரத்தில் காட்டுப் பகுதிகளில் வௌவால்கள் அங்குமிங்கும் சுற்றிக் கொண்டிருப்பதும்; மின்னி மின்னிப் பூச்சிகள் பறந்து கொண்டிருப்பதும் இயல்பேயாகும். இவ்விடத்தும் ஆசிரியரின் கற்பனைத் திறன் செயல்படுகின்றது. சிற்றூர் ஒன்றில் யாதேனும் அதிசயம் நடந்துவிட்டால் அதனைப் பார்ப்பதற்கு அயலாரை அவசரமாகச் சென்றழைப்பது வழக்கமாம். வௌவால்கள் பறப்பது, அதிசயத்தைத் தெரிவிப்பதற்கு மக்கள் அங்குமிங்கும் செல்வதுபோல் அமைந்துள்ளதாம். இருட்டில் பறக்கின்ற வௌவால்கள் ஒன்றையொன்று முட்டி மோதிக் கொள்ளுதல் கூடாதே என்பதற்காக அவற்றின் பின்னால் விளக்கை ஏந்திப் பிடிப்பதைப் போன்று மின்மினிப் பூச்சிகள் பறக்கின்றனவாம்.

''விந்தை நடப்பது தெரிக்க விளிப்பவரில் வாவல்
விரைந்தலைய மின்மினியும்விளக்கொடு பின்ஓட''
என்கிறார்.

சிவகாமி சரிதத்தின் இறுதியில்சிவகாமிசிதம்பரனை அடையும்போது இருவரும் ஒருவருக்கொருவர் ஆர்வமுடன் தழுவுகின்றனர். ''சிவகாமி யானுனது சிதம்பரனே'' எனச் சிதம்பரம் கூறுவதற்கு முன்னர் இருவரும் உருவில் ஒன்றாகிவிடுகின்றனர். இவர்களுள் முதலில் அணைத்தவர் யாவர் என்பதைப் பற்றித் தத்துவஞான வித்தகர்கள் விரிவான பல ஆராய்ச்சியில் ஈடுபட்டும் உண்மையை உணர முடியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. அதுதான் பிரிந்திருந்த இருவரும் ஒன்றாக இணைந்து விட்டனரென்பது. பசுவானது பதியைஅடைவதை - ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணைவதை இதைவிடச் சிறப்பாக எவ்வாறு விளக்க முடியும்?

நாள் தோறும் நம் வாழ்வில் சந்திக்கும் மனிதர்களைத்தான் மனோன்மணீயத்துள் காண்கின்றோம். சீவகனின் குலகுருவான சுந்தர முனிவர் மன்னனிடம் வைத்திருக்கும் கள்ளமில்லாப் பேரன்பும், சீவகனிடம் அன்பு வைத்திருக்கும் நாராயணன் போன்றோர் குடிலனின் சூழ்ச்சியால் மன்னனின் கோபத்துக்கு ஆளாவதும் கெடுமதியுடைகுடிலன் மன்னனின் அன்புக்கு ஆளாகி மன்னனை ஆட்டிப்படைப்பதும், தனக்குச் சாதகமான எதுவும் மன்னனிடம் நேரடியாகக் கேளாமல் மன்னன் வாயாலேயே அதனைச் சொல்ல வைப்பதும், இந் நாடக நூலுள் இனிமை குன்றாமல் திறம்படக்காட்டப் பட்டுள்ளன. முனிவர்களும், நடராசர்களும், நாராயணர்களும் அருகிப்போய் குடிலர்களே மிகுந்து வருகின்ற இன்றைய உலகம், மனோன்மணீயத்தின் வாயிலாகக் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் பல இருக்கின்றன.

அறிவு படைத்த சான்றோர்கள் எதனையும் திறம்படச் செய்து முடிப்பார்கள் என்பதை இந்நூலின்வாயிலாகத் தெரிந்து கொள்கின்றோம். இலக்கியக் கடலுள் மூழ்கி எடுத்த முத்துக்களை, ''மனோன் மணீயம்'' என்னும் அழகிய நகையில் பொருத்தமான இடங்களில் பதித்துத் தமிழைப் பெருமைப்படுத்திய சுந்தரன் புகழ் சந்ததமும் வாழ்க ; வாழ்க நற்றமிழர்.

●

## தீ(ச்)செயல்

ஜி. குமரேசன் M.A.

ஒளியென்னும்
உருவம் தந்து
தான் வளர்த்த
நெருப்பை யடக்கத்
தாயே மறந்து விட்டால்-?

'சமையல்' முடிந்து
நீறிக் கிடக்கும்
நெருப்பு
அடங்கலை விட்டு
அணைதலை விட்டு

'அணைதலை' நாடி
அடுத்த நிலைத் துளிக்கு
மயங்கித் துணிந்து........

தொட்டுக் குலவி
விட்டத்தில் புரண்டு
விட்டைக் கெடுத்தால்...
அயலார் திட்டெல்லாம்
அன்னைக்குத் தான்.

# சகஜம்

கு. சுந்தரராஜன்



அன்று சனிக்கிழமை. ராமசாமி சர்மா ஆஃபிஸிலிருந்து வரும்போதே தளர்ந்த உள்ளத்துடனும், நடையுடனும் வந்து கொண்டிருந்தார். அவர் குணமே அலாதியானது. தன் கையில் இருந்தால் பிறருக்கு உதவலாம். தனக்குப் பிறகு தானே தானம். தன்னிடம் இல்லை யென்ருலும் யாரிடமாவது 'கைமாத்து' வாங்கி உதவ முடியுமானல் உதவிவிட்டு முழி முழி என்று முழிப்பார். ''நாளை, அந்தச்செலவு எவ்வளவு முக்கியமானது. சே! எப்படியாவது கொஞ்சம் பணம் பண்ணியாக வேண்டுமே. என்ன செய்வது?''-என்று மனம் அடித்துக் கொண்டது. கையில் ஒன்றுமில்லாததாலும் கொடுத்த நண்பர்களிடமிருந்து சல்லிக்காசு பெயராததாலும் அவர் உள்ளத்தில்சோர்வு. அந்தத்தளர்வு அவர் நடையிலும்தொற்றிக் கொண்டது. அவர் சகதர்மிணி பலதடவை இது குறித்து மந்திரி ஸ்தானத்திலிருந்து புத்தி புகட்டி இருக்கிருள். அவள் கூறும் போதெல்லாம் இவருக்கு நச்சரிப்பாக இருக்கும். பின்னர் இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் அவள் அறிவுரையை சிலாகித்துக் கொள்வார்.

சங்கனுச்சேரியில் புழவாது பகுதியில் காவில் பகவதி கோவில் சமீபம்தான் அவரது ''தாரா பவன்'' வீடு. கோவில் பக்கம் வந்ததும் உள்ளத்தில் பிரச்சனைக்கு ஒரு முடிவு ஏற்பட்ட உணர்வு. அது அவர் நடையிலும் தெரிந்தது.

விட்டிற்கு வந்ததும், ''கை கால் முகம் கழுவிட்டு வந்து காப்பி குடியுங்க'' என்ருள் தாரா — ஆமாம் அவர் இல்லத்தரசிதான்! மாலை நேரத்தில் சாதாரணமாக காப்பி அருந்திய பிறகு அவர் ஒரு ''பொடி நடை'' போடுவதுண்டு. காலார நடந்து விட்டு வருவார். வழக்கம்போல அன்றும் ''தாரா, நான் 'கவல' வரை போயிட்டு வர்றேன்'' என்ருர்.

''என்ன 'கவல' வேண்டிக் கிடக்குது. நம் வாழ்க்கையே கவலை நிறைஞ்சதுதானே. பேசாம வீட்டிலிருந்து உங்க வாரிசுகளுக்குப் பாடம்சொல்லிக் கொடுங்க என்று சகதர்மிணி திருவாய் மலர்ந்தருளவே, அவர் 'சிவனே என்று' வீட்டோடு முடங்கி விட்டார். சர்மா பாடம் சொல்லிக் கொடுப்பதானல் நிதானமாக, தெளிவாக, மனதில் பதியும்படியாகச் சொல்லிக்கொடுப்பார். இரண்டு அல்லது மூன்று முறை சொல்லிக் கொடுத்தும் விளங்கவில்லையானல் பாக்கியராஜின், ''இன்று போய் நாளைவா'' ஹிந்தி பண்டிட் ஆகிவிடுவார். அவருடன் 25 வருடங்களாக சுகதுக்கங்களில் பங்கு கொண்ட தாராவிற்கு இது நல்ல அத்துப்படி. எனவே சர்மாவின் சத்தம் உச்சக்கட்டத்திற்கு வரும்போதே ''நீங்க சொல்லிக் கொடுத்தது போதும். உங்களுக்குப் பசிவந்திட்டுது. டிபன் சாப்பிட்டுவிட்டு 'கிருஷ்ண ராமா'ன்னு படுத்துக் குங்க'' என்று முற்றுப்புள்ளி வைப்பாள் தாரா.

அன்று இரவு படுத்துக்கொண்டதும் சர்மாவின் மனது பழைய நினைவுகளை அசைபோடத் துவங்கியது.

வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் தன்மனைவி தனக்கு எந்தவிதத்திலெல்லாம் தோள் கொடுத்திருக்கிருள் என்று பலவாருக நினைத்து அவளைக் குறித்துப்பெருமைப் பட்டுக் கொண்டார். ஒரு சமயம், கூடா நட்பால் தன்னிடமில்லாமலிருந்தும், நண்பன் ஒருவனுக்காக ஜாமீன் நின்றதில் அவன் கட்ட வேண்டிய தொகையை, ரூ. 2500-ம் சர்மா கொடுக்க வேண்டிய நிர்பந்தம் வந்து சேர்ந்தது. மெல்லவும் முடியாமல் துப்பவும் முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தத்தளித்த சர்மாவின் நிலைகண்டு முழு கர்ப்பவதியான நிலையிலும், தன் கழுத்திலிருந்த மாலையைக்கொடுத்து ஆவனசெய்யச்சொன்னுள் தாரா. என்ன வெல்லாம் கோபப்பட்டாலும், இருவருக்கும் சச்சரவே வந்தாலும் கடைசியில் தன் நல்னில் தன் மன நிறைவில் சுற்றிச் சுற்றி வரும் அவள் குணுதிசயத்தைக் குறித்து சர்மா பெருமைப்படாத நாளே இல்லை. பெண் என்பவளே இப்படித் தானே? இப்படியாக எண்ணியவர் நாளைய பிரச்சனையை சமாளிப்பது குறித்துச் சிந்திக்கலானுர்.

தெரிந்து செய்வது தவறு. தவறு என்று தெரிந்தும் செய்வதோ!? அவர் மனம்அவரையே குத்திக்காட்டியது ''என்ன இருந்தாலும் நாம் செய்வது சரியில்லைதான் ஆனல் வேறு வழியும் இல்லையே.'' என எண்ணிக் காலையில் நடந்து கொள்ள வேண்டியதற்கு இரவிலேயே மனதில் ஒத்திகை பார்த்துக்கொண்டார்.

தாரா பத்தினிகள் மரபுபடி, பின் தூங்கி முன் எழுபவள்தான். அதிகாலையில் எழுந்து முற்றம் தெளித்துக் கூட்டிச் சுத்த மெல்லாம் செய்து, கோலம் போட ஆயத்தமாகிவிடுவாள். கூட்டிக் கொண்டு இருக்கும் போதே 'சற்று பொறுத்துத்தான் செய்யேன். விடாம சேர்ந்தாப்பிலே செய்தா எப்படி?' என்று அவள் இடுப்பு கெஞ்சும்! ஆகவே அதன் துயரத்தைக் களைந்துவிட்டு மீண்டும் கூட்டி வீட்டை ஒரு சுற்று சுற்றியாகும்போது சுமார் இருபத்தைந்து நிமிடங்கள் ஆகிவிடும். அந்த 25 நிமிடங்களைப் பயன்படுத்துவதுதான் சர்மாவின் திட்டம். அலமாரியைத் திறந்து வீட்டுச் செலவிற்காகத் தான் கொடுக்கும் ரூபாயில் சிக்கனமாகச் செலவு செய்தது போக தாரா மீதம் வைத்திருக்கும் தொகையை ஒவ்வொரு புடவைக்கு இடையேயும் தேடத்துவங்கினார், சாதாரணமாக வைத்திருக்கும் இடங்களில் எல்லாம் தேடியும் காணவில்லை. அவள் வந்துவிடுவாளே என்ற பதட்டம். காணவில்லையே என்ற எரிச்சல். 'என்ன எளவா போச்சு' என்று முணுமுணுத்தது அவர் வாய். பின்புற வாசல் திறக்கும் சப்தம் கேட்டதும் அவசர அவசரமாக ஆனால் மெதுவாக சப்தம் கேட்காமல் அலமாரியை அடைத்துவிட்டார்.

அவர் இருப்பதை அறிந்து, ''காப்பி மணம் வர்றது தெரியலியா? உடங்குடி கருப்பட்டி வத்தி போயிருக்கும். கொஞ்சம் காப்பிப்பொடி போட்டுஇறக்கி வைக்கக்கூடாதோ'' என்று கூறிக் கொண்டு வந்தவள் அந்த வேலையை முடித்து விட்டு, விட்ட வேலையைத் தொடரப் போய் விட்டாள். பாவம் தாரா. சர்மாவும் விட்ட இடத்திலிருந்து காரியமே கண்ணாயினார்.

ஒரு வழியாக வெள்ளிப் பாத்திரங்கள் வைத்திருக்கும் அறையைத் திறந்து பார்த்ததில் ஒரு லோட்டாவில் 'நிதி' அகப்பட்டது. கொலம்பஸ்ஸிற்கு ஏற்பட்ட சந்தோஷம்கூட இந்த அளவிற்கு இருந்திருக்காது. சர்மாவுக்கு அத்தனை சந்தோஷம்! தான் செய்வது தவறு என்பது தெரிந்துதான் இருந்தது. ''உங்கள் தகப்பனார் வயிற்றைப் பிளந்து அதற்குள் வைத்திருந்தாலும் எடுத்துக் கொள்வாரே'' என்று இதுபோன்ற தன் கைங்கரியத்திற்கு இதற்கு முன்னர் தாரா தன் மக்களிடம் சொல்லும் விளக்கத்தை நினைத்துத் தனக்குள்ளாகவே ஒருகணம் பெருமைப்பட்டுக் கொண்டார். மறு கணம் ''பாவம் அவள்! குருவி சேர்த்தாற்போல சேர்த்து வைத்திருப்பாள். அதில் நாம் கைவைத்துவிட்டோமே. சே! இனி இம்மாதிரி நடந்து கொள்ளக் கூடாது. வீட்டுக்கு வீடு வாசப்படிதான். எல்லா இடத்திலும் இது சகஜம் தான்', என்று தன் செய்கைக்குத் தானே சமாதானம் கற்பித்து சப்புக் கட்டு கட்டிக் கொண்டு 'முருகா' இனி இந்த மாதிரி நிலை உண்டு பண்ணாதே என மனமார வேண்டிக் கொண்டு வெளியே வந்தார்.

''என்ன இன்னுமா கூட்டித் தெளிக்கலே? இன்னைக்கு ஞாயிற்றுக் கிழமை. ஞாபகம் இருக்குல்ல. இப்பவே மசமசன்னு இருந்தால்—சினிமாவுக்குப் போகிற நேரத்திலே பதட்டம் பதட்டமா திரிவே. மனுஷன் படாதபாடுபட்டு மாசக் கடைசியும் அதுவுமா பைசா மிச்சம் பண்ணி வச்சு ஞாயிற்றுக் கிழமைக்காக காத்திருக்க வேண்டியது— நீ இப்படி...'' சரி சரி........ மளமளன்னு காரியங்களைப்பாரு. இன்னைக்கு நல்ல தமிழ் படம் வந்திருக்கு'' என உற்சாகத் தெளிவில் மனைவியை அதட்டியவாறு அவள் அருகே போய் நின்றபோது, சர்மாவிற்கு மன நிறைவாக இருந்தது!

★




# பழந்தமிழர் ஆட்சி

''வைரமாலை'' பி. அந்தோணிசாமி

தமிழை மூன்று வகையாகப் பிரித்துள்ளனர். அவை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்பனவாகும். இப்படி, தமிழ் மூன்று வகையாக இருந்ததா என்றால் இல்லை. தமிழ் மொழி ஒன்றுதான்; ஆனால் அந்த மொழி மூன்று தன்மைகளைக் கொண்டதாக அமைந்திருந்தது. இயற்றன்மை, இசைத்தன்மை, நாடகத்தன்மை என மூன்று தன்மைகளை ஒருங்கே தன்னகத்தே கொண்டு விளங்கியது என்பதைக் குறிக்கவே ''முத்தமிழ்'' எனக் குறிக்கப் பெற்றது.

இயற்றன்மை என்பது, இயற்கையாக இயைந்திருக்கின்ற தன்மையால் இயற்றமிழ் எனப்பட்டது.

மாடு மேய்ப்பவனிடம் எனக்கென்ன வேலை? இது சாதாரண இயல்பாக அமைந்துள்ளது. இதையே இசையாகப் பாடவும் செய்யலாம். ஒரு சிறந்த இசைவாணரிடம் இந்த அடிகளைக் கொடுத்தால், இசையாக அமைத்து சங்கீத முறைப்படி ஒருமணி நேரமாவது ஆலாபனை செய்து பாடுவர். இந்த அடிகளையே நாடகத்திற்கும் பொருத்தலாம். ஆக, மூன்றுக்கும் அடிப்படை ஒன்றுதான்; அது இயல்.

'வா' என்பது இயல். குழந்தையை அழைக்கும் போது, 'வா'' என்று அழைக்கிறோம். மனைவியை அழைக்கும்போதும் 'வா' என்று அழைக்கிறோம். வேலைக்காரனை அழைக்கும்போதும் 'வா' என்றுதான் அழைக்கிறோம். மூவரையும் அழைக்கின்ற சொல் 'வா' என்பதுதான். ஆனால் இடத்துக்கு இடம் இசை மாறுபடுகிறது. இசை நயத்திற்கு ஏற்பப் பொருளின் தன்மையும் மாறுகிறது. இயலுக்கு—இசைத்தன்மையும், நாடகத்தன்மையும் சேரச் சேர அதற்குரிய பொருளும் மாறுபடுகிறது. இப்படி மூன்று தன்மைகளும் இயையோடு கூடுவதாலே ''முத்தமிழ்'' என்று சொல்லப்படுகிறது.

அந்த மூன்று தமிழுக்குச் சொந்தக்காரர்கள், பழந்தமிழ் மன்னர்கள். அக்காலத்தில் ஆட்சி செய்த முறைகளைப்பற்றி கேரளத் தமிழ் ஆண்டு மலருக்குப் படம் பிடித்துக் காட்டுவதில் பெருமை அடைகிறேன். இக்கால ஆட்சிமுறைகளைப் பற்றி பலர் அறிந்திருக்கின்ற காரணத்தால் நான் ''பழந்தமிழராட்சி'' என்று எழுத முற்பட்டேன்.

ஆளுகின்ற தன்மையை, முறையைக் குறிப்பதே ஆட்சியாகும். இவ்வாட்சி முறை பல வகையாக இருக்கலாம்; அது அற ஆட்சி—மற ஆட்சி என இரு வகையாகும்.

இறந்துபட்ட பழமையை எடுத்துக் கூறுவதன் மூலம் இன்றைய சமுதாயத்திற்கு நாம் எழுச்சியும் உணர்ச்சியும் ஊட்டுகிறோம்.

நாகரிகம்—பண்பாடு என இரண்டு வகையாகப் பிரித்து வைத்திருக்கிறோம். இரண்டுக்கும் பொருளும் மாறுபடும். 'Civilization' என்பது நாகரிகம் என்பதாகும். 'Culture' என்பது பண்பாடு என்பதாகும். புறத்தைப்பற்றிய அழகுச் சிறப்பை எடுத்துக் கூறுவது நாகரிகம் என்பதாகும். அகத்து அழகுச் சிறப்பையெடுத்துக் கூறுவது பண்பாடு ஆகும். இவ்விரண்டுக்கும் அடிப்படை அறிவியல்தான். அறிவியல்—விஞ்ஞானம் பெருக்கித் தந்திருக்கிற நாகரிகம்; திடீரென்று உருவாகலாம்—அழியலாம்; தோன்றலாம்-மறையலாம். ஆனால் பண்பாடு என்பது, திடுதிப்பென்று தோன்றி மறைவதல்ல! நாளடைவில் மனித சமுதாய வளர்ச்சியோடு இயைந்து வளர்ந்து உருவாவதுதான் பண்பாடு ஆகும். வைரம் தீட்டத் தீட்டத்தான் ஒளியை அதிகமாகத் தரும், நிலப் பண்படுத்தப் பண்படுத்தத்தான் நல்லதாக அமையும். அதைப் போன்றே பண்பட்டுப் பண்பட்டு உருவாவதே பண்பாடு.

பண்டைத் தமிழரின் அகத்தையும் புறத்தையும் அறிவதற்கு நமது இலக்கியங்கள் ஏராளமாக இருக்கின்றது. அகநானூறு, புறநானூறு, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்கணக்கு போன்ற பல இலக்கிய வரிசைகள் நம்முடைய சிறப்பைஎடுத்துக்காட்டுகின்றன.

ஆழ்கடலில் கலம் செலுத்துவதைப்பற்றி பிற நாடுகள் அறியுமுன்னரே தமிழர்கள், கடல் வாணிபத்தில் சிறந்து விளங்கினர்; கடல் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். சிறந்த 'டெரைன்டன்பவர்' என்று சொல்லக் கூடிய வண்ணம் இருந்தனர். மேலைக்கடலில் ஆதிக்கம் செலுத்தினன் சேரன். கீழைக்கடலில் பாண்டியர்கள், சோழர்கள் ஆதிக்கம் பலமாக அமைந்திருந்தது. ஒரு நாட்டின் கடற்கரையில் 5 மைல்கள் அந்நாட்டிற்கும், 10 மைல்கள் அந்நாட்டு மீன் பிடிப்பதற்கும், உரிமையானது என்று ஜினிவா மாநாட்டில் முன்பு முடிவு செய்யப்பட்டது.

பண்டைய தமிழ் மன்னர்கள், 'குடிதழீய கோனுட்சி' முறையைத்தான் வகுத்துக் கொண்டிருந்தனர். இதைத் தான் புலவர் பெருமக்களும் பாராட்டினர். இதைத் தான் முறையானது என்று ஏற்றுக் கொண்டுள்ளனர். குறள்கூட இதையே எடுத்துக்காட்டியிருக்கிறது. மன்னர்கள் முறைதவறும் காலத்தில் புலவர்கள் மதி நுட்பம் படைத்தோர் கண்டித்துத் திருத்தி வந்துள்ளனர். இதைப்பல சங்க நூல்கள் நமக்கு எடுத்தியம்புகின்றன. ஒரு மன்னர் தனது கோட்டைக்குள் இருந்துகொண்டு எதிரியோடு போர் செய்து கொண்டிருந்தான்; எதிரியும் கோட்டையை மாதக்கணக்கில் முற்றுகையிட்டுவந்தான்; இந்நிலையில், கோட்டைக்குள்இருந்த உணவு, நீர் இவைகள் குறைந்து நெருக்கடி ஏற்பட்டது. இதை அறிந்த புலவர் ஒருவர் மன்னவரிடம் சென்ருர், 'நீ' வென்று மீண்டுவா; இல்லையேல், எதிரியிடம் கோட்டையை விட்டுச் சென்று விடு' என்று இடித்துரைத்தார் என ஒரு பாடல் கூறுகிறது.

யானைக்கு வயலில் உள்ள நெல்லை அறுத்துச் சேர்த்து கவளம் கவளமாக அளிப்பது முறை. அந்த யானையை அவிழ்த்து 'நெல்' யானைக்குத்தானே? என்று கருதி வயலில் விட்டு விட்டால், பயிரும் நாசமாகும்; உணவும் ஒரு நாளோடு தீர்ந்துவிடும். அதுபோல், 'மக்களிடம் கொஞ்சம் கொஞ்சமாக வரி வசூலிக்கவேண்டும். ஒரேயடியாகப் பறித்துக்கொள்ளக் கூடாது' என்று பிசிராந்தையர் என்ற புலவர் மன்னனுக்கு அறிவுறுத்தியதாக ஒரு காட்சியை இலக்கியம் சொல்கிறது.

காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றி புலவர் உருத்திரங்கண்ணனர் பட்டினப்பாலையில் கூறுகிருர்-காவிரிப்பூம்பட்டினத்து அங்காடிகளில் வணிகர்கள் 'கொடுப்பதும் குறைபடாது', 'கொள்வதும் மிகைபடாது' வாணிபம் செய்தனர்-என்று. அந்நாளில் சிறந்த துறைமுகங்களாகப் பல இடங்கள் விளங்கியுள்ளன. காவிரிப்பூம்பட்டினம், முசிறி. தொண்டி, அதிராம்பட்டினம் ஆகியவை சில முக்கிய துறைமுகங்களாகும். இந்தத் துறைகளில் அரபியநாட்டு, யவன நாட்டு வியாபாரிகள் தங்கள் பொருட்களைக் கொண்டு வந்து இறக்கிவிட்டு' இங்கிருந்து அகில், தேக்கு. சந்தனம், மிளகு, முத்து முதலிய விலைஉயர்ந்தபொருட்களைக்கொண்டுசென்றனர்.

---



## முனைவர் திருமதி. இந்திரா விஸ்வேஸ்வரராவ் M. A. Phd.,

திருவனந்தபுரம் தமிழ் எழுத்தாளரும் நமது சங்க ஆயுள் உறுப்பினருமான திரு. நீல. பத்மநாபன் அவர்களின் நாவல்களில் மொழிநடைபற்றி ஆராய்ச்சி செய்து மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின்'முனைவர் பட்டம்' (Phd) பெற்றுள்ளார் திருமதி. இந்திரா விஸ்வேஸ்வரராவ்.



மேலும் திரு. நீல. பத்மநாபனின் குறிப்பிட்ட நாவல்கள் சிலவற்றைத் தனியாக எடுத்து ஆராய்ச்சி செய்யத் திட்டமிட்டுள்ளாராம், 'முது முனைவர்' (PostDoctorate) பட்டத்திற்காக. முனைவர் பட்டம் பெற்ற திருமதி. இந்திரா விஸ்வேஸ்வர ராவுக்குத் தமிழ்ச் சங்கத்தின் நல் வாழ்த்துக்கள்.

அராபியக் குதிரைகள் தொண்டித்துறையில் இறக்குமதி செய்யப்பட்டது. மாணிக்க வாசகர் கூட பாண்டியனிடம் பணம் பெற்றுக் குதிரைகள் வாங்கத் தொண்டித் துறைக்குப் புறப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

வாசனைப் பொருள்களான இலவங்கம், ஏலக்காய், மிளகு, சந்தனம் வாங்க வந்தவர்கள்தான் மேலை நாட்டினர். மூக்கு வழியாக இழுத்து வரப்பட்டவர்கள் துப்பாக்கி முனையில் ஆதிக்கம் செலுத்தும் வாய்ப்பைப் பெற்றனர். காவிரிப்பூம்பட்டினத் துறையில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள் மூட்டைகள் மீது சோழர்கள் தங்கள் புலி இலச்சினையை முத்திரையாகப் பொறித்துக் கரையில் இறக்கினரென்றும், அப்படி இறக்கி அடுக்கப்பட்ட மூட்டைகள் மீது மறையாடுகள் துள்ளிக் குதித்தாடின என்றும் இலக்கியத்தில் ஒரு செய்யுள் உரைக்கிறது.

யவனர்களுடைய கலங்கள் கடலில் நிற்கும் காட்சியைப் புலவர் ஒருவர் 'யானைகள் நின்று அசைந்தாடும் காட்சியோடு ஒப்பிட்டுக் கூறுகிறார். கடலில் நீண்ட தூரம் சென்று மீன் பிடித்த பிறகு திசையறிய மீனவர்கள் கரையருகே கட்டி வைத்திருந்த மாடி விளக்குகளை (Light House) அடையாளமாகக் கொண்டு யவனர்கள் கரை சேர்ந்தனர்.

பண்டைய அரசுக்கு அடிப்படையாக அமைந்திருந்தவை ஊர் சபைகளாகும். இந்த ஊர் சபைகளை மன்னர் சிறப்பாக மதித்துச் செயல்பட்ட செய்திகளை உத்திர மேரூர் செப்பேடு, மாமண்டூர் கல்வெட்டு, வேள்விக்குடி பட்டயம்-ஆகிய வரலாற்றுச் சின்னங்கள் நமக்குத் தெளிவாக எடுத்து விளக்குகின்றன. இக்கல்வெட்டுகள் பட்டயங்கள் பெரும்பாலும் இராசராச சோழன், குலோத்துங்க சோழன், இராசேந்திர சோழன் ஆகியோர் காலத்தைக் காட்டுவனவாயிருப்பினும், இதற்கு முன்னாலும் கல்வெட்டு, செப்பேடு முறைகள் இருந்திருப்பதாக இலக்கிய, சரித்திர வாயிலாக அறிகிறோம். ஆகவே தொன்று தொட்டு தமிழ் நாட்டில் இம்முறை இருந்து வந்திருக்கிறதென்பதை நாம் அறிகிறோம்.

ஒரு புலவர், வனத்தில் வேடர்களால் வேட்டையாடப்பட்டு இறந்த பிராணிகளை - நாறிக்கிடந்த பிணங்களைக் கழுகுகள் கொத்தும் காட்சியை - குடத்தில் ஓலைச் சுருளையிட்டு இரண்டு விரல்களால் கௌவி எடுக்கும் காட்சியோடு ஒப்பிட்டு அதன் மூலமாகப் பண்டைத் தமிழர்களின் தேர்தல் முறையான குடவோலைக் காட்சியை நினைவுப்படுத்துகின்றார். ஆகவே பண்டைத் தமிழகத்தில் தேர்தல் ஊர் சபையின் மூலம், குறுகிய கழுத்தையுடைய குடத்தை வோட்டுப் பெட்டியாகவும் நறுக்கு ஓலைத் துண்டுகளில் பெயரெழுதிப் போடுவது வோட்டுச் சீட்டாகவும் கொண்டு நவீன முறையைப் போலவே தேர்தல் நடத்தி வந்துள்ளனரென்பதை அறிகிறோம்.

ஊர் சபையினர், ஊர் நிர்வாகத்தை நடத்தப் பல குழுக்களாகப் பிரித்து அந்தந்த குழுக்களுக்குத் தேர்வு நடத்தித் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்டு நிர்வாகத்தை நடத்தி வந்தனர். 5பேர்களைக் கொண்ட குழு 'வாரியம்' என்றழைக்கப்பட்டது. இந்தக் குழு ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு பொறுப்பை அளித்துக் கவனித்துச் செயல்பட்டன.

தோட்ட வாரியம், கழனி வாரியம், ஏரிவாரியம், கலிங்கு வாரியம், (கலிங்குகளைப் பாதுகாப்பது) பொன் வாரியம், கணக்கு வாரியம் (கணக்குகளைப் பரிசீலிப்பது) பஞ்சவாரியம் (பஞ்ச காலத்தில் பயன்படும்படி வளமைக் காலத்தில் சேர்த்துத் தொகுத்து வைப்பது) தடிவழி வாரியம், (High way Department), குடும்ப வாரியம் என்று பிரிக்கப்பட்டிருந்தது. இந்தக் குழுக்களுக்குத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றவரே பிரதிநிதியாக இருப்பார். தேர்தலில் நிற்பதற்குக் குறிப்பிட்ட தகுதிகளிருக்க வேண்டும். அத்தகுதிகளாவன:-

1 காணிக்கடன் செலுத்த]நிலம் கால் வேலியாவது இருக்க வேண்டும்.

2 சொந்த மனையில் வீடு கட்டிக் குடி இருக்க வேண்டும்.

3 சிறந்த கல்வியுடைமை இருக்க வேண்டும்.

4 எடுத்த காரியத்தைத் தொகுத்து முடிக்கும் ஆற்றலிருக்க வேண்டும்.

5 அறநெறியில் பொருளீட்டி வாழ்க்கையைச் செம்மையாக நடத்த வேண்டும்.

6 வயது 35க்கும் 70க்கும் இடைப் பட்ட தாக இருக்கவேண்டும்.

7 ஒரு மூன்ருண்டுகள் அங்கம் வகித்தவர் அடுத்த மூன்ருண்டுக்குப் போட்டியிடக் கூடாது.

இப்படி விதிகள் வகுக்கப்பட்டு முறையாகச் செயல் படுத்தப்பட்டன.

தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர்களாவது:-

1 கணக்குக்காட்டாதவர் (பொறுப்பிலிருந்தபோது கணக்குக் காட்டத் தவறியவர்கள்)

2 ஐம்பெருங் குற்றமிழைத்தவர்கள்;

8 ஊர் குற்றப்புத்தகத்தில் குற்றவாளியாகப் பதியப் பெற்ருேர்;

4 பிறர் பொருளைக் கவர்ந்த காரணமாகவோ, வேறு குற்றமிழைத்த காரணத்தாலோ கழுதை மேல்ஏற்றப்பட்டு தண்டிக்கப் பெற்ருேர்;

5 கையூட்டுப் பெற்ருேர்;

6 உண்ணத்தகாததை உண்போர்;

7 கீழ்மக்களோடு கூடித்திரிவோர்;

ஆகியோர் தேர்தலுக்கு நிற்கவே தகுதியற்ருேர் என்று வரையறுத்தனர்.

அன்றைய தமிழர்கள் ஈந்து இசைபட வாழ்வதைப் பெருமிதமாகக் கொண்டு வாழ்ந்தனர், 'மானம்' ஒன்றே அவர்களின் வாழ்வின் தலையாய குணமாகக் கொண்டு வாழ்ந்தனர், மானத்தைவிட்டு வாழ்வதென்பது கேவலம்-இழிமை என்று கருதப்பட்டது. மானம் என்ற சொல்லுக்கு உரைகூறப்போந்த பரிமேலழகர், ''தன்னிலை தாழாமை'' என்று குறித்து உயிரை விட்டேனும் மானத்தைக் காக்க வேண்டுமென்பது தொன்னூலார் கொள்கை' யென்று குறிப்பிட்டுள்ளார், மானத்தைக் காப்பது என்பது தென்னவரின் வழி வழிப் பண்பு என்பதை அறியலாம்.

சோழன் கோச்செங்கணுன் சிறையிலிருந்தபொழுது நீர் தாகமுற்று, சிறைச்சாலைக் காவலாளியை பருக நீர் கேட்டான், காவலாளி நீரை அளிப்பதில் தாமதம்காட்டி அலட்சியப் போக்கோடு நடந்து கொண்டான்; தனது தன்மானத்திற்கு இழுக்கு நேரும் வகையில் அக்காவலாளி நடந்து கொண்ட காரணத்தால், நீரைக் குடிக்காமல் உயிரை விட்டான்! தமிழன் வாழ்ந்து காட்டிய நெறி இது! இந்நெறியைக் கொண்டு பன்னெடுங்காலம் தமிழன் வாழ்ந்தும், பிறருக்கு வாழவும் கற்றுத் தந்தான்.

# தீயுலை இரும்புத் துண்டுகள்

எஸ். பி. நாதன்

ஏசுவின் சீடர்களும் ஏசுவைப் போலவே காணப்பட்டார்களாம் என்பது போலத்தான் அருட்திரு வர்கீஸ் மலஞ்சரிவிலும் அவர் உதவியாளன் குஞ்சனும். வர்கீஸ் மலஞ்சரிவைப் போலவே குஞ்சனும் தாடி வைத்திருந்தான். அவனுக்கு இல்லாத குறைதானே யொழிய உடல் அமைப்பு எல்லாம் அருட்திரு வர்கீஸைப் போலத்தான். இதனால்தான் மாணவர்கள் குஞ்சனை-பியூண் குஞ்சனை 'வராந்தை பிரின்ஸி' என்றழைத்தனர்.

அருட்திரு வர்கீஸ் அவர்கள் குஞ்சனை பியூண் என்ற பெயரில் மெய்க்காப்பாளனாக வைத்திருந்தார். ஒரு கல்லூரி முதல்வருக்குக் கொஞ்சம் காராத்தேயும் தெரிந்திருப்பது நல்லது - அவருக்கு நல்லது-என்றகருத்தில்வர்கீஸுக்குக் கொஞ்சம் உடன் பாடு உண்டு. இதனால் அவருக்கு மாணவர்களைப் பற்றிய மோசமான எண்ணம் இருந்தது என்றில்லை. மாணவர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது 'அது குமுறும் எரிமலை' என்பர். 'பொட்டித் தெறித்துச் சிதறி சின்னா பின்ன மாவதற்கு ஏதேனும் ஒரு சிறு அழுத்தம் போதும்' என்பர். (உம்:அரசியல்) அதாகப்பட்டது கவனமாகக் கையாள வேண்டியது என்பது அவர் முடிவு.

மணியடித்தாகி விட்டது.

அருட்திரு வர்கீஸும், குஞ்சனும் 'ரோந்து' சுற்றப்புறப்பட்டு விட்டனர்.

அன்று கல்லூரிச் சூழ்நிலையில், ஒரு புகைச்சல் காணப்பட்டது. ஒரு மந்தம் எங்கும் விரவியிருக்க படிப்புமுடக்கத்தின் லட்சணங்கள் தெரிந்தன.

''இதோபாருடா, டிஜி! பிரின்ஸி 'ரிவால்வ்' செய்யத் தொடங்கியாச்சு'' என்றான் சாமி.

''ஓ! சரியான தொல்லையாப் போச்சு. அவருக்குன்னு ஒரு ரூம் கொடுத்தாச்சு இனியும் என்ன வயசு காலத்துல சுற்றுலா வேண்டிக் கிடக்குது'' டி. ஜி.

''அதோ'' நாதன் காட்டிய திசையிலிருந்து, அருட்திரு வர்கீஸ் வேகமாக இவர்களைநோக்கி வந்து கொண்டிருந்தார்.

சடபுடா என்று சீட்டைப் பெட்டியில் அடைத்து எழுந்து வகுப்பைப் பார்க்க ஓடினர். இவர்கள் தான், 'டிஜீஸ் காங்' (gang) நான்கு பேர்கள்.

டி. ஜி. ஜேக்கப் ஆன்டிரூஸ் - நல்ல உயரம் ஆண்மை மிக்க கம்பீரம். பெண்களுக்குப் பிடித்த மாணவன்!.

சாமி - யக்ஞநாராயணன் என்ற அக்ரகாரத்து அதிசயம். இரட்டை நாடி, தொப்பை. காங்கின் காஷியர்.

பாலன், நாதன் - அமைதியானவர்கள், காங்கின்அறிவுத்துறை. எல்லாக் குறும்புகளுக்கும் கரு இவர்கள் தான். செய்வது எல்லாம் மற்றவர்கள் என்றாலும் வளர்ந்து வரும் குறும்பர்கள் !! ஆக, கல்லூரியில் இவர்களை எல்லோருக்கும் பிடிக்கும், ஆசிரியர்களைத் தவிர!

வகுப்பு—

அட்டன்டென்ஸ் முடிந்து சாக்பீசை எடுத்ததும் நாதன் உள்புகுந்து அடுத்து மீண்டும் சாக்பீஸ் எடுக்க, டி. ஜி. நுழைய, மீண்டும் சாக்பீஸ் சாமி-சாக்மீஸ்-பாலன்.



எரிச்சலடைந்த சாந்தம்மாள் ஸ்டிபன் ''இஸ் தேர் எனி ஒன் எல்ஸ்?'' என்றிரைய ''த கிரேட் ஓல்டுபிரின்ஸிபால்ஹிம்செல்ஃப்'' என்று யாரோ சொன்னார்கள்.

திரும்பிக் கரும் பலகையில் எழுதியதும் வகுப்பில் 'கசமுச' என்று கேட்க, வகுப்பைத் திரும்பிப் பார்த்தாள். கடைசி பெஞ்சில் டிஜீஸ் காங்கின் அவசரக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

''லாஸ்டு பெஞ்சு'' சாந்தம்மா இரைந்தாள்.

'எஸ் டீச்சர்' டி. ஜி.

'எஸ் டீச்சர்' சாமி.

'எஸ் டீச்சர்' பாலன்.

'எஸ் டீச்சர்' நாதன்.

''ஸைலன்ஸ்'' இரைந்தாள்.

'ஓ ஸைலண்டு வாலி' என்று நாதன் சொல்ல வகுப்பு அர்த்தமின்றி கொல்லென்று சிரித்தது.

'' யு ஸ்டான்டு அப் '' - சாந்தம்மா.

நாதன் அமைதியாக எழுந்து நிற்க,

''லெஃப்டர்ண், ஃபிரண்ட், ரைட்டர்ண் ஸிட்டவுண்'' என்று சாமி முணுமுணுக்க சாந்தம்மாவுக்கு அதுவும் நாதன் சொன்னதாகப் பட்டது.

''என்ன பெகளம் அங்கே'' சாந்தம்மா.

''அய்ய! ஒண்ணுமேயில்ல டீச்சர்''

''பேப்பர்இருக்கா உங்கிட்டே''

''பேனவும் இல்லே டீச்சர்''

''பின்ன எதுக்கு வந்தே''

''படிக்க'' - டகார் என்று நாதன் பதிலளிக்க,'கத்தியில்லாம சிரைக்க வந்தியா என்றுகேளுங்க டீச்சர்' என்று சாமி முணுமுணுக்க

''என்ன அங்கே யுவர் செல்ஃப் செகண்டு பாய்''

''ஒண்ணுமில்லை'' - சாமி.

''டீச்சர் டீச்சர் கத்தியில்லாமல் சிரைக்க வந்தியான்னு கேக்கருன் டீச்சர்'' என்ருன் டி.ஜி. சிரிப்பை அடக்கியபடி.

சாந்தம்மாள் அதைக் கவனிக்காதது போல ''உனக்கு எதாவது தெரியுமா? டெல் மீ வாட் இஸ் த ப்ரிண்ஸிப்பிள் ஆஃப் ஃபூகால்ட் மெத்தேட்?'' என்ருள்.

''கவனிச்சால்ல தெரியும்'' -நாதன்.

''இது பி.டி.ஸி. பாடம் தான்''

''அங்க படிச்சிருந்தா இங்கே ஏன் வாறேன். பேசாம இஞ்சினியரிங்........'' என்ற நாதனின் பேச்சில் 'சோகம்' கப்பியிருப்பதாக சாந்தம்மாவுக்குப் பட்டது. இவனுக்குள் ஒரு சோகம் புதைக்கப் பட்டிருப்பதாக அவள் உணர்ந்தாள். (ஆனுல் அவனுக்குள் ஒரு 'சுக்கும்' இல்லை)

''நீ எங்கேயிருந்து வாறே''

''சாலை''

லேசான இளக்கார புன்னகையுடன் 'அது சந்தையாச்சே' என்றதும் வகுப்பு அதிர்ந்தது. நாதனை சாந்தம்மாள் 'சந்தை' யாக்கி விட்டாள்.

''நாதோ க்கூஊஊ.....'' டி.ஜி. ''நாதன் சுமட்டுத் தொளிலாளி நேதாவாக்கும் டீச்சர்'' என்ருன் சாமி.

அசடு வழிந்து, வியர்த்து தன்னிரக்கத்தால் கோபத்தால் சாமியைப் பார்த்து ''சீ போடா'' என்ருன். பிறகு நிதானித்து ''நான் நேதாவல்லதொழிலாளி. தொழிலாளி அய்க்கியம்'' என்று வலது முஷ்டியை உயர்த்தினுன். டீச்சரைக் கடித்துத் தின்னஎரிச்சல் புகைந்தது.

''ஏய் இது கிளாஸ் ஆக்கும்'' என்ருள்.

''ம் கிளாஸ்; பிரஸவ வார்டு அல்ல''என்றதும் வகுப்பு அதிர்ந்தது. பெண்கள் வரை சிரித்து விட்டனர். குறிப்பு- சாந்தம்மாள் கருவுற்றிருப்பதை முன்னிட்டு விடுப்பு கோரிய விஷயம் 'முக்கோடன் பாரில்'கல்லூரி (கிளார்க் எழுத்தர் சொல்லி எல்லோருக்கும் தெரிந்த இரகசியம்.

''நாதன் பிஹேவ்பிராப்பர்லி'' என்ற சாந்தம்மாவின் உதடுகள் துடித்தன. முகத்தில் கிரகணம் பிடித்திருந்தது.

''நீங்க மட்டும் என்னைச் 'சந்தை'ன்னு கூப்பிடுவது ரொம்ப பிராப்பரா?'' என்ருன்.

''யு ஆஸ்(க்)ட் ஃபார் இட்'' என்ருள்.

''நோ நோஅய்யாம்நாட் ரெஸ் பான்ஸ்ஸிபிள் ஃபார்தட்'' என்ற நாதன் கோபமாகவேயிருக்க,

''எதுக்கு நீ காரணம் அல்ல'' என்று அழுத்திக் கேட்டான்டி.ஜி. நல்லகாலம் சாந்தம்மாள் கேட்க வில்லே.

''நாதன் கெட் லாஸ்ட்''என்று நிறுத்தி ''மீட் மி இன் த ஸ்டாஃப் ரூம்'' என்ற சாந்தம்மாவிடம் 'வித் பிளஷர்' என்று கூறி விட்டு வேகமாகவெளியேறினன். அவன் பெயரை ஒரு துண்டுத் தாளில் குறித்து வைத்து விட்டு நிமிர்ந்ததும் கடைசி பெஞ்சுகாலியாக இருந்தது.

''பை பூகால்டு மெத்தேட்......

''ஈங்குலாப் ஜிந்தாபாத்

(கட்சி பெயர்) ஜிந்தாபாத்

நங்கள் படிக்கும் படிப்பிக்கும்

காரல் மார்க்ஸுஂம்............

ஏங்கல்ஸுஂம்.........''

வகுப்பு அவ்வளவுதான்.

எதிர்புறம் வேறொரு குரல் கேட்டது.

''வேண்டே வேண்டா

சரம் வேண்டே வேண்டா''...

.............................

ஸ்டுடன்ஸ் யூனிடி ஜிந்தாபாத்

என்று மாணவர்கள் அய்க்கியப் போர்வையில் எதிர்க்கட்சி ஊர்வலம் வந்தது.

குறுகிய வராந்தா எதிரும் புதிருமாக இரு ஊர்வலங்கள் வருகின்றன. வலதுபுறம்வகுப்பறைச் சுவறில் சாய்ந்து வேடிக்கைப் பார்க்கும் மாணவ மாணவியர். இடதுபுறம் மைதானம். என்ன நடக்கும்? மோதல்.

டிஜீஸ் காங்கிற்கு அரசியல்மட்டும் கிடையாது, ஆனல் இது போலத்தருணங்களில் அவர்களது வேலே, பெண்களேப்பாதுகாத்தல். கட்டியணேத்துப் பிறர் அணேக்காமல் பாதுகாப்பார்கள்! அன்னியனே நினேத்தாலே போய் விடுமாம் கற்பு. இங்கே அதோ உயரத்தில் வளரவேண்டியசக்தியெல்லாம் பக்கவாட்டில் வளர்ந்து விட்ட ராணி, மாணவர்களால் 'கொச்சுமோளே' என்றழைக்கப் படும் ஜிஜி. மிஸ் 70 எம் எம், நெத்தோலி, பிளாக்கி, மண்டிப் பெண்ணு...... எத்தனே எத்தனே பேர்கள் அடிதடி என்ற பெயரில் ...சீ அசிங்கம் பிக்பாக்கட் அடிப்பது போல கேவலம் வேண்டாம்.

அடி பிடியும் உடன் வலுக்காமலில்லே. எபி அப்பிரகாம் கத்தியை நிமிர்த்திக் கொண்டு ''ஏது...... உண்டடா'' என்ருன். ஜார்ஜ் ஜேக்கப் பாய்ந்தான். இரண்டு பேரும் கடந்த மூன்று வருடங்களாக எதிரிகள். எபியின் பயமுறுத்தலால் சிதறிய கூட்டம் வேடிக்கை பார்த்தது. ஏதோ உணர்ச்சி உந்தலில் பாய்ந்த நாதன் எபியைப் பிடித்து நிறுத்த முடியாமல் திணற,ஜார்ஜ் குத்தப் படும் சாத்தியம்வலுக்க, கூட்டம் பார்த்துக் கொண்டிருக்க.....

அருட்திரு வர்கீஸ்கூட்டத்தைப் பிளந்து எபி முன் வந்து ''முதலில் என்னேக் குத்தடா'' என்ற படி நெஞ்சை நிமிர்த்தி நின்ருர்.

எபியின் கைகள் தளர்ந்தன.

ஒரு வைதீகனேக் கொல்வதா?

அவன் தளர்ந்து கத்தியைக் கீழே போட்டு விட்டான். அவன் சட்டையைப் பிடித்து இழுத்துக் கொண்டு தன் அறையை நோக்கிச் சென்ருர், அடுத்த கையில் நாதனும். கூட்டம் வாளா விழுந்தது. மேய்ப்பன் அற்ற செம்மறி ஆடுகள்!.

முதல்வரின் அறை.

கத்தியை மேஜை மீது வைத்தார்,

உடனேகல்லூரிக்கு விடுமுறை.

மாணவர்கள் கூட்டத்தைக் குறைக்க கல்லூரி பஸ்கள்உடனே புறப்படுவதற்கான ஏற்பாடுகள் விழலுக்கு நீர் என்ருலும் கே. எஸ். ஆர்.டி.ஸி.க்கு ஒரு தொலே பேசி வேண்டல் உடனே கூடுதல் பஸ் அனுப்ப.

திரும்பி எபியைப் பார்த்தார். பின் கேட்டார்.

'அப்பா போன் நம்பர் என்ன?'

ஒரு பிரபலரின் என் அது என்று தெரிந்ததும் ''ஓ அவர் மகனு? என்ன எப்படியிருக்கு உடம்புக்கு? கத்தியா எடுக்கிற ராஸ்கல் என்னடா நினேச்சிக்கிட்டிருக்க இது காலேஜா? சந்தக் கடையா? ஒன்னேயெல்லாம்..... டிஸ்மிஸ் பண்ணி போலீஸ்ல ஏப்பிக்கணும். அப்பதான் பாடம் படிப்ப''என்றுகடுமையாகப்பேசிக் கொண்டே எண்களேச் சுழற்றி,

''குட்மாணிங்ஸ் உங்க மகனுடை காலேஜ் பிரின்ஸிப்பால் பேசறேன். உடனே இங்கே வரணும் அவசரம்'' என்ருர்.

''இப்ப நான் ரொம்ப பிஸி எதா இருந்தாலும் ஃபோன்லியேசொல்லுங்களேன்'' என்ற தகப்பனிடம்

''உங்க மகனே போலிஸ்ல ஒப்படைக்கு முன்னுலே உங்களால வர விடியும்னு வாங்க'' என்று கூறி உடனே தொடர்பை அறுத்தார். எபி நடுங்கிக் கொண்டிருக்கவில்லே. கொஞ்சம் உறுதியாகத்தான் காணப்பட்டான்.

''பிள்ளேகளேக் கவனிக்க முடியாத அவசாம்'' என்று முணுமுணுத்தபடி நாதனேப் பார்த்தார்.

''நீயும் உண்டா டிஜீஸ் காங்''

நாதனுக்கு அதிர்ச்சி. இவருக்கு எப்படி காங் எல்லாம் தெரியும். நான் ஒரு கட்சியிலேயும் கிடையாது. நான்தான் இவங்களேப்

பிடிச்சு மாற்றினேன் என்பவனைக் கூர்ந்து கவனித்து "குட்" என்றார்.

"நீ போகலாம்" என்று சொல்லி பின் 'வேண்டாம் இப்ப நீ போக வேண்டாம்", என்று திருத்தியது, வெளியில் நாதனுக்கு உண்டாகவிருக்கும் ஆபத்தை உத்தேசித்துத்தான்.

ஆபிரகாம் - எபியின் தந்தை - வந்தார்.

"ஃபாதர் என்ன விசேஷம்?" என்றார் முதல்வரை வணங்கியபடியே.

"மிஸ்டர் ஆப்பிரகாம் நீங்க வீட்ல சண்டை வந்தா எப்பிடி? உடனே கத்தி எடுப்பீங்களா"

"ஃபாதர் வாட் யூ மீன்"

உங்க மகன் இங்கே அடுத்த பையன்களை குத்த முயற்சி பண்ணினான். அதான் கேட்டேன் அதோட இந்தமாதிரி கிரிமினல் பையன்களை காலேஜில வைச்சிருந்தா மத்த பையன்களுக்கும் காலேஜுக்கும் கேடு. அதனால ......"

"ஃபாதர் அப்படி எதுவும் செய்திடாதீங்க. என் மகன் அதுக்கெல்லாம் போகமாட்டான் சார்"

"இதுதான் அவன் கைல இருந்து பிடித்துப் பறித்தது" என்று அருட்திரு வர்கீஸ் கத்தியைக் காட்டினார்.

"ஃபாதர் நான் நம்பமாட்டேன் என் மகன் அப்படி எதுவும் செய்யமாட்டான்"

எரிச்சலடைந்த முதல்வர் "இதோ இந்தப் பையன்தான் உங்கள் பையனை பிடித்து நிறுத்தியது" என்று நாதனைக் காட்ட, வெறுப்போடு நாதனைப் பார்த்த ஆப்பிரகாம் மீண்டும் சொன்னார்;

"என் மகன் அப்படியெல்லாம் செய்யமாட்டான்"

"மிஸ்டர் ஆப்பிரகாம் நான் பார்த்தேன் சம்பவத்தை. இந்தக் கல்லூரியே பார்த்தது. இனியும் நீங்க நம்ப மாட்டேங்கறது சரியல்ல" என்ற நற்கும்.

"என் மகன் அப்படியெல்லாம் செய்யமாட்டான்" என்ற ஆப்பிரகாமைப் பார்த்து நடுங்கிய கைகளுடன் தொலைபேசியைத்திருப்பியபடி அருட்திரு வர்கீஸ் மலஞ்சரியில், முதல்வர் சொன்னார்', உங்க மகனைப்பத்தி உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கைன்னா உங்க ஒய்ஃபைகூப்பிட்டுகேளுங்கஇவன் உங்க மகனா இல்லையான்னு"

ஆபிரகாம் அமைதியானார். மன்னிப்பு கேட்டார். அருட்திரு வர்கீஸ் எபியிடமிருந்து, மன்னிப்பு எழுதி வாங்கிக்கொண்டு மீண்டும் கல்லூரியில் சேர்த்துக் கொண்டார்.

நாதனை அழைத்து ஒரு குப்பி 'வைன்டானிக்' கொடுத்து கூடவேபடிக்கவும்செய்யணும் என்றார்.

சாந்தம்மாள் இதைக்கேள்விப்பட்டதும் அந்தத் தாளைத் துண்டாக்கிப் போட்டுவிட்டு "அடாலஸன்டுபாய்ஸ்" என்றாள்.

★

### 'உழவு' பிறந்ததா?

உழவு செய்யும் பொழுது நிலத்தைக் கிளற உதவுவன -உழவனின் இரண்டு கால்களும், இணைமாடுகளின் எட்டுக் கால்களும், ஏரின் நுகக் கால் ஒன்றுமாக-பதினேரு கால்கள். பதினேரு கால், இரண்டே முககால் அன்றோ? தமிழில்இரண்டைக் குறிக்கும் 'உ' எனும் எண்ணும் முக்காலைக் குறிக்கும் 'ஙு' எனும் எண்ணும் இணைந்து 'உஙு' வாகும்! இதுதான் மருவி 'உழு' என்றாகி உழவு எனும் சொல் பிறந்ததோ? 'யாரோ?'

# நா விளம்பும் நயம் என்னே?

பி. குமரேசன்

தேனமுதப் பொய்கைக்குள்
    தினம் ஓடி விளையாடும்
ஆனந்த பொற்சீசுவே!
    அணி மொழியின் மோகினியே!
கானகத்துக் குயில்மொழியாய்
    கனிவான சொல்லொலிக்க
மானத்தின் மாற்றுயர்த்த
    மாண்புறுவாய் என் நாவே!

முத்துச் சுவர் கோட்டைக்குள்
    முப்பத்தி ரண்டான
வித்தை விளை அன்பருடன்
    வேதவல்லி வீற்றிருக்கும்
புத்தொளியாய் மலர்க்குளத்தில்
    பொதியவிழ்ந்த பங்கயமே!
சித்தத்தில் நயம்விளம்பி
    சீர் பெறுவாய் என் நாவே!

காவியத்தின் கருத்துருவை
    கலையழகின் பொருட்செறிவை
ஓவியமாய் மனத்திரையில்
    உறைந்துவிட வரைந்து தரும்
ஏவுகணை நாவுரைதான்
    எதிரொலித்தே திறனாய்ந்து
மேவு புகழ் நாற்றிசையும்
    மென்மேலும் பரப்பிடுமே!

சிந்தனையின் செம்பொருளைச்
    செப்புதற்கே நா அமைத்தாய்!
வந்தனை செய் தன்புறவின்
    வாய் மொழிக்கே நா அமைத்தாய்!
முந்தையர்தம் நற்சிறப்பின்
    முறை இயம்ப நா அமைத்தாய்!
நிந்தைக்கும் அந்நாவை
    நியமைத்த (து) ஏன் இறைவா?

(வேறு)

வையத்துள் நாம் காணும் வாழ்வு தாழ்வின்
வழிகாட்டி முதல்தலைவன் நாவே யாகும்!
பொய்யகற்றி மெய்கண்ட புனிதன் புத்தன்,
பொறுமையதன் புதுசக்தி அண்ணல் காந்தி,
தெய்வவுரு ஞானியவர் நாவுக் கரசர்,
தேவாரம் ஊட்டிய நற் செய்தி யெல்லாம;
மெய்யன்பும்அருள்வழியும் நெஞ்சில் தேங்க
மேதினிக்கு நாசெய்யும் பணிதான் என்னே?



# பழமொழியும், சமயமும்

பேராசிரியர் வ. பெருமாள், எம். ஏ., பி. டி., எம். ஆர். ஏ. எஸ். எப். எப். ஐ.

தமிழ் மொழியில் பல்வேறு இலக்கியங்கள் அரும்பி மலர்ந்திருக்கின்றன. அவற்றுள் பழமொழியும் ஒன்று. ஏனைய இலக்கியங்கள் கற்ருேர்க்கு மட்டும் உரியவை. ஆனால் பழமொழி மக்கள் அனைவருக்கும் உரிய பொது இலக்கியமாகும். இது பழமொழிக்கு உரிய தனிப் பெருஞ் சிறப்பு. காலத்தால் தொன்மையான பழமொழி உண்மையையும் அநுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்தது. தமிழ்ப் பழமொழியில் எல்லாக் கருத்துகளும் செம்மையாகப் பொதிந்திருக்கின்றன. அவற்றுள் சமயக் கருத்துக்களை மட்டும் இங்கு நோக்குவோம்,

மனிதனுக்கும் இறைவனுக்குமுள்ள உறவை விளக்குவது சமயம். அரிசியையும் பச்சைக் காய்கறிகளையும் உண்பதற்கு ஏற்ற முறையில் பக்குவப்படுத்தும் கலையைச் சமையல் என்று குறிப்பிடுகிறேம். 'சமை' என்னும் சொல் பக்குவப்படுத்து என்னும் பொருளைக் குறிக்கும். 'சமை' அடிப்படையாகப் பிறந்த 'சமைதல்' என்னும் சொல் அமைதல், ஆயத்தமாதல், பூப்படைதல் பக்குவமமைடைதல் முதலிய பொருளைக் குறிக்கும். 'சமை' என்னும் அடிச் சொல்லிருந்து தோன்றியதுதான் 'சமயம்'. அரிசியையும் பச்சைக் காய்கறிகளையும் பக்குவப்படுத்தும் கலைக்குச்சமையல் என்றுபெயர். மனிதனைத் தெய்வீகப் பண்புள்ள சான்றேனுகப் பக்குவப் படுத்தும் ஆன்மீகக் கலைக்குச் சமயம் என்று பெயர். சுருங்கச் சொல்லுமிடத்துப் பொல்லாதவனை நல்லவனுக மாற்றுவது சமயம். மருள் நெஞ்சத்தை அருள் நெஞ்சமாக ஆக்குவது சமயம். கல் உள்ளத்தைக் கனி உள்ளமாக ஆக்குவது சமயம். பகைமையைப் போக்கி ஒற்றுமையை உண்டாக்குவது சமயம், கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள ஆன்மீக உறவாகிய பக்தியை மனிதனின் உள்ளத்தில் ஊட்டுவது சமயம். 'எம்மதமும் சம்மதம்' என்பதே சமயத்தின் தலையாய குறிக்கோள்.

இறைவன் ஒருவனே என்னும் அடிப்படைக் கொள்கை கடவுள் மீது நம்பிக்கையுள்ளவர்கள் எல்லோருக்கும் உடன்பாடானது. இறைவனைப்பற்றிக் குறிப்பிடுகிற பழமொழிகள் யாவும் இறைவனை ஒருமையில் குறிப்பிடுகின்றன. 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்னும் பழமொழி அந்த உண்மையைத் தெளிவாக மெய்ப்பிக்கின்றது. இறைவன் ஒருவனே ஆனுல் பெயர்கள் பல. குறிக்கோள் ஒன்றே; ஆனுல் நெறிகள் பல. வீட்டிலுள்ள மின்சாரம் ஒன்றே; ஆனுல் வெளிப்படும் முறைகள் பல. விளக்கின் வழியாக மின்சாரம் வெளிப்படும்போது ஒளியாகக் காட்சியளிக்கிறது. வானெலிப்பெட்டி வாயிலாக வெளிப்படும்போது இசையாகப் பாய்கிறது. விசிறியின் மூலமாக வெளிப்படும்போது இனிய காற்ருக வீசுகிறது. மின் வெப்பக் கருவி (Electric heater) மூலமாக வெளிப்படும்போது வெம்மையாகத்தென்படுகிறது. மின்சாரத்தின் வெளிப்பாடுகள் பலவடிவங்களில் இருந்தாலும் மின்சாரம் ஒன்றே என்பதை மறக்கவோ, மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. அதுபோல அருள், ஆற்றல், அறிவு முதலிய பல வேறு வடிவங்களில் கடவுள் வெளிப்பட்டாலும் கடவுள் ஒருவனே என்னும் பேருண்மையை நாம் உள்ளத்தில் நன்கு பதிய வைத்தல் வேண்டும். 'அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவன் வாயிலே மண்ணு' என்பது பழமொழி.

உலகம் தோன்றுவதற்கு மூலகாரணமானவன் இறைவன். இறைவனுக்கு 'ஆதி' என்னும் பெயரும் உண்டு. ஆதி என்னும் சொல் தொடக்கத்தைக் குறிக்கும். சாகப் போகிற காலத்தில் சங்கரா, சங்கரா என்பதை விட, வெள்ளம் தலைக்குமேல் ஓடும் போது அணை போட முயல்வதை விட, ஏற்ற காலத்தில் ஆண்டவனைத் தொழுதல் வேண்டும் என்னும் சமய நீதியை நம் பழமொழி உணர்த்துகிறது. 'ஐந்து வயதில் ஆதியை ஓது' என்பதே அந்தப்பழமொழி. ஒரு கருத்தை அறிவதற்கும் உணர்த்துவதற்தம் உரிய காலமும் ஏற்ற பருவமும் அதுவேயாகும். அதாவது ஐந்து வயது. ஐந்தில் அறியாதவன் ஐம்பதில் அறிவானு? ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்னும் பழமொழிகள் இந்த உண்மையை உறுதிப்படுத்துகின்றன.

சமயம் என்பது கல்வியின் ஒரு பகுதியன்று. அது வாழ்க்கையின் அடிப்படையான நெறி. வழக்கறிஞர் வழக்குகளையும் சட்டத்தையும் அறிந்திருந்தால் போதும். அவர் வழக்கறிஞராகத் தொழில் புரிந்து வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. அதைப் போலவே ஏனைய துறைகளில் உள்ளவர்களும் தத்தம்

துறைகளைப்பற்றிய அறிவைப் பெற்றிருந்தால் போதும். அவற்றைச் செயல்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால் சமயம் அவ்வாறன்று. சமயம் என்பது வெறும் ஏட்டு நெறியோ அறிவு நெறியோ அன்று. அது வாழ்க்கை நெறி. சமயமும் வாழ்க்கையும் இணைந்தே செல்ல வேண்டும். இல்லாவிட்டால் 'படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமாள் கோவில்' என்னும் பழமொழிக்கேற்ப வாழ்க்கை அமைந்துவிடும்.

தமிழகத்தில் தோன்றிய சமயப் பெரியார்கள் பலர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் சிலர். அப்பர், திருஞான சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர், இவர்களைச் சமயக் குரவர்கள் என்று சிறப்பாகக் குறிப்பதுண்டு. இறைவனை ஆண்டையாகவும் தம்மை அடிமையாகவும் கருதி உழவாரப்படைக் கொண்டு உள்ளன்புடன் தொண்டு புரிந்தார் அப்பர். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் உயர்ந்த கருத்தைக் குறிக்கோளாகக்கொண்டவர் அப்பர். அவர் பின்பற்றிய நெறி அடிமை நெறி அல்லது தாச மார்க்கம். இளம் வயதில் இறைவன் அருள் பெற்றவர் ஞான சம்பந்தர். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய பெருமை ஞான சம்பந்தரைச் சாரும். அவர் இறைவனைத் தந்தையாகவும் தம்மை மகனாகவும் கொண்டு ஒழுகினார். அவர் கடைப்பிடித்த நெறி தந்தை மகன்மை நெறி அல்லது சத்புத்திர மார்க்கம்.

சுந்தரர் இறைவனைத் தம் தோழனாக மதித்து ஒழுகினார். 'ஏழிசையாய் இசைப் பயனாய் இன்னிசையாய் என்னுடைய தோழனுமாய்' என்று சுந்தரர் உரிமையுடன் பாடுவது இங்கு நோக்கத் தக்கது. அவர் பின்பற்றிய நெறி தோழமை நெறி அல்லது சக மார்க்கம். அறிவின் வடிவமாக விளங்கும் இறைவனை அறிவு நெறியில் வழிபட்டவர் மாணிக்க வாசகர். அவர் இயற்றிய திருவாசகத்தின் இனிமையை இராமலிங்க அடிகள் உளம்உருகிப் பாடுகின்றார்.

---



# எனக்கின்பம்

டாக்டர் மா. இளையபெருமாள்

எந்தத் துன்பம் எனக்கிருந் தாலும்
இந்தக் காட்சிகள் எனக்கின்பம்.

பன்மொழி அறிஞர்கள் பகர்வுரை வழங்கிடும்
பல்கலைக் கழகம் எனக்கின்பம்—அங்கு
கன்னிய ரோடு காளைகள் பயின்றிடும்
காட்சிகள் என்றும் எனக்கின்பம்.

கல்மனம் நெகிழ்ந்து கசிவுறச் செய்திடும்
கானம் கேட்டல் எனக்கின்பம்—என்றும்
நல்மனம் பெற்றிட நயவுரை வழங்கிடும்
நாடகக் காட்சிகள் எனக்கின்பம்.

புதுப்புது முறைகளில் புதுப்புது கலைகளில்
புதுமையே காணல் எனக்கின்பம்—எங்கும்
ஒதுங்கியே ஓடி ஒளிந்து விடாமல்
உண்மை நிலைத்தல் எனக்கின்பம்.

ஆய்கலை நிறைந்த அருந்தமிழ்ப் பெருமை
அயலார் பேசுதல் எனக்கின்பம்—அதுஎன்
தாய்மொழி என்னும் தருக்கொடு பேணித்
தரணியில் வளர்த்தல் எனக்கின்பம்.

செந்தமிழ் நூற்களில் சிந்தனைச் செல்வம்
சேர்ந்து பெருகுதல் எனக்கின்பம்—அது
முந்திய வளத்தொடு நின்று விடாமல்
முற்பட வளர்தல் எனக்கின்பம்.

பழந்தமிழ் இலக்கியப் பண்பினை ஆய்ந்து
பகுத்துணர்ந் தறிதல் எனக்கின்பம்—உளத்தில்
எழுந்திடும் உணர்ச்சிக் கிடங்கொடுக் காமல்
இயல்பினை உரைத்தல் எனக்கின்பம்.

இணங்கும் சொற்பொருள் இலக்கண நுட்ப
இயல்பினை ஆய்தல் எனக்கின்பம்—சிறிதும்
நுணுக்கம் இலாத நுனிப்புல் மேய்வை
நொறுக்கி எறிவதும் எனக்கின்பம்.

பக்திப் பாடலில் பரவசம் அடைந்து
படித்து மகிழ்வது எனக்கின்பம்—நல்ல
புத்தம் புது முறை போற்றிடும் கவிதைகள்
பொங்கி எழுவது எனக்கின்பம்.

## கல்வி

கைப்பொரு ளென்பது கல்வியே; அப்பொருள்
மெய்ப்பொரு ளாகுமாம் மேதினியில் - இப்பொருள்
வஞ்சனை சூதால் வளரா; வழங்கினும்
நெஞ்சத் திருக்கும் நிலைத்து.

## செல்வம்

செல்வ மெனயாரும் செப்புவர்; செல்வமும்
'செல் வம்' எனவேதான் செப்புமாம் - நில்லாது
செல்லும் வருமே செருக்கை வளர்க்குமே
பொல்லாங்கு செய்யும் புரி.

*வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை*
*நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே*
*தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீம் சுவை கலந்(து) என்*
*ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே!*

'திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது பழமொழி. மாணிக்க வாசகர் பின் பற்றிய நெறி அறிவு அல்லது ஞான மார்க்கம். அப்பர் சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் முறையே அடிமை நெறி, தந்தை மகன்மை நெறி, தோழமை நெறி, அறிவு நெறி ஆகிய நெறிகளைப் பின் பற்றினர். 'நாலுபேர் போன வழியில் நாம் போக வேண்டும்' என்பது பழமொழி. நாலுபேர் என்பது சமயக் குரவர் நால்வரைக் குறிக்கும். அந்த நால்வரும் போன வழி நல்ல வழி.

பற்று இரு வகைப்படும். ஒன்று அகப்பற்று; மற்றொன்று புறப்பற்று, 'நான் என்பது அகப்பற்று' 'நான் உயர்ந்தவன், நானே தலைவன்' என்பவை அகப்பற்றிலிருந்து எழுந்த ஆணவமொழிகள். 'என் பொருள், என் வீடு, என் சொத்து' முதலியவை புறப்பற்று காரணமாக எழுந்த ஆசை மொழிகளாகும். இவ்விரு வகைப்பற்றையும் செருக்கையும் அறவே அழித்தவன் உயர் நிலையை அடைவான்.

*'யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்(கு)*
*உயர்ந்த உலகம் புகும்'*

என்று குறள் பாடுகிறது.

இருவகைப் பற்றையும், மூவகை ஆசையையும் அறவே துறந்தவனே துறவி. மனத்தை அடக்கிய துறவியுடன் உலகத்தையே வென்ற வேந்தனை ஒப்பிட்டுப் பார்த்தால் வேந்தன் துரும்பாகவே காட்சியளிப்பான். 'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்பது பழமொழி.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினையும் நம்முன்னோர் உறுதிப் பொருள்களாகக் கருதினர். ஒருவன் வீடு பேற்றை அடையத் தவம் புரிய வேண்டியதில்லை. காவியுடை அணிந்து கொண்டு கானகத்திற்குச் செல்ல வேண்டியதில்லை. தலையில் மொட்டையும், நெற்றியில் பட்டையும், கழுத்தில் கொட்டையும், காலில் கட்டையும் அணிந்து கொண்டு காட்சியளிக்க வேண்டியதில்லை. பற்றை அறவே நீக்கிவிட்டால் வீடுபேறு தானாகவே கிட்டும். இந்தப் பேருண்மையை 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்னும் பழமொழி நன்கு தெளிவாக்குகிறது.

'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்பது அனைவரும் நன்கறிந்த பழமொழி. காற்று அடிக்கும்போதே நெல் முதலிய தானியங்களை நன்றாகத் தூற்றிக்கொள்ள வேண்டும் என்பது பழமொழியின் சொற் பொருளாகும். வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வாய்ப்பை நழுவவிடக் கூடாது என்பது இதன் உட் பொருள். ஆன்மீகக் கண்கொண்டு இந்தப் பழமொழியை ஆராய்ந்தால் இதன் சொற் பொருள், உட்பொருள் ஆகியவற்றைக் கடந்த நிலையில் நுண்பொருள் புலனாகும். காற்றுள்ளபோது நெல்லைத் தூற்றினால் தூய நெல் மட்டும் நிலத்தில் தங்கி விடும். பதர், தூசி முதலியவை காற்றோடு போய்விடும். அதைப் போலவே ஒருவன் தன் மூச்சு (காற்று) உள்ளபோதே காமம், வெகுளி, மயக்கம் ஆகிய முக்குற்றங்களையும் ஆணவம், கன்மம், மாயை, ஆகிய மும்மலங்களையும், போக்கிக் கொள்ள வேண்டும். நெல்லைத் தூற்றும்போது நெல் மட்டும் தங்கி பதர் நீங்குவதைப் போல தூய அறிவு மட்டும் நிலை பெற்று நின்று அறியாமை முதலியவை நீங்கி விடும். காற்று நின்றுவிட்டால் தூற்ற முடியாது. மனிதனின் மூச்சுக் காற்று நின்றுவிட்டால் அவன் தன்னிடமுள்ள குற்றங்களைப் போக்கிக் கொள்ள இயலாது.

‘இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்’ என்பது பழமொழி. ஒருவனுக்கு கொஞ்சம் இடம் கொடுத்தால் பிறகு அவன் எல்லாவற்றையும் கேட்பான் என்று நாம் இந்தப் பழமொழிக்குப் பொருள் கூறுகிறோம். இந்தப் பழமொழியை ‘இருக்க இடம் கொடுத்தால் படுக்கப் பாய் கேட்பான்’. ‘ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டியது’ ஆகிய பழமொழிகளுக்கு இணையாகக் கருதுகிறோம். இந்தப் பழமொழியை ஆழ்ந்து நோக்கினால் இதன் ஆன்மீக நுண்பொருள் தெளிவாகும். இறைவனுக்கு நம் உள்ளத்தில் இருக்க இடம் கொடுத்தால் அவன் நம் அறியாமையைப் (மடம்) பிடுங்குவான் என்பதே இப்பழமொழியின் மெய்ப் பொருள். இத்தகைய பழமொழிகள் இன்னும்பல இருக்கின்றன. இவற்றைக் தத்துவக் கண் கொண்டு ஆராய்ந்தால் இவற்றின் சொற்பொருள், உட்பொருள் ஆகியவற்றைக் கடந்த நிலையில் மெய்ப் பொருள் புலனாகும்.

ஆற்றல் இருந்தால்செய், இல்லாவிட்டால் சும்மா இரு என்று சொல்வதற்குப் பதிலாகச் ‘சக்தி இருந்தால் செய் இல்லாவிட்டால் சிவனே என்று இரு’ என்னும் பழமொழியைப் பயன்படுத்துகிறோம். பெண்ணின் வடிவமாக விளங்கும் சக்தி இயக்குகிறாள். ஆணின் வடிவத்தில் இருக்கும் சிவன் இயங்குகிறான். பெண்மையும் தாய்மையும் போற்றும் வகையில் அமைந்துள்ள இந்தப் பழமொழி சிலேடை நயத்துடன் சிறந்து விளங்குகின்றது. பாரதியார்,

*நல்லதோர் வீணை செய்தே—அதை*
*நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?*
*சொல்லடி சிவ சக்தி-எனைச்*
*சுடர் மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்!*

என்று சிவனையும் சக்தியையும் இணைத்துப் பாடுகிறார்.

தமிழில் சமயத்தைப் பற்றிய பழமொழிகள் மிகுதியாக இருக்கின்றன. இவை யாவும் சிந்தனையின் சாரமாகவும் அறிவின் பிழிவாகவும் அமைந்து கற்போர்க்குப் பெரு விருந்து அளித்த வண்ணம் இருக்கின்றன. இந்தப் பழமொழிகளை நன்கு ஆராய்ந்து தெளிந்து பயன் அடைதல் தமிழரின் தலையாய கடமையாகும்.

# தமிழா! விழித்தெழு!

ஏ. என். தீன் செயலாளர், திருவள்ளுவர் தமிழ் மன்றம், சங்கனாச்சேரி

தமிழன்பர்களே !

வணங்கி மகிழ்கின்றேன்.

தமிழர்களுக்காக ஒரு அமைப்பைத் தோற்றுவித்து அதை நல்ல முறையில் நடத்தி வருகின்ற திருவனந்த புரம் தமிழ்ச் சங்கத்தைச் சார்ந்த உறுப்பினர்களே! உங்கள் எண்ணம் ஈடேற, பணிசிறக்க 'கேரளத்தமிழ்' மூன்ருவது ஆண்டு மலர் வெளியிடும் இந் நேரத்தில் என் வாழ்த்துக்களும், வணக்கமும் உரித்தாகுக!

அறிவிலும், ஆற்றலிலும் சிறந்த நாம், தொழில் நிமித்தமாக கேரளாவில் குடியேறியுள்ளோம். சிலர் நிரந்தரமாகத் தங்கிவிட்டனர். வேறு சிலரோ நிரந்தர மாகத் தங்கிவிடத் திட்டமிட்டு வருகின்றனர். நாம் நம்மைப் பற்றிச் சிந்திக்க நேரமில்லாமல் உழைக்கின் ரேமே தவிர நம் உழைப்பிற்குத் தக்கவாறு முன்னேறி யிருக்கின்ரேமா? நமது மொழி, மாண்பு, மரபு, கலாச் சாரம், அடிப்படைத் தேவைகள் போன்றவற்றை நிலைநாட்டி வருகின்ரேமா? என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று தமிழகத்தில் குடியேறியுள்ள பல மொழி பேசக்கூடியவர்கள் அடைந்த முன்னேற்றங் களை, அவர்களின் அடிப்படைப்பிரச்சனைகளை, அவர்கள் எந்த வகையில் நிறைவேற்றியுள்ளனர்? சிந்தித்துப் பார்த்தால், நாம் நமது நிலையை எண்ணி வேதனைப் படுவோம். வெட்கித் தலைகுனிவோம்!.

குறிப்பாக, தமிழ் நாட்டில் குடியேறியுள்ள கேரள நண்பர்கள் அவர்களுக்கென்று ஒரு சங்கம் அமைத்து ஓணம், விஷு போன்ற பண்டிகைகளைக் கொண்டாடி வருவதுடன், அவர்களுடைய எதிர்கால எழில் ஓவியங் கள் தங்கள் மொழியான மலையாளத்தை மறந்து விடா மல் இருக்க மலையாளத்தைப் பாடமாகக் கொண்ட கல்வி நிலையங்களை நிறுவி மிகச் சிறப்பான முறையில் நடத்தி வருகிருர்கள். இதனுல் மலையாளத்தை அவர்கள் மறக்காமலும், மலையாளம் அவர்களிடமிருந்து மறையா மலும் இருக்கின்றது! ஆனுல் நமது நிலை என்ன? நமது பிள்ளைகள் இங்கு ஆங்கிலக் கல்வியுடன் மலையாளத் தைப் பாடமாகக் கொண்டு படித்து வருகின்றனர். வேலையிலிருக்கும் நமது தமிழர்கள் வேலை மாற்றம் ஏற்படும் போது அவர்களின் குழந்தைகளுக்குத் தமிழ் தெரியாத காரணத்தால் தமிழ் நாட்டில் உள்ள பள்ளி களில் சேர்ப்பதற்கு மிகவும் சிரமப்படுகின்ருர்கள். இத னுல் அக்குழந்தைகள் தங்களது கல்வி ஆண்டுகளில் பல துன்பங்களை அடைய வேண்டியுள்ளது. மக்கள் தொகை கணக்கெடுப்பவர்களிடம் கூட 'தாய் மொழி தமிழ்' என்பதை மறைத்துக் கூறும் எத்தனையோ பெற் ரேர்களைப் பற்றிக் கேள்விப்படும் போது 'தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!! என்று கூறிய ஆன்ரேர் இன்று உயிரோடு இருந்தால் நிச்சய மாக இவர்களின் அவல நிலையைக் குறித்து - தமிழ் செத்து மடிவதைக் குறித்து, இரத்தக் கண்ணீர் வடித் திருப்பார்கள். தமிழா! உன் நிலை இதுதானு? நீ ஏன் உன் நிலையைத் தரம் தாழ்த்திக் கொள்கின்ருய்?

கேரளத்தில் தமிழ்ச் சங்கம் என்று கூறினுல் சிலர் புன்னகை பூக்கின்றனர். வேறு சிலரோ புருவத்தை நெரிக்கின்றனர். இது போல் புருவத்தை நெரிக்கும் தமிழர்கள் வியக்கும் அளவுக்கு இன்று கேரளாவில் பல இடங்களில் தமிழின் பெயரால் பல அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு மிகச் சிறப்பான முறையில் அவை நடை பெற்று வருகின்றன. இந்தஅமைப்புகளில்உள்ள கேரளத் தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிடஒத்துழைப்புத் தர வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இனி முக்கியமான ஒன்று. கேரளத்தின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழர்களில் யாராவது இறந்தால் அவர்களின் இறுதிச் சடங்குகளை நிறைவேற்றிட ஒரு மயானக் கரை கூட கேரளாவில் பல இடங்களில் இல்லை. குறிப்பாக, பொது மயானக் கரைகூட கோட் டயம், சங்கனுச்சேரி போன்ற இடங்களில் இல்லை. இதனுல் இறந்தவர்களை அவர்களின் சொந்த ஊர்க ளுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய பரிதாப நிலை இங் குள்ளது. இதனுல் ரூ 500 முதல் ரூ 1000 வரை செலவு ஏற்படுகிறது. கிறித்துவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் அவரவர் வழிபடும் இடங்களிலேயே மயானக் கரை உள்ளது. இந்துக்களில் நாயர் சமுதாயத்தைச் சேர்ந்த வர்கள் அவரவர்களுடைய வீடுகளிலுள்ள வெற்றிடங் களில் இறுதிச் சடங்குகளை நடத்திவிடுகின்றனர். மற்ற இந்துக்களின் (குறிப்பாகத் தமிழகத்திலிருந்து வந்தவர்கள்) நிலைமேற்சொன்னபடி அவல நிலைமையே! இதற்குப் பரிகாரம் காண சங்கனுச்சேரி திருவள்ளுவர் தமிழ் மன்றத்தின் சார்பில் சங்கனுச்சேரி, மற்றும் அதன் சுற்றுப் புறங்களிலுள்ள தமிழர்கள் பயன்படுத் திக் கொள்ளும் விதத்தில் இடம் ஒன்று விலைக்குவாங்கி மயானக்கரை ஒன்று ஏற்படுத்திடத் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் நகர சபையிடம் முறையிட்டதின் பயனுக, அவர்களே ஒரு பொது மயா னக் கரை ஏற்படுத்திடத் தீர்மானித்து ஆக்கபூர்வமாகச்

செயல்பட ஆரம்பித்துள்ளனர். இப்படிப்பட்ட பல முக்கிய அடிப்படைத் தேவைகள் ஒவ்வொரு பகுதியிலும் உள்ளன. இது போன்ற தேவைகளை ஆங்காங்குள்ள தமிழ் அமைப்புகள் முயற்சி எடுத்து முடித்திட வேண்டும்.

அது போல் கல்வி, போக்குவரத்து வசதி போன்ற மற்ற தேவைகளைக் கேரளத் தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு அரசிடம் முறையிட்டுப் பெற்றிட வேண்டும். தமிழர்கள் தங்களுடைய வியாபாரத்தின் மூலமாக இலட்சக்கணக்கான தொகையை அரசுக்கு வரிப்பணமாகச் செலுத்தி வருகின்றோம். அப்படிப்பட்ட நமக்கு அரசு ஏன் உதவிடக் கூடாது? ஆகவே நாம் தூங்கியது போதும். இனியாவது விழிப்புடன் நமது தேவைகளை நிறைவேற்றிட வேண்டும். தமிழ்க் கல்வி கேரளா முழுவதும் உள்ள தமிழர்களின் குழந்தைகள் கற்றிட தமிழர்களாகிய நாம் முயற்சி எடுக்க வேண்டும்.

தமிழா! விழித்தெழு! ஒன்றுபடுவோம்! வெற்றி அடைவோம்!!

---





## தேன் சொரியும் தெம்மாங்கு

என். கிருஷ்ணய்யர் (தமிழாசிரியர்)

முல்லை மலரே! முருக்கம் பூவே!
மல்லிகை ரோசாவே! வாடா மருக்கொழுந்தே!
கோணக் கொடிமரமே! குன்றாத செண்பகமே!
மங்கை, உனைப்பார்ப்ப தெப்போ? இத்தரையில்
அஞ்சாத செயகொடியை அத்தரையில் உள்ளோர்க்கு
அறிவிக்கச் சென்றனையோ?

வில்லேந்தும் கையழகா! மீசை முறுக்கழகா!
வில்லேந்தும் கைகளிலே வேந்தனிட்ட கங்கணமும்
வேந்தனிட்ட கங்கணத்தில் வீராதி வீரனென்று
பாந்தமிட்ட உனைப்'பாதர் வெள்ளை' என்றழைக்கும்
போதெதிர்த்துப் பேசையிலே உள்ளங்கள்
பொன்னுரும்
தாதுதிர்த்துத் தேன்சொரியும்.

(குறிப்பு:- கட்டபொம்மன் தளபதி பகதூர் வெள்ளையத் தேவன் வீரசுவர்க்கமடைந்த போது, அவன் மனைவியின் புலம்பல்)

---

கொள்கைகளையோ, நம்பிக்கைகளையோ, மதப்பிரிவுகளையோ, கோயில்களையோ பொருட்படுத்தாதே; ஒவ்வொரு மனிதனது வாழ்க்கையிலும் ஸாரமாய் அமையும் ஞானத்தோடு ஒப்பிட்டு நோக்குங்கால் அவை என்னும்? ஒரு மனிதனிடத்து இந்த ஞானம் முதிரும் அளவிற்கே, நலம்புரியும் ஆற்றல் அவன்பால் மிகுகின்றது. முதலில் இதனையே தேடிப் பெருக; இதனையே அடைக. எவரையும் குறை கூறாதே; ஏனெனில் எல்லாக் கொள்கைளிடத்தும் முடிவுகளிடத்தும் சிறிதுநன்மைஉள்ளது. சமயமென்பது மொழிகளுமன்று, காட்சிகளுமன்று; மெய்யுணர்வே அதன் கருத்தாகும்—இதை உனது வாழ்க்கையிற்காட்டுக.

விவேகானந்தர்.

# திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம்

# உறுப்பினர் பட்டியல்

## ஆயுள் உறுப்பினர்கள்

1 எஸ். சந்திரன், நியூ தியேட்டர்ஸ், திருவனந்தபுரம்.

2 ப. நடராஜன், பாபு பவன். செந்திட்டை, திருவனந்தபுரம்.

3 சி. கணேசன், TC.37/90, புது நகர், பூத்தன் கோட்டை, திருவனந்தபுரம்.

4 எஸ். வி. பண்டிட், கன்டோன்மென்ட், திருவனந்தபுரம்.

5 எஸ். அழகிய நம்பியா பிள்ளை, எஸ். ஏ. பி. காம்பவுண்டு, கமுகு விளாகம் தெரு, செந்திட்டை, திருவனந்தபுரம்.

6 சி. வள்ளிநாயகம் பிள்ளை, TC. 20/572, கரமனை, திருவனந்தபுரம்.

7 அ. சுப்பிரமணியம், ''குருவிகார்'' TC 37/2288 ஆனைக்கொட்டில் தெரு, படிஞாயிறுத் தெரு, கோட்டைக்குள், திருவனந்தபுரம்.

8 சி. ஆறுமுகம் செட்டியார், 'சக்தி', பூஜப்புரை, திருவனந்தபுரம்.

9 ஏ. டி. கணபதி, மரக்கடை ரோடு, திருவனந்தபுரம்.

10 ஏ. மாணிக்கம், சொத்தவால் தெரு, சாலை, திருவனந்தபுரம்.

11 அ. சுப்பிரமணியம், தமிழ்ப்பேராசிரியர், அரசு கலைக்கல்லூரி, சிற்றூர், பாலக்காடு.

12 வ. விநயகப்பெருமாள், தமிழ்ப்பேராசிரியர், M 2, ஜவஹர்நகர், திருவனந்தபுரம்-3

13 ஆ. மாதவன், லக்ஷ்மி நிவாஸ், மரக்கடை ரோடு, திருவனந்தபுரம்.

14 எஸ். அருணாசலம், தனிக்குரல், TC. 23/386 வலிய சாலை, திருவனந்தபுரம்.

15 எஸ். கிருஷ்ணன், கமலா ஆயில் மில்ஸ், கரமனை, திருவனந்தபுரம்.

16 நீல. பத்மனபன், TC 36/1684—1, குரியாத்தி ரோடு, மணக்காடு, திருவனந்தபுரம் 9.

17 எம். செல்லப்பன், TC. 35/273, செந்திட்டை, திருவனந்தபுரம்.

18 டி. இராமையா பிள்ளை, செந்திட்டை, திருவனந்தபுரம்.

19 நீ. இராஜகோபாலன், தமிழ் விரிவுரையாளர், செந்திட்டைத் தெரு, திருவனந்தபுரம்.

20 பி. கோலப்பாபிள்ளை, TC. 35/324, ஆனந்த நிலையம், பவர் ஹவுஸ் ரோடு, திருவனந்தபுரம்-23

21 எஸ். ஹரிஹரய்யர், லிக்கோ ஏஜண்டு, பவர் ஹவுஸ் ரோடு, திருவனந்தபுரம்-23

22 கே. தேவராசன், ''சாந்தி'' முண்டநாடு ரோடு, வலியசாலை, திருவனந்தபுரம்.

23 ஜி. குமரேசன், பழையசாலை, திருவனந்தபுரம்.

24 இ. ஆறுமுகம் ஆச்சாரி, சாந்தா ஜூவலரி, சாலை, திருவனந்தபுரம்.

25 என். சுதந்திரன், நர்த்தகி டெக்ஸ்டைல், பழவங்காடி, திருவனந்தபுரம்.

26 டி. மகாதேவன், கோமதி விலாஸ், தைக்காடு, திருவனந்தபுரம்.

27 வி. இரத்தினபாண்டியன், சுயம்பு ஸ்டோர்ஸ், கொத்தவால் தெரு, சாலை, திருவனந்தபுரம்.

28 டி. எம். சதக்கதுல்லா, ஜூவலர், மீனாட்சிபுரம், நாகர்கோவில்.

29 ஜி. சுப்பிரமணியம், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர், கொத்தவால் தெரு, சாலை, திருவனந்தபுரம்.

30 பி. சிதம்பரம், சி. பி. சன்ஸ், பவர் ஹவுஸ் ரோடு, திருவனந்தபுரம்.

31 எம். மகாலிங்கம், TC. 35/1350, மனோன்மணி பவன், கமுகுவிளாகம் தெரு, திருவனந்தபுரம்.

32 கே. இராமநாதன், மைஸ்காட், TC. 20/1336, கரமனை, திருவனந்தபுரம்-2

33 வே. நாறும் பூ நாதன், TC. 21/680, வலியசாலை, திருவனந்தபுரம்.

34 பி. மதனன், TC. 21/287, கொச்சார் ரோடு, வலியசாலே, திருவனந்தபுரம்.

35 ஏ. பத்மனுபன் (பாப்பா), லிலா டயர் ஒர்க்ஸ், செந்திட்டை, திருவனந்தபுரம்.

36 பி. எஸ். கோபாலகிருஷ்ணபிள்ளை' TC.37/653.2, எம். ஆர். ஹில், புத்தன்கோட்டை, திருவனந்தபுரம்-9

37 எஸ். கிருஷ்ணன், TC. 21/487, கொச்சார்ரோடு, வலியசாலே, திருவனந்தபுரம்.

38 வி. கே. சுப்பிரமணியபிள்ளை, TC. 18/1216, வலியசாலே, திருவனந்தபுரம்.

39 கொ. சுப்பாராயலு, ராயல் புரொவிஷன் ஸ்டோர், ஆண்டாள் பில்டிங்ஸ், தம்பானூர், திருவனந்தபுரம்.

40 எம். எஸ். ஆர். சுகுமாரன், ராமகிருஷ்ண நிவாஸ் ஆண்டாள் பில்டிங்ஸ், தம்பானூர், திருவனந்தபுரம்.

41 ஏ. குணசீலன், (துபாய்) யு. ஏ. இ.

42 எம். வைத்தியலிங்கம், ''முருகசதன்'', குஞ்ஞாலும் மூடு, திருவனந்தபுரம்-2

43 எஸ். போற்றிவேலு, வியாபாரம், சபாபதி கோவ்ல் தெரு, சாலே, திருவனந்தபுரம்.

44 ஜி. நாராயணமூர்த்தி ரெட்டியார், அய்யப்பா பெட் எம்போரியம், செந்திட்டை, திருவனந்தபுரம்,

45 டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம், எம். ஆர். ஹில், புத்தன்கோட்டை, மணக்காடு, திருவனந்தபுரம்.

45 டாக்டர். க. சுப்பிரமணியம், செந்திட்டைகிராமம், செந்திட்டை, திருவனந்தபுரம்.

47 எம். வி. குழந்தைசாமி, நடுத்தெரு, இராமபுரம்-2 குமரிமாவட்டம்.

48 எம். கேசவன், பத்மனுபா வுட் இண்டஸ்ட்ரீஸ், கொச்சார் ரோடு, வலியசாலே, திருவனந்தபுரம்.

49 எஸ். எ. சுப்பிரமணியம், சிவகாமி டிம்பேர்ஸ், சி. ஐ. டி. ரோடு, கிள்ளிப்பாலம், திருவனந்தபுரம்.

50 கோ. முருகேசன், TC. 8/1898, உமையாலயா, திருமலே, திருவனந்தபுரம்-6

51 எம். தகஷிணுமூர்த்தி, TC.8/989ஐயநிகேதன், வலியவிள, திருவனந்தபுரம்-6

52 எஸ். எம். இராமசுவாமி, விஜயா அலுமினியம் ஸ்டோர், சாலே, திருவனந்தபுரம்.

53 ஆ. ஷண்முகம்பிள்ளை, எஸ். எ. பி. காம்பவுண்டு, கருகு விளாகம் தெரு, செந்திட்டை, திருவனந்தபுரம்.

54 டி. என். சிவதாணு பிள்ளை,TC.8/1897, ''ஜானக்'' திருமலே, திருவனந்தபுரம்-6

55 சித்தரஞ்சன், TC. 4/766, கவுடியார், திருவனந்தபுரம்.

56 வே. கோபாலகிருஷ்ணபிள்ளை, கமிஷன் ஏஜண்டு, சபாபதி கோயில் தெரு, சாலே, திருவனந்தபுரம்.

57 ஏ. வேலாயுதன் பிள்ளை, அருணு டெக்ஸ்டைல்ஸ். சாலே, திருவனந்தபுரம்.

58 பி. ரத்தினசாமி, ராஜ்காட், தைக்காடு, திருவனந்தபுரம்-14

59 நீல. ஜனுர்த்தனன், 'பத்ம ஸ்ரீ', புத்தன்சாலே, திருவனந்தபுரம்.

60 ஆர். எஸ். ஐயப்பன், மணி பவன், வவேகானந்தாத் தெரு, ஆரியசாலே, திருவனந்தபுரம்-695023

61 மா. உமாதாணு, TC. 35/1418, பாட்டு விளாகம் தெரு, செந்திட்டை, திருவனந்தபுரம்-23

62 அ. இராமசுவாமி, R. A. P. & Sons, சாலே, திருவனந்தபுரம்-23

63 எம் இராமசுவாமி, B. A., L. L. B. வழக்கறிஞர் மாணிக்கம்பிள்ளை கட்டிடம், பவர்ஹவுஸ்ரோடு, திருவனந்தபுரம்-23

64 ச. கணேசன், 'ஹரிராக்', சித்ராநகர், பட்டம் பாலஸ் P. O., திருவனந்தபுரம்-4

65 டி. வி. சுவாமிநாதன், I. A. S. ப்ளாட் H. I.24 கவுடியார் கேப்டன் ஹவுஸிங் ஸ்கீம், கோல்ப்லிங் ரோடு, திருவனந்தபுரம்-3

66 பி. வேலாயுதன்பிள்ளை, TC. 35/2060, ஆரியசாலே, திருவனந்தபுரம்-23

67 ஏ. சந்திரசேகரன், பிருந்தாவன், தைக்காடு, திருவனந்தபுரம்-14

68 வி. கிருஷ்ணன், சங்கர் சிமண்ட்ஸ்டாக்கிஸ்ட், TC. 25/603, M. G. ரோடு, திருவனந்தபுரம்-1

69 இ. கே. ஆறுமுகம் பிள்ளை கோமதி பவனம், புத்தன்கோட்டை, திருவனந்தபுரம்.

70 எஸ். சங்கரன், TC. 26/681, லூக்ஸ் லேன், புத்தன்சந்தை, திருவனந்தபுரம்.

71 டாக்டர். க. நல்தம்பி, M. D. ராங்காலயம், ஏ. ஜி. அலுவலகம்-எதிர்புறம், எம். ஜி. ரோடு, திருவனந்தபுரம்.

72 எஸ். தனுஷ்கோடி ராமலிங்கம், மானேஜர், ஸ்டேட் பாங்கு ஆப் டிருவன்கூர், கன்னியாகுமரி.

73 என். மோகன்தாஸ் S/o என். நைனர், வியாபாரம், சாலே, திருவனந்தபுரம்.

74 இரா. சிவதாணு, TC. 21/381, நெடுங்காடு, கரமனே, திருவனந்தபுரம்.

# ஆண்டு உறுப்பினர்கள்

உறுப்பினர் எண்

1 பி. அருணசலம்
2 எம். பாலசுப்பிரமணியம்
4 எம். எம். காசிம்
6 எஸ். கோபாலகிருஷ்ணன்
7 எஸ். கதிரேசன்
8 கே. லீலாவதி
9 என். வேதசகாய குமார்
10 கே. கே. சுந்தரசோபிதராஜ்
11 எம். செல்லப்பா
12 சி. ராஜு
13 வி. மலுக்கு முகம்மது
14 ஏ. கோலப்பா பிள்ளை
15 எஸ். நாகரு பிள்ளை
16 ஏ. எஸ். பி. ஆறுமுகம்
17 எம். சாந்தகுமாரி
18 ஜெ. எஸ். குமார்
19 பொ. செல்லத்துரை
20 மா. பரமசிவம்
21 ஆ. பழனிச்சாமி
23 எஸ். பத்மநாபன்
24 பி. ஆர். சிதம்பரம்
25 சி. கிருஷ்ணன் பிள்ளை
26 எஸ். சுப்புலெட்சுமி
27 எம். சண்முக சுந்தரம்
29 ஏ. ஆர். வி. சர்மா
30 வி. சுப்பிரமணியம்
31 பி. முத்தம்மாள்
33 ஏ. ஆர். எஸ். விஜயமணி
34 டி. சங்கரசுப்பிரமணியம்
36 ஆர். பி. டேவிட்
37 கே. பகவதீஸ்வரன்
38 பி. கிருஷ்ணன்
39 ஏ. எஸ். நாராயணன்பிள்ளை
40 வை. சங்கரன்
41 ஏ. சீனிவாசமூர்த்தி
42 டி. சங்கரன்
44 எஸ். இராமசுவாமிபிள்ளை
45 எஸ். ஹரிஹரன்
46 ஆர். எஸ். மணி
47 என். சத்தியநேசன்
49 ஏ. சுப்பிரமணியபிள்ளை
50 ஆர். காளிமுத்து செட்டியார்
51 பி. முத்துசாமிரெட்டியார்
51 ஆர். டி. பிள்ளை
53 சி. இராமச்சந்திரன்
54 ஆர். சிதம்பரம்
55 ஏ. மணிகண்டன்
56 என். முத்துகிருஷ்ணன் ஆச்சாரி
57 எம். எஸ். இலட்சுமணன் பிள்ளை
58 கே. சிதம்பரம்பிள்ளை
59 கே. ஞானதாஸ்
60 எஸ். இராஜகோபால்
61 கெ. சிதம்பரதாணுபிள்ளை
62 ஜி. இராதம்மாள்
63 எம். கிருஷ்ணசாமி
64 கே. சித்ரா
65 வை. கிருட்டிணன்
66 தா. அய்யப்பன்
67 எஸ். செல்வராஜன்
68 இ. சுடலைமுத்து தேவர்
69 பி. சாமுவேல்
70 நீலகண்டன் பிள்ளை
71 ஹிபர் சாலமன்
72 டி. முத்துராமன்
74 என். மாதவன்
75 எஸ். கிருஷ்ணன்
76 எஸ். கிருஷ்ணமூர்த்தி
77 பொன்னன் பெருமாள்
78 ஏ. பி. சுந்தரம்
79 எஸ். எம். அப்துல்காதர்
80 சு. இராஜசந்திரபாபு
81 ஏ. இராதாகிருஷ்ணன்
82 எம். ஜேம்ஸ்
83 எம். தனபாலன்
84 என். ஜெயபாண்டியன்
85 பி. சந்தானகோபாலன்
86 என். டி. கோவிந்தசாமி
87 தி. பரமசிவன்
88 எஸ். தில்லைநாயகம்
89 என். சுப்பிரமணியன்
90 சி. பி. செல்வம்
91 எஸ். பழனி
92 அய். இராமசுவாமி
93 கெ. கோபாலபிள்ளை
95 மை. நாகமணி
96 சி. சங்கரலிங்கம்
97 டி. முத்தையா
98 பி. கே. ஆறுமுகம்பிள்ளை
99 சி. எஸ். மணி
100 பி. திருப்பதி
101 என். முத்து
102 ஜி. இலக்குமணன்
104 எஸ். கோபால கிருஷ்ணன்
105 பி. ஹரிஹர அய்யர்
107 ஜி. வி. சுந்தரம்
108 எஸ் கிருஷ்ணசுவாமி
109 கே. வெங்கிடாசலம்
111 வி. பத்மாவதி
112 எம். இராமசுவாமி
114 எஸ். முருகன்
115 எஸ். லலிதா
116 கே. நடராஜன்
117 எஸ். பெருமாள்பிள்ளை
118 ஆர். திருவேங்கடம்
119 என். இராஜசேகரன்பிள்ளை
120 எஸ். முத்தையாபிள்ளை
121 பி. தங்கையன்
122 எம். காந்திசங்கர்
123 பி. கோலப்ப ஆச்சாரி
125 வி. இரவிப்பிள்ளை
126 வி. இராஜாமணி
127 கே. ஏ. பெருமாள்
128 பி. ஞானப்பிரகாசம்
129 நெல்லை. சு. முத்து
130 லீலா முருகேசன்
131 சே. இராஜகோபால்
132 பி. சொர்ணகுமார்
133 எஸ். எம். ஜான்
134 எஸ். இலட்சுமணன்
135 பி. கணேசன்
136 முருகன்
137 பத்மநாபபிள்ளை
138 எல். வைகுண்டபதி
139 வி. சுப்பிரமணியன்
140 எஸ். முருகன்
141 எஸ் பரமேஸ்ரன்
142 எஸ். பி. நாதன்
143 எஸ். கே. சுவாமிநாதன்
144 பி. இரத்தினம் ஆச்சாரி
245 எஸ். டி. பகவான்தாஸ்
146 என். அசோகன்
147 எஸ். நரேந்திரபிரசாத்
148 எம். ஜெயராமன்
149 ஆர். இலட்சுமி அம்மாள்
151 என். பாலகிருஷ்ணன்
152 எம். இராமனுஜம்
153 ஆர். எச். எஸ். மணி
154 கே. இராஜேந்திரன்
155 ம. தங்கராஜன்
157 கே. சுப்பிரமணியம்
158 சண்முகசுப்பையா
159 டி. சுடலையாண்டி
160 வி. இராமையர்
161 எஸ். கே. பெருமாள்
162 எச். இராமகிருஷ்ணன்
163 எஸ். சாந்தகுமாரி
164 அய்யனாரப்ப பிள்ளை
165 ஜி. பாலசுப்பிரமணியம்
166 எம். முத்துகறுப்பபிள்ளை
167 என். எஸ். பிள்ளை
168 ஜி. பாண்டியன்

169 எஸ். இராமசுவாமி பிள்ளை
170 கே. சுப்பிரமணியம்
172 ஆர். சுதா
173 சி. தாணப்பன்
174 என். கோவிந்தராஜுலு
175 மா. இளையபெருமாள்
176 ஏ. முருகேசபிள்ளை
179 பி. சிதம்பரநாதன்
180 அருணாசலம்பிள்ளை
181 எஸ். வைரவன்
182 என். எஸ். கண்ணன்
183 எஸ். சிவசுப்பிரமணியம்
184 ஆர். ஜானகிராமன்
185 எஸ். சௌந்தரராஜன்
186 ஆர். ருக்மணியம்மாள்
187 ஏ. பார்வதிநாதன்
188 ஏ. சாம் கிறிஸ்துதாஸ்
189 வை. நாதம்புநாதன்
190 என். கலியுகத்து மெய்யன்
191 கொ. ச. பலராமன்
192 ஆர். தங்கராஜ்
193 பி. வி. சின்னப்பழ நாடார்
194 ஏ. இராமலிங்கம்
195 ஆர். பரமேஸ்வரன்
196 எஸ். நாராயணன் அய்யர்
197 சீனிவாசன்
198 எஸ். சிவசுப்பிரமணியன்
199 எச். சுப்பிரமணியன்
200 எஸ். தேவராஜ்
201 சி. முருகேசன்
202 ஜி. பாலசுப்பிரமணியன்
203 எஸ். சாரங்கபாணி
204 கே. மாடசுவாமி
205 கே. எம். மலிகான்
206 பி. விஜயா மோகன்
207 டி. தங்கராஜ்
208 கே. கிருஷ்ணகுமார்
209 எஸ். எஸ். மணி
210 பி. இராஜகோபால்
211 பி. கேசவன்
212 எஸ். லோகநாதன்
213 எஸ். ஆடலரசு
215 கே. இராமநாதன்
216 எஸ். இராமகிருஷ்ணன்
217 வி. இராமதாஸ்
218 எஸ். வெங்கிடாசலரெட்டி
219 எம். நாராயணன்
220 எல். கே. ஆனந்தகுமார்
221 எஸ். கோலப்பன்

222 எம். மாடசாமி
223 எஸ். வேலப்பன்
224 பி. மகேஷ் ஜோதி
225 என். ஜெகதீசன்
226 பி. ஜெயகுமார்
227 பி. பழனிசாமி
228 இரா. ஸ்டாலின்
229 வி. ஆர். பழனிசாமி
230 கே. கிருஷ்ணன்
231 வி. கிருஷ்ணமூர்த்தி
232 ஆர். இலட்சுமி அம்மாள்
233 ஏ. இராமச்சந்திரன்
234 பி. இராமய்யர்
235 என் முத்துகிருஷ்ணன்
236 பி. வேலாயுதன்
237 சி. பத்மாவதி
238 ஆர். தனபாலன்
239 பரமசிவன்
240 வீரமணி
242 எச். சுப்பிரமணியம்
243 என். கிருஷ்ணய்யர்
244 பி. கெ. பாலசுப்பிரமணியன்
245 கே. சுடலி அம்மாள்
246 எஸ். இராதாகிருஷ்ணன்
247 ஏ சிதம்பரதாணு பிள்ளை
248 டி. பூவலிங்கம்
249 பி. ராமலிங்கம்
250 எஸ் குருநாதரெட்டியார்
251 ஆர். மாதேவன் பிள்ளை
252 எஸ். மோகன்தாஸ்
253 எஸ். மணி
254 எஸ். சங்கரகிருஷ்ணன்
255 மொகின் மகபூப்
256 எஸ். தட்சிணாமூர்த்தி
257 முத்துவேலு ஜெகதீசன்
258 ஏ. கிருஷ்ணபிள்ளை
259 எஸ். ராஜகுணசேகர்
260 சி. கணேசபிள்ளை
261 சி. ஆறுமுகம்
262 ஜி. டி. நடராஜபிள்ளை
263 கே. இராமச்சந்திரன்
264 ஜி. அய்யப்பன்
265 ஜி. கே. பேடா ஆல்வின்
266 கே. கணேசபிள்ளை
267 சி.எஸ். இராதாகிருஷ்ணன்
268 எம். அய்யப்பன்
269 விஜயராகவன்
270 டி. பி. குஞத்து
271 ஏ. முகமது முஸ்தபா

272 அய். இராஜம்மாள்
273 சி. தனசேகரபாண்டியன்
274 ஆர். லலிதா
275 எஸ். கிருஷ்ணன்
276 மு. தாய்யப்பன்
277 எஸ். இராம அய்யர்
278 எஸ். நித்தியானந்தன்
279 கே. வானமாமலை
280 கே. நடராஜன்
281 சி. பி. மாணிக்கவாசகம்
282 கே. ஜெயபிரகாஷ்
283 எம். இரவீந்திரன்
284 எஸ். சீனிவாசன்
285 என். கே. முரளீதரன்
286 டி. இசக்கிபாண்டியன்ஆசாரி
287 தில்லைநாயகம்
288 எஸ். இஸ்மாயில்
289 பி. முருகேசபிள்ளை
290 ஏ. சங்கரநாராயணபிள்ளை
291 என். சுந்தரம்
292 பி. வேலப்பன்பிள்ளை
293 பி. சுப்பிரமணியபிள்ளை
294 எஸ். சதாசிவன்
295 எஸ். சங்கரமகாலிங்கம்
296 டி. விஜயரெங்கன்
297 டி. சொர்ணம்
298 வி. மந்திரம்
299 எஸ். எல். நாசிம்மன்
300 என். சிவசுப்பிரமணியன்
301 மு. செய்யது இப்ராகிம்
302 எம். சுப்பிரமணியபிள்ளை
303 பி. பகவதிசுப்பிரமணிய அய்யர்
304 ஆர். இராதாகிருஷ்ணன்
305 ஆர். கேசவன்
306 பி. சண்முகம்பிள்ளை
307 வி. கிரிஜா குமாரி
308 எஸ். அய்யம்பிள்ளை
309 (அ) எம். சிவானந்தன்
309 (ஆ) பி. கணேசன்
310 வி. இரகுநாதன்
311 பி. சுப்பையா
312 எம். சி. சங்கரபாண்டிய பிள்ளை
313 என். பாலசுப்பிரமணியன்
314 ப. பாலவண்ணன்
315 எஸ். வள்ளிநாயகம்பிள்ளை
316 என். சிவதாணு
317 ஏ. நீலகண்டன்
318 ஏ. மாதவன்பிள்ளை
319 எஸ். ஹரிஹரன்

320 எஸ். நல்லசிவன்
321 எம். சோமசுந்தரம்
322 எம். நாகேந்திரன்
323 ஏ. செல்லச்சாமி
324 ஏ. நடராஜன்
325 ஜனார்த்தனன்
326 டி. ஆர். ஆறுமுகம்
327 எஸ். சுப்பராயலு ரெட்டியார்
328 மொய்தீன்அபூபக்கர்
329 சி. குமரேசன்
330 என். நம்பி
331 ஆர். முருகன்
332 வேணுகோபால்
333 எஸ். தாணுபிள்ளை
334 ஆர். திருவேங்கடம்
335 பாலசுந்தரராஜ்
336 எஸ். வேலுச்சாமி
337 கே. அப்புக்குட்டன்பிள்ளை
338 எஸ். ஷேக் தாவுத்
339 பி. குழந்தைவேலு
340 ஆர் சுப்பிரமணியம்
341 ஆர். வேலப்பன்பிள்ளை
342 என். சுப்பையாபிள்ளை
343 எஸ். வேணுகோபாலன்
344 எஸ். சிவதாணுபிள்ளை
345 பி. வி. ராவ்
346 ஆர். பொன்னுராஜ்
347 என். சங்கரன்
348 இராஜகோபால்
349 சி. சிதம்பரதாணுபிள்ளை
350 ஆர். சுப்பிரமணியம்
351 ஆர். கண்ணன்
352 ஏ. இரவீந்திரன்
353 கே. அய்யப்பன்
354 எம். முருகானந்தம்
355 குப்புராஜ்
356 என். சொக்கலிங்கம்
357 எஸ். இசக்கி
358 ஜேக்கப் சகாயம்
359 எஸ்.குமாரசுவாமி
360 என். மணிகண்டன்
361 கே. இரத்தினம்
362 எம். மீனுகுமாரன்
363 டி. வேலாயுதன்
364 சி. ஜவகர்வீரபாகு
365 வி. குமார்
366 சுப்பிரமணியபிள்ளை
367 கே. ஆர். சிவனேசன்
368 கே. சீதாராமன்
369 பி. கிருஷ்ணமூர்த்தி
370 ஒய். நீலகண்ட அய்யர்
371 என். இராதாகிருஷ்ணன்
372 எஸ். இளங்கோ
373 ஆர். மோகன்தாஸ்
374 சு. பரதேசி
375 ஜி. தங்கையா
376 டி. மாதவன்பிள்ளை
377 எம். கே. நாதன்
378 எஸ். சங்கரன்
379 வி. முத்து
380 ஈ. பத்மனுபபிள்ளை
381 எம். சந்திரன்
382 வி. முத்துச்செல்வம்
383 ஜி. வரதன் MLA
384 ஆ. கணபதியாபிள்ளை
385 எம். சீனிவாசன்
386 எஸ். இரத்தினம்
387 கே. மணி
388 ந. இராமச்சந்திரன்
389 வி. வெங்கடாசலம்
390 கே. சங்கரநாராயணபிள்ளை
391 எஸ். மூர்த்தி
392 என். இரோஜேந்திரன்
393 சி. வேலாயுதம்
394 டி ரெங்கன்
395 என். எஸ். பி. அருணசலம்
396 சி. எம். சுந்தரம் MLA
397 சி. பழனிச்சாமி
398 ஸலாஹிதீன்
399 எஸ். கௌதமன்
400 ஜி. சகாப்தின்
401 டி. கே. சந்திரசேகரன்
402 எஸ். ஜி. நாயகம்
403 வே. கணபதி
404 எம். எஸ். மணி
405 எஸ். பகவதி
407 எஸ். தண்டபாணி
408 கே. இ. மூர்த்தி
409 சி. சியாமளா
410 எம். அப்பு ஆச்சாரி
411 அ. இராதாகிருஷ்ணன்
412 எம். எஸ். பெருமாள்
413 எம். ஆழ்வார்
414 கே. ஆ. கிரிகிருஷ்ணன்
415 எஸ். சிவதாணுபிள்ளை
416 எஸ். எஸ். மணியன்
417 என். விஜயரெங்கன்
418 பி. சதானந்தன்
419 ஆ. சீனிவாசன்
420 ஜி. கோலப்பன்
421 டி. கணேசபிள்ளை
422 எஸ். சுப்பிரமணியபிள்ளை
423 வி. அலெக்சாண்டர்
424 ஜி. சுப்பிரமணிய அய்யர்
425 ஆர். இராஜேந்திரன்
426 கே. கோலப்பா பிள்ளை
427 கு. சிவராஜன்
428 எஸ். நயினர்
429 எஸ். அருளானந்தன்
430 ஆர். திருவேங்கிட ரெட்யார்
431 வி. ஆர். பாலகிருஷ்ணன்
432 எம். குற்றலிங்கம்
434 ஆர். விமலாவதி
435 பி. எஸ். பெருமாள்
436 என் டி. பிள்ளை
437 எம். என். சுலைமான்
438 ஆர். வெங்கிட கிருஷ்ணன்
439 எஸ். கிருஷ்ணமூர்த்தி
440 தமிழரசர்
441 கே. சுப்புராமன்
442 எஸ். பெருமாள்ரெட்டியார்
443 வி. சீனிவாசன்
444 சீ. பெருமாள் ரெட்டியார்
445 டி. கே. கிருஷ்ணன்
446 து. திலகராஜன்
447 ஜி. கோபாலகிருஷ்ண நாயிடு
448 கே. ராமமூர்த்திரெட்டியார்
449 கே. சிதம்பரம்பிள்ளை
450 எஸ். பி. சுப்பிரமணியன்
451 ஆர். பாப்பு
452 சி. நாகராஜன்
453 எம். சிராஜுதீன்
454 ஃபக்ருதீன்
455 எஸ் சீனிவாசன்
456 ஆர். பெருமாள் ரெட்டியார்
457 எஸ். பெருமாள்
458 ஈ. ஏ. ராஜன்
459 சி. அமரசேகரன்
460 எஸ். சிவதாணுபிள்ளை
461 சி. இசக்கிமுத்து
462 ஏ. நாச்சுமுத்து
463 பி. பாலகிருஷ்ணன்
464 எம். வீரஅனந்தன்
465 ஆர். எஸ். பிரபா

466 ஜே. சாம்ராஜ்
467 டி. ஜேம்ஸ் தேவகமல
அருமைராஜ்
468 எம். இராமநாதரெட்டியார்
469 வி. எஸ் விஸ்வகுமார்
470 எஸ். கதிரேசன்
471 எஸ். வைத்தீஸ்வரன்
472 எம். மைதீன்பிள்ளைக்
கண்ணு
473 ஜி. என். தாஸ்
474 எச். பத்மநாபன்
475 ஏ. ஜனார்த்தனன்
476 எஸ். முத்துசுப்பிரமணியன்
477 எஸ். ராஜாப்பிள்ளை
478 சு. சிவதாணுபிள்ளை
479 ஜாண் எபிநேசர்
480 மு. ஈனமுத்து
481 எஸ். மீனாட்சிநாதபிள்ளை
482 சிதம்பரகுற்றாலம்பிள்ளை
483 பி. எஸ். மோகன்தாஸ்
484 சி. நடராஜன்
485 எம். ஜி. சுப்பிரமணியன்
486 வி. தாணப்பன்
487 சி. செல்லையன்
488 பி. எம். ஷாகுல் ஹமீத்
489 எஸ். கிருஷ்ணமூர்த்தி
490 ஆர். கணேசபிள்ளை
491 வி. நவநீதன்
492 சி. மாணிக்க செல்வம்
493 ஜி. விஸ்வநாதன்
494 கே. எம். கிருஷ்ணன்
495 சி. சுப்பிரமணியன்
496 எ. ராமச்சந்திரன்
497 எஸ். ராம அய்யர்
498 வி. எம். முருகபிள்ளை
499 எஸ். கோலப்பன்
500 எஸ். ஜனார்த்தனன்
501 எஸ். வி. பத்ரன்
592 எஸ். கணேசன்
503 எம். ஆசிர்வாதம்
504 கே. கிரிதரகோபாலன்
505 அனந்த சொக்கலிங்கம்
506 வி. இராதாகிருஷ்ணன்
507 டி. நந்தகுமாரன்
508 வி. கே. வெங்கிடாசலம்
509 சு. நடராஜன்
510 க. நரசிம்மலு
511 எம். கோபால ரெட்டியார்
512 ந. ப. ராமகிருஷ்ணன்

513 வி. கந்தசாமி ரெட்டியார்
514 ஜி. நாகராஜன்
515 ஆர். முத்துசாமி
516 வி. கோபாலகிருஷ்ணன்
517 சு. முருகன்
518 வி. கோசல்ராம்
519 கே. எஸ். ரகுநாதன்
520 எஸ். நாராயண ராஜு
521 சி. பி. வள்ளிநாயகம்
522 எம். நம்பி
523 ஹரிஹரஅய்யர்
524 ஜெ. டேவிட் ; ஜெயசய்யா
525 எம். சுப்பையன்
526 ஏ. செல்லப்பன்
527 வி. முத்துலெட்சுமி
528 பா. தேவதாஸ்
529 எம். மனோன்மணி
530 ஆர். இரவீந்திரன்
531 ஜி. ராமதாஸ்
532 பி. மணி
533 த. முத்துசுவாமி
534 சா. சீதாராமன்
535 ஈ. பி. ஷேஷாத்திரி
536 கே. கோபாலகிருஷ்ணன்
537 எஸ். விஜயகுமார்
538 பி. முருகானந்தம்
539 சி. மணி
540 எஸ். தியாகராஜன்
541 எஸ். கிருஷ்ணமூர்த்தி
542 ஜி. பாலன்
544 கே. காந்திராஜ்
544 கே. எஸ். ராகவன்
545 சி. ஆறுமுகம்
546 எம். பெருமாள்
547 டி. எஸ். கண்ணன்
548 எம். கிருணசுவாமி
549 எம். வெங்கடாச்சலம்
550 எஸ். அய்யப்பன்
551 ராஜ்பேப்பேர்ஸ்
552 வசந்தாமூர்த்தி
553 ஸ்ரீராமச்சந்திரன்
554 தி. சு. வேதநாயகம்
555 சிதம்பரம்
556 எச். சோமசுந்தரம்
557 வி. விஜயன்
558 டி. என். இராமச்சந்திரன்
559 வி. எம். இராமன்
560 எம். இரத்தினம்
561 செ. வைத்தியநாதன்

562 சோ. சுப்பிரமணியன்
563 இராஜரத்தினம்
564 த. க. கணேசன்
565 தி. சீனிவாசன்
566 ஆண்டனி ஆரோக்கியம்
567 ஜேக்கப் வேதசகாயம்
568 ஜெ. ஜெயகுமார்
569 சுப்பையா செட்டியார்
570 வி. முருகன்
571 ஞா. தாமஸ் ஜெயசீலன்
572 டி. சர்வேசன்
573 வி. அருணாசலம்பிள்ளை
574 என். சுந்தரராஜன்
575 எஸ். எம். உமா சுந்த
ரேஸ்வரி
576 எம். தாமஸ்
577 அய். துரை
678 சீனிவாச அய்யர்
579 ஆ. சா. முருகேசன்
580 எச். பால்ராஜ்
581 மா. கோலப்பாபிள்ளை
582 எச், கிருஷ்ணமூர்த்தி
583 கே. என். ராஜம்
584 எம். சுந்தரேசன்
585 வி. சங்கர்
586 பி. முத்தையா
587 எம். பாஸ்கரன்
588 எஸ். முருகன்
589 வி. வி. மாதவன்பிள்ளை
590 என். அய்யப்பன்
591 என். அசோகன்
592 எம். அடைக்கலம்
593 டி. எஸ். நாராயணபிள்ளை
594 எஸ். ஏ. பத்மனாபன்
595 எம். முத்துசுவாமி
596 ஏ. ராஜா
597 கே, ஜலஜா
598 எஸ். நடராஜபிள்ளை
599 ஆர். பத்மனாபபிள்ளை
600 எஸ். கிருஷ்ணபிள்ளை
601 எம். நாராயணன்
602 வி.,மீனாட்சிசுந்தரம்
603 ஏ. கோபாலபிள்ளை
604 ஏ. சுப்பிரமணியன்
605 வி. பி. சுந்தரம்
606 எஸ். நடராஜன்
607 சீதாலட்சுமி அம்மாள்
608 பி. இ. எல். மீனாட்சி
சுந்தரம்

609 கே. பத்மனுபன்
610 டி. சுப்பிரமணியபிள்ளை
611 வி. ரங்கராஜ்
612 ச. சுப்பராயன்
613 ஆ. ஜெயவேல்
614 செ. கதிர்வேல்
615 கருணன்தம்பி
616 பி. கணேஷ்குமார்
617 எஸ். ஜெயசங்கர்
618 எம். சுந்தரம் ரெட்டியார்
619 சோ. ராமு
620 கே. சுந்தர்ராஜ்
621 தா. நடராஜன்
622 பி. சுப்பிரமணியன்
623 எஸ். எம். மைதீன்
624 எஸ். சங்கர நாராயணன்
625 ஈ. எஸ். மணி
626 பி. நாராயணன்
627 கே. எஸ். மணி
628 எஸ். ஏ. முகம்மதுசுல்தான்
629 பி. கிருஷ்ணசுவாமி
630 டி. அழகப்பா பிள்ளை
631 சி. வி. சோணச்சலம்
632 எஸ். சுப்பிரமணியம்
633 ஆர். ஏ. முத்துசுவாமி பிள்ளை
634 எச். மாரியப்பன்
635 சி. வி. கணேசன்
636 எஸ். இராஜ குணசேகரன்
638 எஸ். ஏ. பெருமாள்
639 எச். எஸ். மணி
640 பி. செந்தில்
641 பா. வளன் அரசு
642 ஜி. பஞ்சாபகேசன்
643 ஆர். இராமசுவாமிஅய்யர்
644 ஆர். இராமசுவாமி பிள்ளை
645 வி. எஸ். ஆனந்தன்
646 பி. இராதாகிருஷ்ணன்
647 வி. மீனட்சி சுந்தரம்
648 கே. சுப்பிரமணியம்
649 எம். வேலாயுதன்
650 கே. சங்கரநாராயணன்
651 எஸ். பி. பெருமாள்
652 என். சுப்பிரமணியன்
654 எஸ். இலட்சுமி வராகன்
655 வி. நீலகண்டன்
656 இரா. விஜயன்
657 வா. உடையநாதன்
658 பி. அந்தோணிசாமி
659 கே. இராமச்சந்திரன்
.... .... ....

# 1981 மார்ச் - எஸ். எஸ். எல். சி. தேர்வு முடிவு (தமிழ்)

கேரள மாநிலத்தில் ஐந்து தாலுகா மாவட்டங்களிலாக - 26 பள்ளிகள் மூலம் 971 தமிழ் மாணவர்கள் தேர்வுக்குச் சென்றனர். இவர்களில் 386 மாணுக்கர்கள் வெற்றி பெற்றனர். அவர்களில் 37 மாணுக்கர் முதல் தகுதி பெற்றுள்ளனர். வெற்றி பெற்றுள்ள மாணுக்கர்களை திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம் பாராட்டுகிறது.

பாலக்காடு மாவட்டத்தைச் சார்ந்த கொழிஞ்ம்பாறை, செயின்ட் பாள்ஸ் உயர் நிலைப்பள்ளி மாணவன் செல்வன், வி. சுப்பிரமணியம் தமிழுக்கு 100-ல் 83 மதிப்பெண்களைப் பெற்று மாநிலத்திலேயே தமிழுக்கு அதிக மதிப்பெண் பெற்ற பெருமையை தேடியிருக்கிருர். இம்மாணவரை திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம் மகிழ்ந்து பாராட்டுகிறது. சங்கத்தின் சார்பில் இம்மாணவருக்கு ரூ. 51/- பரிசளிக்கப்படும்.

## தேர்வு முடிவு விபரம்

| மாவட்டம் | பள்ளியின் பெயர் | தேர்வில் கலந்துக் கொண்ட மாணவர் | வெற்றி பெற்ற மாணவர் | முதல் தகுதியுடன் வெற்றி பெற்ற மாணவர் |
|---|---|---|---|---|
| **பாலக்காடு** | | | | |
| 1 | பாலக்காடு அரசு பீ. எச். எஸ். சிற்றூர் | 19 | 5 | — |
| 2 | அரசு விக்டோறியா ஜி. எச். எஸ். சிற்றூர் | 28 | 13 | 1 |
| 3 | அரசு உயர்நிலைப்பள்ளி, காஞ்சிகோடு | 14 | 1 | — |
| 4 | ,, ,, முத்தலமாடா | 8 | 4 | — |
| 5 | செயின்ட் பாள்ஸ் உயர் நிலைப் பள்ளி கொழிஞ்ஞாம்பாற | 149 | 60 | 2 |
| 6 | அரசு உயர்நிலைப் பள்ளி, கோழிப்பாற | 68 | 15 | — |
| 7 | எஸ். கே. எச். எஸ். நல்லேப்பிள்ளி | 9 | 2 | — |
| 8 | அரசு உயர்நிலைப் பள்ளி, அகளி | 14 | 5 | — |
| 9 | அரசு. பி. எம். ஜி. எச். எஸ், பாலக்காடு | 78 | 21 | 1 |
| 10 | ஹேமாம்பிகா சமஸ்கிருத எச். எஸ். கல்லேகுளங்கர | 20 | 15 | 4 |
| | | 407 | 141 | 8 |
| **இடுக்கி மாவட்டம்** | | | | |
| 1 | அரசு உயர்நிலைப்பள்ளி, மூனர். | 115 | 20 | 2 |
| 2 | ,, ,, தேவிகுளம் | 15 | 1 | — |
| 3 | சி. பி. எம். அரசு உயர்நிலைப்பள்ளி, பீருமேடு | 17 | 8 | — |
| 4 | அரசு உயர்நிலைப் பள்ளி, மாறயூர் | 37 | 30 | 2 |
| 5 | பஞ்சாயத்து எச். எஸ். ஏலப்பாறை | 27 | 11 | — |
| 6 | எச். எஸ். சீந்தலார் | 32 | 3 | — |
| 7 | பஞ்சாயத்து எச். எஸ். வண்டிப்பெரியார் | 53 | 25 | 1 |
| | | 296 | 98 | 5 |
| **கொல்லம் மாவட்டம்** | | | | |
| 1 | அரசு பி. எச். எஸ். கொல்லம் | 11 | 1 | — |
| 2 | அரசு ஜி. எச். எஸ். கொல்லம் | 10 | 1 | — |
| | | 21 | 2 | — |
| **திருவனந்தபுரம் மாவட்டம்** | | | | |
| 1 | மாதிரி எச். எஸ். திருவனந்தபுரம் | 12 | 12 | 6 |
| 2 | தமிழ் உயர்நிலைப்பள்ளி, சாலை | 120 | 59 | 3 |
| 3 | மைய உயர் நிலைப்பள்ளி, திருவனந்தபுரம் | 63 | 50 | 11 |
| 4 | அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி பார்ட்டன்ஹில் | 6 | 4 | — |
| 5 | அரசு உயர்நிலைப்பள்ளி, கரமனை. | 15 | 5 | 1 |
| | | 216 | 130 | 21 |
| **நெய்யாற்றின்கரை** | | | | |
| 1 | சாமுவேல் எல். எம். எஸ், தமிழ் உயர்நிலைப் பள்ளி, பாறசாலை | 21 | 11 | 3 |
| 2 | அரசு உயர்நிலைப்பள்ளி, பாலராமபுரம் | 10 | 4 | — |
| | | 31 | 15 | 3 |
| | மொத்தம் | 971 | 386 | 37 |